# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 சித்திரை 20 செவ்வாய்க்கிழமை (03.05.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 158





04 ஈழ அகதிகளை விடுதலை செய்



06 பயனுள்ள மருத்துவ பீட கண்காட்சி



16 ஆயிரம் பொய் கூறும் அரசு



25 ஊடக சுதந்திரம்



31 பிரான்ஸில் மேதினப் பேரணி


## கொழும்பு வந்து சேர்ந்த ரொபேர்ட் ஓ பிளேக் உடனடியாகக் கூட்டமைப்பைச் சந்தித்தார்

கொழும்பு, மே 3

தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான, அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத் துணைச் செயலர் ரொபேர்ட் ஓ பிளேக் நேற்று மாலை கொழும்பை வந்தடைந்தார். உடனடியாகவே அவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சந்தித்து அரசியல் நிலைவரம் குறித்துக் கலந்துரையாடினார்.

கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது. இரவு 8 மணி முதல் ஒன்றரை மணி நேரம் இரு தரப்பினரும் தற்போதைய அரசியல் நிலைவரம் குறித்து விரிவாகக் கலந்துரையாடினர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

''அரசுடன் நடைபெற்றுவரும் பேச்சுக்களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் மற்றும் ஐ.நா. நிபுணர் குழு அறிக்கை வெளியாகி உள்ள பின்னணியில் அரசியல் சூழல் என்பன குறித்து நாம் பிளேக்குக்கு விளக்கினோம்'' என்று, சந்திப்புக் குறித்துக் கருத்துத் தெரிவித்த எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

மாலை தீவுக்கான (29 ஆம் பக்கம் பார்க்க)

## மாதகலில் ஆணின் சடலம் கரையொதுங்கியது

யாழ்ப்பாணம், மே. 3

மாதகல் கடற்கரையில் நேற்றுக் காலை ஆண் ஒருவரின் சடலம் சிதைந்த நிலையில் கரையொதுங்கியுள்ளது.

மாதகல் மீனவர்கள் கொடுத்த தகவலை அடுத்து அங்கு சென்ற பொலிஸார் சடலத்தை மீட்டு வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

அடையாளம் காணமுடியாத வகையில் சடலம் சிதைந்த நிலையில் காணப்படு

(29 ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்க தூதரகத்துக்கு பாதுகாப்பு அதிகரிப்பு

கொழும்பு, மே 3

அமெரிக்கப் படையின் அதிரடித் தாக்குதலில் ஒஸாமா பின்லேடன் கொல்லப்பட்டதை அடுத்து கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தின் பாதுபாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான உதவி ராஜாங்கச் செயலாளர் ரொபேர்ட் ஓ பிளேக் கொழும்பு வந்துள்ள நிலையில் இந்தப் பாதுகாப்பு மேலும் பலப்படுத்தப்பட்

(29 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை இந்தியா வரவேற்பு

கொழும்பு, மே 3

பின் லேடன் கொல்லப்பட்டதை இலங்கை அரசு வரவேற்றுள்ளது

இலங்கை வெளியுறவுத்துறை துணை அமைச்சர் நிமல் பெரேரா மகிழ்ச்சி தெரிவித்தார்.

பின் லேடனைக் கொல்

(29 ஆம் பக்கம் பார்க்க)

# பின்லேடன் கொல்லப்பட்டார்

### பாகிஸ்தானில் அமெரிக்கப் படை அதிரடித் தாக்குதல்



மாளிகை ஒன்றில் வைத்து ஒஸாமா பின்லேடன் அமெரிக்கப் படையினரால் கொல்லப்பட்டுள்ளார்.

இஸ்லாமாபாத், மே 3

அமெரிக்காவால் நீண்ட காலமாகத் தேடப்பட்டு வந்த தீவிரவாதி ஒஸாமா பின்லேடன் கொல்லப்பட்டார். பாகிஸ்தானில் அவர் பதுங்கி இருந்த மறைவிடத்தில் அமெரிக்க சிறப்புப் படை திடீர் தாக்குதல் நடத்தி அவரைக் கொன்றது என்று நியூயோர்க்கில் ஜனாதிபதி ஒபாமா அறிவித் தார். ''நீதி நிலைநாட்டப்பட்டது'' என்று அவர் தெரிவித்தார்.

பின்லேடனின் சடலம் இஸ்லாமிய முறைப்படி கடலில் அடக்கம் செய்யப்பட்டது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் இருந்து 50 கி.மீ. தொலை வில் உள்ள அபோதாபாத் என்ற இடத்தில்இருந்த




அமெரிக்காவின் சிறப்பு உளவுப் படையான 'சீல்' அணியின் சிறிய குழு ஒன்றே இந்த அதிரடித் தாக்குதலை நடத்தி உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவத்தின் போது பின் லேடனும் அவரது மூத்த மகனும் வேறு இருவரும் மரணமாகியுள்ளனர்.

பின்லேடனின் சடலத்தைக்கைப் பற்றிய அமெரிக்கப்படையினர் அதை இஸ்லாமிய முறைப்படி- கடலில்

(29 ஆம் பக்கம் பார்க்க)

## ஜூன் மாத நடுப்பகுதியில் தேர்தல்

கொழும்பு, மே 3

சட்டப் பிரச்சினை காரணமாக ஒத்திவைக்கப்பட்ட 70 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் எதிர்வரும் ஜூன் மாத நடுப்பகுதியில் நடத்தப்படும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும், அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

ஒத்திவைக்கப்பட்ட 70 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் இம்மாதம் நடத்தப்படும் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

இருந்தும், இம்மாதம் நடைபெறவுள்ள வெசாக் மற்றும் 2600 ஆம் ஆண்டு புத்த ஜயந்தி கொண்டாட்டங்கள் காரணமாக இத்தேர்தலை அடுத்த ஜூன் மாதம் நடுப்பகுதியில் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் கூறினார்.

அத்துடன் தேர்தலுக்கான திகதியைத் தேர்தல்

(29 ஆம் பக்கம் பார்க்க)

## பால்மா விலை உயர்ந்தது

கொழும்பு, மே, 3

400 கிராம் பால் மாவின் விலை 20 ரூபாவாலும், ஒரு கிலோ கிராம் பால் மாவின் விலை 49 ரூபாவாலும் நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் அதிகரிக்கப்பட்டுள்ளது என நுகர்வோர்

(29 ஆம் பக்கம் பார்க்க)

## சிறைக்கைதி பலாத்காரமாக வைத்தியசாலையில் சேர்ப்பு

கொழும்பு, மே 3

புதிய மகஸின் சிறைச்சாலையில் உண்ணாவிரதம் இருந்துவந்த தமிழ் அரசியல் கைதியை சிறைச்சாலை அதிகாரிகள் நேற்று முன்தினம் மாலை பலவந்தமாக தூக்கிச் சென்று சிறைச்சாலை வைத்தியசாலையில் சேர்த்தனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் பிரஸ்தாப கைதியை பார்வையிட சிறைச்சாலை வைத்தியசாலைக்கு நேற்றுச் சென்ற சட்டத்தரணி கணேஸ்ராஜா கைதியிடம் ''நான் நாளை (இன்று) சட்டமா அதிபரைச் சந்தித்து சாதகமான பதில் ஒன்றுடன் வருவேன்'' என உறுதி அளித்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், குறித்த கைதி நீதி அமைச்சர் அல்லது சட்டமா அதிபர் சார்பில் யாராவது பிரதிநிதி

(29 ஆம் பக்கம் பார்க்க)

## காணாமற்போனோரின் உறவுகள் நேற்று வெலிக்கடைக்கு

கொழும்பு, மே 3

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் காணாமல் போனோரின் உறவினர்கள் மற்றும் பெற்றோர் நேற்று கொழும்பு வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு அழைத்து வரப்பட்டனர்.

தடுத்து வைக்கப்பட்டோரைப் பார்ப்பதற்கு இவர்களை சிறைச்சாலை அதிகாரிகள் அனுமதிக்கவில்லை. இருந்தும் காணாமற்போனோரின் பெயர்ப்பட்டியலை சிறைச்சாலை அதிகாரிகள் பெற்றுக்கொண்டு சம்பந்தப்பட்டவர்கள் இங்கு இருந்தால் அறிவிப்பதாக உறுதியளித்தனர் என 'நாம் இலங்கையர்' அமைப்பின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர் உந்துல் பிரேமரட்ண நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

காணாமல் போன தமது உறவுகளைத் தேடித்திரியும் பெற்றோர், உறவினர்களான 82 பேர் 'நாம் இலங்கையர்' அமைப்பின் ஏற்பாட்டில் கொழும்பு வெலிக்கடை சிறைச்சாலை, இரகசியப் பொலிஸ் பிரிவு மற்றும் பயங்கரவாத

(29 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சச்சினிடம் வீழ்ந்தார் கில்கிறிஸ்ட்

-டிலீப்-

சச்சின், ராயுடு அடித்தனர் அரைச்சதம். சாய்த்தார் மலிங்க இரண்டு விக்கெட்டுக்கள். 23 ஓட்டங்களால் வீழ்ந்தது பஞ்சாப். வீணாகிப் போனது மார்ஷ்ஷின் அரைச்சதம்.

மும்பையில் நேற்று 40 ஆவது ஐ.பி.எல் ஆட்டம். நாணயச் சுழற்சி வெற்றி பஞ்சாப்புக்கு. முடிவு களத்தடுப்பு. ஜேக்கப்ஸ் - சச்சின் வந்தனர் களத்துக்கு. நீண்ட நேரம் நீடிக்கவில்லை முதலாவது விக்கெட் இணைப்பாட்டம். 14 ஓட்டங்களில் பறிக்கப்பட்டது ஜேக்கப்ஸ் விக்கெட்.

இணைந்தனர் இரண்டாவது விக்கெட்டுக்காய் சச்சின் - ராயுடு. பந்தாடினர் பஞ்சாப்பின் பந்து வீச்சை. ஆறாவது ஓவரில் அதிரடி தொடங்கியது மும்பை. வீசினார் பகாட். அடித்தார் சச்சின். சிக்ஸருடன் தொடங்கியது ரன் வேட்டை. அதிரடிகள் ஏட்டிக்குப் போட்டியாய் போட்டுத்தாக்கினர். 35 பந்துகளில் ராயுடு எட்டினார் அரைச்சதம். சச்சின் சளைக்காது 44 ஆவது பந்தில் அடைந்தார் அரைச்சதம். இணைப்பாட்டமாய் பகிர்ந்தது 95 ஓட்டங்கள். பிரிக்கப்பட்டது இணைப்பு. சாவ்லாவின் பந்தில் சரிக்கப்பட்டது ராயுடு விக்கெட். 37 பந்துகளில் 51 ஓட்டங்கள் அணிக்காய் பங்களிப்பு. தொடர்ந்து வெளியேறினார் சச்சின். 45 பந்துகளில் 51 ஓட்டங்களுடன் சாவ்லா முடித்து வைத்தார் ஆட்டத்தை.


பரமேஸ்வரன்

பின்வரிசையில் அதிரடிகளால் அதிர்ந்தது அரங்கு. பொலார்ட், ரோகித் சர்மா ஆட்டம் அபாரம். 11 பந்துகளில் 20 ஓட்டங்களுடன் முடிந்தது பொலாட் ஆட்டம். இருபது ஓவர்களில் 159 ஓட்டங்கள் பெற்றது மும்பை. 5 விக்கெட்டுக்கள் இழப்பு. ஹரிஸ், சாவ்லா பந்து வீச்சில் வீழ்த்தினர் இரண்டு விக்கெட்டுக்கள்.

பலமான இலக்கை கலைத்தது பஞ்சாப். ஆரம்பம் அசத்தலுடன் தொடக்கம். ஹர்பஜன் வீசினார் பந்து. வீழ்ந்தது கில்கிறிஸ்ட் விக்கெட். கணக்கை ஆரம்பிக்காமல் களத்தை விட்டு வெளியேற்றம். வல்த்தாட்டி - மார்ஷ் இணைந்தனர். இழப்பை ஈடு செய்தது இவர்களின் இணைப்பு. பொறுப்பான ஆட்டம். அதிரடிகளும் இடக்கம். பகிரப்பட்டது 72 ஓட்டங்கள் இணைப்பு. பிரித்தார் சைமன்ஸ் இணைப்பை. வல்த்தாட்டி வெளியேற்றம் 33 ஓட்டங்களுடன். தாக்குப்பிடித்தது 38 பந்துகள். அடிக்கப்பட்டது இரண்டு சிக்ஸர்கள். வந்தனர் அடுத்த ஹஸி, டினேஸ் கார்த்திக். ஒரு ஓட்டத்துடன் முடிந்தது அவர்கள் ஆட்டம். போராடினார் தனித்து. அடித்தார் அரைச்சதம் மார்ஷ். 47 பந்துகளில் 61 ஓட்டங்கள். மலிங்கவிடம் மடிந்தார் இறுதியில். இருபது ஓவர்களில் பஞ்சாப் பெற்றது 136 ஓட்டங்கள். பறிகொடுத்தது 8 விக்கெட்டுக்கள்.

ஹர்பஜன், மலிங்க, முனாப் பட்டேல் கைப்பற்றினர் இரண்டு விக்கெட்டுக்கள். இறுதியில் அதிசயத் தெரிவு பொலாட் ஆட்ட நாயகனாய்.

# சொந்த மண்ணில் காலை வாரியது டெல்லி

-அருண்மொழி-

ஐ.பி.எல்லின் 41 ஆவது ஆட்டம் டெல்லியில் நேற்று இடம்பெற்றது. சேவாக் தலைமையிலான டெல்லி டெயாடெவில்ஸ் அணியும், மஹேல தலைமையிலான கொச்சி ருஸ்கேர்ஸ் அணியும் மோதிக் கொண்டன. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மஹேல ஜெயவர்த்தன முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தார்.


வோர்னர்

அதன்படி களமிறங்கிய டெல்லி அணி ஆரம்பத்திலேயே தனது முன்னணி விக்கெட்டுக்களை வேகமாக இழந்தது. வோர்னர் 15 பந்துகளில் 13 ஓட்டங்களுடனும், சேவாக் 9 பந்துகளில் 15 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்து வெளியேறினர். நமன் ஒஜாவும் 13 ஓட்டங்களில் ஆட்டமிழந்து வெளியேற 6.2 பந்துகளில் 43 ஓட்டங்களைப் பெற்று 3 விக்கெட்டுக்களை இழந்திருந்தது.

யோகேஸ் நாகர் - வேனு கோபால் ராவ் இருவரும் இணைந்து நான்காவது விக்கெட்டுக்காக சிறப்பான இணைப்பாட்டத்தை வழங்கினர். டெல்லி அணியை தூக்கி நிறுத்த கடுமையாகப் பாடுபட்டனர். அதிரடியாட்டத்தை வெளிப்படுத்தா விட்டாலும் அணியின் தொடர் சரிவை தடுத்து நிறுத்தினர். 54 ஓட்டங்களை நான்காவது விக்கெட்டுக்கான இணைப்பாட்டமாகப் பெற்றுக் கொண்டனர். 97 ஓட்டங்களை அணி பெற்ற நிலையில் வினய்க் குமாரின் பந்து வீச்சில் யோகேஸ் நாகர் 18 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினர். 36 பந்து களில் 40 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் பரமேஸ்வரின் பந்து வீச்சில் வேனு கோபால் ராவ் ஆட்டமிழந்து வெளியேறினார். பின்வரிசையில் பிறிட் சிறப்பாக அதிரடியாட்டத்தை வெளிப்படுத்தி 15 பந்துகளில் 27 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டனர். இறுதியில் இருபது ஓவர்கள் நிறைவில் 140 ஓட்டங்களை 6 விக்கெட் டுக்களை இழந்து பெற்றுக்கொண்டது. பரமேஸ்வரன், வினய்க் குமார் இருவரும் தலா இரண்டு விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

பதிலுக்கு ஆட்டத்தை தொடங்கிய கொச்சி அணி ஆரம்பத்திலேயே அதிரடியாக ஆடியது. முதலாவது ஓவரிலேயே பதானின் பந்து வீச்சில் அதிகளவான உதிரிகள் வாரி வழங்கப்பட்டன. பிரெண்டன் மக்கலம் - கிலிங்கர் இருவரும் சிறப்பாக ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்திச் சென்றனர். மக்கலம் சிறப்பான அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினார். மக்கலத்தின் அதிரடியினால் 25 பந்துகளில் 50 ஓட்டங்களைக் கடந்தது கொச்சி அணி. 61 ஓட்டங்களுடன் முடிவுக்கு வந்தது அதிரடி ஆட்டம். மோர்கலின் பந்து வீச்சில் 37 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார். 19 பந்துகளில் 5 பவுண்டரிகள், 2 சிக்ஸர்களும் விளாசினார். அதிரடி மக்கலத்தின் ஆட்டமிழப்புடன் அடங்கியது. 71 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் இரண்டாவது விக்கெட்டையும் கொச்சி அணி இழந்தது. அடுத்து களம் நுழைந்த அணித்தலைவர் மஹேலவும் 7 ஓட்டங்களுடன் ரன் அவுட்டாகி வெளியேறினார்.


பொலாட்

இருப்பினும் பார்த்திவ் பட்டேல் - ஹொஜ் ஆகியோரது சிறப்பான அதிரடியாட்டத்தின் மூலம் இலுகு வெற்றியை கொச்சி நெருங்கியது. 31 பந்துகளில் 37 ஓட்டங்களை பட்டேலும் ஹொஜ் 13 பந்துகளில் 24 ஓட்டங்களையும் பெற்று இறுதி வரை ஆட்டமிழக்காது இருந்தனர். 5 ஓவர்கள் மீதமிருக்கையிலேயே ஏழு விக்கெட்டுக்களால் வெற்றியை தனதாக்கிக் கொண்டது கொச்சி.

ஆட்ட நாயகனாய் பரமேஸ்வரன் தேர்வு செய்யப்பட்டார்.

# மஹ்ரூப், சில்வா அணிக்கு அழைப்பு

இங்கிலாந்து சுற்றுப் பயணத்தில் ஐ.பி.எல் விளையாடும் வீரர்களின் இடைவெளியை நிரப்புவதற்கு இலங்கை அணியில் சகல துறை வீரர் பர்வீஸ் மஹ்ரூப் மற்றும் விக்கெட் காப்பாளர் கௌஷால் சில்வா ஆகியோர் அணியில் இணைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஐ.பி.எல் இருபது 20 தொடரில் விளையாடுவதால் இலங்கை அணியின் முன்னணி வீரர்கள் சிலர் இங்கிலாந்து சுற்றுப் பயணத்தின் ஆரம்ப பயிற்சிப் போட்டிகளில் பங்கேற்க மாட்டார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் புதிய அணித் தலைவர் டி.எம்.டில்ஷான் இங்கிலாந்து சுற்றுப் பயணத்தின் ஆரம்பம் தொட்டு பங்கேற்பார் என்று எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் இலங்கை டெஸ்ட் அணியில் சேர்க்கப்பட்டுள்ள முன்னணி வீரர்களான சங்ககார, மஹேல ஜெயவர்தன ஆகியோர் இங்கிலாந்து சுற்றுப் பயணத்தின் ஆரம்ப பயிற்சிப் போட்டிகளில் விளையாடமாட்டார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களின் இடைவெளியை நிரப்பவே மஹ்ரூப், சில்வா ஆகியோர் அணிக்கு அழைக்கப்பட்டுள்ளனர். இதில் மஹ்ரூப் தற்போது இங்கிலாந்து முதல்தர போட்டியில் லங்காஷயர் அணிக்காக விளையாடி வருகிறார். அவர் இந்த தொடரில் சதம் ஒன்றையும் பெற்றுள்ளார். எனவே, அவர் நேரடியாக இலங்கை அணியுடன் இணைந்து கொள்ளவுள்ளார். மஹ்ரூப் இலங்கை அணிக்காக கடைசியாக டெஸ்ட் போட்டி ஒன்றில் விளையாடியது கடந்த 2007 ஆம் ஆண்டில் என்பது குறிப்பிடத்தக்கது.

## மேற்கிந்தியத் தீவுகளுக்கு ஆறுதல் வெற்றி கிடைக்குமா?

பாகிஸ்தான் அணிக்கும் மே.தீவுகளுக் கிடையிலான 4ஆவது ஒரு நாள் போட்டியில் பாக். அணி முதலில் துடுப்பெடுத்தாடி 248 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. மழை காரணமாக மே.தீவுகளுக்கு 39 ஓவர்களில் 223 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. துடுப்பெடுத்தாடிவரும் மே.தீவுகள் 5.2 ஓவர்கள் முடிவில் 28 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டை இழந்துள்ளது.

## DLF INDIAN PREMIER LEAGUE அணிகளின் நிலைகள்...

| அணி | M | W | L | T | N/R | Net/R/R | P |
|---|---|---|---|---|---|---|---|
| மும்பை இந்தியன்ஸ் | 08 | 06 | 02 | 0 | 0 | + 0.582 | 12 |
| ராஜஸ்தான் றோயல்ஸ் | 09 | 05 | 03 | 0 | 1 | - 0.145 | 11 |
| கொல்கத்தா நைட் ரைடர்ஸ் | 08 | 05 | 03 | 0 | 0 | + 0.530 | 10 |
| சென்னை சுப்ப கிங்ஸ் | 08 | 05 | 03 | 0 | 0 | + 0.247 | 10 |
| பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் | 08 | 04 | 03 | 0 | 1 | - 0.052 | 09 |
| கொச்சி ருஸ்கேர்ஸ் | 09 | 04 | 05 | 0 | 0 | - 0.542 | 08 |
| டெக்கான் சார்ஜஸ் | 08 | 03 | 05 | 0 | 0 | + 0.048 | 06 |
| டெல்லி டெயா டெவில்ஸ் | 09 | 03 | 06 | 0 | 0 | - 0.262 | 06 |
| கிங்ஸ் லெவன் பஞ்சாப் | 07 | 03 | 04 | 0 | 0 | - 0.398 | 06 |
| புனே வாரியர்ஸ் | 08 | 02 | 06 | 0 | 0 | - 0.089 | 04 |

# கிரிக்கெட் ஆட்ட நிர்ணய சதி குறித்து பொலிஸ் விசாரணைக்குப் பணிப்பு

1992ஆம் ஆண்டு முதல் இலங்கைக் கிரிக்கெட்டில் ஆட்ட நிர்ணய சதி இடம் பெற்றுவருகிறது என இலங்கைக் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் ஹசான் திலகரட்ன தெரிவித்த குற்றச்சாட்டுகள் தொடர்பாக, குற்றப் புலனாய்வுப் பிரிவினரூடாக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸ் மா அதிபருக்கு விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே பணிப்புரை விடுத்தார்.

அதேவேளை, ஹசான் திலகரட்னவின் கருத்தானது, தேசிய ரீதியில் மட்டுமல்லாமல், சர்வதேசத்தின் பார்வையையும் இலங்கைக் கிரிக்கெட் நோக்கித் திரும்பியுள்ளது. எனவே, இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு, உடனடியாகத் தமக்கு அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறும் பொலிஸ் மா அதிபருக்கு அமைச்சர் பணிப்புரை விடுத்தார்.

கிரிக்கெட் சபை அதிகாரிகளை நேற்று மாலை சந்தித்தபின்னரே அமைச்சர் அளுத்கமகே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## இன்றைய ஆட்டம்

- டெக்கான் சார்ஜஸ் எதிர் கொல்கத்தா நைட்ரைடர்ஸ் (இரவு 8 மணி)

## அதிகூடிய ஓட்டம்

- சச்சின் – மும்பை இந்தியன்ஸ் (8 ஆட்டங்கள் 327 ஓட்டங்கள்)
- சேவாக் – டெல்லி (9 ஆட்டங்கள் 303 ஓட்டங்கள்)
- வல்த்தாட்டி – பஞ்சாப் (7 ஆட்டங்கள் 301 ஓட்டங்கள்)


## அதிகூடிய விக்கெட்டுக்கள்

- மலிங்க – மும்பை இந்தியன்ஸ் (8 ஆட்டங்கள் 19 விக்கெட்டுக்கள்)
- வோர்ன் – ராஜஸ்தான் றோயல்ஸ் (8 ஆட்டங்கள் 11 விக்கெட்டுக்கள்)
- மோர்னி மோர்கல் – டெல்லி (8 ஆட்டங்கள் 11 விக்கெட்டுக்கள்)

DLF INDIAN PREMIER LEAGUE

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கங்குலி வந்தார்; அதிர்ஷ்டமும் வந்தது


கங்குலி ஆட்டத்தைப் பார்வையிடுகையில்

கொல்கத்தா அணிக்கு அதிர்ஷ்டத்தைக் கொண்டு வந்தார் கங்குலி. இவர் ஈடன் கார்டன் மைதானத்துக்கு வந்து போட்டியைக் கண்டு களித்ததால் அணி அசத்தல் வெற்றி பெற்றது, என்று ஷாருக்கான் அதிரடியாக தெரிவித்தார்.

ஐ.பி.எல். தொடரின் ஆரம்ப கால கட்டத்தில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் தலைவராக இருந்தவர் கங்குலி. பின்னர் இவருக்கும் அணியின் உரிமையாளரும் நடிகருமான ஷாருக்கான் இடையே விரிசல் ஏற்பட்டது. இதன் காரணமாக நான்காவது தொடருக்கான வீரர்கள் ஏலத்தில் கங்குலி புறக்கணிக்கப்பட்டார். இதையடுத்து கொல்கத்தா அணி பங்கேற்கும் போட்டிகளை காண கங்குலி வரமாட்டார் என்று கூறப்பட்டது. இவர் வராததால் உள்ளூர் ரசிகர்களின் வருகை வெகுவாக குறைந்தது. உடனே சமரச முயற்சியில் இறங்கினார் ஷாருக்.

இதற்கு கங்குலி தரப்பில் வரவேற்பு கிடைக்கவில்லை. இந்தச் சூழலில் நேற்று முன்தினம் கொல்கத்தா, ஈடன் கார்டன் மைதானத்தில் நடந்த போட்டியைக் காண நேரில் வந்து அதிர்ச்சி அளித்தார் கங்குலி. இவர் வந்த நேரம் ராசியானதாக அமைந்தது. கடந்த இரு போட்டிகளில் சொந்த மண்ணில் இரண்டு தோல்வியைச் சந்தித்த கொல்கத்தா அணி, இந்த முறை பஞ்சாப் அணியை வீழ்த்தி வெற்றிப் பாதைக்குத் திரும்பியது.

இதுகுறித்து கங்குலி தெரிவிக்கையில், ஈடன் கார்டன் மைதானத்தில் ரசிகர்களுடன் போட்டியைப் பார்த்தது மிகச் சிறந்த அனுபவமாக அமைந்தது. நான் போட்டியை காண வந்த நேரம், கொல்கத்தா அணிக்கு அதிர்ஷடம் அடித்துள்ளது. உள்ளூரில் இரண்டு தோல்விக்கு பின்னர் இந்த முறை வெற்றி பெற்றுள்ளது. மனோஜ் திவாரி 'போர்முக்கு' திரும்பியிருப்பது நல்ல விடயம் என்றார்.

முன்பு கங்குலியை ஒதுக்கிய ஷாருக், தனது கருத்தை தடாலடியாக மாற்றினார். இவர் கூறுகையில், கொல்கத்தா அணிக்கு கங்குலி அதிர்ஷ்டத்தை கொண்டு வந்தார். இவரது வருகை வெற்றிக்கு வழி வகுத்தது. நான் இருந்த இடத் தில் இருந்து வெகு தூரத்தில் அவர் அமர்ந்திருந்தார். அதனால் தான் பேச முடியவில்லை. விரைவில் அவருடன் பேசுவேன், என்றார். (15)

# உள்நாட்டில் பயிற்சியாளர் கிடைக்காமை வெட்கக்கேடு

## இப்படிச் சொல்கிறார் சங்ககார


சங்ககார

இந்திய கிரிக்கெட் அணிக்கு உள்நாட்டு பயிற்றுநர் ஒருவரைத் தேடிக்கொள்ள முடியாத நிலை வெட்கக்கேடானது என்று இலங்கை அணியின் முன்னாள் தலைவர் குமார் சங்கக்கார கூறியுள்ளார்.

இந்தப் பிராந்தியத்தில் பல சிறந்த வீரர்களை உருவாக்கிய நாடு என்ற வகையில் அதன் சொந்த தேசிய அணிக்கு உள்நாட்டு பயிற்றுநர் ஒருவரை கண்டறிய முடியவில்லை என்பது ஆச்சரியமளிக்கிறது. உள்நாட்டு விளையாட்டு வீரர்களின் திறமையையும் ஆற்றலையும் பயன்படுத்துவது போல் உள்நாட்டு பயிற்றுவிப்பு திறமையையும் வளர்க்க வேண்டியது அவசியமாகும் என்று சங்கக்கார தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தேசிய அணிக்கு பயிற்றுவிப்பதற்குப் போதிய ஆற்றலுள்ள சந்திக்க ஹத்துருசிங்கவை நாம் ஆஸ்திரேலியாவிடம் இழந்தோம் எனவும் அவர் கூறியுள்ளார்.

இலங்கை அணியின் நிழல் பயிற்றுநராக ஒருகாலத்தில் கடமையாற்றிய சந்திக்க ஹத்துருசிங்க, கிரிக்கெட் சபையினால் ஒழுக்காற்று அடிப்படையில் பதவிநீக்கப்பட்டார். அதன்பின் அவர் ஆஸ்திரேலியாவுக்கு குடிபெயர்ந்தமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை முதல்நிலை பயிற்றுநரை தேடிக்கொள்வது அனைத்து நாடுகளின் கிரிக்கெட் சபைகளுக்குமே சிரமமான விடயமாக உள்ளதாக சங்ககார ஒப்புக்கொண்டுள்ளார்.

இங்கிலாந்து அணியின் முன்னாள் பயிற்றுநரான டங்கன் பிளெட்சர் இந்திய அணியின் புதிய பயிற்றுநராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்த நியமனத்திற்கு இந்திய அணியின் முன்னாள் தலைவர் சுனில் கவாஸ்கர் உட்ப பலர் அதிருப்தி தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (15)



# ஹசானின் அறிக்கை இன்று வெளியாகும்

கிரிக்கெட் ஆட்ட நிர்ணய சதி தொடர்பாக தான் தெரிவித்த குற்றச்சாட்டுகள் குறித்து மேல் மாகாண சபையில் இன்று அறிக்கையொன்றை விடுக்கவுள்ளதாக இலங்கை அணியின் முன்னாள் தலைவரும் மேல் மாகாண சபை உறுப்பினருமான ஹசான் திலகரட்ன தெரிவித்துள்ளார்.

இலங்கையில் 1992ஆம் ஆண்டு முதல் ஆட்ட நிர்ணய சதி இடம்பெறுவதாகவும் இதில் சம்பந்தப்பட்டவர்களின் பெயர்களை விரைவில் வெளியிடவுள்ளதாகவும் 83 டெஸ்ட் போட்டிகளிலும் 200 ஒருநாள் சர்வதேச போட்டிகளிலும் விளையாடிய ஹசான் திலகரட்ன தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ஹசான் திலகரட்னவிடம் ஆட்ட நிர்ணய சதி தொடர்பான தகவல்கள் இருக்குமாயின் அவர் சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலுடனும் ஊழல் எதிர்ப்பு பாதுகாப்பு குழுவுடனும் இணைந்து செயற்பட வேண்டும் என்று இலங்கை அணியின் மற்றொரு முன்னாள் தலைவர் குமார் சங்ககார கூறியுள்ளார். (15)

# ஹசானுக்கு ஆதரவாக லத்தீவ்

ஆட்டநிர்ணய சதியில் இலங்கை சம்பந்தப்பட்டுள்ளதாக கூறிய இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் ஹசான் திலகரட்னவுக்கு பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவர் ரஷீட் லத்தீவ் ஆதரவு தெரிவித்துள்ளார்.

இலங்கையில் 1992 ஆம் ஆண்டு முதல் ஆட்டநிர்ணய சதி இடம்பெறுவதாக ஹசான் திலகரட்ன சர்ச்சையைக் கிளப்பியுள்ளார். இது தொடர்பாக கலந்துரையாடவுள்ளதாக இலங்கை கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் ஆட்டநிர்ணய சதி மற்றும் கிரிக்கெட் ஊழல்களுக்கு எதிராக தொடர்ச்சியாக குரல் கொடுத்து வரும் ரஷீட் லத்தீவ், ஹசான் திலகரட் னவுக்கு ஆதரவு தெரிவித்துள்ளார். ஹசான் திலகரட்ன மனம்திறந்து பேசும் போது, இந்த ஊழலுடன் சம்பந்தப்பட்ட பல பெரும்புள்ளிகள் அம்பலப்படுத்தப் படுவர் என்று தான் நம்புவதாகவும் அவர் கூறியுள்ளார்.

அவரை நான் தனிப்பட்ட ரீதியில் அறிவேன். 1993-94 ஆம் ஆண்டிலேயே அவர் இந்த விடயம் குறித்து பேசியுள்ளார். அவரைவிட உபகண்டத்து வீரர்களை நன்கு அறிந்தவர்கள் இருக்க முடியாது. அவர் உண்மைகளை வெளிப்படுத்தினால் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை ஆகிய நாடுகளைச் சேர்ந்த பல பெரும்புள்ளிகள் அம்பலப்படுத்தப்படுவார்கள் என்று ரஷீட் லத்தீவ் கூறியுள்ளார்.(15)

# கொல்கத்தா ஆடுகளம் துடுப்பாட்ட வீரர்களுக்கு கடினமானது


கில்கிறிஸ்ட்

கொல்கத்தா ஆடுகளம் துடுப்பாட்டம் செய்வதற்கு கடினமானது என்று பஞ்சாப் அணித்தலைவர் கில்கிறிஸ்ட் தெரிவித்தார். கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் சனிக்கிழமை நடைபெற்ற ஐ.பி.எல் லீக் ஆட்டத்தில் கொல்கத்தாவிடம் 8 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் பஞ்சாப் தோற்றது.

அதன்பிறகு கில்கிறிஸ்ட் கூறியதாவது

ஈடன் கார்டன் ஆடுகளம் துடுப்பாட்டக்காரர்களுக்கு கடினமானது அதேநேரம் வேகப்பந்து வீச்சாளர்களுக்கு சாதகமானது. இதேபோல் கொச்சி ஆடுகளமும் கடினமானது. அங்கு பந்துகள் தொடர்ச்சியாக ஒரே மாதிரி வராது. ஆனால் இங்கு பந்துகள் 'பவுன்ஸ்' ஆவதோடு, நன்றாக சுழல்கின்றது ஈடன் கார்டன் மைதானத்தை மோசமானது என்று நான் சொல்லவில்லை இது துடுப்பாட்டக்கார்களுக்கு சவாலானது. துரதிருஷ்டவசமாக மிகக் குறைந்த 'ஸ்கோரில்' ஆட்டமிழந்துவிட்டோம்.

கொல்கத்தா சுழற்பந்துவீச்சாளர்கள் சிறப்பாக பந்துவீசினர். கம்பீர் 4 ஆவது ஓவரிலேயே சுழற்பந்து வீச்சாளர்களை பந்துவீச அழைத்தார். அவர்கள் அனைவரும் சிறப்பாக பந்துவீசியதால் விரைவிலேயே எங்களை ஆட்டமிழக்கச் செய்துவிட்டனர். எங்கள் அணியில் 3 பேர் 'ரன்அவுட்' ஆனதே ஓட்டக் குறைவுக்குக் காரணம் என்றா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூந்தமல்லி முகாமில் உண்ணாவிரதம் இருக்கும் ஈழ அகதிகளை விடுதலை செய்யவேண்டும்

## சீமான் வேண்டுகோள்



இந்தியாவின் பூந்தமல்லி முகாமில் உண்ணாவிரதமிருக்கும் அகதிகளை விடுதலை செய்யுமாறு தமிழக அரசுக்கு நாம் தமிழர் கட்சியின் தலைவர் சீமான் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் கூறுகையில்:

செங்கல்பட்டு முகாமில் 23 தமிழர்களும் பூந்தமல்லியில் 4 தமிழர்களும் தமிழக அரசால் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். மேற்கண்ட முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டு இருப்பவர்கள் குற்ற வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டும், உரிய முறையில் பிணை பெற்றும் இருக்கின்றனர். ஆனால் தமிழக அரசு அவர்களை சட்டத்திற்குப் புறம்பாக சிறப்பு முகாம் என்ற பெயரில் அங்கு அடைத்து வைத்துள்ளது.

இந்த நிலையில் கங்காதரன், சந்திரகுமார், அமலன், ஜெய மோகன் ஆகிய 4 பேரும் தங்களை விடுவிக்கக்கோரி பூந்தமல்லி முகாமில் கடந்த 12 நாள்களாக உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர். ஆனால் இவர்களின் கூக்குரல் இதுவரை தமிழக அரசுக்கு எட்டவில்லை. அல்லது எட்டினாலும் ஒன்றுமே நடக்காதது போல கள்ள மௌனம் காத்து வருகிறது. நாட்டில் நடப்பது தொடர் அரசு தான்; காபந்து அரசு அல்ல.

இது உலகுக்குத் தெரியும் என பத்திரிகைகளில் பக்கம் பக்கமாக அறிக்கை எழுதி நான் தான் இப்பொழுதும் முதல்வர் என தினமும் மக்களுக்கு நினைவூட்டும் முதல்வர், மக்களின் மீதான உண்மையான அக்கறையுடன் அதனைச் செயற்பாட்டில் காட்ட வேண்டும்.

அதனை விடுத்து நாட்டில் மின்வெட்டு, விலைவாசி உயர்வு என ஆயிரக் கணக்கான மக்கள் பிரச்சினைகள் இருந்தாலும் அதில் கவனம் செலுத்தாமல் விரயமாக ஆயிரம் கோடி மக்கள் வரிப்பணத்தில் கட்டப்பட்டுள்ள தலைமைச் செயலகத்தில் அமர்ந்து மீன்களுக்கு பொறி போட்டுக் கொண்டிருக்கிறார்.

மீன்களின் உயிரின் மீது காட்டும் அக்கறையில் சிறிதளவாவது எம் அனைவரின் கண்முன்னும் சாகக் கிடக்கும் எம் சொந்தங்களின் மீது காட்ட வேண்டும். எனவே தமிழக அரசு, உண்ணாவிரதம் இருக்கும் பூந்தமல்லி மற்றும் செங்கல்பட்டு அக்திகளை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும். இவ்வாறு அவர் வேண்டு கோள் விடுத்துள்ளார்.

**வீடு வாடகைக்கு**

திருநெல்வேலி கிழக்கில், 03 படுக்கை அறை,சமையலறை, குளியலறையும் பயன்தரு மரங்களுடனும் வீடு வாடகைக்குண்டு.

தொடர்பு:0777207260 ,0750406396

(3246)

**Cash Collector தேவை**

யாழ். மாவட்டத்திற்குள் வாகனத்தில் சென்று கடைகளுக்கு பொருள்களைச் சிட்டையின் பிரகாரம் விநியோகித்து அதற்குரிய பணத்தை வசூல் செய்வதற்கு ஆள் தேவை.

அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். தெரிவுசெய்யப்படுபவர்கள் பாதுகாப்புப் பிணைப்பணம் (Security Bond) செலுத்தக் கூடியவராக இருத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 07.05.2011

அனுப்ப வேண்டிய முகவரி
இல.321, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

# ஐ.நா. அறிக்கைக்கு எதிராகத் தமிழர்களை கட்டாயப்படுத்தி கொழும்பில் ஆர்ப்பாட்டம்

## பழ.நெடுமாறன் கண்டனம்



கொழும்பு, மே 3

ஐ.நா. அறிக்கைக்கு எதிராக கொழும்பில் நடைபெற்ற போராட்டத்தில் தமிழர்கள் கட்டாயப்படுத்தப்பட்டு கலந்து கொள்ள வைத்தமைக்கு இலங் கைத் தமிழர் பாதுகாப்பு இயக்க ஒருங்கிணைப்பாளர் பழ. நெடு மாறன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

ராஜபக்ஷவின் போர்க் குற்றங்கள் குறித்த ஐ.நா. விசாரணைக் குழுவின் அறிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் கொழும்பில் நேற்றுமுன்தினம் அதாவது மே தினத் தன்று நடத்தப்பட்ட ஆர்ப்பாட் டத்தில் கலந்து கொள்ள வேண்டு மென தமிழர்கள் கட்டாயப்படுத்தப்பட் டுள்ளனர்.

சிங்களச் சிறைகளில் இருந்து விடுவிக்கப்பட்ட தமிழ் இளை ஞர்களும் சிறையில் இருப்பவர்களின் குடும்பத்தினரும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ளத் தவறினால் மீண்டும் சிறையில் அடைக்கப்படுவார்கள் என ராணுவத்தினால் மிரட்டப்பட்டுள்ளனர்.

இதன் விளைவாக கிளிநொச்சிப் பகுதியிலிருந்து 20 இற்கு மேற்பட்ட பேருந்துகளில் தமிழர்கள் கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளதா கத் தகவல்கள் கிடைத் துள்ளன.

அதைப் போல யாழ்ப்பாணத்தில் உள்ள ஐ.நா. மற்றும் தொண்டு நிறுவனங்களின் அலுவலகத்திற்கு முன்னால் ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கு கொழும்பிவில் இருந்து சிங்களவர்கள் அழைத்து வரப்பட் டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

ராஜபக்ஷவின் இந்த முயற்சி களை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

சிறைகளிலிருந்து விடுவிக்கப் பட்டப் பிறகும் தமிழர்கள் இன்னமும் கொத்தடிமைகளாக நடத்தப்படுகிறார்கள் என்பது அம்பலமாகியுள்ளது. இந்தக் கொடிய சூழ்நிலையில் இருந்து தமிழ் மக்களைக் காப்பாற்று வதற்கு ஐ.நா. சபை விரைந்து செயற்பட வேண்டும் எனகேட்டுக்கொள் கிறேன்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் தெரிவித் துள்ளார்.

**JAFFNA TECHNICAL INSTITUTE**
No.46, CLOCK TOWER ROAD, JAFFNA.
REGD NO. 15251

**i) ACCA - Association of Chartered Certified Accountants**
- க.பொ.த (சா/த) 3 பாடங்களுடன் உ/தரத்தில் 2 பாட சித்திகள்
- 16 வயதுக்கு மேற்பட்டவர்கள்
- வெளிநாடு செல்வதற்கான இலகுவான வாய்ப்பினை வழங்குகின்றது.
- விசேட கட்டணச் சலுகை

**ii) Foundation in Accountancy**
- அடிப்படைத் தகுதிகளை எதிர்பார்ப்பவர்கள்
- 14 வயதிற்கு மேற்பட்டவர்கள்
- வெளிநாடு செல்வதற்கான இலகுவான வாய்ப்பு
- ACCA கற்கைக்குரிய அடிப்படைத் தகுதிகளை வழங்கும் சர்வதேச கற்கை
- விசேட கட்டணச் சலுகை

**iii) Exemptions**
B.Com, BBA, HNDA, HNDM, HNDBS போன்ற பட்டதாரிகளுக்கு விசேட பாட விலக்களிப்புகளுடன் கட்டணச் சலுகை
புதிய பிரிவுகள் ஆரம்பம்: 6, 7, 8/05/2011 மேலதிக விவரங்களுக்கு தொடர்புகட்கு:

**Regional Office**
JTI, No. 46, மணிக்கூட்டு வீதி, யாழ்.

JTI, No.92/1, Ramanathan Road, Jaffna. T.P.: 0215670345
JTI, Menadchiamman Kovilady, Chankathany, Chavakachcheri. email: jtiedu@gmail.com
JTI, Nugavil, Karaveddy.

## கண்ணீர்க் காணிக்கை

### அமரர் கந்தன் நாகராசா



(உற்பத்தி உதவியாளர்- பனை அபிவிருத்திச் சபை)

எமது சபையின் பணியாளர் கந்தன் நாகராசா அவர்களின் திடீர் மரணச் செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்துள்ளோம். அவர் தன்னலமற்ற சேவையாளன், கொடுக் கும் கடமைகளை செவ்வனே செய்து முடிக் கும் கடமையாளன், அவரது இழப்பு குடும்பத்துக்கு மட்டுமல்லாது எமது சபைக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

அன்னாரது ஆத்மா அமைதியுடன் இறைவன் திருவடிகளில் நிலைத்திருக்க எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்பதோடு அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

தலைவர், பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
பனை அபிவிருத்திச் சபை.

தேசிய வீடமைப்புச் செயலகம்,
கண்டி வீதி, யாழ்ப்பாணம். (சி-578187)

## மரண அறிவித்தல்கள்

### முத்தையா அருமைத்துரை



ஏழாலை மேற்கு, தம்புவத்தையை பிறப்பிடமாகவும், ஏழாலை கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா அருமைத்துரை நேற்று(02.05.2011) திங்கட்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முத்தையா-சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகனும், அம்பிகைபாகனின் அன்புச் சகோதரனும், யோகவதியின் பாசமிகு மைத்துனரும் கஜனராஜ், மதனராஜ், ரஜீத், ஜீவிதன் ஆகியோரின் பெரிய தந்தையும், துர்க்காவின் மாமனாரும் யனுசியாவின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(03.05.2011) செவ்வாய்க்கிழமை பி.ப 12.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் ஏழாலை உசத்தியோடை இந்துமயானத்தில் தகனம்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி கந்தசாமி இராசமலர்



வட்டு.மேற்கு, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் தெல்லிப்பழை வீதி, வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தசாமி இராசமலர் (மைனா) நேற்று (02.05.2011) திங்கட்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை கந்தசாமி(இ.போ.ச.) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பிறேமநிதி மற்றும் ரஞ்சன் (கனடா), மோகனதாஸ்(சுவீடன்), விஜயதாஸ் (லண் டன்), சற்குணராசா (லண்டன்), செல்வமலர்(சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் இராசேந்திரம், வாணி, சுமதி, வத்சலா, யசோதா, வசீகரன் ஆகியோரின் மாமியும் சுதர்சன், நிரோசன், நிலக்ஸன், ரொபினா, அனுஷன், அபிவர்சினி, நிதுஷன், துஷானா, விதுஷன், யதுஷன், பிரனுகா, பிரசாத், டிசாந், ஆகாஸ், ராகவி, ரித்திகா, கமலதர்சி, ஆரனியா, சாருஜன், சாருஹான் ஆகியோரின் பேர்த்தியும் காலஞ்சென்ற ஜீவரட்ணம் மற்றும் சிதம்பரநாதன், சுசிலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தெல்லிப்பழை வீதி
வட்டுக்கோட்டை.
தொ.பே.: 0213211384, 0758088137

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி வைகுந்தநாதன் சுசீலா



கோண்டாவில் ஞானவைரவர் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் துன்னாலை வடக்கை வதிவிடமாகவும் தற்போது இராமகிருஷ்ண வீதி, கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட வைகுந்தநாதன் சுசீலா நேற்று (02.05.2011) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - அன்னம்மா தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர்களான அரியரட்ணம் - இலட்சுமி தம்பதியரின் மருமகளும் வைகுந்தநாதனின் (ஓய்வுபெற்ற சுகாதாரப் பணி உத்தியோகத்தரும் சமாதான நீதிவானும்) அன்பு மனைவியும் நீதிராஜா (வவுனியா, முன்னாள் முகாமைத்துவ உத்தியோகத்தர், தற்போது பிரான்ஸில் கணக்காளர்), காலஞ்சென்ற மதியாபரணம் (பிரபு) ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.05.2011) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோண்டாவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
வைகுந்தநாதன் (கணவர்),
ஜெயக்குமார் குடும்பம் (அண்ணன்),
0773566426,021 4902987.

இராமகிருஷ்ண வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில். (3780)(20-24)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## நன்றே செய்க; அதனை இன்றே செய்க!

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கு, தற்போதைய சூழ் நிலைக்கு உகந்தாற் போல் புதிய அணுகுமுறையைக் கையாளப் போவதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் நடைபெற்ற யுத்தத்தின் போது இடம்பெற்றதாகக் கருதப்படும் போர்க் குற்றங்கள் குறித்து அரசாங்கம் கடைப்பிடிக்கும் ராஜதந்திரத்துக்குப் பதிலளிக்கும் விதத்தில், உண்மை நிலையை வெளிநாடுகளுக்குத் தெரியப்படுத்தும் அணுகுமுறையே அது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

போர்க் குற்றங்கள் குறித்த அரசாங்கத்தின் நிலைப்பாட்டைத் தாம் ஆதரிப்பதாக ரஷ்யாவும் சீனாவும் அறிவித்துவிட்டன. உண்மை நிலையை விளக்குவதற்குத் தமது கட்சி அந்த இரு நாடுகளுடனும் பேசுவதற்குத் தயாராக உள்ளதாகக் கூட்டமைப்பின் இணைச் செயலாளர் தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மேதினக் கூட்டத்தில் வைத்து இந்தப் புதிய அணுகுமுறையைமாவை சேனாதிராசா அறிவித்திருக்கிறார்.

ஐ.நா. செயலாளர் நாயகத்தின் நிபுணர் குழு சமர்ப்பித்த அறிக்கையை ராஜதந்திர ரீதியாகப் பயன்படுத்தி, அதனை இனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணும் உத்தியாகக் கைக்கொள்ள முடிவு செய்திருப்பது ஓர் ஆக்கபூர்வமான சிந்தனையும் முயற்சியுமாகும்.

தமிழர் பிரச்சினையை உருவாக்கிய காலத்திலிருந்தே, அரசாங்கம் என்ற வலுவுள்ள சிம்மாசனத்தில் அமர்ந்துகொண்டு, தமிழர்களின் உரிமைகளை காலால் (படை பலத்தால்) நசித்து நொறுக்கும் அநியா யத் தையே சுதந்திரத்துக்குப் பின்னர் வந்த அரசாங்கங்கள் அனைத்தும் செய்துவந்துள்ளன. இது விடயத்தில் தென்னிலங்கையின் அரசியல் கட்சிகள் நான் முந்தி, நீ முந்தி என போட்டி போட்டுச் செயற்பட்டு வந்தன. இப்போதும் அதுவே தொடர்கிறது.

ஐ.நா நிபுணர் குழுவின் அறிக்கையை நிராகரித்து அதனைக் குழி வெட்டிப் புதைக்கும் கைங்கரியத்தில் அரச தரப்பு முழுவீச்சில் ஈடுபட்டுள்ளது. ஒரு காலத்தில் சோஷலிசம், சமத்துவம், சம அந்தஸ்து என்று பாசாங்கு செய்த இடதுசாரிகளும் இப்போது அரசாங்கத்துக்குப் பக்கப்பாட்டுப் பாடுகின்றனர். மனித உரிமை மீறல்களா அப்படி ஒன்றும் நடைபெறவில்லை என்று ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையைப் விமர்சிக்கின்றனர்.

போர் நடைபெற்ற காலத்தில் மக்களும் இறப்பது ஒன்றும் புதிய தல்லவே என்று குதர்க்கவாதம் செய்யும் மிகவும் தாழ்ந்த நிலைக்கு வந்துள்ளார்கள் இடதுசாரிக் கட்சித் தலைவர்கள்; கொள்கை, கோட்பாடுகள் எல்லாவற்றையும் தூக்கிக் கடாசிவிட்டுத் தமது பதவிகளைத் தக்கவைக்கும் உள்நோக்கத்துடன்!

பிரதான எதிர்க்கட்சியோ ஐ.நா. நிபுணர் குழு அறிக்கை குறித்துத் தீர்க்கமான தனது நிலைப்பாட்டை உத்தியோகபூர்வமாகத் தெரிவிக்காமல் ஒளித்துப் பிடித்து, பட்டும் படாமலும் இரட்டை நிலைப்பாட்டைக் கைக்கொண்டுள்ளது.

இந்தப் பின்புலத்தில் ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையைத் தக்கவாறு இனப்பிரச்சினைத் தீர்வுக்கான இலக்காகப் பயன்படுத்த வேண்டிய தேவை தமிழர் தரப்புக்கும் தவிர்க்க முடியாததாகும்.

அத்தகைய ஓர் அரசியல் நகர்வு தவிர்க்கமுடியாதது; சமயோசிதமானது. நிபுணர் குழுவின் அறிக்கையை இலங்கை நாடு முழுவதும் எதிர்க்கிறது; அது பொய்களும் புனைகதைகளும் நிறைந்தது; வெளி நாட்டு சக்திகள் இலங்கை மீது களங்கம் ஏற்படுத்துவதற்காகவும், பழிசுமத் துவதற்காகவும் திட்டமிட்டுச் செயற்பட்டதன் விளைவே அரசுக்குப் பாதகமான நிலையை உருவாக்கியுள்ளது. இந்தத் திசையில் வாதிக்கிறது அரசு.

ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையை இலங்கை மக்கள் நிராகரிக்கிறார்கள்; எதிர்க்கிறார்கள் என்பதனை நிரூபிக்க அரசாங்கம் பெரும் பணச் செலவில் மே நாளைப் பயன்படுத்தி வெற்றியும் கண்டுள்ளது. நேற்று முன்தினம் கொழும்பில் நடத்தப்பட்ட பிரமாண்டமான மே நாள் பவனி, ஐ.நா. அறிக்கை குறித்த அரசின் நிலைப்பாட்டை மக்கள் அங்கீ கரித்துள்ளார்கள் என்று ஊர்ஜிதப்படுத்துவதாக ஆளும் தரப்பு 'பிரகடனப்படுத்தி' உள்ளது.

இத்தகைய பின்புலத்தில் தமிழர் தரப்பும் ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையை இனப்பிரச்சினைக்குரிய நிரந்தரத் தீர்வு காண்பதற்குப் பக்கத் துணையாக்குவது, ராஜீக ஆயுதமாகப் பயன்படுத்துவது தவிர்க்க முடியாத ஒன்றாகிறது. பொருத்தமானது.

விசேடமாக, சர்வதேசத்துக்கு இலங்கை வாழ் தமிழ் மக்களின் நிர்க்கதியான நிலையை நேரில் தெளிவுபடுத்துவதற்கு இதனை ஓர் அரிய சந்தர்ப்பமாகக் கொள்ளவேண்டும்.

எங்கள் மத்தியிலே சில தரப்புகள் எமது இனத்தைச் காட்டி கொடுத்துத் தமக்குச் சாதகமான சலுகைகளைப் பெற்ற சரித்திரம் எல்லோருக்கும் தெரிந்ததுதான். இப்போதும் அது தளர்வில்லாது ஒப்பேறி வருகிறது.

அதனைப் பொருட்படுத்தாது, தமிழ் மக்களுக்கு நேர்ந்துள்ள அரசியல் கதியை உலக நாடுகளுக்கு எடுத்துரைத்து, அவற்றை நியாயத்தின் பக்கம் செயற்பட வைப்பதற்கு முயற்சிப்பது இன்றைய கட்டத்தில், காலத்தின் கட்டாய தேவையாகிறது.

ரஷ்யா, சீனா ஆகிய நாடுகளுடன் பேசுவது போன்று பிரதானமாக, குறிப்பாக இந்தியாவுடனும் பேசவேண்டும். இலங்கையில் நடைபெற்ற போரில் மறைமுகமாகப் பங்குபற்றியது என்பதால் அதற்கொரு தார்மீகப் பொறுப்பு உண்டு; அதனை அந்த நாடு மேலும் மூடி மறைத்து வைக்கமுடியாது.

எனினும் இது விவகாரத்தில் அது மௌனம் சாதிக்கிறது. தமிழகத்தின் தேர்தல் முடிவுகள் வெளிவரும்வரை, நிபுணர் குழு அறிக்கை குறித்த பின்னகர்வுகள் தாமதப்படுத்தப்படுவதாகவும் கிசுகிசுக்கள் வெளிவருகின்றன. பான் கீ - மூனின் பிரதம அதிகாரிப் பதவியில் உள்ள விஜய் நம்பியார் இதன் பின்னணியில் உள்ளார் என்றும் பேசப்படுகிறது.

ஏனைய ஆசிய, ஐரோப்பிய, அராபிய நாடுகளுடனும் தமிழர் தரப்பு பேச்சு நடத்துவது பயன்தரவல்லது. அதனால் கிடைக்கும் பெறுபேறுகள் என்னாகுமோ என்ற இரண்டாவது சிந்தனையை விடுத்து, முயற்சி திருவினையாக்கும் என்று தமிழர் தரப்பு இதில் நம்பிக்கையுடன் ஈடுபடு வது காலத்தின் தேவையாகும். நன்றே செய்க; அதனை இன்றே செய்க என்று பேச்சளவில் நின்று விடாது உடனடியாகச் செயலில் இறங்க வேண்டிய வேளை இது.

# நிரந்தர நியமனம் கிடைக்காது விட்டால் சாத்வீக வழியில் விரைவில் போராட்டம்

## வன்னி தொண்டர் ஆசிரியர்கள் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், மே.3

நிரந்தர நியமனம் அல்லது ஆசிரியர் உதவியாளர் நியமனம் வழங்கப்படவேண்டும். இல்லையேல் வடமாகாண கல்வி அமைச்சின் செயலகத்துக்கு முன்னால் சாத்வீக வழியிலான கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட வேண்டிவரும் என வன்னி மாவட்ட தொண்டர் ஆசிரியர் சங்கத்தினர் தெரிவித்தனர்.

வடமாகாண ஆளுநரின் விசேட முகாமைத்துவ திட்டத்தின் கீழ் வன்னி தொண்டராசிரியர்களுக்கு உதவுதொகை வழங்குவதற்கு ஆளுநர் கொள்கை அளவில் ஏற்றுக் கொண்டுள்ளார். இதனை நாம் வரவேற்கின்றோம்.

இந்த உதவுதொகை வழங்குவதற்காக வன்னி தொண்டராசிரியர்களுக்கு நாளை 4 ஆம் திகதி புதன்கிழமை முதல் எதிர்வரும் 13 ஆம் திகதிவரை ஆவணப் பரீசீலனை மேற்கொள்ளப்பட இருக்கின்றது. இதன் அடிப்படையில்தான் உதவித்தொகை வழங்கப்பட இருப்பதாக வலயக் கல்வி அலுவலகங்களால் பாடசாலைகளுக்குக் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

நாம் கடந்த 2005 ஆம் ஆண்டு வடமாகாணக் கல்வி அமைச்சினால் நடத்தப்பட்ட நேர்முகத்தேர்வுக்குத் தோற்றியிருந்தோம். அவ்வாறு ஒரு நேர்முகத்தேர்வு இடம்பெற்ற பின்னர் மீண்டும் ஆவணப்பரிசீலனை எதற்கு?

நேர்முகத் தேர்வின் அடிப்படையில் எமக்கு நிரந்தர நியமனம் இன்றுவரையிலும் வழங்கப்படவில்லை. இருப்பினும் யாழ்ப்பாணம், மன்னார் கல்வி வலய தொண்டர் ஆசிரியர்களுக்கு கடந்த 2005 ஆம் ஆண்டு நேர்முகத் தேர்வின் அடிப்படையில் 2009 ஆம் ஆண்டு நியமனம் வழங்கப்பட்டது. இந்தக் காலகட்டத்தில் வன்னி தொண்டராசிரியர்கள் அனைவரும் நலன்புரி நிலையங்களில் இருந்த காரணத்தினால் எமது நிரந்தர நியமனம் வழங்கப்படாது இடைநிறுத்தப்பட்டது.

ஆனால் நிரந்தர நியமனம் தொடர்பாக சம்பந்தப்பட்ட அனைத்து அதிகாரிகளுடனும் நியாயபூர்வமாகத் தொடர்புகொண்ட போதும் இதுவரை சாதகமான பதில்கள் எவையும் கிடைக்கவில்லை. தற்போது எமக்கு ஆவணப் பரீசிலனை மேற்கொண்ட பின்னர் உதவித்தொகை வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந்தச் சம்பவம் தொடர்பாக வன்னி தொண்டர் ஆசிரியர்களாகிய நாம் கடும் அதிருப்திக்கு உள்ளாகியுள்ளதுடன் மனவேதனை அடைகின்றோம். ஏனெனில் எமது நியமனங்களைப் புறந்தள்ளி உதவித்தொகை வழங்குதல் என்பது பொருத்தப்பாடு அற்றதாகக் காணப்படுகின்றது. எனவே வன்னித் தொண்டராசிரியர்களின் வாழ்வாதார நிலையைக் கருத்தில்கொண்டு பாதிக்கப்பட்டவர்கள் என்ற வகையில் உடனடியாக நிரந்தர நியமனம் வழங்குவதற்குச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

நடவடிக்கை எடுக்கத்தவறும் பட்சத்தில் வன்னித் தொண்டராசிரியர் அனைவரும் ஒன்றிணைந்து சாத்வீக வழியில் வட மாகாண கல்வி அமைச்சின் செயலகம் முன்பாக கவனயீர்ப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென்று அவர்கள் தெரிவித்தனர். (த-15)

# அறிக்கையின்படி நம்பகமான விசாரணை நடத்துவதற்கு இலங்கை அரசு தயாரா?

## கொழும்புவரும் அமெரிக்க அமைச்சர் இதனைக் கண்டறிய முயல்வார்

கொழும்பு,மே.3

ஐ.நா. நிபுணர் குழு வெளிப்படுத்தியுள்ள விடயங்கள் தொடர்பாக இலங்கை அரசு நம்பகமான விசாரணைகளை ஆரம்பிப்பதற்கு திட்டமிட்டுள்ளதா என்பதைக் கண்டறிவதற்கு இன்று இலங்கைக்கு வருகைதரவிருக்கும் அமெரிக்க உதவி அமைச்சர் றொபேர்ட் ஒபிளேக் முழுமூச்சாக ஈடுபடக்கூடும் என்று கொழும்பு ஆங்கிலப் பத்திரிகையொன்று கருத்துவெளியிட்டுள்ளது. அவ்வாறான புலனாய்வுகளை முனைப்போடு செய்வதற்கான பொறி அமைப்பாக கற்றபாடங்கள் மற்றும் மீள் நல்லிணக்கக் குழுவை அமெரிக்கா கருதவில்லை அதனாலேயே அரசாங்கம் நம்பகமான புலனாய்வு ஒன்றை நடத்த திட்டமிட்டுள்ளதா என்பதை அமெரிக்கா அறிய விரும்புகின்றது என்று அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் ஐ.நா. நிபுணர்குழுவின் கண்டுபிடிப்புகளை இலங்கை அரசு உடனடியாகவே நிராகரித்துவிட்டதுடன் அப்படியானதொரு ஆய்வு அவசியமற்றது என்றும் கருதுகின்றது. இந்த நிலையில் பிளேக் முன்பே அறிவித்துள்ளவாறு சர்வதேச விசாரணையொன்று நடத்தப்படுவதை அமெரிக்கா ஆதரிக்கக்கூடும் என்று தெரிகிறது. அதே சமயம் அண்மையில் அமெரிக்க ராஜாங்க அமைச்சு வெளியிட்ட மனித உரிமைகள் தொடர்பான அறிக்கையும் இலங்கை அரசை ஆத்திரம் கொள்ளச் செய்துள்ளது. இலங்கையில் ஊடகங்கள் அதிக அக்கறை காட்டிக் கொள்ளாவிட்டாலும் அந்த அறிக்கையில் முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன்சேகா ஒரு அரசியல் கைதியென்றே குறிப்பிடப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கது. ஜெனரல் பொன்சேகா கைது செய்யப்பட்டு இராணுவ நீதிமன்றில் விசாரிக்கப்பட்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட நடைமுறையை அமெரிக்கா அங்கீகரிக்கவில்லையென்பதையே இது காட்டுகின்றது. முன்னர் தெரிவிக்கப்பட்டதுபோல் ஜெனரல் சரத் பொன் சேகா விடுவிக்கப்படக் கூடிய சாத்தியமிருப்பதாகவும் கருதப்படுகின்றது.

இன்று மாலை இலங்கைக்கு வரவிருக்கும் ஆசியாவின் மத்திய மற்றும் தெற்கு பிராந்தியங்களுக்கான அமெரிக்க ராஜாங்க அமைச்சின் உதவி அமைச்சர் றொபேர்ட் ஒ பிளேக் புதன்கிழமை கிளிநொச்சி மற்றும் வவுனியா பகுதிகளுக்கு செல்லவிருக்கின்றார். ஜனாதிபதி ராஜபக்ஷவை சந்திப்பதற்கும் அவர் சந்தர்ப்பம் கேட்டுள்ளார். ஆனால் ஜனாதிபதி அவரைச் சந்திப்பாரா என்பது இன்னமும் உறுதி செய்யப்படாமலே உள்ளது. பொருளாதார அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, பாதுகாப்பு அமைச்சர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியவர்களையும் அவர் சந்திக்கவிருக்கிறார். அமெரிக்காவுக்கு தனிப்பட்ட பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்த கோத்தபாய ராஜபக்ஷ இன்று கொழும்பு திரும்புவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இவ்வாறு அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

# ஆனையிறவு உப்பளங்களின் செயற்பாடு விரைவில்


யாழ்ப்பாணம், மே.3

ஆனையிறவு உப்பளங்களின் உற்பத்திச் செயற்பாடுகள் வெகுவிரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனையிறவு உப்பளங்களின் உற்பத்திகள் கடந்த கால யுத்த சூழ்நிலை காரணமாகத் தடைப்பட்டிருந்தன. தற்போது இந்தப் பகுதிகளில் மிதி வெடிகள் அகற்றும் நடவடிக்கைகள் துரிதகதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அத்துடன் உப்பளங்களுக்கான தலைமை அலுவலகத்தை ஆன்னயிறவில் அமைக்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

ஆனையிறவு உப்பளங்களின் மூலம் முழுநேர மற்றும் பருவகால பணியாளர்களுக்கான நியமனங்கள் அனைத்துப் பணிகளுக்குமென சுமார் 2 ஆயிரம் பேர்வரையில் இங்கு கடமைக்கு இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சி மக்களுக்கு பயனுள்ளதாக அமைந்த யாழ். மருத்துவபீட மாணவர்களின் கண்காட்சி



இந்தக் கண்காட்சி பற்றிக் குடும்பப் பெண்மணியும் ஆசிரியையுமான திருமதி பவானி சந்திரகுமார் கருத்துத் தெரிவிக்கையில், ''இந்தக் கண்காட்சியில் நடத்தப்பட்ட மருத்துவ பரிசோதனைகள் மூலம் தமது உடலை பரிசோதித்து தம்மைத் திடப்படுத்திக்கொள்ளக் கூடியதாகவுள்ளது. எமது மக்கள் மத்தியில் தமது உடலை



இடையிடையே பரிசோதனை செய்யும் பழக்கம் குறைவாகவே காணப்படுகின்றது. வெளியே இதற்குப் பெருந் தொகைப் பணத்தினை செலவு செய்ய வேண்டியுள்ளது. சாதாரண பொது மக்களால் இது முடியாத காரியமாகும். ஆனால் இங்கு நடத்தப்பட்ட இலவச மருத்துவப் பரிசோதனை மூலம் பெருந்தொகையான மக்கள் நன்மையடையக் கூடியதாக இருந்தது. அத்துடன் நோய்களுக்கான காரணிகள் பற்றிய விளக்கத்தினையும் பெறக்கூடியதாகவிருந்தது. இதன்மூலம் வரும் முன் காப்போம் என்பது போல பல நோய்களிலிருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்ளலாம். சாதாரண மக்களுக்கு விளங்கும் மொழி நடையில் மாணவர்கள் விளக்கத்தை அளிப்பது எம்மைக் கவர்ந்திருக்கின்றது. இதன் மூலம் மாணவர்களும் மேலதிக அறிவினைப் பெறுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டிருக்கின்றது. தமது குடும்பத்திற்கும் அயலவர்களுக்கும் மாணவர்கள் தொடர்ந்தும் உதவக்கூடியதாகவிருக்கும்.

இக்கண்காட்சியின் மூலம் குடும்பப் பெண்மணிகள் நோயற்ற வாழ்வுக்கு எத்தகைய உணவு வகைகளைத் தயாரித்து குடும்பத்தவர்களுக்கு வழங்கலாம் என்ற அறிவினையும் பெறக்கூடியதாகவிருந்தது'' - என்றார்.

சுகாதார விழிப்புணர்ச்சிக் கண்காட்சியைப்பற்றி கடற்றொழிலாளியான ம.விஜயகுமார் (பொலிகண்டி)



கருத்துத் தெரிவிக்கையில், '' இக் கண்காட்சி மூலம் நோய்களுக்கான காரணிகள் சம்பந்தமான விடயங்களை நாம் தெரிந்து கொள்ளக் கூடிய தாக இருந்தது. எமது தொழிலை மேற் கொள்கின்ற பலர் புகைப்பிடித்தல், வெற்றிலை போடுதல் பழக்கத்தை உடையவர்களாக இருக்கின்றனர். கடலில் தொழிலுக்கு போகும் போது குளிருக்காகவும், நித்திரை வராமல் விழித்திருப் பதற்காவும் என இப்பழக்கத்தை உடையவர்களாக பலர் இருக்கின்றார்கள். வாய்ப் புற்றுநோய்க்குப் புகைப் பிடித்தல், வெற்றிலை போடும் பழக்கம் பிரதான காரணியாக உள்ளதென்பதை இக்கண்காட்சியின் மூலம் அறிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது.

அத்துடன் காலையில் கடலில் இருந்து தொழிலால் திரும்பிய பின்னர் வாயை நன்றாக சுத்தம் செய்து வாய்ச் சுகாதாரம் பேண வேண்டும் என்ற அறிவினையும் நாம் பெற்றுக் கொண்டோம். கடலுக்கு தொழிலுக்குச் செல்கின்றபோது, எம்முடன் வரும் சக தொழிலாளிக்கு சுவாசம் சம்பந்தமான பிரச்சினை, அல்லது காயம் ஏற்பட்டால் எத்தகைய முதலுதவி மேற்கொள்ளவேண்டும் என்ற அறிவினையும் இக் கண்காட்சி மூலம் பெறக் கூடியதாக இருந்தது. நோயற்ற வாழ்வுக்கு எத்தகைய உணவுகளை உட்கொள்ளவேண்டும் என்ற அறிவினையும் நாம் பெறக் கூடியதாக இருந்தது.

இங்கு நடத்தப்பட்ட இலசவக் பரிசோதனை மூலம் எமது உடல் நிலை பற்றியும் நாம் தெரிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது. இத்தகைய சுகாதார விழிப்புணர்வுக் கண்காட்சிகள் சுகாதார, வைத்திய வசதிகள் குறைவாகக் காணப்படுகின்ற மக்கள் குடியமர்ந்த பகுதிகளான வடமராட்சி கிழக்கு, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய இடங்களிலும் எதிர்காலத்தில் நடத்தப்பட்டு அப் பகுதிகளில் உள்ள மக்களுக்கு சுகாதாரம் சம்பந்தமான விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். நகரப்பகுதிகளில் உள்ள மக்களுக்கு இன்று கிடைத்திருக்கின்ற சுகாதார வசதிகள் மீள் குடியமர்ந்த மக்கள் வாழ்கின்ற பகுதிகளில் இல்லாத நிலையே காணப்படுகின்றது'' என்றார்.

**யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட 31 ஆவது அணி மாணவர்களின் ஏற்பாட்டில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் கடந்த மூன்று தினங்களாக இடம்பெற்ற மருத்துவக் கண்காட்சியை வடமராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான பொதுமக்களும் பாடசாலை, தனியார் கல்லூரி மாணவர்களும் பார்வையிட்டு இன்றைய கால நோய்கள் அவற்றைத் தடுப்பது தொடர் பான அறிவு ஆற்றல்களைப் பெற்றுக் கொண்டனர்.**

**உதயன் நாளிதழின் ஊடக அனுசரணையுடன் பல் வேறு வர்த்தக நிறுவனங்கள், பருத்தித்துறை வர்த்தக சங்கம் ஆகியவற்றின் ஆதரவுடன் கடந்த வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய மூன்று தினங்களும் காலை 9 மணி முதல் பிற்பகல் 4 மணி வரை இந்தக் கண்காட்சி நடை பெற்றது.**

**இந்தக் கண்காட்சியில் கண் பரிசோதனை, இரத்தப் பரிசோதனை, குருதியமுக்கப் பரிசோதனை, சிறுநீரகப் பரிசோதனை, ஆஸ்துமா பரிசோதனை என்பவற்றை இலவசமாகப் பெற்றுக்கொண்டனர். வடமராட்சி லயன்ஸ் கழகத்தினால் கண்ணாடிகள் இலவசமாக வழங்கப்பட் டன.**

**இந்தக் கண்காட்சியில் தெரிவு செய்யப்பட்ட நோய்கள் இன்றைய சமூகத்தில் இருப்பதாகவும் அவற்றைச் சமூகத்திலிருந்து குறைக்க இப்படிப்பட்ட கண்காட்சிகள் பெரிதும் உதவும் என்றும் இந்தக் கண்காட்சி பல இடங்களிலும் குறிப்பாக மீள்குடியமர்த்தப்பட்ட பகுதிகளிலும் ஒழுங்கு செய்யப்பட வேண்டும். கண்காட்சியில் விளக்கமளித்த மாணவர்கள் மிகச் சிறப்பாக பார்வையாளர்களுக்கு விளக்கினார்கள் என்று கண்காட்சிப் பார்வையாளர்கள் கண்காட்சிக் குறிப்புப் புத்தகத்தில் எழுதியுள்ள கருத்துகளில் குறிப்பிட்டுள்ளார்கள்.**

**ஆரோக்கிய சமூகம் ஒன்றை உருவாக்க அடித்தளமிடும் வகையில் வருமுன் காப்போம் நோயற்ற சமூகத்தைக் கட்டியெழுப்புவோம் என்ற மகுட வாசகத்தைக் கருவாகக் கொண்டு இடம்பெற்ற மருத்துவபீட மாணவர்களின் இந்தக் கண்காட்சி வடமராட்சிப் பிரதேச மக்களுக்குக் கிடைத்த வரப் பிரசாதமாகும்.**

கண்காட்சியில் விளக்கமளித்த பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் ஜி.சீ.ஈ உயர்தரப் பிரிவில் உயிரியல் பாடத்தைக் கற்கும் மாணவன் அ. பிரதாபன் கருத்துத் தெரிவிக்கையில்,



மருத்துவக் கண்காட்சியை நாம் எதிர்பார்த்ததை விட பெருந்திரளானோர் பார்த்துப் பயனடைந்துள்ளார்கள். கண்காட்சியைப் பார்வையிட வந்த மக்களுக்கும் மாணவர்களுக்கும் நல்ல முறையில் நாம் விளக்கத்தை கொடுத்துள்ளோம். சாதாரண அறிவைக் கொண்ட மக்களுக்கும் பாமர மக்களுக்கும் கண்காட்சியில் புரியாதவர்களுக்கும் அவர்களில் நிலையில் இருந்து கொண்டு வயதுக்கேற்ப கண்காட்சி பற்றி விளக்கியதுடன், சில நோய்களுக்கு உடனடியாக தடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் விளக்கினோம்.

கண்காட்சியை விளக்குவதற்கான பயிற்சியை மருத்துவ பீட மாணவர்கள் எமக்கு அளித்தனர். நாம் வகுப்பில் ஆசிரியர்களிடம் கற்பதைப் போல மருத்துவ மாணவர்களிடமிருந்து நிறைய அறிவையும், ஆற்றலையும் பெற்றுள்ளோம். இவர்கள் எமக்குத் தந்த பயிற்சி எமது உயர்கல்விக்கு பெரிதும் உதவியாக இருக்கும் .

தொகுப்பு: கர்ணன், திவ்வியகுமார், ஹரிஸ்

இந்தக் கண்காட்சி இங்கு மட்டுமல்ல எமது பிரதேசம் எங்கும் தொடர்ந்து நடத்தப்பட வேண்டும். இதன் மூலம் பாமரமக்கள் நிறைந்த பலாபலன்களைப் பெற்றுக் கொள்ளவேண்டும் என்பதே எமது விருப்பம். மருத்துவ பீட மாணவர்களின் பணிக்கு எமது ஒத்துழைப்பு என்றென்றும் கிடைக்கும்- என்றார்.



கம்பர்மலை வித்தியாலயதில் 11 ஆம் ஆண்டில் கல்வி கற்கும் மாணவி என்.வான்மதி கருத்துத் தெரிவிக்கையில் :

மாணவர்களுக்கும், உடல்நலத்தை பேணும் பொது மக்களுக்கும் பெற்றோர்களுக்கும் இந்தக்கண்காட்சி பிரயோசனமானது. மாணவர்களது கல்வி உயர்வுக்கு வழிவகுக்கும் அதேவேளை பொது மக்களுக்கு நோய்கள் பற்றியும் அவற்றைத் தடுப்பது பற்றியும் இந்தக் கண் காட்சி எடுத்துச் சொல்கின் றது.



தற்காலத்தில் ஏற்படும் நோய்கள், அதன் விளைவுகள் பற்றி கண்காட்சி சொல்கின்றது. மாணவர்களாலும் எமது சமூகத்திற்கு ஆலோசனைகள் வழங்கக் கூடியவகையில் இந்தக் கண்காட்சி இருப்பதையிட்டு நான் பெருமைப்படுகின்றேன் என்றார்.



பருத்தித்துறை இரண்டாம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த ஆ.சதாசிவம் (வயது -66) என்ற ஓய்வூதியர் கருத்துத் தெரிவிக்கையில்:

பொதுவாக இப்படியான கண்காட்சிகள் காட்சிப்படுத்துவது பொதுமக்களுக்கு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும்படிப் பறிவில்லாத மக்களுக்கும் பொது அறி வில்லாதவர்களுக்கும் அவர்கள் புரியும்படியாக இக்கண்காட்சியில் மாணவர்கள் விளக்கமளிக் கின்றார்கள் உண்மையில் சாதரண மக்களுக்கு இது ஒரு வரப்பிரசாதமாகும். அதன் மூலம் விளக்கமளிக்கும் மாணவர்கள் சொல்லும் வழி வகைகள் அடிமட்ட சாதரண மக்களை உரியமுறையில் சென்றடைந்துள்ளது என்பது எனது கருத்தாகும் இக்கண் காட்சிகளைப் பார்த்து விளக்கத்தைப் புரிந்து கொண்டார்கள். நோயற்றவர்களாக வாழ வழிவகுக்கும் என்றார்.

தும்பளையைச் சேர்ந்த குடும்பப் பெண்ணான திருமதி இராஜேஸ்வரி கோவிந்தப்பிள்ளை கருத்துத் தெரிவிக்கையில்



மிகப்பிரயோசமான கண்காட்சி பிள்ளைகளுக்கு மட்டுமல்ல முழுச்சமூகமே பார்க்கவேண்டிய கண்காட்சி. நோயுள்ளவர்கள் கட்டாயம் பார்க்கவேண்டிய கண்காட்சி. மனிதனின் ஆரோக்கிய வாழ்வுக்கு சிறந்த ஆலோசனைகளை இக்கண்காட்சி எமக்கு புகட்டுகின்றது என்றார்.

அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாலயத்தில் 11 ஆம் ஆண்டில் கல்விகற்கும் த.நிதர்சன் தெரிவிக்கையில்:



மாணவர்களாகிய எமக்குத் தேவையான கல்விக்கு இந்த கண்காட்சி உறுதுணையாக இருக்கின்றது. புற்று நோய் தொடர்பான விவரங்களை இக்கண்காட்சியில் தான் முதன் முதலில் அறிந்து கொண்டேன். புற்று நோயில் பலவகையான புற்று நோய் இருப்பதை தெரிந்து கொண் டேன். கண்காட்சியில் பார்த்துக் கற்றுக் கொண்டதன் பயனாக புற்றுநோய் தொடர்பாக எமது சமூகத்திற்கு, மக்களுக்கு தேவையான ஆலோசனை களை நான் வழங்குவேன் என்றார்.

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை அதிபர் திருமதி செல்லமலர் சுந்தரேசன் கருத்துத்தெரிவிக்கையில் ஜி.சீ.ஈ உயர்தர வகுப்பில் கற்கும் மாணவர்கள் சிறந்த பயிற்சியைப் பெற்று தம்மை பரீட்சைக்குத் தயார்படுத்த இந்தக் கண்காட்சி பெரிதும் உதவிபுரிந்துள்ளது.



மாணவர்கள் வகுப்புகளில் என்ன தான் போதிய பயிற்சிகள் பெற்றாலும் பயிற்சிகளை மிக இலகுவில் மாணவர்கள் மனதில் பதிப்பதற்கு இக்கண்காட்சி உதவுகின்றது. இக் கண்காட்சியை மிக ஆழமாகப் பார்வையிட்டு அனுபவங் களைப் பெற்றுக் கொண்ட மாணவர்கள் ஜி.சீ.ஈ உயர் தரப் பரீட்சையில் சிறந்த பெறு பேறுகளைப் பெற்றுக் கொள்ளவார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு இக் கண்காட்சி பயிற்சி மையமாகவும், சமூகத்திற்கு விழிப்புணர்ச்சியையும் ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரிமைப் போராட்டம் நடத்தி ஆட்சியைக் கவிழ்ப்போம்

## பண்டாரவளையில் முழங்கினார் ரணில்



கொழும்பு, மே 03

தொழிலாளர்களின் சம்பள உயர்வு உள்ளிட்ட அனைத்து உரிமைகளையும் பெற்றுக்கொடுக்க ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இனியும் நடவடிக்கை எடுக்கா விட்டால், உரிமைப் போராட்டம் நடத்தி ஆட்சியைக் கவிழ்த்து புதிய ஆட்சியொன்றை அமைக்கும் நடவடிக்கையில் ஐக்கிய தேசியக் கட்சி இறங்கும் என்று எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூறினார்.

பண்டாரவளையில் ஐக்கிய தேசியக் கட்சி நேற்று முன் தினம் நடத்திய மே தினக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து கூறியவை வருமாறு:-

இடம்பெயர்ந்த வன்னி மக்களை சிறைப்படுத்தி வைத்திருப்பதுபோல் இந்த நாட்டு மக்கள் அனைவரையும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சிறைப் படுத்தி வைத்துள்ளார். மக்களின் பாதுகாவலனான ஜனாதிபதி எமனாக மாறியுள்ளார். மக்கள் அவரைக் கண்டு அஞ்சுகின்றனர்.

தொழிலாளர்களின் உரிமைகள் பெற்றுத் தரப்படும் என்றும் அவர்களின் சம்பளம் அதிகரிக்கப்படும் என்றும் தேர்தல் காலங்களில் வாக்குறுதிகளை வழங்கிய ஜனாதிபதி அந்த வாக்குறுதிகளை இன்னும் நிறைவேற்றவில்லை.

தொழிலாளர்களின் உரிமையைப் பெற்றுக்கொடுப்பதற்காக நாம் கையெழுத்து வேட்டை ஒன்றை ஆரம்பிப்போம். அதன் பிரதிகளை ஜனாதிபதிக்கு அனுப்பிவைப்போம்.

அப்போதும் அவர் தொழிலாளர்களின் உரிமைகளைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்காவிட்டால் ஆட்சியைக் கவிழ்த்து புதிய ஆட்சி ஒன்றை அமைக்கும் நடவடிக்கையில் ஈடுபடுவோம்.

தொழிலாளர்களின் சம்பளத்தை உயர்த்த பணம் இல்லை என்று கூறும் அரசு அமைச்சர்களின் சம்பளத்தைக் கூட்டியுள்ளது.

ஜனாதிபதி மற்றும் அமைச்சர்கள் ஆகியோர் வெளிநாடுகளில் சுற்றித் திரிந்து மக்களின் பணத்தை விரயம் செய்கின்றனர்.

தேயிலை மற்றும் இறப்பர்களின் விலைகள் அதிகரித்துள்ளன. ஆனால், தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் அதிகரிக்கப்படவில்லை. தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் 500 ரூபாவாக உயர்த்தப்பட வேண்டும் என்று நாம் கேட்டோம். ஆனால், ஆறுமுகன் தொண்டமான் தலையிட்டு அதைத் தடுத்துவிட்டார்.

இந்த நிலையில் தொழிலாளர்களின் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் போன்றவற்றைக் கொள்ளையடிப்பதற்காக அரசு ஓய்வூதிய சட்டமூலம் ஒன்றைக் கொண்டுவரவுள்ளது. இதற்கு நாம் கடும் எதிர்ப்பைத் தெரிவிக்கின்றோம். இந்தச் சட்ட மூலத்தால் தொழிலாளர்கள் அதிகம் பாதிக்கப்படுவர் - என்றார். (ஒ-சி)

### இலங்கைத் தோட்ட சேவையாளர்களுக்கு காணி பெற்றுத்தர இருமாதம் அவகாசம்

நுவரெலியா, மே3

இலங்கைத் தோட்ட சேவையாளர்கள் வீடுகள் கட்டுவதற்கான காணி பெற்றுத் தருவதற்கு தோட்ட உரிமையாளர்களுக்கு இன்னும் இரண்டு மாதங்கள் மட்டுமே அவகாசம் வழங்கப்படுமென இலங்கை தோட்ட சேவையாளர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் நாத் அமரசிங்க தெரிவித்தார்.

இலங்கைத் தோட்ட சேவையாளர் சங்கத்தின் மே தினக் கூட்டம் கண்டி பௌத்த இளைஞர் மன்றக் கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

இலங்கைத் தோட்ட சேவையாளர் சங்கம் அனைத்து தொழிற் சங்கங்களுடனும் இணைந்து உழைக்கும் மக்களுக்காகப் பாடுபட்டு வருகின்றது. இதன் மூலம் நாம் பலதை சாதித்துள்ளோம்-என்றார். (ச)

## ஓமந்தை தடுப்புக் காவல் முகாம் நேற்று முதல் மூடப்பட்டது

ஓமந்தையில் இயங்கி வந்த இராணுவத்தினரின் தடுப்புக் காவல் முகாம் நேற்று முதல் மூடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

ஓமந்தை மத்திய மகா வித்தியாலயத்தில் இந்தத் தடுப்புக் காவல் முகாம் இயங்கி வந்த நிலையில், முகாம் மூடப்படுவதன் காரணமாக பாடசாலைக் கட்டடம் மீண்டும் அதன் அதிபரிடம் உத்தியோகபூர்வமாக நேற்றுக் கையளிக்கப்பட்டது.

கடந்த 2009 மே மாதம் தொடக்கம் சுமார் இரண்டு வருடங்கள் வரையில் ஓமந்தை மத்திய மகா வித்தியாலயத்தில் இராணுவத்தினரின் தடுப்புக் காவல் முகாம் இயங்கி வந்திருந்தது. அங்கிருந்த தடுப்புக் காவல் முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்கள் அனைவரும் தற்போதைக்கு சமூக மயப்படுத்தப்பட்டுள்ளதால், இந்தத் தடுப்பு முகாம் மூடப்பட்டுள்ளதாக வவுனியா அரச அதிபர் திருமதி சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.



வாழைச்சேனை ஆயிஷா மகளிர் மகா வித்தியாலயத்தின் அதிபரை இடமாற்றுவதற்காக பிரதேசத்திலுள்ள சிலரினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளுக்கு எதிராகப் பெற்றோர்கள் நேற்றுத் திங்கட்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (ச)

## மாத்திரைகளை உட்கொண்டோர் சுகயீனம்

ஒருவித மாத்திரைகளை உட்கொண்ட ஐந்து இளைஞர்கள் சுகயீனமுற்ற நிலையில் பொலனறுவை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை காலை மற்றும் பகல்வேளைகளில் சுகயீனமுற்ற இவர்கள் ஐவரும் 15 - 17 வயதுக்கு இடைப்பட்ட பாடசாலை மாணவர்கள் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (ச-5)

# வடக்கு, கிழக்கு இணைந்த மாநில சுயாட்சி முறை மூலம் தமிழ், முஸ்லிம் மக்களின் உரிமைகளுக்கு முன்னுரிமை

## அகில இலங்கைப் பொது ஊழியர் முன்னணியின் மேதினக் கோரிக்கை

''இனப் பிரச்சினைத் தீர்வுக்கு வடக்கு, கிழக்கு இணைந்த மாநில சுயாட்சி முறையை ஏற்படுத்த அரசு முன் வருவதுடன், இதன் மூலம் சிறுபான்மை தமிழ், முஸ்லிம் மக்களின் அடிப்படை மனித உரிமைகள் மற்றும் அரசியல் உரிமைகளுக்கு முன்னுரிமை வழங்கித் தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்கவும் முன்வரவேண்டும்.''

இவ்வாறு அகில இலங்கைப் பொது ஊழியர் முன்னணி மேதினக் கோரிக்கையாக அரசிடம் முன்வைத்துள்ளது.

அகில இலங்கை அரசப் பொது ஊழியர் சங்கத்தின் இணை நிறுவனமான பொது ஊழியர் முன்னணி தனது 10 ஆவது மேதின விழாவை தாய்ச் சங்கத்துடன் இணைந்து நேற்று முன்தினம் கல்முனையில் நடத்தியது.

இந்த மேதின விழாவில் அகில இலங்கைப் பொது ஊழியர் முன்னணியின் சார்பில் பின்வரும் கோரிக்கைகளுக்கான தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

* அரசுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடத்திவரும் பேச்சு வெற்றிபெற வேண்டுமென அவா கொள்ளும் அதே வேளை சக சிறுபான்மை இனமான முஸ்லிம் மக்களினதும் அபிலாஷைகள், சமத்துவம் மற்றும் சுயநிர்ணய உரிமைகள் என்பவற்றையும் கவனத்தில் கொண்டு அந்த மக்களையும் இணைத்துக்கொண்டு கூட்டமைப்பு பேச்சுத் தொடரவேண்டும்.

* அறிமுகப்படுத்தப்படவிருக்கும் 'ஜனசபா' மக்கள் சபை உருவாக்கத் திட்டத்தின் மூலமாக உள்ளூராட்சிச் சபைகளின் அதிகாரங்கள் பலவீனமடையாமல் இருப்பதற்கு ஏற்ப நடவடிக்கை மேற்கொள்ளப் படவேண்டும்.

* பதின்மூன்றாவது அரசியல் யாப்புத் திருத்த[illegible] அமைவாக கிழக்கு [illegible] சபை உட்பட மாகாண சபைகளுக்குரிய அதிகாரங்களை அரசு முழுமையாக வழங்கவேண்டும்.

* வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மீண்டும் மீள்குடியமர்ந்த மக்கள் பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர். இவர்களது அடிப்படைத் தேவைகள், வீட்டு வசதி மற்றும் வாழ்வாதார, ஜீவனோபாயம் என்பவற்றில் அரசு விசேட கவனம் செலுத்தி உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

* பொதுசன மாதாந்த உதவி பெறுபவர்கள், சமுர்த்தி உதவி பெறுபவர்களின் நலன்கருதி மாதாந்தம் வழங்கப்படும் உதவித் தொகையை அதிகரிக்க வேண்டும்.

* வணக்க வழிபாட்டுத் தலங்களில் கடமை புரியும் மத குருமார்கள், ஊர்மக்கள், குருமார்கள், சமய போதகர்கள் ஆகி[illegible] மொன்றை அரசு உருவாக்குவதுடன் அவர்களது கண்ணியத்தைப் பிரதேச, ஊர் வழமைகளின் பிரகாரமும், சட்ட ரீதியாகவும் உறுதிப்படுத்தப்படவும் ஆவன செய்ய வேண்டும்.

* ஊடகவியலாளர்களுக்கான ஓய்வூதியத் திட்டம் ஒன்றை அரசு உருவாக்குவதுடன் பிராந்திய ஊடகவியலாளர்களில் 60 வயதை அடைபவர்களுக்கும் இந்த விசேட திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் வழங்க அரசு ஆவன செய்யவேண்டும்.

* நீண்ட காலமாக விசாரணையின்றிச் சிறைக் கூடங்களிலிருக்கும் தமிழ்க் கைதிகளுக்கும், குற்றங்களுக்காகத் தண்டனை அனுபவிக்கும் 60 வயதுக்கு மேற்பட்ட கைதிகளுக்கும் பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்ய வேண்டும்.

* வடக்கு, கிழக்கு மாகாணங்களில் யுத்த சூழ்நிலைகளிலும், இடர் கஷ்டங்களுக்கு மத்தியிலும் உயர் கல்வி பெற்றுப் பட்டதாரிகளாகவுள்ள பெருந்தொகையானோர் இன்று வேலையற்ற பட்டதாரிகளாக [illegible]ரீதியாகப் பாதிக்கப்பட்ட நி[illegible]மையிலுள்ளனர். வடக்கு, [illegible]க்கு மாகாணத் திணைக்களத் தலைவர்கள், மாகாண அமைச்சர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், ஆளுநர்கள் இவர்களது நியமன விடயத்தில் மனித நேயத்துடன் கவனம் கொள்ள வேண்டும்.

* வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள பாடசாலைகளில் நிலவும் ஆசிரிய வெற்றிடங்களுக்கு வேலையற்ற பட்டதாரிகளையும், நீண்ட காலமாக வேதனமின்றி சேவையாற்றும் தொண்டர் ஆசிரியர்களையும நியமனம் செய்ய வேண்டும்.

இந்த மேதினக் கோரிக்கைகளைப் பொது ஊழியர் முன்னணியின் செயலாளர் ஐ.என். இப்றா லெவ்வை மேதின விழாவில் முன்மொழிந்தபோது [illegible]மனதாக நிறைவேற்றப்பட்டன. (க-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி பயன்பாட்டுத் திணைக்களம் யாழ்ப்பாணத்தில் வியாழனன்று திறப்பு

யாழ்பாணம்,மே 3

காணிப் பயன்பாட்டுக் கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தின் யாழ். மாவட்ட அலுவலகத் திறப்பு விழா எதிர்வரும் வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு உத்தியோக பூர்வமாகத் திறந்து வைக்கப்படவுள்ளது.

காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டாரா தென்னக்கோன் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு அலுவலகத்தைத் திறந்து வைக்கவுள்ளார்.


யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தலைமையில் இடம்பெறும். இந்த நிகழ்வில் காணி அமைச்சின் பிரதி அமைச்சர் சிறிபாலக மல்நாத், அமைச்சின் செயலாளர் அசோகபீரிஸ், காணிப்பயன்பாட்டு கொள்கை திட்டமிடல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் திருமதி சாந்தி பெர்னாண்டோ ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இவர்களுடன் வடமாகாண காணி அமைச்சின் செயலாளர், வடக்கு மாகாண காணி ஆணையாளர் மற்றும் காணி அமைச்சின் உயர் அதிகாரிகள் பலரும் இதில் கலந்துகொள்ளவுள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் இந்த அலுவலகம் திறந்து வைக்கப்படவுள்ளது. இந்தத் திணைக்களத்தில் கடமையாற்றுவதற்காக ஒவ்வொரு பிரதேச செயலகங்களுக்கும் ஒவ்வொரு காணிப்பயன் பாட்டுத் திட்டமிடல் உத்தியோகத்தர்கள் அண்மையில் நியமிக் கப்பட்டுள்ளனர்.

இந்தத் திணைக்களம் காணி அமைச்சின் கீழ் ஒரு பிரிவாக செயற்பட்டு கடந்த வருடம் தொடக்கம் தனியான திணைக்களமாகச் செயற்பட்டு வருகின்றது. (த-14)

## மீண்டும் பொலிவுடன்...



நீண்ட இடைவெளிக்குப் பின்னர் யாழ்.ஞானம்ஸ் ஹோட்டல் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது யாழ்.மாவட்ட படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க ஹோட்டலைத் திறந்து வைத்தார். (த-14)

# கைதடி, நாவற்குழிப் பாலங்களில் விபத்து எச்சரிக்கைப் பலகைகள்

நாவற்குழி, மே 3

கைதடி, நாவற்குழி இரும்புருக்குப் பாலத்தின் இரு கரைகளிலும் 100 மீற்றர் தூரத்தில் ''கவனம்; முன்னால் வழுக்கும் தன்மையுள்ள பாலம் உள்ளது'' என்ற அறிவித்தல் பலகை நடப்பட்டுள்ளது.

மும்மொழிகளிலும் தெளிவாக எழுதப்பட்டுள்ள இவ் அறிவித்தல் பலகை இரவிலும் வாகன சாரதிகள் பார்க்கக் கூடிய வகையிலான எழுத்துக்களால் அமைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பாலங்களின் தரை மழை, பனி காலங்களில் வழுக்கும் தன்மை உடையதாக இருப்பதால் கடந்த காலங்களில் ஏராளம் விபத்துக்கள் ஏற்பட்டன.

தற்போதைய அறிவித்தல் மூலம் அதனைக் குறைக்க முடியுமென எதிர்பார்க்கப்படுகின்றது. (த-121)

# நல்லூர் - ஒட்டுமடம், செம்மணி வீதிகளுக்கும் விரைவில் 'காப்பெற்'

யாழ்பாணம்,மே 3

செம்மணி வீதி, நல்லூர் ஒட்டுமடம் வீதி ஆகியவற்றைக் 'காப்பெற்' வீதியாக மாற்றியமைக்கும் பணிகள் இன்னும் சில தினங்களில் ஆரம்பமாகவுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தற்போது இந்த வீதிகளை அமைப்பதற்கு மதிப்பீடு செய்யும் பணிகள் இடம் பெற்று வருகின்றன எனவும் அவர் கூறினார்.

ஏற்கனவே நகரில் ஸ்ரான்லி வீதி, கொழும்புத்துறை பிரதான வீதி,பழையபூங்கா வீதி என்பன 'காப்பெற்' வீதியாக மாற்றப்பட்டுள்ளன.

யாழ். மாநகரப் பகுதியில் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் உள்ள சலக வீதிகளும் காப்பெற் வீதியாக மாற்றப்படவுள்ளன எனவும் இதன் அடுத்த கட்டமாக செம்மணி வீதி, நல்லூர் - ஒட்டுமடம் வீதி என்பன 'காப்பெற்' வீதியாக மாற்றப்படவுள்ளது எனவும் அவர்மேலும் தெரிவித்தார். (த-26)

# விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி ஏற்றுவோர் தொகை அதிகரிப்பு

தென்மராட்சி, மே 3

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி மருந்து ஏற்றிக்கொள்வோர் தொகை நாளாந்தம் அதிகரித்து வருகிறது.

கடந்த நான்கு மாதங்களில் 198 பேர் விலங்கு விசர்நோய்த் தடுப்பூசி மருந்து ஏற்றியுள்ளனர்.

தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி, வடமராட்சி கிழக்கு, பூநகரி பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் பெருமளவில் விசர் நாய்களினால் கடியுண்ட நிலையில் இந்த வைத்தியசாலையில் தடுப்பூசி மருந்து ஏற்றி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-297)

# தமிழ் - பௌத்த சங்கத்துக்கு வரணிவாசி காணி அன்பளிப்பு

யாழ்ப்பாணம், மே 03

கரம்பைக்குறிச்சி வரணியைச் சேர்ந்த ஒருவர் தனது வீட்டுக் காணியின் ஒரு பகுதியை தமிழ்-பௌத்த சங்கத்திற்கு அன்பளிப்பாக வழங்குவதற்கு விருப்பத்தைத் தெரிவித்துள்ளதாகச் சங்கத்தின் யாழ். மாவட்டத் தலைவர் அ.ரவிக்குமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தமிழ், பௌத்த சங்கமானது யாழ். மாவட்டத்தில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்கவுள்ளது.

அத்துடன் இன, மத வேறுபாடின்றி பௌத்த தர்மத்தை மக்களுக்கு போதிக்கும் நடவடிக்கையையும் மேற்கொள்ளும் முகமாக பௌத்த தர்ம பாடசாலைகளையும், பௌத்த விகாரைகளையும் அமைக்கவுள்ளது.

இதற்கு உதவிபுரியும் பொருட்டு உடுவில் கிழக்கைச் சேர்ந்த அ.அதிஷ்டராசா என்பவர் தனது வீட்டு வளவினுள் பௌத்த விகாரையை அமைப்பதற்கான அனுமதியை அண்மையில் மனமுவந்து வழங்கியுள்ளார்.

அதேபோன்று வரணி கரம்பைக் குறிச்சியைச் சேர்ந்த ஒருவர் தனது 9 பரப்புக் காணியில் ஒரு பரப்புக் காணியை தமிழ் - பௌத்த சங்கத்துக்கு அன்பளிப்பாக வழங்குவதாகவும், வறுமைக் கோட்டிற்குட்பட்ட நிலையில் வாழ்வதாகவும் தனக்கு எமது சங்கம் உதவிகளை வழங்க வேண்டும் என்ற வேண்டுகோளையும் விடுத்துள்ளார்.

காணியை அன்பளிப்பாக வழங்க விருப்பம் தெரிவித்துள்ள அவருக்கு எத்தகைய உதவிகளை வழங்குவது அந்தக் காணிக்குள் பௌத்த விகாரை அமைப்பதா?அல்லது தர்ம பாடசாலை அமைப்பதா? என்பது குறித்த விடயங்களை சங்கத்தின் பொதுச்சபை ஒன்று கூடி முடிவெடுக்கவுள்ளது என்றார். (த-9)

# யாழ். ஆஸ்பத்திரி பிரேத அறையை புனரமைப்பதற்கு 19 லட்சம் ரூபா

யாழ்ப்பாணம், மே 3

யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரேத அறையைப் புனரமைப்பதற்காக 19 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீண்ட காலமாகப் புனரமைக்கப்படாமல் இருந்த பிரேத அறையினை புனரமைப்பதற்கே வைத்தியசாலைப் பணிப்பாளரினால் 19 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 22 ஆம் திகதி துப்பாக்கிச் சூட்டுக்காயத்துடன் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமான இராணுவச் சிப்பாயின் சடலம் பிரேத அறையில் வைக்கப்பட்ட பின்னர் பழுதடைந்தது.

பிரேத அறையில் உள்ள குளிரூட்டிகள் சரிவர இயங்காமையினாலேயே இந்த நிலைமை ஏற்பட்டது. குளிரூட்டிகளைத் திருத்துவதற்கான உபகரணங்கள் சிங்கப்பூரில் இருந்து வரவேண்டும். அதன் பின்னர் தான் திருத்தம் செய்ய முடியும் என்று வைத்தியசாலையின் பணிப்பாளர் ஏற்கனவே தெரிவித்திருந்தார்.

சிப்பாயின் சடலம் பழுதடைந்ததைத் தொடர்ந்து இராணுவத்தினர் பணிப்பாளரிடம் விசனம் தெரிவித்தனர். இதனையடுத்து உடனடியாகத் திருத்தவேலைகள் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தியதைத் தொடர்ந்து வேலைகள் மேற்கொள்ளப்பட்டன.

இவ்வாறான நிலையிலேயே பணிப்பாளரினால் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்கான கேள்வி கோரல் விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட்டு வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்பட இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-15)

# உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகள் குடாநாட்டில் திருப்தி

## அரச அதிபர் கூறுகின்றார்

யாழ்ப்பாணம், மே 3

யாழ்.மாவட்டத்தில் இயங்கி வரும் உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகள் சிறப்பாக இருப்பதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் இயங்கி வரும் அரசசார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகள் தொடர்பாகக் கேட்டபோதே அவர் அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

தற்போது யாழ்.மாவட்டத்தில் செயற்படுகின்ற அரசசார்பற்ற நிறுவனங்கள் 15 இற்கு ஜனாதிபதி விசேட செயலணியின் பி.ரி.எவ் அனுமதி கிடைத்துள்ளது. ஏனைய அரச சார்பற்ற நிறுவனங்களும் விண்ணப்பிக்கும்பட்சத்தில் ஜனாதிபதிவிஷேட செயலணியின் அனுமதியை இலகுவாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

அத்துடன் மக்களின் தேவைகளுக்கு ஏற்ப சிறப்பாக அரச சார்பற்ற நிறுவனங்கள். தமது பணிகளை முன்னெடுத்துச் செல்கின்றனர். மக்களின் வாழ்வாதாரத்துக்குத் தேவையான உதவிகள் அத்துடன் மீளக்குடியமர்ந்த மக்களின் சேவைகளைப் பூர்த்தி செய்வதிலும் அரச சார்பற்ற நிறுவனங்கள் திறம்படச் செயற்பட்டு வருகின்றன.

தற்போது அரசசார்பற்ற நிறுவனங்கள் மேற்கொண்டுவரும் செயற்றிட்டங்கள் தொடர்பில் தான் திருப்தி அடைகிறேன் - என்றார். (த-15)

# வெள்ளத்தில் மூழ்கிய கீரைகள்

யாழ்ப்பாணம், மே 3

யாழ்.குடாநாட்டில் கடந்த சில தினங்களாகப் பெய்த மழையினால் கீரைச் செய்கையாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த மழையினால் தோட்டங்களில் பயிரிடப்பட்ட கீரைகள் வெள்ளத்தில் மூழ்கி அழிந்து நாசமாகியுள்ளதாக செய்கையாளர்கள் கவலை தெரிவித்தனர்.

கீரை வகைகள் அழிவடைந்ததையடுத்து அவற்றின் விலையும் திடீரென அதிகரித்துள்ளது.

திருநெல்வேலி சந்தையில் நேற்று கீரைப்பிடி ஒன்று 40 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டது. (த-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருநகர் கரையில் மீன்பிடித் துறைமுகம்; ஆராய உயர் மட்டக் குழு யாழ். வந்தது

யாழ்ப்பாணம் மே03

யாழ். மாவட்டத்திலுள்ள கடற்றொழிலாளர்கள் தமது கடற்கலங்கள் மற்றும் ஆழ்கடல் மீன்பிடிப் படகுகளை நிறுத்தி வைப்பதற்கு குருநகர்க் கரையில் நிமாணிக்கப்படவுள்ள துறைமுகத்தில் அமையவேண்டிய ஒன்பது பகுதிகள் பற்றியும் அவை அங்குள்ள மீனவர்களுக்கு ஏற்புடையதா என்பது பற்றியும் ஆராய்வதற்காகக் குழு ஒன்று யாழ். வந்தது.

இந்தக் குழுவினர் கலந்துரையாடல் ஒன்றை யாழ். கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களத்தில் அண்மையில் நடத்தினார்கள்.

இந்தக் கலந்துரையாடலில் மொறட்டுவப் பல்கலைக்கழகப் பொறியியலாளர் பேராசிரியர் சமன் சமரவிக்கிரம ஈ.எம்.எல் நிராஸ் நிறுவனப் பொறியியலாளர் சந்திரால் பெர்ணாண்டோ, துறைமுகக் கூட்டுத்தாபனப் பணிப்பாளர் எஸ்.சமரசிங்க மொறட்டுவ பல்கலைக் கழக விரிவுரையாளர் அஜந்த பெரேரா ஆகியோர் அடங்கிய குழுவுடன் யாழ்.கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் இ.ரவீந்திரன் யாழ். மாவட்ட கடற்றொழிலாள கூட்டுறவுச் சங்கச் சமாசத் தலைவர் ரி. தவரட்ணம் யாழ். மாவட்டக் கடற்றொழில் பரிசோதகர் பா.றமேஸ்கண்ணா ஆகியோர் கலந்துகொண்டு துறைமுகம் அமைப்பது பற்றி ஆராய்ந்தனர்.

இதனடிப்படையில் துறைமுகத்தில் அமையவேண்டியவை எனச் சில ஏற்பாடுகள் இந்தக் கலந்துரையாடலில் இனங்காணப்பட்டன.

கடற்கலங்கள் மற்றும் ஆழ்கடல் மீன்பிடிப் படகுகளைத் துறைமுகத்துக்குக் கொண்டு வந்து நிறுத்தக்கூடிய வசதிகள், ஐஸ் உற்பத்தி நிலையங்கள், பிடிக்கப்படும் மீன்களைப் பழுதடையாமல் பாதுகாக்கும் குளிரூட்டி அறைகள், படகுகளில் உள் இணைப்பு மற்றும் வெளி இணைப்பு இயந்திரங்களைத் திருத்துவதற்கான இடம், எரிபொருள் நிரப்பு நிலையம், மீன் ஏல விற்பனை நிலையம், 50x20 அடிபரப்பிலான கலந்துரையாடல் மண்டபம், 100x30 அடி பரப்பிலான தங்குமிட மண்டபம் சிற்றுண்டிச்சாலை என்பன இந்தத் துறைமுகத்தில் அமைக்கப்பட வேண்டும் என இனங்காணப்பட்டன.

இவற்றை அமைப்பதற்கான திட்ட வரைபடங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன எனவும் அதில் மேலும் பல திருத்தங்கள் செய்யப்பட்ட பின்னர் இந்துப் பணிகள் ஆரம்பிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

துறைமுகத்துக்கென கடற்கரையை அண்மித்துள்ள, சுங்கத் திணைக்களத்துக்குச் சொந்த மான சில நிலப்பகுதி துறைமுகக் கூட்டுத்தாபனத்துக்குள் உள்வாங்கப்பட்ட பின்னர் இந்த நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படும். குறித்த நிலப் பகுதிகளை கடற் கரைக்குள் உள்வாங்குவது குறித்து தற்போது கலந்துரையாடப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

(த-4)

## புற்று நோயாளர் உதவிப் பணம் ஏப்ரல் மாதம் முதல் அதிகரிப்பு

வட மாகாணத்தில் புற்று நோய் உதவிப்பணம் பெறும் வறியவர்களுக்கான கொடுப்பனவு இந்த வருடம் ஏப்ரல் முதல் அதிகரிக்கப்பட்டுள்ளது.

வட மாகாண ஆளுநரின் தீர்மானத்தின் பேரில் சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளரால் இந்தக் கொடுப்பனவு சகல பிரதேச செயலகப் பிரிவுகளிலும், தபாலகம், உபதபாலகம் ஊடாக வழங்கப்படுகின்றது.


முன்பு ஆகக் குறைந்த தொகையாக வழங்கப்பட்ட ரூபா 250 மாதாந்தக் கொடுப்பனவு ரூபா 500 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. ரூபா 500 ஆக இருந்த ஆகக் கூடிய தொகை ரூபா 750 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை காசநோய், தொழுநோய், தலசீமியா ஆகிய நோய் உதவிப் பணங்களைப் பெறுவோரின் கொடுப்பனவு அதிகரிக்கப்படவில்லை. புற்றுநோயாளிகளில் மிக வறியோருக்கு வடமாகாணப் புற்றுநோய்த் தடுப்புச் சங்கம், தியாகி அறக்கொடை நிதியம் போன்றவையும் உதவு தொகைகளை வழங்குகின்றன.

ஆனால் காசநோய், தொழுநோய் என்பவை குறுகிய காலப் பகுதியில் வரும் நோய்கள் ஆயினும் உடல் உழைப்பில் ஈடுபட முடியாத நிலைமையைத் தோற்றுவிக்கின்றது. தலசீமியா நோயும் மாற்ற முடியாத தன்மை உடையதாகவும் அதேயளவு விளைவுகளை உருவாக்குவதாகவும் உள்ளது.

அதேவேளை இவர்களுக்கு இதைவிட வேறெந்த உதவிப் பணங்களும் கிடைப்பதில்லை. இவர்களுக்கும் உதவிக் கொடுப்பனவுகளை வழங்குமாறு ஆளுநரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (த-121)

அருட்கடாட்சம்...



கிடைக்கட்டும்: திருநெல்வேலி அருள்மிகு ஸ்ரீ நிலாயதாக்ஷி சமேத ஸ்ரீ காயா ரோஹணேஸ்வர சுவாமிகள் கோயில் தேர்த் திருவிழாவின் போது சுவாமி தேரில் எழுந்தருளி வீதியுலா வருகின்றார். (த-7)

# வடக்கின் மீள் எழுச்சித் திட்டத்துக்கு 1130.55 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

யாழ்.அரச அதிபர் தகவல்

யாழ்ப்பாணம் மே.03

வடக்கின் துரித மீள் எழுச்சித் திட்டத்தின் ஊடான அபிவிருத்திக்கு இவ்வாண்டு 1130.55 மில்லியன் ருபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

வடக்கின் அபிவிருத்திக்கு இவ்வாண்டு பல்வேறு திட்டங்களை மேற்கொள்வதற்குமான நிதி ஒதுக்கீடுகளை அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் மேற் கொண்டுள்ளன.

இதன் அடிப்படையில் யாழ். மாவட்டத்தில் உள்ள சிறுவீதிகள், மின்சார இணைப்புக்கள், சுகாதாரம், கல்வி உட்படப் பல்வேறு திட்டங்கள் வடக்கின் துரித மீள் எழுச்சித் திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்த அபிவிருத்தித் திட்டங்கள் பெரும்பாலும் அடுத்த வருட நடுப்பகுதியில் பூர்த்தியாகும் - என்றார்.

(த-9)

# மேதினப் பேரணிக்கு சிற்றூழியர்கள்; யாழ்.ஆஸ்பத்திரி இயல்பு நிலை பாதிப்பு

யாழ்ப்பாணம், மே 3

யாழ்.போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் நியமனம் பெற்ற நூற்றுக்கும் மேற்பட்ட சிற்றூழியர்கள் கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மேதினப் பேரணியில் கலந்துகொள்ள வேண்டும் என்ற கட்டாயத்தின் பேரில் கடந்த சனிக்கிழமை கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்டதைத் தொடர்ந்து போதனா வைத்தியசாலையில் நேற்றுமுன்தினம் நண்பகல் தொடக்கம் பெரும் குழப்ப நிலை தோன்றியது.

மேலும் வைத்தியசாலையிலுள்ள நோயளர்களுக்கு உரிய நேரத்தில் சிகிச்சைகளை வழங்க முடியாத நிலையும் உருவாகியது.

நூற்றுக்கும் மேற்பட்ட சிற்றூழியர்கள் மேதினப் பேரணிக்காகக் கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்டதைத் தொடர்ந்து வைத்தியசாலையில் சிற்றூழியர்கள், பரிசாரகர்கள் மற்றும் ஏனை தொழிலாளர்களின் கடமை நேரமும் கடந்த சனிக்கிழமை பிற்பகலில் இருந்து திடீரென மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இதனால் வைத்தியசாலையில் நேற்று முன்தினம் நண்பகல் தொடக்கம் குழப்பநிலை ஏற்பட்டுள்ளது.

நோயாளர்களுக்கு உரிய நேரத்தில் சிகிச்சை வழங்க முடியாத நிலைமை உருவாகியுள்ளதனால் அங்குள்ள வைத்தியர்களும் ஏனைய சிற்றூழியர்களும் வேலைச் சுமைக்கு மத்தியில் பெரும் இன்னல் களை எதிர்கொண்டனர்.

பிற இடங்களிலிருந்து சிகிச்சைக்கென வைத்தியசாலைக்கு வந்தவர்களை விடுதிகளுக்குக் கொண்டுசெல்லச் சிற்றூழியர்கள் இல்லாத நிலையில் நோயாளர்கள் உறவினர்களால் தள்ளு வண்டியில் இருத்தி விடுதிகளுக்கு அழைத்துச் செல்லும் நிலையும் ஏற்பட்டது.

அதுமட்டுமன்றி விடுதிகளிலிருந்து 'எக்ஸ்றே' பிரிவு மற்றும் சத்திரசிகிச்சைப் பிரிவுக்கு நோயாளர்களை அழைத்துச் செல்லும் சிற்றூழியர்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டது.

இது இவ்வாறிருக்க சிற்றூழியர்களுக்கான கடமை நேரம் நேற்று முன்தினம் திடீரென மாற்றப்பட்டதனால் அவர்கள் விசனமடைந்துள்ளனர்.

இதன்படி சிற்றூழியர்கள் காலை 6.30 முதல் பிற்பகல் 2.30 மணிவரையும் முற்பகல் 10.30 முதல் காலை 6.30 மணி வரையும் தவணை முறையில் கடமையாற்ற வேண்டும். எனவும் பரிசாரகர்கள் மாலை 6.30 மணிமுதல் மறுநாள் காலை 6.30 மணி வரை விடுதிகளிலுள்ள ஏனைய தொழிலாளர்கள் காலை 7 மணி முதல் மாலை 5 மணிவரையும் கிளினிக் மற்றும் ஏனைய பகுதிகளில் பணிபுரியும் சிற்றூழியர்கள் காலை 7 மணி முதல் பிற்பகல் 4 மணிவரையும் கடமையாற்ற வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது.

விடுதிப் பொறுப்பதிகாரிகள் உத்தியோகத்தர்களின் கடமை நேர அட்டவணைப்படி கடமை மேற்கொள்ளப்படல் வேண்டும் எனவும் மீறுபவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் வைத்தியசாலையின் விளம்பரப் பலகையில் பிரசுரம் ஒட்டப்பட்டிருந்தது. (த-4)

## கட்டடப் பொருள்கள் வளன்புரத்தில் திருட்டு

கொழும்புத்துறை,மே.3

கொழும்புத்துறை வளன்புரம் பகுதியில் உள்ள வீடொன்றின் கட்டுமானப் பணிகளுக்கென வைத்திருந்த பெறுமதிமிக்க பாலைத் தீராந்திகள், மரங்கள் என்பன திருடப்பட்டுள்ளன.

கூரை அமைப்புப் பணிகளுக்கெனக் கொள்வனவு செய்து வீடு கட்டும் வளவில் வைத்திருந்த 50 ஆயிரம் ரூபாவுக்கு மேல் பெறுமதியுள்ள பாலை மரங்கள் கடந்த வாரம் துணிகரமாகத் திருடப்பட்டுள்ளது.

திருட்டுநபர்கள்சிலர் இணைந்து நள்ளிரவு வேளையில் சுமந்து சென்று வேறிடத்தில் வைத்து வாகனம் மூலம் கொண்டு சென்றதாகக் கூறப்படுகின்றது.

இவ்வாறான திருட்டுக்கள் இந்தப் பகுதியில் தொடர்ந்து நடைபெறுவதாகவும் தமது பொருள்கள் பண்டங்களை சூறையாடும் குழுவொன்று இந்தப் பகுதியில் தம் கைவரிசையைக் காட்டி வருவதாகவும் விசனம் தெரிவிக்கின்றனர். (த-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
03 மே 2011 செவ்வாய்க்கிழமை

# தமிழ்ச்சங்க இலச்சினை நீக்கம்; அங்கத்தவர்களும் ஆர்வலர்களும் கண்டனம்

கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச் சங்கத்தின் இலச்சினை புதிதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

1993 ஆம் ஆண்டு தொடக்கம் இந்த இலச்சினை பயன்பாட்டில் இருந்து வருகிறது எனவும், 1998 இல் தமிழ்ச்சங்கம் அரசின் பதிவை மேற்கொண்ட போதும் குறித்த இலச்சினையே பதிவுக்குட்படுத்தப்பட்டது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

எத்தகைய அரசியல் தலையீடுகளும் இல் லாதபோதும் தமிழ்ச் சங்கத்தின் தலைவராகக் கடமையாற்றுகின்றவரின் முடிவே இலச்சினை நீக்கத்துக்குக் காரணமெனத் தமிழ்ச் சங்க அங்கத்தவர்கள் தெரிவிக்கின்றனர். இது குறித்து நிர்வாகக் குழுவுக்கோ, பொதுச் சபைக்கோ தெரியப்படுத்தப்படவில்லை எனத் தெரிவிக்கும் இவர்கள் கடந்த மாதம் 21 ஆம் திகதியன்று நடைபெற்ற கூட்டத்தில் இது குறித்துத் தலைவரிடம் உறுப்பினர்கள் கேள்வி எழுப்பியபோது வீணான சங்கடங்கள் ஏற்படாதிருப்பதற்குத் தான் நீக்கி விட்டதாகக் கூறியுள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச் சங்கம்
யாழ்ப்பாணம் வீதி,
கிளிநொச்சி.

தமிழரின் தொன்மையோடும் பண்பாட்டு வாழ்வோடும் இணைந்திருந்த இந்த இலச்சினையை தமிழ் மீட்பு, தமிழ் காப்பு, தமிழ் வளர்ச்சி என உழைத்து வரும் தமிழ்ச் சங்கம் நீக்கியுள்ளமை குறித்துத் தமிழ் ஆர்வலர்களும் தமிழ்ச் சங்க அங்கத்தவர்களும் கவலை தெரிவித்துள்ளதாகவும் தெரிய வருகின்றது. (க-301)

# நல்லின நெல்விதைகள் விவசாயத் திணைக்களத்தில்

பரந்தன்,மே 3

விவசாயத் திணைக்களத்தின் பரந்தன் விதை பொருள்கள் விற்பனை நிலையத்தில் நல்லின நெல்விதைகள் விற்பனைக்கென வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த பெரும்போகத்தின் போது கடும்மழை காரணமாக நெற்பயிர்களுக்குச் சேதம் ஏற்பட்டதுடன் தரமான விதை நெல்லையும் சேமித்து வைக்க முடியவில்லை. இதனால் சிறுபோகத்துக்கான விதை நெல்லைப் பெறுவதில் வன்னி விவசாயிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர்.

இந்த நிலையில் நல்லின நெல்விதைகள் விற்பனை செய்யப்படுவதாக செய்திகள் வெளிவந்துள்ளன.

மேலும் பரந்தன் விதை பொருள்கள் விற்பனை நிலையத்தில் பி 300 இன 3 மாத வெள்ளைநாடு இன விதை நெல், 3 1/2 மாத பி 358 வெள்ளைச்சம்பா இன விதை நெல் ஆகியனவே விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

ஆகவே விதைநெல் தேவைப்படும் விவசாயிகள் குறித்த நெல் இனங்களைப் பரந்தன் விற்பனை நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாமென விவசாய உதவிப் பணிப்பாளர் எஸ். சதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (க-72)

# மாற்றுவலுவுள்ளோர் சங்கம் அமைப்பதற்கு இதுவரை அரசு அனுமதி வழங்கவில்லையாம்

## ஜனாதிபதி பாதுகாப்பு செயலணி இழுத்தடிப்பு

கிளிநொச்சி,மே 3

கிளிநொச்சி மாவட்டத்தில் மாற்றுவலுவுள்ளோர் சங்கம் ஒன்றை அமைப்பதற்கு இதுவரை அனுமதி வழங்கப்படாததால் மாற்று வலுவுடையோர் மிகுந்த கவலை அடைந்துள்ளதாகத் தெரியவருகின்றது.

இந்தச் சங்கத்தினை நிறுவுவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகளுக்கு ஜனாதிபதி பாதுகாப்புச் செயலணி அனுமதி வழங்காது இழுத்தடித்து வருகின்றது. போருக்கு முந்தியதும், போருக்குப் பிந்தியதுமான சுமார் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாற்று வலுவுடையோர் இருக்கிறார்கள் என நம்பப்படுகிறது.

இவ்வாறு பெருந்தொகையானவர்கள் மாற்று வலுவுள்ளோர் சங்கத்தில் இணைகின்ற போது அதனால் ஏற்படக்கூடிய பின்விளைவுகள் குறித்து அச்சப்படுவதே அரசு இதற்கான அனுமதியை வழங்காதிருப்பதற்கான காரணமெனப் பெயர் குறிப்பிட விரும்பாத மாற்று வலுவுள்ளவர் ஒருவர் தெரிவித்தார்.

இவ்வாறு சங்கம் ஒன்று அமைக்கப்படாமையால் சர்வதேச தொண்டு நிறுவன உதவிகள், புலம்பெயர் தேச உதவிகள் என்பவற்றை ஒருங்கிணைப்பதில் பின்னடைவுகள் ஏற்பட்டுள்ளன என்பதுடன் மாற்று வலுவுள்ளோரின் வாழ்க்கைத்தர மேம்பாட்டுக்கான உதவிகள் குறைந்த பட்ச நிலையிலேயே காணப்படுகின்றன. அத்துடன் அவர்களின் விசேட தேவைகளையும் இனங்காண முடியாத நிலை காணப்படுகின்றது.

எனவே குறித்த அதிகாரிகள் விரைந்து செயற்பட்டு மாற்று வலுவுள்ளோரின் உரிமைகளைப் பாதுகாக்க முன்வர வேண்டுமென வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (க-301)

# முன்பள்ளிகளுக்கு விளையாட்டு உபகரணங்கள்

கிளிநொச்சி,மே 3

கிளிநொச்சி மாவட்டத்தில் போரினால் பாதிக்கப்பட்ட 73 முன்பள்ளிகளுக்கு விளையாட்டு உபகரணங்களைக் கொள்வனவு செய்ய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2011 ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு, செலவுத் திட்டத்தின் மூலம் இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கரைச்சி, பூநகரி, கண்டாவளை, பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த முன்பள்ளிகளுக்கான விளையாட்டு உபகரணங்களுக்குத் தேவையான நிதியை தலா 10 ஆயிரம் ரூபா வீதம் ஒதுக்கீடு செய்துள்ளார்.

வழங்கப்பட்டவுள்ள நிதிமூலம் முன்பள்ளிகள் தமக்குத் தேவையான விளையாட்டு உபகரணங்களைக் கொள்வனவு செய்து கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-9)

# கிராம மக்களுக்கு குடிதண்ணீர்

கிளிநொச்சி,மே 3

கிளிநொச்சி மாவட்டம் பூநகரி வலைப்பாடு கிராம மக்களுக்கு சுத்தமான குடிதண்ணீரை பூநகரி பிரதேச சபை வழங்கி வருகின்றது. இந்தக் கிராம மக்களின் தேவையை கருத்தில் கொண்டு உழவு இயந்திர நீர் தாங்கி மூலம் இந்தக் குடிதண்ணீர் வழங்கப்பட்டு வருகின்றது.

குடிதண்ணீர் பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுவந்த இந்தக் கிராம மக்கள் இதனால் பெரும் மகிழ்ச்சியடைந்துள்ளனர். (க-406)

## காணவில்லை



தேராவில் விஸ்வமடுவில் வசித்த 65 வயதுடைய

**பொன்னன் இராசதுரை**

என்பவர் இடம்பெயர்ந்து வவுனியா நலன்புரி நிலையத்திலிருந்து சுகயீனம் காரணமாக வைத்தியசாலைக்குச் சென்ற இவர் குறித்து இதுவரை எந்தத்தகவலும் கிடைக்கவில்லை. இவரைக் கண்டவர்கள் கீழ்வரும் தொலைபேசியுடன் தொடர்பு கொள்ளவும்.

தொ.பே: இல.0214925413 0770759750 (3760)

தகவல்: குடும்பத்தினர்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அமரர்

**அமிர்தலிங்கம் இராசமணி**

(சிந்து)
(முன்பள்ளி ஆசிரியை)

மண்ணில் 09.06.1953

விண்ணில் 03.04.2011



கடந்த 03.04.2011 அன்று இறைவனடி எய்திய எமது அன்புத்தெய்வம் அமரர் அமிர்தலிங்கம் இராசமணி அவர்களின் இறுதிக்கிரியைகளின் போது சகல விதத்திலும் உதவிகள் புரிந்தோருக்கும், இறுதிக் கிரியைகளில் நேரடியாகவும், தொலைபேசி, இணையத்தளம், துண்டுப்பிரசுரம் மூலமும் அஞ்சலி செலுத்திய அன்புள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதுடன், நாளை (04.05.2011) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெறும் 31 ஆம் நாள் வீட்டுக்கிருத்தியக் கிரியைகளில் கலந்து கொண்டு அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

*(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்கவும்)*

கணுக்கேணி மேற்கு,
முள்ளியவளை. (சி/578137) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



*பிரான்சிஸ் றெஜினோல்ட் பற்றிமா அருள்சோதி*

*(இளைப்பாறிய தொழில்நுட்ப அதிகாரி, வீதி அபிவிருத்தி அதிகாரசபை)*

மாதகலைச் சொந்த இடமாகவும் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் தெஹிவளையைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட F.R.F அருள்சோதி 30.04.2011 சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிரான்சிஸ் (ஓய்வுபெற்ற ஆசிரியர், யா/புனித பத்திரிசியார் கல்லூரி) - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான S.M.மகேசன் (பெருந்தோட்ட வைத்திய அதிகாரி) - பூராணி தம்பதியரின் அன்பு மருமகனும் அன்ரனெற் றோகினியின் அன்புக் கணவரும் கிறிஷோன் (மக்கள் வங்கி, வவுனியா), ஆன் மடோனா (Q.A.E., Colombo), ஜூடி ஆகியோரின் பாசமிகு தந்தையும் பாக்கியம் (அவுஸ்ரேலியா), அருட்தந்தை நவரட்ணம் (OMI)(பிலிப்பைன்ஸ்), காலஞ்சென்றவர்களான மாசிலாமணி (ஆங்கில ஆசிரிய ஆலோசகர்), F.C.வேதநாயகம் (ஓய்வுபெற்ற ஆசிரியர், யா/புனித சாள்ஸ் ம.வி.), இராசநாயகம் மற்றும் ஜொய்சி (கனடா), ஜெசிந்தா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் டிஷாந்தினி (Colonial Engineering) அவர்களின் பாசமிகு மாமனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 02.05.2011 திங்கட்கிழமை காலை அவரின் யாழ்ப்பாண இல்லத்துக்கு எடுத்துவரப்பட்டது. நாளை (04.05.2011) புதன்கிழமை பி.ப. 3.00 மணிக்கு யாழ். மரியன்னை பேராலயத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு திருப்பலியின் பின்னர் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல. 19, குருசோ வீதி, யாழ்ப்பாணம்.*

தகவல்: மனைவி, பிள்ளைகள்.



இந்தியாவில் இருந்து தற்போது இறக்குமதி செய்யப்பட்ட இதுவரை இல்லாத
அழகிய பலவர்ண டிசைன்களில் திருமண அழைப்பிதழ்கள்

திருமண அழைப்பிதழ்களின் ஆலயம்

போஸ்கோ

610/3(252) பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்பாக) தொ.பே: 021 222 0370

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியாவில் 3 மாத காலத்தில் 41 பேருக்கு டெங்குக் காய்ச்சல்

வவுனியா,மே 3

வவுனியா மாவட்டத்தில் இந்த வருடத்தின் முதல் மூன்று மாதங்களில் மட்டும் 41 பேர் டெங்குக் காய்ச்சலுக்கு இலக்காகி வவுனியா பொது வைத்தியசாலையில் சிகிச்சைபெற்றுள்ளதாக வைத்தியசாலைப் புள்ளி விவரங்களிலிருந்து தெரிய வருகின்றது.

அத்துடன் மேற்படி நோயாளர்களில் டெங்கு காரணமாக ஒருவர் உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இதன் பிரகாரம் ஜனவரி மாதத்தில் 21 நோயாளர்களும் பெப்ரவரி மாதத்தில் 08 நோயாளர்களும் மார்ச் மாதத்தில் 12 நோயாளர்களும் டெங்குக் காய்ச்சல் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் அனுமதிக்கப்பட்ட சகல நோயாளர்களதும் விவரங்கள் வவுனியா மாவட்டத்தில் உள்ள பிரதேச சுகாதார வைத்திய அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இவற்றுக்கு உரிய பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களூடாக நடவடிக்கையெடுக்கப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் இந்த வருடத்தில் முதல் மூன்று மாதங்களிலும் ஏற்பட்ட டெங்கு நோய்த் தொற்று கடந்த வருடத்தில் முதல் மூன்று மாதங்களிலும் காணப்பட்ட எண்ணிக்கையை விடக் குறைவாக உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் வவுனியா பொது வைத்தியசாலையில் இந்த வருடத்தில் கடந்த மூன்று மாதங்களில் மட்டும் 4 ஆயிரத்து 633 பேர் வேறு நோய்களுக்காக விடுதி களில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (க-501)

# வீதிக் குறியீடுகள் இல்லை விபத்துக்கள் ஏற்படும் ஆபத்து

கிளிநொச்சி,மே 3

கிளிநொச்சி மாவட்டம் பூநகரிப் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பிரதேசங்களில் வீதிக் குறியீடுகள் அமைக்கப்படாததால் விபத்துக்கள் ஏற்படுவதற்கான சாத்தியக் கூறுகள் தோன்றியுள்ளன.

இங்குள்ள முக்கிய இடங்களிலாவது இந்த வீதிக் குறியீடுகள் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். ஆனால் இவை இது வரை அமைக்கப்படவில்லை. முக்கியமாகப் பாடசாலைகள், வைத்தியசாலைகள், வணக்கஸ்த் தலங்கள் ஆகிய இடங்களிலாவது இவை அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

அத்துடன் முழங்காவில், ஜெயபுரம், வேரவில் போன்ற இடங்களிலும் இவை இன்னமும் அமைக்கப்படாத நிலையே காணப்படுகின்றது.

இதனால் இந்த இடங்களில் வீதி விபத்துக்கள் ஏற்படும் சாத்தியம் அதிகரித்துக் காணப்படுகின்றது. தற்போது வாகனங்கள் கடுகதியாகச் செல்வதால் விபத்து ஏற்படுவதற்கான ஏதுநிலை பன்மடங்கு அதிகரித்துக் காணப்படுகின்றது.

எனவே உரிய தரப்பினர் இந்த விடயத்தில் அக்கறையெடுத்து வீதிக் குறியீடுகளை அமைப்பதற்கு ஆவன செய்யுமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(க-406)

# விசேட அபிவிருத்தி திட்டத்தின்கீழ் பல வீதிகளின் தரம் மேம்படும்

வவுனியா,மே 3

வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் வவுனியா அலுவலகம், மாகாண அபிவிருத்தி நிதித் திட்டத்தின் கீழ் பல வீதிகளின் தரத்தை மேம்படுத்த உள்ளது.


பூவரசங்குளம் - செட்டிகுளம் வீதி 3.93 மில்லியன் ரூபா செலவில் சீரமைக்கப்படவுள்ளது. மதகுவைத்தகுளம் - வந்தபுரம் வீதி 4.39 மில்லியன் ரூபா செலவிலும், பூவரசங்குளம் - துணுக்காய் வீதி 3.50 மில்லியன் ரூபா செலவிலும் புனரமைக்கப்படவுள்ளன.

மேலும் கிரவல் மூலம் மடு - பாலம்பிட்டி வீதியில் 8.5 கிலோ மீற்றர் நீளமான பகுதி 2.45 மில்லியன் ரூபா செலவிலும், மறிச்சுக்கட்டி - உயடிக்குளம் வீதியில் 3.65 கிலோ மீற்றர் நீளமான பகுதி 2.2 மில்லியன் ரூபா செலவிலும் புனரமைக்கப்படவுள்ளன.

இதைவிட கட்டாடி வயல்-ராமயன்குளம் வீதியின் 14 கிலோ மீற்றர் தூரமான பகுதி 4 மில்லியன் ரூபா செலவிலும் மகிழங்குளம் - பள்ளமடு வீதியில் 43 ஆவது கிலோ மீற்றர் முதல் 59 வது கிலோ மீற்றர் நீளம் வரையிலும் உள்ள பகுதி 3.35 மில்லியன் ரூபா செலவிலும் புனரமைக்கப்படவுள்ளன.

வடமாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் வவுனியா அலுவலகம் இவ்வாரம் இதற்கான கேள்வி கோரல் அறிவித்தலை வெளியிட்டுள்ளது. (க-121)

## விசித்திரம் ஆனால் உண்மை...



வெள்ளை நண்டு: மன்னாரில் மீனவர் ஒருவரின் வலையில் பிடிபட்ட விசித்திரமான வெள்ளை நண்டின் ஒரு காலில் பற்களைக் கொண்ட ஐந்து கொம்புகள் காணப்படுகின்றன. (601)

# மீள்குடியமர்ந்த மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள்

## சிறுவர் அபிவிருத்திக் குழுவால் வழங்கப்படவுள்ளன

வவுனியா,மே 3

வவுனியா மாவட்டம் நெடுங்கேணிப் பிரதேச செயலர் பிரிவில் மீளக்குடியமர்ந்த வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் பாடசாலை மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன் பிரகாரம் பதினேழு துவிச்சக்கர வண்டிகள் மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் குழுவின் ஊடாக வழங்கப்படவுள்ளதாக அதன் இணைப்பாளர் க.செல்வக்குமார் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், போர்ச்சூழல் காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் மெனிக்பாம் இடைத்தங்கல் முகாம்களிலிருந்து கடந்த சில மாதங்களுக்கு முன்னர் தான் நெடுங்கேணிப் பிரதேச செயலர் பிரிவில் மீளக் குடியமர்ந்துள்ளார்கள்.

ஆனால் பாடசாலைக்கு மாணவர்கள் செல்வது குறைவடைந்து காணப்படுகின்றது. அத்துடன் மாணவர்களின் வீடுகள் பாடசாலைகளிலிருந்து அதிகளவு தூரத்தில் காணப்படுவதால் பாடசாலைகளில் மாணவர் வரவிலும் வீழ்ச்சி காணப்படுகின்றது. இதை அடுத்தே முதற்கட்டமாகத் தெரிவு செய்யப்பட்ட 17 குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் விநியோகம் செய்யப்படவுள்ளன.

மேலும் தமக்கு மேலதிகமாகத் துவிச்சக்கர வண்டிகள் கிடைக்குமிடத்து அவற்றையும் வழங்கக் கூடியதாக இருக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அத்துடன் இந்தப் பிரதேசத்தில் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளை முன்னேற்றுவதற்கான பல்வேறு செயற்றிட்டங்கள் இந்த வருடத்தில் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(க-501)

# குருகுலப் பிதா அப்பூஜியின் பாதையில் நாம் ஆதரவற்ற சிறுவர்களை வளர்த்தெடுப்போம்

## குருகுலக் கட்டடங்கள் கையளிப்பு விழாவில் சிறீதரன் எம்.பி.

கிளிநொச்சி,மே 3

குருகுல பிதாவாகிய அப்பூஜியின் பாதையில் ஆதரவற்ற சிறுவர்களை நாம் வளர்த்தெடுக்க வேண்டும்.

குருகுலக் கட்டடங்கள் புனரமைக்கப்பட்டுக் கையளிக்கும் நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி, ஜெயந்திநகரில் இயங்கிவரும் குருகுலம் சிறுவர் இல்லத்துக்கு நாற்பது லட்சம் ரூபா செலவில் கட்டடம் ஒன்றைப் புனரமைத்துக் கையளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றிய சிறீதரன் மேலும் தெரிவித்ததாவது:

"நானும் ஒரு மாணவனாக இந்தக் குருகுலத்தில் தங்கியிருந்து கல்வி கற்றிருக்கிறேன். அப்பொழுது இதன் இயக்குநராக இருந்த அப்பூஜி அவர்கள் வாழ வேண்டிய முறையை வாழ்ந்து காட்டியவர். அப்புஜியினுடைய எளிமை, இனிமையான பேச்சு, கண்டிப்பு, சமூக அக்கறை, ஆன்மீகம் என்பவற்றின் மீதான அவரது நாட்டமே எங்களையும் உயர்ந்த நிலை நோக்கிச் செல்வதற்கு சிந்திக்கத் தூண்டியது. இந்தக் குருகுலமானது ஆதரவு அற்ற குழந்தைகளை உள்வாங்கி அவர்களைக் கல்வியிலும் ஒழுக்கத்திலும் வளர்த்தெடுப்பது மாத்திரமன்றி சுயதொழில் மற்றும் வாழ்க்கைத் திறன் பயிற்சிகளையும் கடந்த காலத்தில் வழங்கி வந்திருக்கின்றது.

யுத்தம் நிறைவு பெற்றதைத் தொடர்ந்து பல நூற்றுக் கணக்கான சிறுவர்கள் நிர்க்கதியாகி இங்கு வந்திருக்கிறார்கள். அது மாத்திரமன்றி இந்த மாவட்டத்தில் இயங்கிய வேறு சிறுவர் இல்லங்கள் மூடப்பட்டுள்ள [illegible] சிறுவர்கள் [illegible] ஆதரவின்றியும் போதிய பாதுகாப்பு இன்றியும் அந்தரித்துப் போயுள்ளனர்.

இத்தகைய சிறுவர்களை எல்லாம் ஒன்றிணைத்து அவர்களின் எதிர்காலத்துக்கு வழிகாட்ட வேண்டிய பெரும் பணி எம்முன்னே காத்து நிற்கின்றது. அவர்கள் தாய் தந்தையர்களை இழந்திருக்கிறார்களே தவிர நல்ல உறவுகளை அவர்கள் இழக்கவேயில்லை என்பதை அவர்களுக்கு உணர்த்த வேண்டும். அத்தகைய பிள்ளைகளைப் பராமரிக்க குருகுலம் போன்ற சிறுவர் இல்லங்களுக்கு உதவ வேண்டும் என்று நாங்கள் விடுத்த வேண்டுகோளை ஏற்று புலம் பெயர் சமூகத்தைச் சேர்ந்த கோபால் ஐயா அவர்கள் சுமார் நாற்பது லட்சம் ரூபா செலவில் இந்தக் கட்டடத்தைப் புனரமைத்துத் தந்ததுடன் தொடர்ந்தும் இத்தகைய செயற்பாடுகளுக்கு உதவ முன்வந்துள்ளார் எனத் தெரிவித்தார்.

குருகுலத் தலைவர் திரு. இராசநாயகம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நிதிப் பங்காளர் கோபால் ஐயா, சமூக சேவையாளர் நாவை. குகராசா, ஜெயந்திநகர் கிராம முன்னேற்றத் தலைவர் சந்தி [illegible]ர் கலந்து சிறப்பித் [illegible] (க-301)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
03 மே 2011 செவ்வாய்க்கிழமை

# நிபுணர் குழுவின் அறிக்கைக்கு ஐ.தே.க. உறுப்பினர் வரவேற்பு

மட்டக்களப்பு,மே 3

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் பான் கி மூனின் இலங்கை விவகாரம் தொடர்பான அறிக்கை இலங்கைத் தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்க வழி செய்துள்ளது. அந்த அறிக்கையை ஒரு தமிழ் மகன் என்ற ரீதியில் தான் வரவேற்கின்றேன் என கிழக்கு மாகாண சபை யின் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் டி.ஏ. மாசிலாமணி தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை மட்டக்களப்பு கல்லடியிலுள்ள அவரது இல்லத்தில் நடந்த ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

கடந்த சில தினங்களுக்கு முன்பு மட்டக்களப்பு மாநகர மேயர் திருமதி சிவகீதா ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளரின் அறிக்கைக்கு எதிராகக் கருத்து வெளியிட்டிருந்தார். அது மட்டக்களப்பு மாநகர சபை மேயரின் தனிப்பட்ட கருத்தாகும். மட்டக்களப்பு மக்களின் ஒட்டுமொத்தக் கருத்தாக அதை நாம் எடுக்கக் கூடாது. மேயரின் கருத்துக் கெதிராக நான் இந்த செய்தியாளர் சந்திப்பை நடத்த முடிவெடுத்தேன்.

இலங்கைத் தமிழ் மக்களுக்கு நீதியும் நியாயமும் இந்த அறிக்கையின் மூலம் கிடைக்க வேண்டும். ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் பான் கீ மூன் இன்னும் உரத்த குரலில் இதைச் சொல்ல வேண்டும்.

இன்னுமொரு யுத்தக்குற்றத்தை இலங்கை அரசு செய்யாத வகையில் இந்த அறிக்கை வழி கோல வேண்டும்.

இந்த அறிக்கையை வெளியிட்ட ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் பான் கீ மூன் இலங்கை விவகாரத்தில் மென்மையான போக்கையே கடைப்பிடிக்கின்றார். அவ்வாறில்லாமல் இந்த அறிக்கை தொடர்பிலும், தமிழ் மக்களுக்கான தீர்வு தொடர்பிலும் அதிக அக்கறையை இலங்கை விவகாரத்தில் பான் கீ மூன் கடைப்பிடிக்க வேண்டும்- என்றார்.

(ச)

# சட்ட விரோதமாக. மரங்களை வெட்டியோர் கைது

மட்டக்களப்பு,மே.3

வாகரை பொலிஸ் பிரிவில் சல்லித்தீவுப் பிரதேசத்தில் அரச காணியில் சட்டவிரோதமான முறையில் மரங்களை வெட்டினார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் ஆறு பேர் கடந்த சனிக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் வெட்டப்பட்ட மரங்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாக வாகரைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ரீ.ஜயஸீலன் தெரிவித்துள்ளார்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலையடுத்து இந்தப் பிரதேசத்திற்கு குற்றப்பிரிவுப் பொறுப்பதிகாரி எம்.ஏ.எம். றம்ஸான் தலைமையில் சென்ற குழுவினரே சந்தேக நபர்களையும் மரங்களையும் கைப்பற்றியுள்ளனர்.

முதுரை, தேக்கு, வேப்பை, வேளன் போன்ற ஆயிரத்திற்கும் மேற்பட்ட மரங்கள் வெட்டப்பட்டன என்ற சந்தேகத்தின் பேரில் ஆறு பேர் கைதுசெய்யப்பட்டு வாழைச்சேனை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

ஒவ்வொருவரும் தலா ஒரு லட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுதலை செய்யப்பட்டதுடன் இவர்களுக்கான விசாரனை எதிர்வரும் 11ஆம் திகதி நடைபெறவுள்ளதாக வாகரை பொலிஸ் நிலைய குற்றப்பிரிவுப் பொறுப்பதிகாரி எம்.ஏ.எம். றம்ஸான் தெரிவித்துள்ளார்.

(ச)

# கல்முனைப் பிரதேச சபையைக் கட்டியெழுப்ப வர்த்தக சமூகத்தின் ஒத்துழைப்புத் தேவை

## முதல்வர் மசூர் மௌலானா தெரிவிப்பு

அம்பாறை, மே 3

கல்முனை மாநகர சபையைத் தலை சிறந்த ஆட்சி நிறுவனமாகக் கட்டியெழுப்புவதற்கு வர்த்தக சமூகம் முழுமையான ஒத்துழைப்பு வழங்குவதற்கு முன்வரவேண்டும் என மாநகர முதல்வர் செனட்டர் அல்ஹாஜ் எம்.இஸட். மசூர் மௌலானா தெரிவித்துள்ளார்.

கல்முனை மாநகர வர்த்தகர்களின் ஒன்றுகூடல் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்தநிகழ்வில்இவர்தொடர்ந்து உரையாற்றுகையில்:

கல்முனை மாநகரசபையை நாட்டின் முன்னுதாரணமிக்கதொரு சபையாக மாற்றி அமைப்பதற்கு நாம் பல்வேறு நடவடிக்கை களை முன்னெடுத்து வருகின்றோம். இதற்கு வர்த்தகர்களின் ஒத்துழைப்பு மிகவும் அவசியமாகும். வர்த்தக சமூகத்தின் பங்களிப்பின்றி மக்களுக்கு நிறைவான சேவைகளை வழங்க முடியாது.

எமது மாநகரப் பிராந்தியத்தில் மக்கள் நலன் கருதி நிறைய வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டிய தேவை உள்ளது. இங்கு நல்லாட்சியையும் பொருளாதாரக் கட்ட மைப்பையும் மேலோங்கச் செய்வதற்கு நல்ல திட்டங்களை வகுத்துச் செயற்பட வேண்டியுள்ளது. இத்தனைக்கும் வர்த்தக சமூகத்தின் ஆதரவே முக்கியமானதாகும்.

இவ்வாறான வேலைத்திட்டங்களுக்கும் வர்த்தக சமூகத்தின் கூட்டிணைப்புக்கும் ஆசியா மன்றம் எமக்கு ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் நிதியுதவிகளையும் வழங்கி வருகின்றது. இதற்காக அந்த மன்றத்திற்கும் அதிகாரிகளுக்கும் மாநகர சபை சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்- என்றார்.

இந்த நிகழ்வில் மாநகர ஆணையாளர் எம்.ஏ.எம். நியாஸ், ஆசியா மன்ற உத்தியோகத்தர்க ளான ஏ.சுபாகரன், சீ.சசீதரன், எம்.எஸ்.ஐ. நிஷாத், கல்முனை நகர வர்த்தக சங்கத்தின் செயலாளர் எம்.எம். ஜெஸ்மின் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

(ச)

ஜனஜய லொத்தர்
உத்தியோகப்பூர்வ முடிவுகள்
வாரம் 223
சீட்டிழுப்புத் திகதி 01.05.2011
வெற்றி இலக்கங்கள் 12 20 25 37
சுப்பர் இலக்கம் 01
சுப்பர் பரிசுப்பொதி — ரூ. 19,551,350/=

| வெற்றி இல. | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 1 இலக்கத்துக்கும் | 95148 | ரூ. 20/= | ரூ. 1,902,960 |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 1 இலக்கத்துக்கும் | 8692 | ரூ. 40/= | ரூ. 347,680 |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 2 இலக்கங்களுக்கும் | 7384 | ரூ. 100/= | ரூ. 738,400 |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 2 இலக்கங்களுக்கும் | 646 | ரூ. 200/= | ரூ. 129,200 |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 3 இலக்கங்களுக்கும் | 164 | ரூ. 1,500/= | ரூ. 246,000 |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 3 இலக்கங்களுக்கும் | 22 | ரூ. 3,000/= | ரூ. 66,000 |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 4 இலக்கங்களுக்கும் | 1 | ரூ. 1,000,000/= | ரூ. 1,000,000 |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 4 இலக்கங்களுக்கும் | | ரூ. 19,551,350/= | |
| மொத்த எண்ணிக்கை | 112057 | | ரூ. 4,430,240/= |

வியாழக்கிழமை சுப்பர் பரிசுப்பொதி ரூ. 19,840,610/= உட்பட வரிவிலக்கற்ற புதிய மோட்டார் வாகனமும் அதன் மிகுதிப்பணமும்

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்
அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 2 333 546 - 47 தொலைநகல்: 2 333 545
Website: www.dlb.lk

# அரச ஊழியருக்கு வழங்கப்படும் சம்பளம் ரூ.10 ஆயிரமாக்க வேண்டும்

## அரச பொது ஊழியர் சங்கம் கோரிக்கை

அம்பாறை,மே3

அரச ஊழியர்களுக்கு வழங்கப்படும் வாழ்க்கைச் செலவுப் படியை அடிப்படைச் சம்பளத்துடன் சேர்க்க ஆவன செய்வதுடன், நாளுக்கு நாள் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பதன் காரணமாக சகல ஊழியர்களுக்கும் மாதாந்த சம்பளத்தை 10,000 ரூபாவால் அதிகரிக்க வேண்டும் என அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கம் அரசிடம் கோரியுள்ளது.

அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின் 17ஆவது மே தினக் கூட்டம் சங்கத்தின் தலைவர் எஸ்.லோகநாதன் தலைமையில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கல்முனை வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு வடக்கு, கிழக்கு இணைந்த மாநில சுயாட்சி முறையை ஏற்படுத்த அரசு முன்வருவதுடன், இதன் மூலம் சிறுபான்மைத் தமிழ், முஸ்லிம் மக்களின் அடிப்படை மனித உரிமைகள் மற்றும் அரசியல் உரிமைகளுக்கு முன்னுரிமை வழங்கி தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்கவும் முன்வர வேண்டும் என்ற கோரிக்கை உட்பட அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின் இணை நிறுவனமான வடக்கு, கிழக்கு மாகாண ஜீவோதய நலன்புரி நிறுவனம் மற்றும் பொது ஊழியர் சங்கம் ஆகியன இணைந்து 35 மே தினக் கோரிக்கைகளை அரசுக்கு முன்வைத்துள்ளன.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களான இரா.துரைரெத்தினம், எம்.எல். துல்கர் நயீம், கல்முனை மாநகர சபையின் பிரதி மேயர் வசீர், [illegible] தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் அரச ஊழியர்களும் கலந்து கொண்டனர்.

(ச-30)

## வலிகாமம் வடக்கு பிரதேசசபை
## பொதுமக்களுக்கான முக்கிய அறிவித்தல்

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் எல்லைக்குள் வசிக்கும் மக்களை எமது சபையினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற பின்வரும் நடைமுறைகளை பின்பற்றும்படி கேட்டுக் கொள்கிறேன். இந்த நடைமுறைகளைப் பின்பற்றத் தவறுவோர் மீது 1987 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் மனவருத்தத்துடன் அறியத்தருகிறேன்.

1. எமது சபை எல்லைக்குள் வசிக்கும் மக்கள் புதிதாக வீடு அமைத்தல், புனரமைப்புச் செய்தல், மதில் அமைத்தல், ஏனைய கட்டடங்கள் அமைத்தல் போன்ற நடவடிக் கைகளின் போது பிரதேச சபைகள் கட்டளைச்சட்டத்தின் பிரகாரம் பிரதேச சபையிடமிருந்து அனுமதியைப் பெற்ற பின் அமைக்கப்பட வேண்டும்.
2. விளம்பரப் பலகைகள், பதாகைகள் விளம்பரப்படுத்தப்படும்போது உரிய கட்டணத்தைச் செலுத்தி எமது சபையிடமிருந்து அனுமதி பெறப்படவேண்டும்.
3. வீதியோரங்களில் குப்பைகளையோ பொலீத்தீன் பைகளையோ வீசுவதைத் தவிர்த்து அங்கு வைக்கப் பட்டிருக்கும் கூடையினுள் போடவும். இச்செயற்பாடுகளைப் பின்பற்றி பிரதேசத்தைச் சுத்தமாக வைத்திருக்கவும்.
4. மீன் வியாபாரிகள் வீதியோரங்களில் மீன் விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. எமது சபைக்குரிய சந்தைகளில் மீன்களை விற்பனை செய்யப்பட வேண்டும்.

செயலாளர்,
வலி.வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை, வலிகாமம்.

(C/578104)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



பிறப்பு 17.06.1962 இறப்பு 03.05.2010

**அமரர் சேவியர் விவிலியா பேபி கெலனா**
(பாசமலர், சுவிஸ்)

போனமுறை நீ வந்து
திரும்பிச் சென்ற வேளையிலே
ஓராண்டு முடிவதற்குள்
திரும்பி நான் வருவேன் என்றாய்
ஓராண்டு முடிந்ததம்மா
திரும்பி நீ வரவேயில்லை
எங்கே சென்றாய்
ஆண்டவன் பாதம்
அடைந்துவிட்டாய்
ஆறுதலோ எமக்கில்லை
ஆண்டவன் பாதம் தொழுகின்றோம்
உன் ஆன்மா சாந்தியடைய

நாரந்தனை தெற்கு,
ஊர்காவற்றுறை.

ம.ஜோர்ஜ் எட்மன்
குடும்பத்தினர்.

(40)(3757)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு மாகாண ஆசிரியர் இடமாற்றம்; ரத்துச் செய்யுமாறு ஜனாதிபதிக்கு மகஜர்

அம்பாறை, மே 3

கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்படவுள்ள ஆசிரியர் இடமாற்ற விடயத்தில் நேரடியாகத் தலையிட்டு அதனை இரத்துச் செய்வதற்கு ஆவண செய்யுமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சாய்ந்தமருது மியன்டாட் விளையாட்டுக் கழகம் மகஜர் ஒன்றின் மூலம் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளது. செயலாளர் ஏ.எம்.ஜஹான் கையொப்பமிட்டு அந்த மகஜரை அனுப்பி வைத்துள்ளார்.

இந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

கடந்த ஜனவரி மாதம் ஏற்பட்ட பெருவெள்ள அனர்த்தம் காரணமாக இந்தப் பிரதேசப் பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து உள்ளூராட்சித் தேர்தல் காரணமாகவும் மாணவர்களின் கல்வி பாதிக்கப்பட்டிருந்தது. தற்போது இரண்டாம் தவணைக் காலத்திலேயே இந்தப் பாடசாலைகளில் கல்வி நடவடிக்கைகள் சுமுகமாக முன்னெடுக்கப்படுகின்றன.

இந்தநிலையில் தற்போது மேற்கொள்ளப்படும் ஆசிரியர் இடமாற்றம் மாணவர்களின் கல்வியை வெகுவாகப் பாதிக்கும் என அஞ்சப்படுகிறது.

இந்த இடமாற்றத் திட்டத்தில் கூடுதலான பெண் ஆசிரியைகள் உள்வாங்கப்பட்டு அவர்கள் வெளி மாவட்டங்களுக்கு அனுப்பப்படவுள்ளனர். இதனால் அவர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கும் இடர்களுக்கும் முகம் கொடுக்க நேரிடும். அத்தோடு அவர்களது குடும்பங்களும் நிலைகுலைந்து பொருளாதாரப் பின்னடைவுகளை எதிர்நோக்க வேண்டி ஏற்படும்.

பொதுவாக இந்த இடமாற்றத்திட்டம் ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் மத்தியில் மன உளைச்சல்களையும் வீண் குழப்பங்களையும் ஏற்படுத்துமே தவிர கல்வித்திணைக்களம் எதிர்பார்க்கும் பயன்களைக் கொண்டு வராது என நம்புகிறோம்- இவ்வாறு இந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ச)

# கண்டியில் நகைகள் கொள்ளை

## ஏழரை லட்சம் பெறுமதியானவை எனத் தெரிவிப்பு

கண்டி,மே.3

பேராசிரியர் ஒருவரின் கண்டி இல்லம் உடைக்கப்பட்டு ஏழரை லட்சம் ரூபா பெறுமதியான பணமும், நகைகளும் திருடப்பட்டுள்ளன.

பேராசிரியரும் அவரது மனைவியும் உறங்கிக் கொண்டிருந்தபோது அரவமின்றி உள்ளே நுழைந்த இனந்தெரியாதவர்கள் படுக்கையறைக்கு அடுத்த் அறையில் இருந்த பணத்தையும், நகைகளையும் திருடிக்கொண்டு தலைமறைவாகியுள்ளனர் என விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

வீட்டின் ஜன்னலொன்றைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தவர்களே 'இவ்வாறு கொள்ளையிட்டுள்ளனர்.

79 ஆயிரம் ரூபா பணமும் 6 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான ஐந்து தங்கச் சங்கிலிகள், பத்துச் சோடி காதணிகள், இரண்டு வளையல்கள் ஆகியன கொள்ளையிடப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பாக கண்டிப் பிரதேசத்துக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஐ.எம். கருணாரத்ன மேற்பார்வையில் கண்டி தலைமையகப் பொலிஸ் பொறுப்பதிகாரி ரஞ்சித்பால சூரிய தலைமையில் மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

# சட்டவிரோத உர மூடைகள் பறிமுதல்

விவசாயிகளுக்கு மானிய அடிப்படையில் வழங்கிய 280 உர மூடைகளை கல்முனைப் பிரதேசத்தில் சட்டவிரோதமான முறையில் வேறு பொதிகளில் மாற்றிக்கொண்டிருந்தவர்களை நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை மாலை கைது செய்துள்ளதுடன் உரங்கள் பொதி செய்யும் உபகரணங்களையும் மீட்டுள்ளதாக கல்முனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

கல்முனைவிசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த தகவலையடுத்து கல்முனைக்குடி பிரதேசத்திலுள்ள வீடு ஒன்றில் ஒருவரைக் கைது செய்ததுடன் உரங்களை பொதி செய்யும் உபகரணங்களை மீட்டு கல்முனைப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். மேலதிக விசாரணைகளை கல்முனைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## இலகுவாகப் பயணிக்க...



புனரமைப்பு:-மண்முனையிலிருந்து கொக்கட்டிச்சோலையூடாகச் செல்லும் மாவடிமுன்மரி வரையிலான பிரதான வீதி புனரமைக்கப்படுகின்றது. (ச)

# சிவனொளிபாதமலை பருவகாலம் முடிவுறும் தருணம் சமன் தெய்வ விக்கிரகத்தைக் கொண்டு செல்ல ஏற்பாடு

சிவனொளிபாதமலை யாத்திரைப் பருவகாலம் முடிவுறும் எதிர்வரும் 19ஆம் திகதி சமன் தெய்வ விக்கிரகம் மீண்டும் இரத்தினபுரி பெல்மதுல்ல ரஜ மஹா விகாரைக்குக் கொண்டு செல்லப் படவுள்ளது.

இது தொடர்பான கூட்டம் இரத்தினபுரி அரச அதிபர் அலுவலகத்தில் சிவனொளிபாத மலைக்குப் பொறுப்பான தம்பால சீலானந்த தேரர் தலைமையில் நடைபெற்றது.

சிவனொளிபாதமலை பருவகாலம் ஆரம்பிக்கும்போது இவ்வாறான கூட்டம் நடைபெறும். பெரும்பாலானோர் கலந்து கொள்வர். ஆனால் இந்தக் கூட்டத்தில் குறிப்பிட்ட சிலரே கலந்துகொண்டனர் என இரத்தினபுரிமாவட்டச் செயலர் எம்.டபிள்யூ. குணதாஸ தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரி பிரதேசத்தில் பல கோடி ரூபா பெறுமதியான மாணிக்கக்கற்கள் கிடைக்கின்றன. ஆனால் சமய நிகழ்வுகளுக்கு யாரும் பணம் செலவு செய்வது கிடையாது என பிரதேச செயலாளர் சுட்டிக் காட்டினார்.

சிவனொளிபாதமலைக்குப் பொறுப்பான தம்பால சீலானந்த தேரர் தெரிவிக்கையில், சிவனொளிபாதமலையில் சேரும் நிதியின்மூலம் அபிவிருத்திவேலைகள் செய்யப்பட்டுள்ளன.

சிவனொளிபாத ரஜமாவத்த வீதிகளான ரத்னபுர, பலா பத்தல ஆகிய வீதிகள் செப்பனிடப்பட்டுள்ளன- என்றார்.

# தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பளத்தை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பெற்றுத் தரும்



## அமைச்சர் தொண்டமான் மே தினத்தில் தெரிவிப்பு

கண்டி,மே 3

தோட்டத் தொழிலாளர்களுக்கு தற்போதைய வாழ்க்கைச் செலவுக்கேற்ப நியாயமான சம்பள உயர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கு இ.தொ.கா.நடவடிக்கை எடுக்கும் அதேவேளை, எவராவது தமது தனிப்பட்ட நலன்களுக்காக மக்களைக் குழப்பும் முயற்சியில் ஈடுபட்டால் அவர்களின் ஆணி வேரே இருக்காது.

இவ்வாறு இ.தொ.கா. பொதுச் செயலாளர் ஆறுமுகன் தொண்டமான் தனது மே தின உரையில் தெரிவித்துள்ளார்.

இ.தொ.காவின் மேதின ஊர்வலமும், கூட்டமும் நேற்று முன்தினம் ஹற்றன் நகரில் நடைபெற்றன. இந்த நிகழ்வில் மழைக்கு மத்தியிலும் பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டனர்.

அமைச்சர் ஆறுமுகன் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சொந்த வீட்டில் பட்ஜட் போடத் தெரியாதவர்கள் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் பற்றிப் பேசுகின்றனர். என்னை நம்பியிருக்கும் தொழிலாளர்கள் நான் வாங்கிக் கொடுக்கும் சம்பள உயர்வைப் பெற்றால் போதும். தொழிலாளர் விடயத்தில் வெறுமனே பேசிக்கொண்டிருப்பவர்களைவிட ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுப்பது இ.தொ.கா. மட்டுமே.

நாளைமறுதினம் வியாழக்கிழமை நடைபெறும் சம்பள உயர்வுப் பேச்சில் தொழிலாளர்களுக்கு உரிய சம்பள உயர்வைப் பெற்றுக் கொடுக்க இ.தொ.கா.முன் நிற்கும் - என்றார்.

இந்தநிகழ்வில் இ.தொ.காவின் தலைவரும் அமைச்சருமான முத்து சிவலிங்கமும் உரையாற்றினார்.

நாடாளுமன்ற உறுப்பினர் பி.இராஜதுரை, ஊவா மாகாண அமைச்சர் செந்தில் தொண்டமான், மத்திய மாகாண தமிழ்க் கல்வி அமைச்சர் அனுஷியா சிவராஜா, மத்திய மாகாணசபை உறுப்பினர் ரமேஷ் கணபதி கனகராஜ், ஹற்றன் - டிக்கோயா நகரசபைத் தலைவர் அ.நந்தகுமார், அம்பேகமுவ பிரதேசசபைத் தலைவர் திலேஷ், இ.தொ.கா உபதலைவர்களான ஹரி சந்திரசேகர, மாரிமுத்து, ஜெகதீஸ்வரன் உட்பட கட்சியின் முக்கியஸ்தர்களுடன் தென்னிந்திய நட்சத்திரங்களான வாசுவிக்ரம், விஜய்கணேஷ் ஆகியோரும் கலந்துகொண்டனர். (ச)

# வான் கதவுகள் திறக்கப்பட்டன

லக்ஸபான நீர்த்தேக்கத்தின் இரண்டு வான்கதவுகள் நேற்றுத் திங்கட்கிழமை திறந்துவிடப்பட்டுள்ளதாக நீர்ப்பாசனவியல் பொறியியலாளர் தெரிவித்துள்ளார்.

களனி கங்கையை அண்மித்துள்ள மக்களை எச்சரிக்கையாக இருக்குமாறும் அவர் தெரிவித்துள்ளார். மழை காரணமாக 7 பேர் உயிரிழந்துள்ளனர். 25,000 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். மீரிகம, குரு நாகலை புளத்சிங்கள, பாலிந்த நுவர, ருவன்வெல்ல, இரத்தினபுரி, களுத்துறை ஆகிய பகுதிகளின் வீதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

25,000 பேர் தமது வீடுகளை விட்டு வெளியேறி நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளனர் என இரத்தினபுரி மாவட்டச் செயலாளர் எச்.டப்லிவ் குணதாச தெரிவித்துள்ளார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்கள் கொல்லப்பட்டமையை சர்வதேசம் தூக்கிப் பிடிக்கிறது

## அமைச்சர் டி.யூ.குணசேகர

கொழும்பு, மே 3

நான்காம் கட்ட ஈழப்போரில் தமிழ் மக்கள் கொல்லப்பட்டமையைச் சர்வதேசம் தூக்கிப் பிடித்துக்கொண்டு பிரச்சினையை ஏற்படுத்துகிறது. யுத்தமொன்று நடைபெறும்போது சாதாரண மக்களும் கொல்லப்படுவது சாதாரண விடயமாகும் என மனிதவள மற்றும் சிரேஷ்ட அமைச்சர் டி.யூ.குணசேகர தெரிவித்தார்.

புனரமைப்பு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். மேலும் அவர் தெரிவித்தவை:

இலங்கை வரலாற்றை எடுத்துப் பார்த்தால் முதலாம், இரண்டாம், மூன்றாம் ஈழப்போரின் போதும் 71, 88, 89 ஆம் ஆண்டுகளிலும் மக்கள் கொல்லப்பட்டனர்.

தற்போது பல அழுத்தங்களைக் கொடுக்கும் சர்வதேசமோ, ஐ.நாவோ, சர்வதேச ஊடகமோ, ஏன் உள்நாட்டு ஊடகங்களோ அந்த ஆண்டுகளில் இடம்பெற்ற மனிதப் படுகொலைகளின்போது வாய் திறக்காமல் மௌனமாக இருந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

உலகத்திலேயே மிகவும் கொடிய பயங்கரவாத அமைப்பாகக் கருதப்பட்ட விடுதலைப் புலிகள் அமைப்பு ஐ.நா.குழு சமர்ப்பித்துள்ள அறிக்கையின்படி உலகத்தால் மிகவும் கண்ணியமான போராட்ட அமைப்பாகநற் பெயர்பெற்றுள்ளது என்றார். (எ)

# விடுவிக்கப்படாத புலி உறுப்பினர்கள் புனர்வாழ்வுக்குட்படுத்தப்படுகின்றனர்

## அமைச்சர் சந்திரசிறி கஜதீர தெரிவிப்பு

கொழும்பு, மே 3

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அமைந்திருக்கும் 9 புனர்வாழ்வு நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள புலி உறுப்பினர்கள் புனர்வாழ்வுக்குட்படுத்தப்பட்டு வருகின்றனர் என்று அமைச்சர் சந்திரசிறி கஜதீர தெரிவித்தார்.

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வு அமைச்சு உருவாக்கப்பட்டு ஒரு வருடம் பூர்த்தியானதை முன்னிட்டு கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர்கள் மாநாட்டில் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

புலிகளுடனான இறுதிக்கட்ட யுத்தம் முடிவுற்றதைத் தொடர்ந்து மொத்தமாக 11 ஆயிரத்து 696 பேர் பொதுக் காவல் உத்தரவுடன் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்குட்படுத்தப்பட்டனர்.

அவர்களில் பெரும்பாலானவர்கள் தற்போது விடுவிக்கப்பட்டுள்ளனர். இன்னும் 4 ஆயிரத்து 700 பேர் மட்டுமே எஞ்சியுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவிக்கிறார். (எ)

### கருத்தரங்கு....



வருமான முகாமைத்துவம் தொடர்பான கருத்தரங்கு கல்முனை மாநகர சபை உத்தியோகத்தர்களுக்கு சாய்ந்தமருது பரடைஸில் அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் ஆசிய மன்றத்தின் பொது ஆலோசகர் எச்.யு.பி.ஜெயதிஸ்ஸ, நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர் எம்.ஐ.எம். வலித் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச)

# ஜனாதிபதிக்கு எதிரான சூழ்ச்சி நடவடிக்கைகளை முஸ்லிம் மக்கள் அனுமதிக்கமாட்டார்கள்

## நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம்.அஸ்வர் கூறுகிறார்

கொழும்பு, மே.3

மக்களால் தெரிவுசெய்யப்பட்ட இலங்கை அரசைக் கவிழ்த்து நாட்டுத் தலைவரை வீட்டுக்கு அனுப்புவதற்கான செயற்பாடுகள் திரைமறைவிலிருந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

எனவே, தேசப்பற்றுள்ள இந்த நாட்டு முஸ்லிம்கள் அரசைக் கவிழ்க்கவோ, ஜனாதிபதியைக் குற்றவியல் நீதிமன்றத்துக்கு அனுப்பவோ விடமாட்டார்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் அல்ஹாஜ் ஏ.எச்.எம். அஸ்வர் தெரிவித்தார்.

பாதுக்கை, கொடிகலஹேன அலுத்வத்த அஹதியா பாடசாலையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

ஐ.நா.நிபுணர்குழுவின் அறிக்கையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குடும்ப ஆட்சியை நடத்துகிறார் என்றும், அவருடைய மூன்று சகோதரர்கள் முக்கிய பதவிகள் வகிக்கின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விடயத்துக்கும், யுத்த கால மனித உரிமை மீறலுக்கும் என்ன தொடர்பு இருக்கின்றது என்பதை விளங்கிக் கொள்ள முடியவில்லை.

மேற்படி அறிக்கையின் பின்னணியில் அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், நோர்வே போன்ற நாடுகள் உள்ளன. அவர்களுக்கு இங்கிருந்து தகவல் கொடுப்பவர்கள் ஐ.தே.க. ஆதரவாளர்களே.

முஸ்லிம் நாடுகள் எமது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்குச் செய்யும் உதவிகளைப் பொறுக்கமுடியாத எதிர்க்கட்சியினர் தமது சொந்த நாட்டுக்கு விரோதமாக இவ்வாறு தகவல் வழங்குகின்றனர். இலங்கை முஸ்லிம்கள் தேசபக்தி மிக்கவர்கள். அவர்களுக்கு நாட்டுப்பற்றுக் குறித்துச் சொல்லித்தரத் தேவையில்லை- என்றார். (ச)

# ஆசிரியர்களுக்கு இருநாள்கள் சேவைக்காலப் பயிற்சி

தென்மாகாண தமிழ்மொழி மூல பாடசாலைகளில் தரம் 6, 7, 8 ஆம் வகுப்புகளில் வரலாறு, புவியியல், குடியுரிமைக் கல்வி ஆகிய பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான இரு நாள்கள் சேவைகாலப் பயிற்சி எதிர்வரும் 5ஆம், 6ஆம் திகதிகளில் மாத்தறை தாரூஸ் உலூம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது என மாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எம்.எப். மதனியா கலீல் தெரிவித்துள்ளார்.

புதிய கல்வி மறுசீரமைப்பின் கீழான இந்தச் சேவைகாலப் பயிற்சிச் செயலமர்வு காலை 8 மணி முதல் மாலை 5 மணிவரை நடைபெறவுள்ளது. இந்தச் செயலமர்வில் கலந்துகொள்வோருக்கு அரச நிதிப் பிரமாணத்தின் படி கொடுப்பனவு மற்றும் கடமை விடுமுறை என்பன வழங்கப்படும் என பிரதிக் கல்விப் பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

# விசேட தேவையுடையவர்களுக்கு ஏற்ற வகையில் பொதுக்கட்டடங்கள் நிர்மாணிக்கப்பட வேண்டும்

## டாக்டர் பெரேராவின் மனுமீது உயர்நீதிமன்றம் தீர்ப்பு

கொழும்பு, மே 3

பொதுக் கட்டடங்கள் நிர்மாணிக்கப்படும்போது அவை விசேட தேவையுள்ளோர், கர்ப்பிணித் தாய்மார்கள், வயது முதிர்ந்தவர்கள் எல்லோராலும் இலகுவில் அணுகக்கூடிய வகையில் நிர்மாணிக்கப்பட வேண்டும்- இவ்வாறு கடந்த புதன்கிழமை உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

நுண்ணறிவாளரும் தொழில்சார் நிபுணரும் விசேட தேவையுள்ளவருமாகிய டாக்டர் அஜித் சிறிசாந்த் ஸ்பீபன் பெரேராவினால் சமர்ப்பிக்கப்பட்ட மனு ஒன்றை ஆராய்ந்தபோதே பிரதம நீதியரசர் அசோகா என்.டி.சில்வா, நீதியரசர்களான நிமால் காமினி அமரதுங்க, கே.ஸ்ரீபவன் ஆகியோர் அடங்கிய நீதியரசர்கள் குழு இந்த உத்தரவைப் பிறப்பித்தது.

உயர் நீதிமன்றம் முன்பு வழங்கியிருந்த தீர்ப்பு நடைமுறைப்படுத்தப்படாமை குறித்து டாக்டர் பெரேரா தமது முறையீட்டை மேற்கொண்டிருந்தார்.

1992ஆம் ஆண்டு நவம்பர் மாதம் டாக்டர் பெரேரா பயணம் செய்த காரின் மீது வீதியோரத்தில் நின்ற மரம் ஒன்று வீழ்ந்தது. இதனால் ஆயுள்காலம் முழுவதும் தமது உடலுறுப்புச் செயற்படாத நிலைமைக்கு அவர் ஆளானார்.

அதன்பின்னர் விசேட தேவையுள்ளோர் தொடர்பான செயற்பாட்டாளராக அவர் தமது பணிகளை மேற்கொண்டார். விசேட தேவையுடையோர் அணுகக்கூடிய வழிமுறைகள் தொடர்பில் பரந்தளவிலான இவரது சேவைகள்மூலம் பல அமைப்புக்கள் பயனடைந்துள்ளன.

2009 ஒக்டோபர் 14ஆம் திகதி தமது அடிப்படை மனு மீதான தீர்ப்பு வழங்கப்பட்ட போதிலும் அந்த உத்தரவு இன்றுவரை அமுல் செய்யப்படவில்லையெனத் தமது மனுவில் டாக்டர் பெரேரா குறிப்பிட்டிருந்தார். இதனை ஏற்றுக்கொண்ட உயர் நீதிமன்றம் தமது தீர்ப்பை உடனடியாக அமுல் செய்யுமாறு உத்தரவிட்டது.

இலங்கையில் விசேட தேவையுடையோரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு விதிமுறைகள் இருந்தபோதும் அதனை அமுல் செய்வதில் பாரபட்சம் காட்டப்படுவதாக டாக்டர் பெரேராவின் மனுவில் குறிப்பிடப்பட்டிருந்தது.

தமது முறையீட்டு மனுவில் சமூகசேவைகள் மற்றும் சமூக நலன்புரி அமைச்சர், விசேட தேவையுள்ளோர்களுக்கான தேசிய சபையின் தலைவர், அமைச்சின் செயலாளர் மற்றும் ஏனைய 68 பேர்களை எதிர்வாதிகளாக டாக்டர் பெரேரா குறிப்பிட்டிருந்தார்.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பின் சுருக்கம் பின்வருமாறு அமைகின்றது.

1. சகல பொதுக் கட்டடங்களும் பொது இடங்களும் விசேடமாகக் குளியலறை, கழிவறை போன்றன நடைமுறையிலுள்ள விசேட தேவையுடையோர் தொடர்பான ஒழுங்கு விதிகளின்படி நிர்மாணிக்கப்படல் வேண்டும். குறிப்பாக 2006 ஒக்டோபர் மாத ஒழுங்கு விதிகளுக்கு அமைய இதன் செயல்முறை அமைதல் வேண்டும்.

2. கட்டட வடிவமைப்பு, கட்டட திட்ட வரைபடத்தை அங்கீகரித்தல், பூர்த்தி செய்யப்பட்ட கட்டடங்களை உறுதிப்படுத்தும் வகையில் சான்றுப் பத்திரம் வழங்கல் என்பன தொடர்பாகத் தவறான அறிக்கையோ அல்லது தகவலோ எவரும் வழங்கக் கூடாது.

3.இவ்வாறு அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரிகள் புதிய நிர்மாணிப்புக்களின் உரிமையாளர்கள் மற்றும் இணை உரிமையாளர்கள் அனைவரும் இதற்கான சம பொறுப்புடையவர்கள், அதிகாரிகள் என்று இங்கு கூறப்படுவோர் கட்டடக் கலைஞர்கள், கட்டட நிர்மாணிப்பாளர்கள், உள்ளூராட்சி ஆணையாளர்கள், நகர அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் முதலீட்டுச்சபை அதிகாரிகள், அரச மற்றும் தனியார் துறைத் தலைவர்கள், அமைச்சுக்கள் ஆகும்.

4. இதற்கமைவாகச் செயற்படாமல் விடுவது கடுமையான தண்டனைக்குரிய குற்றமாகும்.

தற்போது நாட்டில் 25 வீதமானோர் விசேட தேவையுடையவர்களாக இருப்பதாக டாக்டர் பெரேரா தமது மனுவில் குறிப்பிட்டிருந்தார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆனைக்கோட்டை விநாயகர் முன்பள்ளியில் கல்வி கற்கும் சிறார்கள் தளபாட வசதிகள் இல்லாததால் நிலத்தில் இருந்து கல்வி பயில்கின்றனர். (100)

# அல்லைப்பிட்டியில் குடியமர்ந்த குருநகர் மக்களை ஒற்றுமையாக வாழுமாறு யாழ். ஆயர் அறிவுரை



யாழ்ப்பாணம்,மே.03

இன்று முதல் நீங்கள் இந்தப் பகுதியின் மக்கள் ஆவீர்கள். அதனால் இங்குள்ள மக்களுடன் அன்புடனும் ஒற்றுமையாகவும் வாழ்வதுடன் இந்தக் கிராமத்தின் அபிவிருத்தியிலும் வளர்ச்சியிலும் இங்குள்ள மக்களுடன் இணைந்து செயற்பட வேண்டும்.

யாழ். குருநகர் பகுதியில் இருந்து அல்லைப்பிட்டியில் குடியமர்ந்த மக்களிடம் யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகை மேற்கண்டவாறு கேட்டுக் கொண்டார்.

கடந்த 20 ஆம் திகதி சனிக்கிழமை அல்லைப்பிடி வெண்புரவி குடியிருப்புப் பகுதியில் கரித்தாஸ் கியூடெக், நெய்தலம் அமைப்புகளின் அனுசரணையுடன் அமைக்கப்பட்டுள்ள வீடுகளைக் குருநகர் மக்களுக்கு வழங்கி வைத்து உரை யாற்றிய யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம்-

இது ஓர் அற்புத மான நல்ல காரியம். இதுபோன்ற வீடுகளை வெற்றிலைக்கேணி, செம்பியன்பற்று பகுதிகளில் அமைத்து வழங்கப்பட்ட போதும் இன்று அவை மக்களற்ற வெறும் வீடுகளாக மாறிவிட்டன. அங்கிருந்த மக்கள் முகாம்களில் வாடுகிறார்கள். குருநகர் சன நெருக்கடி நிறைந்த பகுதி என்பதால் வசதிகள் இருந்தாலும் மக்கள் நிம்மதியாக வாழ முடியாதுள்ளது. இது போன்ற குடியிருப்புக்களை அமைத்து நெருக்கடிமிக்க பகுதிகளில் உள்ள மக்களுக்கு வழங்கும் பட்சத்தில் அவர்கள் நிம்மதியாகவும் சந்தோச மாகவும் வாழ முடியும். இன்ன மும் பெருந்தொகையான மக் களுக்கு இது போன்ற வசதி களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியுள்ளது. 8 லட்சம் ரூபா செலவில் வசதியுடன் கூடிய வீடுகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் தேவைப்படும் வசதிகளை நாடாளுமன்ற உறுப்பினர்கள் கவனத்தில் எடுத்து நிறைவேற்றிக் கொடுக்க முன் வரவேண்டும். கரித்தாஸ் நிறுவனம் இந்த வீடுகளைக் கட்ட உதவியுள்ளது. இங்கே காணிகளை வாங்கி ஒரு வசதியான வீட்டை அமைத்துக்கொடுக்க கரித்தாஸ் முன்னாள் இயக்குநர் கே.ஜெயக்குமார், நெய்தல் இயக்குநர் எஸ்.ஜெயசேகரம் அடிகளார் எடுத்த முயற்சி பாராட்டப்பட வேண்டியது என்று கூறினார்.

மேலும் இங்கு உரையாற்றிய நெய்தல் இயக்குநர் அருட்திரு எஸ்.ஜெயசேகரம் அடிகளார் இங்கே வழங்கப்பட்டுள்ள வீடுகளை பயனாளிகள் வேறு எவருக்கும் விற்பனை செய்ய முடியாது என்பதுடன் வீடுகளைக் கைவிட்டு வெளியேறினால் அவற்றை வேறு பயனாளிக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினார்.

வீடுகளுக்காகப் பலர் தம்மைப் பதிவு செய்துள்ளனர். அவர்களின் கோரிக்கைகளை நாங்கள் கவனிக்க வேண்டியுள்ளது. 400இற்கும் அதிகமானவர்களுக்கு இதுபோன்ற உதவிகளை மேற்கொள்ள வேண்டும். எனவே நீங்கள் உங்கள் வீடுகளை நல்ல முறையில் பேணிக் கொள்ள வேண்டும். இது போன்ற வேலைத்திட்டங்களை நிறைவேற்ற எமக்கு முழு ஒத்துழைப்பையும் வழங்கி வரும் எமது ஆயர் அவர்களுக்கு நாங்கள் நன்றிகளைக் கூறுகின்றோம்- என்றார். (க-7)

# நவாலி குண்டுவீச்சில் சேதமடைந்த முருகன் ஆலயம் புனரமைப்பு

யாழ்ப்பாணம்,மே3

கடந்த 09.07.1995இல் நவாலியில் இடம்பெற்ற விமானத் தாக்குதலில் முற்றாக அழிவடைந்த நவாலி ஸ்ரீ கதிர்காம முருகன் ஆலயம் 15 வருடங்களின் பின்னர் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றது.

நவாலி விமானத் தாக்குதலில் ஆலயம் முற்றாக அழிவடைந்து பின்னர் மீண்டும் புனரமைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டபோதும் நிதிப்பங்களிப்பு போதாமையினால் அது முழுமை பெறவில்லை.

தற்போது ஆலயப் பிரதம குரு சிவஸ்ரீ மா.பத்மநாதன் தலைமையில் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு மஹாகும்பாபிஷேகம் இடம்பெறவுள்ளது.

இதனை முன்னிட்டு ஆலய புனரமைப்புப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

இதேவேளை - ஆலயத்தில் புனரமைப்புப் பணிக்கான நிதித் தேவை குறித்து வலி.தென்மேற்கு பிரதேச செயலர் திருமதி எழிலரசி அன்ரன் யோகநாயகம் ஊடாக இந்து கலாசார அமைச்சின் உதவிப் பணிப்பாளருக்கு முன்மொழிவுகள் சமர்ப்பித்துள்ளதாக ஆலய வழிபடுவோர் சங்கத் தலைவர் தெரிவித்தார். (த-302)

# பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டம்

மாங்குளம் மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 9ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலையின் அதிபர் ப.ரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் அனைத்துப் பழைய மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப் பட்டுள்ளது. (ச)

# தொழிலாளர் எழுச்சியின் சின்னமே மேதினம்

## மேதினக் கூட்டத்தில் சா.தியாகலிங்கம் உரை

யாழ்ப்பாணம்,மே 3

தொழிலாளர்களின் எழுச்சியின் சின்னமாக மே தினம் விளங்குகின்றது. இது தொழிலாளர்களின் அர்பணிப்பைப் பிரதி பலிக்கும் செங்கொடியை நினைவுகூரும் நாள். எவ்வாறிருப்பினும் ஐ.நா.சபை சிறுவர் தினம், மகளிர் தினம், முதியோர் தினம் போன்று தொழிலாளர் தினத்தையும் பிரகடனப்படுத்தாமை வேதனை அளிக்கிறது.

இவ்வாறு மே தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் முதலாம் குறுக்குத் தெருவில் நேற்று முன்தினம் நடைபெற்ற மே தினக் கூட்டத்தில் தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் மத்தியில் உரையாற்றிய இலங்கை ஆசிரியர் சங்க முன்னாள் உப தலைவர் சா.தியாகலிங்கம் குறிப்பிட்டார்.

மே தினம் என்பது மாற்றங்களை ஏற்படுத்துவனவாகவும் தொழிலாளர்கள் தமது உரிமைகளை வென்றெடுத்து முதலாளித்துவத்திலிருந்து விடுதலையை வென்றெடுப்பதற்காகவும் ஏற்படுத்தப்பட்டது. இதன் நிமித்தமே உலகில் முதலாளித்துவத்துக்கெதிராக சமவுடமை அரசுகள் உருவாகின. எமது நாட்டிலும் முதலாளித்துவக் கொள்ளைகளுக்கு எதிராக 1953ஆம் ஆண்டு தொழிலாளர்கள் பெரும் வேலை நிறுத்தத்தை மேற்கொண்டனர். இது அரசுக்கு பெரும் நெருக்கடியைத் தோற்றுவித்தது. இருப்பினும் ஆளும் வர்க்கத்தினால் அல்லது அரசினால் தொழிலாளர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது. தொழிலாளர்கள் தாமே தமது உரிமைகளை வென்றெடுக்கப் பாடுபட வேண்டும் என்று மேலும் அவர் குறிப்பிட்டார்.

அடுத்து உரை நிகழ்திய இலங்கை ஆசிரிய சங்கத்தின் சிரேஷ்ட உறுப்பினர் வி.கி.கஸ்ரன் றோய் தெரிவிக்கையில்;

தொழிற் சங்கங்களிடையே பரஸ்பரம் புரிந்துணர்வு ஏற்பட வேண்டும். அதேவேளை அனைத்துத் தொழிலாளர்களுடைய உரிமைகளுக்காகவும் தொழிற்சங்கங்கள் ஒற்றுமை கொண்டு ஒன்றிணைந்து செயற்பட்டு அவர்களின் உரிமைகளுக்காகப் போராட வேண்டும்.

ஆசிரியர்கள் இன்று பல பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். அவர்களுடைய உரிமைகள் அனைவராலும் மதிக்கப்பட வேண்டும். பாதுகாக்கப் படவேண்டும். அதிகாரிகளின் அடிமைகளாக ஆசிரியர் சமூகம் நோக்கப்படுவது தவிர்க்கப்பட வேண்டும். இந்த நிலை மாற ஆசிரியர்கள் அனைவரும் ஒற்றுமையுடன் செயப்படுவதுடன் ஏனைய தொழிற்சங்கங்களும் பூரண ஆதரவை வழங்க வேண்டும். அப்போதுதான் எமது பலத்தை வெளிப்படுத்த முடியும் என்று கேட்டுக் கொண்டார்.

வங்கி ஊழியர் சங்கத்தின் முன்னாள் உபதலைவர் சொ. சிவபாலன் உரையாற்றுகையில் -

மனித உரிமைகள் இல்லாத எமது பிரதேசத்தில் தொழிலாளரின் உரிமைகள் எவ்வாறு கிடைக்க முடியும் என்று கேள்வி எழுப்பினார். தொழிற் சங்கங்கள் அரசியல் கட்சிகள் மத்தியில் தொழிலாளர் நம்பிக்கை இழந்து போகுமளவுக்கு அவை இயங்கிக் கொண்டிருக்கின்றன. தொழிலாளர்கள் கொண்டாட வேண்டிய மே தினத்தை அரசும் அதன் தோழமைக் கட்சிகளும் தமது நோக்கத்திற்காக கொண்டாடுகின்றனர். மேலும் அரசு மக்களைத் தமது எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திக்க விடாது அவர்களை வேறு திசைப்படுத்தி அவர்களின் உரிமைகளை நசுக்குகிறது. முதலாளிகள் தொழிலாளருக்கு அவர்களது ஊழியர் சேமலாப நிதியை செலுத்தவதில்லை. இதனைத் தட்டிக் கேட்கும் போது தொழிலாளி வேலை நீக்கம் செய்யப்படும் அபாயம் தோன்றுகிறது. தனியார் துறை, அரசதுறைகளில் பணிபுரிந்து வேலையை விட்டு ஓய்வு பெறும் போது அவர் களுக்கு வழங்கப்படும் சேமலாப நிதியை அரசு கையாடுவது கவலையளிக்கின்றது.

1995 ஆம் ஆண்டு தொழிலாளர் சாசனத்தை உருவாக்கியவர் இன்று பதவியில் இருக்கும் மஹிந்தர். ஆனால் அதே நபர் இன்று ஆட்சிக்கு வந்த போது அதை அமுல்படுத்தவில்லை. இத்தகைய தொழிலாளர் சாசனத்தை அமைக்க எந்தவொரு தொழிற்சங்கமும் முன்வரவில்லை. இத்தகைய சூழலில்தான் தொழிலாளர் தினம் கொண்டாடப்படுகின்றது.

உலகத் தொழிலாளர்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்று குரல் கொடுத்தவர் மாக்ஸ், ஆனால் 21 ஆம் நூற்றாண்டில் மாக்ஸ் இருந்திருந்தால் இவ்வுலகத்தைக் காப்பாற்றுங்கள் என்று குரல் கொடுத்திருப்பார். காரணம் முதலாளித்துவ நாடுகள் வளங்களைச் சுரண்டுவதும், உற்பத்திகள் யாவும் மக்களின் அடிப்படைத் தேவைகளைக் கருத்திற் கொள்ளாமல் இலாபத்தை நோக்காகக் கொண்டு மேற்கொள்ளப்படுவதும் தொடர்கின்றன. இதனால் உலகச் சூழலில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. இவை பெரும் அனர்த்தங்களையும் அழிவுகளையும் இ[illegible]டுத்தி வருகிறன - (ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03 மே 2011

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருவது வித்தியா

**மேடம்:**
வெறுப்பு, விரக்தி விலகி உற்சாகம் குடிகொள்ளும் நாள். எதிர்பார்த்த வாய்ப்புகள் தேடி வரலாம். ஒரு விடயத்துக்காகச் சிலருடன் கோபித்துக் கொண்டாலும், அடுத்த சில மணி நேரங்களில் சமாதானம் அடைவீர்கள். பிள்ளைகளின் விருப்பங்களை நிறைவேற்றி வைப்பீர்கள். எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம்.

**இடபம்:**
வீட்டுக்குத் தேவையான பொருள்கள் வாங்க கணிசமான பணத்தைச் செலவு செய்யலாம். புதியவர்கள் சிலர், உங்களின் உதவி நாடி வரலாம். பெற்றோர் நலனில் அக்கறை காட்டுவீர்கள். ஆதாயமில்லாத வேலை ஒன்றில் ஈடுபடுவீர்கள். உங்களுக்குத் தெரியாத விடயம் ஒன்றில் நண்பர் ஒருவர் நல்ல ஆலோசனை சொல்லலாம். மறதியைத் தவிர்க்கவும்.

**மிதுனம்:**
புதிய முயற்சிகளில் இறங்குவீர்கள். நண்பர்கள் வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். அரசியல் தொடர்புடையவர்கள் தங்களுக்கு எதிராக சதி வேலைகளில் ஈடுபடும் சிலரை பற்றி அறிந்து கொள்வர். பெண்கள் பிறந்த வீட்டின் உதவிகளைப் பெற வாய்ப்பு உண்டு. ஆனந்தமான நாள்.

**கடகம்:**
தெய்வ காரிய பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். வழக்கத்திற்கு மாறாக கூடுதல் நேரம் வேலை செய்யலாம். சகோதரர்கள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். மனைவி வழியில் எதிர்பாராத சுபச் செலவுகள் ஏற்படலாம். உங்களின் வார்த்தைக்கு சக ஊழியர்கள் மத்தியில் வரவேற்பு இருக்கும். ஆதாயகரமான பண வரவுகள் உண்டு.

**சிங்கம்:**
கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள். முக்கிய வேலையாக வெளியூர் பயணம் செல்லலாம். கடன் பாக்கி ஒன்றை தீர்க்க முற்படுவீர்கள். நீண்ட நாள்களாக எதிர்பார்த்தும் நடக்காத ஒரு விடயம் இன்று தானாக நடக்கும் வாய்ப்பு உருவாகும். மருத்துவ சிகிச்சைகளுக்காகக் காத்திருக்கலாம். ஆலய வழிபாடு அமைதி தரும்.

**கன்னி:**
பிள்ளைகள் விடயத்தில் அதிக கண்டிப்புடன் நடந்து அவர்களின் அதிருப்திக்கு ஆளாகலாம். செலவுகள் அதிகரிப்பால் சேமிப்பில் கை வைக்கலாம். ஓய்வெடுக்க நினைத்தாலும், அது முடியாத அளவுக்கு யாராவது வந்து தொந்தரவு கொடுக்கலாம். சக ஊழியர்கள் விடுமுறையால் கூடுதல் வேலைப்பளுவை சந்திக்கலாம். வெறுப்பு குடிகொள்ளும்.

**துலாம்:**
நண்பர்கள் சிலருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள். நேரத்தை வீணடிக்காமல் ஏதாவது வேலைகளை செய்து கொண்டிருப்பீர்கள். ஏதோ ஒரு விதமான சம்பவம் பற்றிய நினைவு, மனதில் ஊடுருவுவதால் சந்தோஷம் குடிகொள்ளும். உறவினர்கள் சிலர் சொன்ன யோசனையை ஏற்று அதன்படி செயல்பட முற்படுவீர்கள். தன்னம்பிக்கையுடன் செயற்படும் நாள்.

**விருச்சிகம்:**
புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பணவரவு தொடர்பான செய்திகளைக் கேட்கலாம். இரண்டு மூன்று நாள்களாகப் பிற்போட்ட வேலை ஒன்றை இன்று வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். சக ஊழியர்கள் அனுசரணையாக நடந்து கொள்வர். உங்களின் குடும்ப பெருமைப் பற்றி மற்றவர்களிடம் பேசுவீர்கள். வசதி, வாய்ப்புகள் கூடும் நாள்.

**தனுசு:**
உங்களுடன் பேச விரும்பும் ஒருவரிடம் நீங்கள் பேச விரும்பாமல் தவிர்க்கலாம். முக்கியமான செய்தி ஒன்றை கேட்கலாம். எந்த விடயத்திலும் ஒன்றுக்கு பல முறை யோசித்து முடிவெடுப்பது நன்மை தரும். குறைந்த செலவில் முடியும் என நினைத்த வேலை ஒன்றுக்கு அதிகமாகச் செலவாகலாம். இனம்புரியாத கவலை குடிகொள்ளும்.

**மகரம்:**
உங்களை பயன்படுத்தி உறவினர் ஒருவர் காரியம் சாதிக்கலாம். கோபம், வேகத்தைக் குறைத்து பொறுமையாகச் செயற்பட வேண்டிய நாள். அரசியல் தொடர்புடையவர்கள் எதிர்பார்த்தது நடப்பது தள்ளிப் போகலாம். வெளிவட்டாரத் தொடர்பு விரிவடையும். நன்றி மறந்த ஒருவரை நினைத்து மனவருத்தம் அடைவீர்கள். வாகன யோகம் கிட்டும்.

**கும்பம்:**
நண்பர்கள் உதவி பெற்று சந்தோஷம் அடையும் நாள். மற்றவர்கள் என்ன சொல்வார்களோ என்பதைப் பற்றி கவலைப்படாமல், சில விடயங்களில் தைரியமாக முடிவு எடுப்பீர்கள். குறைந்த ஆதாயத்தை எதிர்பார்த்துச் செய்த வேலை ஒன்றில் கணிசமான ஆதாயம் கிடைக்கலாம்.

**மீனம்:**
வேண்டாத விவகாரம் ஒன்றில் தலையிட்டு, மற்றவர்களின் அதிருப்திக்கு ஆள்படலாம். உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளின் நெருக்கடிகளுக்கு ஆளாகலாம். பொழுதுபோக்கு விடயங்களுக்காக கணிசமான பணத்தைச் செலவு செய்யலாம். மற்றவர்களை பரிகாசம் செய்து பேச வேண்டாம்.

# ஒரு பொய்யை நியாயப்படுத்த ஆயிரம் பொய் கூறும் அரசு

விடுதலைப் புலிகளின் முதன்மைத் தலைவர்கள் அனைவரும் கொல்லப்பட்டுவிட்ட நிலையில் போர்க் குற்ற விசாரணைகள் என்பது இலங்கை அரசுக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் எதிரானதாகவே இருக்கிறது.

இவ்வாறு பிரிட்டனைத் தளமாகக் கொண்ட புகழ்மிக்க 'த எக்கனோமிஸ்ற்' எழுதியுள்ளது.

அதன் முழுவிவரம் வருமாறு:

அண்மைய ஆண்டுகளாக இலங்கையின் இராஜதந்திரிகள் கொண்டிருக்கும் மாறாத பண்புகளை நோக்குமிடத்து அவை தேசிய கௌரவத்தை அடிப்படையாகக் கொண்டதாகவே இருக்கிறது. அப்பாவிகளாக இருப்பதாகக் காட்டிக்கொள்ளும் இந்த இராஜதந்திரிகளின் முகமூடிக்குள் அவர்களது உண்மை முகம் ஒளிந்து கிடக்கிறது.

இலங்கையில் இடம்பெற்ற 26 ஆண்டுகால இனப்போரின் இறுதிநாள்களில் நடந்தது என்ன? என்பது தொடர்பான ஐ.நா. வல்லுநர்கள் குழுவின் அறிக்கை வெளிவந்த பின்னர் இலங்கையின் இராஜதந்திரிகள் பலர் கலந்துரையாடலுக்காகக் கொழும்புக்கு அழைக்கப்பட்டிருந்தனர். இடம்பெற்றதாகக் கூறப்படும் சம்பவங்களை மறுப்பதற்கான தங்களது திறனை வளர்த்துக்கொள்வதற்காக இது இருக்கக் கூடும்.

மே 2009 இல் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு இல்லாதொழிக்கப்பட்டதுடன் இலங்கையில் போர் முடிவுக்கு வந்தது. கொடூரத்தனம் மற்றும் மனித வாழ்வை அவமதிக்கும் பண்பு ஆகிய இரண்டினது கலப்பாகப் போரின் முடிவு அமைந்தது.


''அனைத்துலக மனிதாபிமான மற்றும் மனித உரிமைச் சட்டங்களையும் மோசமாக மீறும் வகையில் இரண்டு தரப்பினரும் செயற்பட்டிருக்கிறார்கள் என நம்புவதற்காக நம்பத்தகுந்த ஆதாரங்கள் கிடைக்கப்பெற்றிருக்கின்றன'' என வல்லுநர்கள் குழு தனது அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறது.

விடுதலைப் புலிகளது முதன்மைத் தலைவர்கள் அனைவரும் கொல்லப்பட்டுவிட்ட நிலையில் போர்க் குற்ற விசாரணைகள் என்பது இலங்கை அரசுக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் எதிரானதாகவே இருக்கிறது.

தனக்கு எதிராகச் சுமத்தப்பட்டிருக்கும் இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக இலங்கை அரசு புதியதொரு அணுகுமுறையைக் கைக்கொள்ளும் என எதிர்பார்க்க முடியாதுதான். ஏற்பட்ட மனித இழப்புக்களை விட போரை முடிவுக்குக் கொண்டுவந்ததன் ஊடாகக் கிடைத்த பலாபலன்களே அதிகம் என இலங்கை அரசு வாதிடக்கூடும்.

தமிழீழ விடுதலைப் புலிகளைப் பொறுத்த வரையில் தேசிய விடுதலைக்கான மூலோபாயமாக ஒரு கொடூரம் நிறைந்த உத்திகளைக் கைக்கொண்டிருந்தனர்.

போரை முடிவுக்குக் கொண்டுவருவதில் இராணுவத்தினர் காட்டிய அதியுச்ச வீரம் மதிக்கப்படவேண்டும் என்றும் ஆனால் குறித்த சில மீறல் சம்பவங்கள் இடம்பெற்றிருப்பது வருத்தத்துக்குரியதே என்றும் அரசு வாதிடக்கூடும். இந்தக் குற்றச்சாட்டுக்கள் முறையாக விசாரிக்கப்படும் என்ற நம்பிக்கையையும் அது வழங்க முடியும்.



பதிலாக, அரசு மூன்றாவது ஒரு பாதையைத் தேர்ந்தெடுத்தது, ஏற்கனவே அது கூறிய பொய்யை நியாயப்படுத்துவதற்காக. அது இன்று ஆயிரம் பொய்களைக் கூறுகிறது.

போரின்போது எந்தவொரு பொதுமக்களையும் தாங்கள் வேண்டுமென்று இலக்கு வைக்கவில்லை என்கிறது அரசு. 330,000 பொதுமக்கள் விடுதலைப் புலிகளால் மனிதக் கேடயங்களாக வைக்கப்பட்டிருந்த பாதுகாப்பு வலயப் பகுதியை இலக்குவைத்து செறிவான எறிகணைத் தாக்குதல்களை இலங்கை அரச படையினர் நடத்தியிருந்தனர்.

ஆனால் தாம் இதுபோல எந்தத் தாக்குதல்களையும் நடத்தவில்லை என்றும் பாதுகாப்பு வலயங்களை இலக்குவைத்துக் கனரக ஆயுதங்களைப் பயன்படுத்தப் போவதில்லை என்றும் கூறியிருந்தனர். ஆனால், தாம் வழங்கிய வாக்குறுதிகள் எதனையும் அரச படையினர் இறுதிவரை காப்பாற்றவில்லை.

ஜனவரி 2009 தொடக்கம் மே 2009 வரையிலான காலப்பகுதியில் பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டதாகவும் இவர்களில் பலர் இலங்கை அரச படையினரின் எறிகணைத் தாக்குதலின் விளைவாகவே உயிர் நீத்ததாகவும் வல்லுநர்கள் குழு தனது அறிக்கையில் கூறுகிறது.

மனித உரிமை அமைப்புக்கள் குறிப்பிடாத எதனையும் வல்லுநர்கள் குழு தனது அறிக்கையில் உள்ளடக்கவில்லை என்றுதான் கூறவேண்டும்.

ஆனால் மருஸ்கி தருஸ்மன் தலைமையிலான இந்தக் குழுவினது அறிக்கையில் இலங்கை அரசின் மோசமான வன்முறைசார் உபாயங்கள் தொடர்பாகப் பெரும்பாலும் சுற்றிவளைத்தே சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றன.

இலங்கையில் போர் முன்னெடுக்கப்பட்ட முறையானது போர் மற்றும் அமைதிக் காலங்களின் போதான தனிமனித கௌரவத்தைப் பாதுகாப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட அனைத்துலக நீதி முறையின் மீது விழுந்த அடி என வல்லுநர்கள் குழு தனது அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறது.

எது எவ்வாறிருப்பினும் போர்க்குற்றங்களோ அன்றி மனித உரிமை மீறல்களோ என எதுவுமே இடம்பெறவில்லை என முற்றாக மறுக்கும் தனது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நிலைப்பாட்டிலிருந்து இலங்கை அரசு மாறுவதாகத் தெரியவில்லை.

ஐ.நா. வல்லுநர்கள் குழுவினது அறிக்கை வெளிவந்தமை இலங்கையில் முன்னெடுக்கப்பட்டுவரும் இன நல்லிணக்க முனைப்புகளைப் பெரிதும் பாதித்துவிட்டதாம் என்கிறது இலங்கை.

ஆனால் இலங்கை அரசின் இந்த எதிர்ப்பைப் பொருட்படுத்தாத செயலாளர் நாயகம் வல்லுநர்கள் குழுவினது அறிக்கையை வெளியிட்டிருக்கிறார். இது ஐ.நாவின் மீதான இலங்கையின் தேசிய ரீதியிலான கோபத்தை அதிகரித்திருக்கிறது.

நாட்டிலுள்ள வீடுகள் தொடக்கம் மேல்மட்டம் வரை இந்தக் கோப உணர்வு காணப்படுகிறது. இதுபோல வெளிநாடுகள் மகிந்த ராஜபக்ஷவின் அச்சுறுத்தும் நடவடிக்கைகளை எடுப்பதானது பெரும்பான்மையினச் சிங்களவர்கள் மத்தியில் அவருக்கான செல்வாக்கு அதிகரிப்புக்கே வழிசெய்யும்.

வல்லுநர்கள் அறிக்கைக்குப் பதிலளிக்கும் வகையில் கருத்துரைத்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, நாட்டின் நலனுக்காக மின்சாரக் கதிரையில் அமருவதற்குத் தான் தயார் என அறிவித்தார். வல்லுநர்கள் குழுவின் அறிக்கைக்கான எதிர்ப்பை வெளிப்படுத்துவதற்கு அணிதிரள்வோம் என அழைப்பு விடுக்கப்பட்டிருக்கும் நிலையில் தொழிலாளர் தினத்தன்று பெருந்திரளான மக்கள் கூடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஐ.நாவின் அறிக்கையானது உள்ளூரில் குறுகியகால அரசியல் இலாபத்தை அவருக்குப் பெற்றுக்கொடுத்திருக்கிறதெனில், நாடு எதிர்கொண்டிருக்கும் இராஜதந்திரப் பின்னடைவையும் சீர்செய்துவிடலாம் என ஜனாதிபதி மஹிந்த நம்பக்கூடும்.

அனைத்துலக ரீதியில் இலங்கைக்கான ஆதாரவாளர்கள் இல்லாமல் இல்லை. மே 2009 இல் போர் முடிவுக்கு வந்த பின்னர் ஐ.நாவின் மனித உரிமைச் சபையில் இலங்கை பெற்ற பெருவெற்றியை வரவேற்று, விடுதலைப் புலிகள் கைக்கொண்ட வன்முறைப் பாதையைக் கண்டித்து, இலங்கை இராணுவத்தினருக்கு எதிராகச் சுமத்தப்பட்ட போர்க் குற்றங்கள் உண்மைக்குப் புறம்பானவை எனக்கூறி தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

அப்போது இலங்கைக்குப் பல நாடுகளும் முண்டு கொடுத்தமை உண்மைதான். ஆனால் சீனா மற்றும் ரஷ்யா போன்ற நாடுகள் இலங்கைக்கான தமது ஆதரவை இன்னமும் தொடர்கின்றன. இறையாண்மையுள்ள ஒரு நாட்டினது விடயங்களில் அனைத்துலகம் தலையிடுவதை இவர்கள் விரும்பவில்லை.

இறையாண்மையுள்ள நாடுகளில் நியாயாதிக்க எல்லைப்பரப்புக்குள் தலையிடக்கூடாது என்ற இந்த நாடுகளின் கொள்கைக்கு விதிவிலக்கானதாகவே லிபியா மீதான தலையீட்டுக்கான ஐ.நாவின் அங்கீகாரம் அமைகிறது. ஆதலினால், தானே அமைத்திருக்கும் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவைத் தாண்டி இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்ற விசாரணைகளை மேற்கொள்வதற்கு வேறெந்த வழிமுறையும் கைக்கொள்ளப்படாது என்ற தனது நிலைப்பாட்டில் இலங்கை உறுதியுடன் தொடரும். இலங்கை அமைத்துக்கொண்ட இந்த ஆணைக்குழுவானது தகுந்த நன்மதிப்பைப் பெறத் தவறியபோதும் அதனது இறுதி அறிக்கை வெளிவரவிருக்கிறது.

கால ஓட்டத்தில் ஐ.நாவினது வல்லுநர்கள் குழுவினது அறிக்கையில் சுமத்தப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுக்கள் இலங்கையைப் பாதிக்கப்போகிறது. இலங்கையின் தலைவர்கள் வெளிநாடுகளுக்குப் பயணம் செல்லும் போது அங்கிருக்கும் நன்கு ஒழுங்குபடுத்தப்பட்ட புலம்பெயர் தமிழர்கள் காத்திரமான எதிர்ப்பு நடவடிக்கைகளில் இறங்குவதோடு பொறுப்புச்சொல்லும் செயல்முறை முன்னெடுக்கப்படவேண்டும் என்ற அழுத்தத்தை இவர்கள் வெளிநாட்டு அரசுகளின் மீது திணிப்பார்கள்.

இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையிலான பிணக்கைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திய இலங்கையின் இராஜதந்திரிகள் தமக்கு மேற்கினது ஆதரவும் இனியும் தேவையில்லை என வாதிடலாம்.

இந்தியா மற்றும் சீனாவினது'படைத் தளபாடங்கள் போர்க் காலத்தில் இலங்கையின் படைத்துறைக்குப் பெரிதும் உதவியது. ஆனால் தாங்கள் நினைப்பதைச் சரியெனச் சாதிக்கும் திறன்பொருந்திய இலங்கையின் இராஜதந்திரிகள், இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்களை மூடிமறைக்கும் தமக்கேயுரிய நடவடிக்கையில் இறங்குவார்கள். இது இவர்களிடம் காணப்படும் தனித்திறமை.

போர்க்குற்றங்கள் தொடர்பான கொழும்பு மீதான அனைத்துலகக் குற்றச்சாட்டு நாட்டில் அரசுக்கான ஆதரவையே அதிகரித்திருக்கும் நிலையில், போர் தொடர்பான உண்மைகள் இலங்கைக்கான பாதிப்பை ஏற்படுத்துவதைத் தடுக்கமுடியாது. இடம்பெற்றதாகக் கூறப்படும் குற்றங்களுக்குச் சாட்சியங்கள் எதுவும் இல்லை என்பதால் சிக்கல்கள் எதுவுமில்லை என்றாகிவிடாது.

போரின் இறுதி நாள்களில் உண்மையில் நடந்தது என்ன என்பதை 300,000 பொதுமக்கள் நன்கறிவார்கள்.

இலங்கை அமைத்திருக்கும் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவானது கடந்த மாதங்களில் வடக்கில் நாட்டினது சிறுபான்மைத் தமிழர்களின் துன்ப துயரங்களைப் போக்குவதற்கு ஏதுவாக இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாணும் விடயத்திலும் இலங்கை அரசு எந்தவிதமான முன்னேற்றத்தையும் காட்டவில்லை.

இந்த நிலையில் மேற்கு நாடுகளுக்கு அகதிகளாகச் செல்லும் தமிழர்களின் தொகைதான் அதிகரிக்கும் என ஐ.நாவின் இலங்கைக்கான பேச்சாளராகச் செயற்பட்ட கோர்டன் வைஸ் எதிர்வு கூறுகிறார்.

உரிமைகள் மறுக்கப்பட்ட நிலை, அச்சத்தின் மத்தியில் மக்கள் தங்களது வாழ்வைத் தொடர்வது, அரசியல் அளவில் தமிழர்கள் தொடர்ந்தும் ஓரங்கட்டப்படுவது என்பன இதுபோல புலம்பெயர்நாடுகளை நோக்கித் தமிழ் அகதிகள் படையெடுப்பதை அதிகரிப்பதற்காகப் பிரதான காரணிகள் என்கிறார் அவர்.

போர் எவ்வாறு முன்னெடுக்கப்பட்டது என்பதை முறையாக விசாரிப்பதற்குச் இலங்கை அரசு தொடர்ந்தும் மறுப்புத் தெரிவித்துவருவதும் இதற்கான இன்னொரு காரணமாகும்.

*நன்றி: புதினப்பலகை*

# தன்னைப் புகழும் தலைமைகள்



*''என்னால் இதைச் செய்யவே முடியாது'' என்பது கோழைத்தனம். ''முடியும்'' என்பது தன்னம்பிக்கை. ''என்னால் மட்டுமே முடியும்; வேறு எவனாலும் முடியாது'' என்பது ஆணவம். தமது தன்னம்பிக்கையை உலகில் பலர் ஆணவமாகக் குழப்பிக் கொள்வது உண்டு. ஆனால் ஆணவத்தின் தன்னம்பிக்கையை எவரும் பாராட்டமாட்டார்கள்.*

*தன்னம்பிக்கை உள்ளவர்கள் கூடத் தற்புகழ்ச்சி செய்து கொள்ளக் கூடாது. தற்புகழ்ச்சி, தன்னம்பிக்கையை அதிகரிக்காது;அசிங்கப்படுத்திவிடும். இன்றைக்கு இலக்கியம், சமயம், அரசியல் என எல்லா இடங்களிலும் வெட்கமே இல்லாமல் பலர் தங்களைத் தாங்களே புகழ்ந்து கொள்வது வெட்கப்படவேண்டியது.*

*தற்புகழ்ச்சி எவ்வளவு பெரியபாவம் என்று தர்ம சாஸ்திரங்கள் சொல்லியிருப்பது பலருக்குத் தெரியவில்லை. மகாபாரத்திலிருந்து அருமையான நிகழ்ச்சி ஒன்று:*

*யயாதி என்பவர் யாக யக்ஞங்களைச் செய்த மாமன்னர். சந்திரகுல அரசர்களில் புகழ்பெற்றவர். பாண்டவர்களின் முன்னோரில் மிக முக்கியமானவர். அவர் தவம் செய்யும்போது பசியாறமாட்டார். பழங்கள் உண்ணமாட்டார். பட்டினி என்று புலம்பமாட்டார். தண்ணீர் கூட அருந்தாது கடுந்தவம் புரிவார். அதைவிட ஆச்சரியம், யாக யக்ஞங்களுக்குப் பலனாக இதுவேண்டும், அது வேண்டும் என்று தேவர்களிடம் கோரிக்கை வைக்கமாட்டார்.*

*தேவர்களைத் திருப்தி செய்யும் கடும் யாகம் செய்துவிட்டு தேவர்களிடம் எதையும் யாசிக்காதபோது அவர்கள் இவருக்குக் கடன்காரர்கள் ஆகிவிட்டார்கள். இதனால் யயாதியின் மேன்மை கருதி அவருக்குத் தனிச் சலுகை கொடுத்தனர். அவர் மனித உடலோடு பிரம்மலோகம் - தேவலோகம் எங்கு வேண்டுமானாலும் சென்று வர அனுமதி அளித்திருந்தனர். ஆனால் அப்போதும் யயாதி அடக்கமாகவே நடந்து கொண்டார். தனக்குக் கிடைத்த சலுகைகளால் அவர் கர்வம் அடையவில்லை.*

*இந்திரனுக்குத்தான் மிகத் தர்ம சங்கடமான நிலையுண்டாயிற்று. காரணம் இந்திர பதவிக்குரிய தவங்களை எப்போதோ செய்து முடித்துவிட்டு பதவியை விரும்பாத பண்பாளராக யயாதி இருந்ததால் அவர் இந்திரலோகம் வரும் போதெல்லாம் எழுந்து நின்று வரவேற்க வேண்டி இருந்தது. அதுமட்டுமல்ல அவரைத் தன்னைவிடக் கீழான ஆசனத்திலும் அமர்த்த முடியவில்லை. எனவே ஒவ்வொரு முறையும் தனக்குச் சமமாகத் தன்னுடைய ஆசனத்தில் உட்கார வைக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அவரது புண்ணிய பலம்தானே இத்தகைய தர்ம சங்கடத்தை ஏற்படுத்திவிட்டது. எப்படி அவரை வீழ்த்தலாம் என்று இந்திரன் சந்தர்ப்பம் பார்த்துக் கொண்டிருந்தான்.*

*ஒரு நாள் யயாதி இந்திரலோகம் வந்து சமமாகத் தனது ஆசனத்தில் இருந்து உரையாடிக் கொண்டிருந்த போது இந்திரன் அளவுக்கு மீறி யயாதியைப் புகழ ஆரம்பித்தான். ''ஆஹா உம்மைப்போல் கடுந்தவம் செய்தவர் யார்? உலகெங்கும் தேடினாலும் உமக்கு ஒப்பாக எவரும் இல்லை'' என்று அடுக்காகப் புகழ்ந்தான். யயாதிக்குக் கர்வம் தோன்ற ஆரம்பித்தது. ''ஆமாம் எவன் எவனோ தவம் செய்திருக்கிறார்கள். என்னை மாதிரிக் கடுந்தவம் எவனும் செய்ததே இல்லை'' எனக்கு நிகராக எவரும் பிறந்ததும் இல்லை.... பிறக்கப் போவதும் இல்லை'' என்று கூச்சம் இல்லாமல் தற்புகழ்ச்சி செய்து கொண்டார்.*

*அவ்வளவுதான் இந்திரன் கடுமையாக முகத்தை வைத்துக் கொண்டு, ''யயாதி என் சிம்மாசனத்தில் இருந்து எழுந்திரு. தற்புகழ்ச்சியின் மூலம் நீ உன் சகல புண்ணிய பலன்களையும் இழந்துவிட்டாய். தவம் என்பதே தன்னை அடக்கும் தன்னடக்கம். அது பற்றியே அடக்கமின்றி அகங்காரமாய் பேசிய உன் புண்ணிய பலன்கள் எல்லாம் அப்போதே கரைந்துவிட்டன. உப்பு நீரில் கரைவது போல், சருகு நெருப்பில் எரிவது போல் புண்ணிய பலனைத் தற்புகழ்ச்சி அழிக்கும் என்கிற தர்ம சாஸ்திரத்தை நீ உணராததால் கீழான உலகம் போகக் கடவாய்'' என்று இந்திரன் சபித்தான்.*

*யயாதி தன் தவறுக்கு வருந்தி மன்னிப்புக் கேட்டதும் இந்திரன் மனம் இளகி, கீழ் உலகம் வேண்டாம்; சந்திர புருஷர்கள் வாழும் உலகில் வாழ அனுமதிக்கிறேன்'' என்றான்.*

*இன்று கூச்சமே இல்லாமல் அரசியல் தலைவர்கள் தங்களைத் தாங்களே புகழ்ந்து கொள்வதும், ஆன்மிகவாதி என்று சொல்லிக் கொள்ளும் சாமியர்கள் தங்களுக்குள் சகல தேவதைகளும் குடியிருப்பதாகத் தாங்களே பேட்டி கொடுப்பதும் பிரசுரம் வெளியிடுவதும் சகிக்க முடியவில்லையே!*

*யயாதியின் வரலாறு அவர்களுக்குத் தெரிய வேண்டாமா?*

**சுகி.சிவம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்டோஸ் எக்ஸ்பியில் பிழையான செய்தி வராமல் இருக்க

விண்டோஸ் எக்ஸ்பி பயன்படுத்துபவர்கள் அனைவருமே ஏதாவது பிழையான செய்தியை நாள்தோறும் சந்திக்கும் நிலை ஏற்படும். விண்டோஸ் இயக்கத்தில் எங்கு பிரச்சினை உள்ளது என்று இந்தச் செய்திகள் நமக்குக் காட்டுகின்றன என்பது தெரியாது. சற்று விவரம் புரிந்தவர்கள் அதனைப் படித்துப் புரிந்து அதற்கேற்ற வகையில் ஏதேனும் செயற்பாடுகளை மேற்கொள்கிறார்கள்.

பலர் இங்கே பிழை இருக்கின்றது என்று தெரிந்து என்ன செய்ய? இது போல செய்திகள் வராமல் இருந்தாலே நல்லது என்று நினைக்கிறார்கள். அவர்களுக்கான தகவல்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. இது போன்ற செய்திகள் வராமல் தடுக்க மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளைப் பார்க்கலாம்.

1. ஸ்டார்ட் மெனுவில் My Computer ஐகானில் ரைட் கிளிக் செய்திடவும்.

2. அடுத்து மெனுவில் System Properties விண்டோ திறப்பதற்காக Properties பிரிவில் கிளிக் செய்திடவும்.


3. கிடைக்கும் விண்டோவில் Advanced டேப்பில் கிளிக் செய்திடவும்.

4. இந்த அட்வான்ஸ்ட் டேப்பில் கிடைக்கும் விண்டோவில் Error Reporting என ஒரு பட்டன் கிடைக்கும்.

5. இப்போது Error Reporting விண்டோ கிடைக்கும். பின் இதில் Disable Error Reporting என்று இருப்பதனை கிளிக் செய்திடவும். இதனைக் கிளிக் செய்தால் அனைத்து பிழை செய்திகளும் காட்டப்படாமல் இருக்கும் என்று எதிர்பார்க்க வேண்டாம்.

ஒரு சில முக்கியமான பிரச்சினைகள் உள்ள பிழையான செய்திகள் காட்டப்படும். எதுவும் வேண்டாம் என்று நினைத்தால் But notify me when critical errors occur என்று இருக்கும் இடத்தில் கிளிக் செய்து கொள்ளுங்கள்.

6. இதன் பின் ஓகே கிளிக் செய்து வெளியேறுங்கள். இனி பிழையான செய்திகள் நீங்கள் செட் செய்தால் மட்டுமே கிடைக்கும் அல்லது கிடைக்காமல் இருக்கும்.




## தரவிறக்க வேகத்தை அதிகரிக்கும் வழிமுறை

இணையத்தில் அனைவரும் தினமும் உலா வருகையில் எதாவது ஒன்றைத் தரவிறக்கம் செய்து கொண்டுதான் இருக்கிறோம். MP 3 பாடல்கள், வீடியோ, மென்பொருள்கள் இன்னும் எண்ணற்ற வற்றைத் தரவிறக்கம் செய்கிறோம். தரவிறக்க வேகத்தை அதிகரிக்க ஒரு அருமையான மென்பொருள் உள்ளது.

Internet download Manager என்பது தான் அந்த மென்பொருள். இந்த மென்பொருள் 5 மடங்கு அதிகமான வேகத்தைத் தருகிறது. நின்ற இடத்தில் இருந்து தொடங்கும் பணியை செய்கிறது.

எந்த ஒரு பிரச்சினை வந்தாலும் அதைச் சரி செய்யும் திறன் இந்த மென்பொருளுக்கு உண்டு. மற்ற மென்பொருளைக் காட்டிலும் இது ஒரு சிறந்த மென்பொருளாக இருக்கிறது.

# Win Mate: கணினியைச் சுத்தம் செய்வதற்கு





கணினியில் ஒவ்வொரு வேலை செய்வதற்கும் தனித்தனி மென்பொருளை நாடாமல் Win Mate என்ற மென்பொருளின் மூலம் பல்வேறு வேலைகளையும் ஒரே நேரத்தில் செய்யலாம்.

இதனை முதலில் உங்கள் கணினியில் நிறுவிக் கொள்ளுங்கள். அதன்பின் தனி விண்டோ Open ஆகும்.

உங்களுக்குத் தேவையான Tab ஐ தெரிவு செய்ததும் தானாகவே செயற்பாடு தொடங்கி விடும். அது போலவே Junk Clean Tab ஐ கிளிக் செய்து தேவையற்ற கோப்புக்களை டிக் செய்து அழிக்கலாம். Trace Clean, Registry Clean போன்றவற்றின் செயற்பாடும் Junk Clean Tab மாதிரி தான்.

Duplicate File Scan எனும் Tab ஐ தேர்ந்தெடுத்தால் நம் கணினியில் உள்ள Duplicate File களை அழிக்கலாம். அதற்கு கோப்பறைகளைத் தெரிவு செய்ய வேண்டும். பின்னர் Start Scan எனும் பட்டனை அழுத்த வேண்டும்.

Program Manager பகுதியிலே கணினியில் நிறுவியுள்ள Program களை Uninstall செய்யலாம். General Tool என்பதிலே இருக்கும் Utilities என்பதிலும் பல்வேறு வசதிகள் காணப்படுகின்றன.




# புதிய வசதிகளுடன் கூடிய பயர்பொக்ஸ் 5 அறிமுகம்

நாம் இணையத்தைப் பயன்படுத்த நமக்கு உதவி புரிவது பிரவுசர்களாகும். நிறையப் பிரவுசர்கள் இருந்தாலும் பெரும்பாலானவர்களால் உபயோகப்படுத்தப்படுவது இன்டர்நெற் எக்ஸ்புளோரர் (IG) உலவியாகும். இதில் பயர்பொக்ஸ் பிரவுசர் இரண்டாவது மிகப்பெரிய பிரவுசராகும். முதலிடத்தில் இருப்பது IE ஆகும். விண்டோஸ் கணினி வாங்கும் போதே இந்த IE பிரவுசரை நிறுவிக் கொடுப்பதால் தான் இந்த உலவி முதல் இடத்தில் உள்ளது. இல்லை என்றால் பயர்பொக்ஸ் தான் முதலிடத்தில் இருக்கும். சென்ற மாதம் தான் பயர்பொக்ஸ் 4 வெளியிடப்பட்டு இணையத் தரவிறக்கத்தில் சாதனை நிகழ்த்தியது. இதுவரை இந்த பயர்பொக்ஸ் 4 உலவியை 112,923,144 பேர் தரவிறக்கம் செய்து உள்ளனர்.

வெளியிட்ட குறைந்த நாள்களிலேயே அதிகமானவர்களால் தரவிறக்கம் செய்யப்பட்ட இந்த மென்பொருள் தற்போது மேலும் பல வசதிகளை மேம்படுத்தித் தனது புதிய பதிப்பான பயர்பொக்ஸ் 5 ஐ வெளியிட்டுள்ளது. ஆனால் இது முதலில் சோதனை(Beta) ஓட்டமாகவே விடப்பட்டுள்ளது.

இதன் வசதிகள்:

1. Firefox: விண்டோஸ் 7 மற்றும் விஸ்டா உபயோகிப்பவர்கள் பயர்பொக்சின் பிரவுசரில் உள்ள பட்டன்கள் புதிய மற்றும் சிறந்த தோற்றத்தைக் காட்டுகின்றன.

2. HSTS: இந்த பயர்பொக்ஸ் 5 இல் HSTS Protocol உதவியுடன் நம் பிரவுசரில் பாதுகாப்பாக இணையத்தைப் பயன்படுத்தும் வசதியை ஏற்படுத்தியுள்ளது. இணையத் திருடர்களிடமிருந்து நம் கணினி பாதுகாக்கப்படுகிறது.

3. Audio API: இணையத்தில் இருக்கும் மீடியா கோப்புக்களை கையாளப் புதிய வசதியைக் கொடுத்துள்ளது.

## புதிய வசதிகளுடன் கூடிய கூகுள் குரோம் 11 அறிமுகம்

இணையப் பிரவுசர்கள் போட்டி போட்டுக் கொண்டு வாசகர்களுக்குப் புதிய வசதிகளை வழங்கி கொண்டுள்ளனர். தற்போது தான் மைக்ரோசாப்ட் நிறுவனம் IE 9 என்ற புதிய பதிப்பை வெளியிட்டது.

கூகுள் நிறுவனம் பல்வேறு வசதிகளை கொண்ட புதிய பதிப்பான Google Chrome 11 என்பதை வெளியிட்டுள்ளது. எந்த உலவியிலும் இல்லாத சிறப்பம்சமே கூகுள் குரோமில் உள்ளது.

அதாவது கூகுள் குரோம் பிரவுசர் புதிய பதிப்பை வெளியிட்டவுடன் குரோம் உலவியை பயன்படுத்துபவரின் அனைவருக்கும் இந்த உலவி தானாகவே அப்டேட் ஆகிவிடும். உங்களுடைய பிரவுசர் அப்டேட் ஆகிவிட்டதா என அறிய வேண்டுமென்றால் Settings & About Google Chrome க்ளிக் செய்து உங்களுக்கு வரும் விண்டோவில் கூகுள் குரோம் பதிப்பை பார்க்கவும்.

மேலே குறிப்பிட்டது போன்று இருந்தால் உங்கள் உலவி அப்டேட் ஆகிவிட்டது. இது போல இல்லாமல் அப்டேட் ஆகவில்லை என்றாலும் உலவி தானாகவே அப்டேட் ஆக தொடங்கும். இந்த இரண்டு முறைகளிலும் அப்டேட் ஆகவில்லை என்றால் தரவிறக்கம் செய்து நிறுவிக் கொள்ளுங்கள்.

புதிய பதிப்பில் உள்ள ஆச்சரியமான வசதி HTML 5 Speech API. எம்மில் பெரும்பாலானோர் API எனப்படும் embeded form நம் பிளாக்கில் நிருவியிருப்போம். அதில் இனி நீங்கள் தட்டச்சு செய்ய வேண்டிய அவசியமில்லை. உங்கள் மைக்ரோபோனில் வார்த்தையை சொன்னாலே அது தட்டச்சு செய்யும்.

அகஜ என்றால் என் பிளாக்கில் தமிழ் டைப் செய்ய பொருத்தி உள்ளேனே அது தான். Autofill என்ற வசதியில் இருந்த பிழைகளை நீக்கி உள்ளது. கூகுள் குரோம் தனது லோகோவை புத்தம் புதியதாக மாற்றி உள்ளது.

# மடிக்கணினிகளை வாங்கும் போது கவனிக்க வேண்டியவைகள்

இன்றைய தொழில்நுட்ப உலகில் மடிக்கணினிகளைப் பயன்படுத்துபவர்கள் ஏராளம். ஏனெனில் எங்கு சென்றாலும் நாம் அதை எடுத்துச் சென்று பயன்படுத்த முடியும். எமது வேலைகளும் தடைப்படாமல் இருக்கும்.

கடைகளிலிருந்து மடிக்கணினிகளை வாங்கும் போது கவனிக்க வேண்டியவைகள்: கடைக்காரரிடம் அவை Unlock செய்யப்பட்டுள்ளதா என்று முதலில் கேளுங்கள். திடமான, உறுதியான ஆனால் பாரமில்லாத மடிக்கணினிகளைத் தெரிவு செய்யுங்கள். கீபோர்ட்டை உபயோகித்துப் பாருங்கள். உங்களுக்கு அது சௌகரியமாக உள்ளதா? என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள்.

மேசை மற்றும் உங்கள் மடி மீது வைத்து இயக்கிப் பரிசோதித்துப் பாருங்கள். Pointing Device, Track Pad போன்றவற்றையும் மாற்றீடாக உள்ள மவுசையும் பரிசோதித்துப் பார்க்க மறக்க வேண்டாம். Track Ball, External mouse களை நீங்கள் பயன்படுத்த முடியும். ஆனால் வெளியிடங் களுக்குக் கொண்டு செல்வதற்கு அது உகந்ததல்ல.

மடிக்கணினி பயன்பாட்டில் இருக்கும் போது அளவுக்கதிகமாக சூடாகிறதா என்று அவதானியுங்கள். ஒருவேளை உங்கள் மடியில் வைத்துப் பாவிப்பதாலும் இந்தப் பிரச்சினை எழக்கூடும். Screenஇன் அளவு மற்றும் Resolution போன்றவை மீதும் கவனத்தைச் செலுத்துங்கள்.

தற்போதைய LCD Screen கள் 13 முதல் 21 இஞ்ச் அளவுகளில் கிடைக்கின்றன. Screen Resolution மிகக் குறைந்தது 800-600 pixels முதல் 1600-1200 pixels வரை இருக்கக்கூடும். பலதரப்பட்ட Settings களை செய்து Screen ஐப் பார்வையிடுங்கள். சாதாரண அறையினுடைய வெளிச்சத்தில் நன்றாகத் தெரியக்கூடிய Settings அதிக வெளிச்சம் அல்லது குறைந்த வெளிச்சத்தில் மிக மோசமாகத் தெரியக்கூடும்.

USB2 மற்றும் Firewire Connection இருக்கக்கூடிய மடிக்கணினிகளைத் தெரிவு செய்யுங்கள். இவை iPods, Digital iPods, Digital கமெராக்கள் மற்றும் சில கைத்தொலைபேசிகளை இணைக்கச் செய்வதற்குப் பயன்படுகின்றன.

இணைய இணைப்புக்களைப் பெறுவதற்கு வயர்களைப் பயன்படுத்துவதை விட Wireless Network Card பயன்படுத்தலாம். Bluetooth இணை[illegible] DVD Burner உள்ளதா? என்பதையும் அவதானியுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுகிய காலத்தில் சாதனைகள் புரிந்து வீறுநடை போடும் மாலுசந்தி மைக்கல் வி.கழகம்

அல்வாய்ப் பிரதேசத்தில் உள்ள பல விளையாட்டுக் கழகங்களில் மிகப் பிந்திய நிலையில் ஆரம்பிக்கப்பட்ட அல்வாய் கிழக்கு, மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகம் மிகக் குறுகிய காலத்தில் பல சாதனைகளைப் புரிந்து வீறுநடை போட்டு வருகின்றது.

1994ஆம் ஆண்டு மிகக் கடுமையான போர்ச் சூழலில் இந்தப் பகுதியைச் சேர்ந்த இளைஞரான ஆனந்த வடிவேல் மகீதரன் என்பவரால் ஆரம்பிக்கப்பட்ட இந்த விளையாட்டுக் கழகம் நல்ல முறையில் செயற்பட்டு வளர்ச்சிப் பாதையில் சென்று கொண்டிருந்தது வேளை தொழிலின் நிமிர்த்தம் அவர் கொழும்புக்குச் சென்றதைத் தொடர்ந்து விளையாட்டுக் கழகத்தினை, கழக உறுப்பினர்களில் ஒருவரான, விளையாட்டு வீரர் எஸ்.செல்லதீபன் ஏற்று சிறந்த முறையில் வழி நடத்தி வருகின்றார்.

இந்த விளையாட்டுக் கழகம் ஆரம்பிக்கப்பட்டது. கடுமையான போர்ச் சூழலின் மத்தியில் ஆகும். இந்த விளையாட்டுக் கழகத்துக்கென, மாலுசந்தியில் பருத்தித்துறை-யாழ்ப்பாணம் பிரதான வீதிக்கு அருகில், ஒரு கேந்திர முக்கியத் துவம் வாய்ந்த இடத்தில் சிறந்த விளையாட்டு மைதானம் ஒன்று அமைக்கப்பட்டது. இந்த விளையாட்டு மைதானத்தில் சிநேகபூர்வ உதை பந்தாட்ட, துடுப்பந்தாட்டப் போட்டிகளை நடத்தி ஆரம்பமான இந்த விளையாட்டுக் கழகத்தின் விளையாட்டுப் பணி ஒரு சில ஆண்டுகளில் வடமராட்சிப் பிரதேச மட்டத்தில் மட்டுமன்றி யாழ்.மாவட்ட மட்டத்திலும் பல் வேறு சுற்றுப் போட்டிகளை நடத்தி விளை



யாட்டு வீரர்களினதும், ரசிகர்களினதும் அபிமானத்தைப் பெற்றுள்ளது.

தற்போது இந்த விளையாட்டுக் கழக மைதானத்தில் மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் பல்வேறு வகையான விளையாட்டுப் போட்டிகள் மட்டுமன்றி ஏனைய விளையாட்டுக் கழகங்களின் போட்டிகள், யாழ்.மாவட்டத்தையும், கொழும்பு உள்ளிட்ட தென்பகுதியையும் கொண்ட வர்த்தக நிறுவனங்கள் மற்றும் நிறுவனங்கள், நெல்லியடிப் பொலிஸாரல் நடத்தப்படும் விளையாட்டுப் போட்டிகள் கலை நிகழ்வுகள் என்பனவும் ஒருவசதியான வாய்ப்பான விளையாட்டு மைதானமாகஇந்த விளையாட்டுக் கழகம் உயர்ந்துள்ளது.

மைக்கல் விளையாட்டுக் கழக அணியின் வீரர்களில் ஒருவரான இராஜதுரை முரளிதரன் யாழ். மாவட்டத்தில் இடம் பெற்ற கிரிக்கெட் போட்டிகளில் பல சாதனைகளை நிகழ்த்தியுள்ளதுடன் கொழும்பிலுள்ள முன்னணித் தேசிய விளையாட்டுக் கழகமான கொழும்பு என்.சி.சி.ஈ விளையாட்டுக் கழகத்துக்கெனத் தெரிவாகி இந்த விளையாட்டுக் கழகத்தின் வீரர்களில் ஒருவராக இருந்து வருகின்றார். இந்த வீரர் என்.சி.சி.ஈ விளையாட்டுக் கழத்தின் சார்பாக லண்டனில் சுப்பர் பிறிமியர் கிரிக்கெட் சுற்றுப் போட்டிகளில் தற்போது விளையாடி வருவதுடன், அங்கு பிரிட்டன் தமிழ்ப் பேரவையினால் நடத்தப்பட்ட தடகளப் போட்டிகளில் மூன்று தங்கப் பதக்கங்களைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளார்.

மைக்கல் விளையாட்டுக் கழகம் அண்மையில் மின்னொளியில் உதைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டியொன்றை யாழ்.மாவட்ட ரீதியில் நடத்தி அதிக எண்ணிக்கையான உதைப்பந்தாட்ட ரசிகர்களைக் கவர்ந்து கொண்டது.

படிப்படியாக வளர்ச்சிப் பாதையை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் இந்தக் கழகம் கடந்த 2004 ஆம் ஆண்டு முதல் தடவையாக கரவெட்டிப் பிரதேச செயலகம், பருத்தித்துறை உதைப்பந்தாட்ட லீக் ஆகியவை நடத்திய போட்டிகளில் பங்குபற்றி உதைப்பந்தாட்டத்திலும் அறிமுகமானது. இதில் 15 வருடங்களுக்கு முன் நிகழ்த்திய சாதனையை இந்தக் கழக வீரர் எஸ்.சிவசுகிர்தன் 400 மீற்றர் ஓட்டப் போட்டியில் முறியடித்துள்ளார்.

கடந்த 2008 ஆம் ஆண்டு முதல் தடவையாக மைக்கல் விளையாட்டுக் கழகத்தால் மகளிர் அணி ஒன்று உருவாக்கப்பட்டது. இந்த மகளிர் அணியைச் சேர்ந்த வீராங்கனை எம்.தர்மினி கடந்த 2008 ஆம் ஆண்டு கரவெட்டிப் பிரதேச செயலகம் நடத்திய விளையாட்டுப் போட்டியில் 800 மீற்றர் ஓட்டப்போட்டியில் 12 வருட சாதனையை முறியடித்து பிறிதொரு சாதனையைப் படைத்தார். மைக்கல் அணியைச் சேர்ந்த கிரன் முரளிதரன் 200 மீற்றர் ஓட்டப் போட்டியில் கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவில் 2009 இல் சாதனையை முறிய டித்தார்.

இந்தக் கழகத்தின் ஆரம்ப வீரர்களான வேணுகானன்,ரதிசன், தர்சன், ஐங்கரன், சசிகரன், ரசாந், மேசைன்,சங்கர், ராகுலன், விநோத் ஆகியோர்களுடன் மற்றும் பல இளம் வீரர்கள் கழகத்தில் பணிகள் பல செய்து பல்வேறு போட்டிகளில் பங்கெடுத்து வருகின்றனர். கடந்த 16 ஆண்டுகளாகத் தடைகள்,

**மாலவன்**

சோதனைகள் பல தாண்டி விடாமுயற்சியுடன் மைக்கல் அணி விளையாட்டுத் துறையில் பெரும் பங்கெடுத்து அதன் வளர்ச்சிக்காக உழைத்து குறுகிய காலத்தில் வடமராட்சிப் பிரதேசத்தில் தனக்கெனத் தனித்துவமான ஓர் இடத்தைப் பெற்று மிளிர்ந்து நிற்கின்றது. ★

# வடமராட்சி மக்களின் சுகாதார அறிவை மேம்படுத்திய பிரமாண்டமான சுகாதார விழிப்புணர்வுக் கண்காட்சி

ஒரு நாட்டின் முன்னேற்றத்தில் அந்த நாட்டில் வாழும் மக்களின் சுகாதாரமும்ஆரோக்கியமும் முக்கிய பங்கு வகிக்கின்றன. குறிப்பாக அபிவிருத்தி நோக்கில் பயணிக்கும் தேசமொன்றுக்கு அங்கு பரந்து வாழ்கின்ற மக்களின் சுகாதாரத்தை மேன்மையடையச் செய்ய வேண்டிய பொறுப்புண்டு. இளம் சமுதாயத்தினர் மத்தியில் சுகாதாரம் பற்றிய விழிப்புணர்வை ஏற் படுத்தும் பாரிய பொறுப்பும் தார்மீகக் கடமையும் அனைவருக்கும் உண்டு. அதற்கு இத்தகைய கண்காட் சிகள் மிகவும் உபயோகமுள்ளனவாக அமைகின்றன.

அந்தவகையில் யாழ். பல்கலைக் கழக 31 ஆவது அணி மாணவர்களின் பிரமாண்டமான விழிப்புணர்வுக் கண்காட்சி கடந்த மாதம் 29 ஆம் திகதி ஹாட்லிக் கல்லூரியில் கோலாகலமாக ஆரம்பமாகியது. 31 ஆவது அணி மருத்துவபீட மாணவி செல்வி பிரண்யா தலைமையில் இடம்பெற்ற இந்தக் கண்காட்சியின் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அங்குரார்ப்பண வைபவத்தில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் கே.நந்தகுமாரன் நாடா வெட்டித் திறந்து வைத்தார்.

கண்காட்சி ஆரம்பமான முதல் நாளே வடமராட்சியிலுள்ள பிரபலமான பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் பலர் நீண்ட வரிசையில் காத்திருந்து கண்காட்சியைப் பார்வையிட்டனர். இதேவேளை இங்குள்ள பாடசாலைகளில் உயர்தரப் பிரிவில் உயிரியல் பாடத்தைத் தெரிவு செய்து கற்று வரும் மாணவர்களுக்கு யாழ்.போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர்களாலும், வைத்தியர்களாலும் பயிற்சிகள், விளக்கங்கள் என்பன வழங்கப்பட்டு அவர்கள் மூலமாகப் பொதுமக்களுக்கும் ஏனையோருக்கும் நோய்கள் பற்றிய விளக்கங்கள் அளிக்கப்பட்டன. இந்தச் செயற்பாடு வடமராட்சிப் பாடசாலை மாணவர்கள் தமது உயிரியல் பாடத்தில் மேலதிக அறிவைப் பெற் றுக்கொள்ள வாய்ப்பாக அமைந்தது. அவர்களின் உயர்கல்விக்கான அறிவும், சிந்தனைத் தூண்டலும் மேம்பட்டதாக இந்த மாணவர்கள் எம்மிடம் தெரிவித்தனர்.

கண்காட்சிக் கூடத்தைப் பொறுத்த வரையில் கல்லூரியின் முதல் மண்டபத்தில் நீரிழிவு நோய்க்கான கூடம் அமைக்கப்பட்டிருந்தது. இன்றைய சூழலில் பிரதான பிரச்சினையாக உருவெடுத்துள்ள நீரிழிவு நோயானது பல்வேறு தரப்பினரையும் வெகுவாகப் பாதித்து வருகின்றது. இந்த நிலையில் இங்கு இலவசமாக குருதியிலுள்ள குளுக்கோஸின் அளவு பற்றிய பரிசோதனைகள் ஏனைய பரிசோதனைகள்மேற்கொள்ளப்பட்டன. நீரிழிவு நோய் பற்றிய விளக்கம், தடுப்புமுறை, நீரிழிவு நோயாளர்கள் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் அவர்களின் உணவுப் பழக்கவழக்கங்கள், நோயாளர்கள் உட்கொள்ள வேண்டிய மருந்துகள் பற்றிய விளக்கங்கள் அளிக்கப்பட்டன. அத்துடன் விளக்கக் குறிப்புக்களும் வழங்கப்பட்டது. அடுத்து மாரடைப்பு, உயர் குருதியமுக்கம் போன்ற நோய்களுக்கான விளக்கங்கள் அளிக்கப்பட்டு விளக்கக் குறிப்புக்களும் வழங்கப்பட்டதுடன் இலவச மருத்துவப் பரிசோத னைகளும் மேற்கொள்ளப்பட்டன.

அடுத்து புற்றுநோய் தொடர்பான காட்சிக்கூடம் அமைக்கப்பட்டிருந்தது. இந்தக் காட்சிக் கூடம் யாழ்.போதனா வைத்தியசாலையின் புற்றுநோய் வைத்திய நிபுணர் டாக்டர் ஜெயக்குமாரின் ஆலோசனைகளின் பிரகாரம் வடிவமைக்கப்பட்டிருந்தது. இந்தக் கண்காட்சிக் கூடத்தில் புற்றுநோய் ஏற்படுவதற்கான காரணங்கள் மற்றும் புற்று நோய்வராமல் தடுப்பதற்கான தடுப்பு முறைகள் பற்றிய விளக்கங்களை பாடசாலை மாணவ விகளும் பல்கலைக்கழக மருத்துவபீட மாண விகளும் வழங்கினர். இதில் பல புதிய விடயங்களை அறிந்துகொள்ள முடிந்ததாகப் பார்வையிட்ட பின் பொதுமக்கள் எம்மிடம் தெரிவித்தனர். நீண்டகால இடைவெளிக்குப் பின் வடமராட்சிப் பிரதேசத்தில் இந்தக் கண்காட்சி ஒழுங்கு செய்யப்பட்டிருந்ததால் மிகவும் பயனுள்ளதாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.



அடுத்து காசநோய் வைத்தியக் கூடம் அமைக்கப்பட்டிருந்தது காச நோய் பற்றிய ஆலோசனைகளை காசநோய் கட்டுப்பாட்டு வைத்திய அதிகாரி டாக்டர் ஜமுனானந்தா நெறிப்படுத்தினார். இதன்போது காசநோய் பற்றிய விழிப்புணர்வு வழங்கப்பட்டது.

மேலும் தொய்வு நோய் பற்றிய விழிப்புணர்வும் வழங்கப்பட்டதுடன் நோயாளர்கள் பயன்படுத்தும் மருந்துக் கருவியும் இலவசமாக வழங்கப்பட்டமை வடமராட்சி மக்களுக்குப் பேருதவியாக இருந்தது. இதேவேளை இன்றைய காலகட்டத்தில் பிரதானமான பிரச்சினையாக உருவெடுத்துள்ள வீதி விபத்துக்கள் பற்றியும் அதனைத் தடுக்கும் வழி வகைகள் பற்றியும் விளக்கங்கள் இங்கு வழங்கப்பட்டன. வீதி விபத் தில் சிக்கிய ஒருவருக்கு வழங்கப்பட வேண்டிய முதலுதவி பற்றிய விளக்கங்களை சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் அணியினரும் ஏனைய மாணவர்களும் வழங்கினர். இது கண்காட்சியைப் பார்வையிட வந்த மக்களுக்கு பயனுளதாக இருக்கும் என எதிர் பார்க்கப்படுகிறது.

சுகாதாரத்தைப் பொறுத்த வரை வடமராட்சிப் பிரதேசம் இன்னும் நீண்ட தூரம் பயணிக்கவேண்டிய நிலையில் இருக்கின்றது. இங்கு உள்ள பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலை, வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலை, கரவெட்டிப் பிரதேச வைத்தியசாலை ,மருதங்கேணி வைத்தியசாலை என்பன பாராட்டப்படக் கூடிய வகையில் சேவையாற்றி வந்தாலும் சுகாதார அறிவு, அவை பற்றிய விழிப்புணர்வுகள், மனோதிடம் என்பன வடமராட்சியில் சற்று பின்னடைவாகவே காணப்படு கின்றன. குறிப்பாக வடமராட்சியில் தற்கொலை முயற்சிகளில் ஈடுபடுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக வைத்தியசாலைகளின் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. இந்த முயற் சிகளில் அதிகம் ஈடுபடு வோர் இளம் பராயத்தினரே எனவும் தெரிய வருகின்றது.

**ஹரிஸ்**

இந்த நிலையில் வடமராட்சிப் பகுதியில் சுகாதாரம் மற்றும் உள ஆரோக்கியம் பற்றிய விழிப்புணர்வுகள் அவசியமான அவசரத் தேவைகளாக உள்ளன. இதே வேளை முன்னர் இடம்பெற்ற கண்காட்சிகள் அனைத்தும் கடந்த காலங்களில் யாழ்.நகரை மையமாக வைத்தே நடத்தப்பட்டன. தற்போது இந்தக் கண்காட்சி புறநகர் பகுதியான வடமராட்சியில் ஹாட்லிக் கல்லூரியில் நடத்தப்பட்டதன் பலனாக இதுவரை சுகாதார விழிப்புணர்வுகள் பற்றிய தெளிவான அறிவைப் பெறாதிருந்த மக்களுக்கு இது ஒரு வரப்பிரசாதமாக அமைந்தது என்றே கூறலாம். ஆகவே இதுபோன்ற கண்காட்சிகள், தியானங்கள், உளவள ஆலோசனை நிகழ்வுகள் என்பன வடமராட்சிப் பிரதேசத்தில் தொடர்ந்து இடம்பெறுவது காலத்தின் தேவையாக உள்ளது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
03 மே 2011 செவ்வாய்க்கிழமை

## வீதி அகலிப்புத் தொடர்பான கூட்டம்

நவாலி,மே.3

நவாலி சின்னப்பா வீதியைப் புனரமைப்புச் செய்வதற்கு அந்த வீதி அகலிப்பு சம்பந்தமான கூட்டம் இன்று செவ்வாய்க் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு வலி. தென்மேற்கு பிரதேச சபை மானிப்பாய் கிராம அலுவலக ஆனைக்கோட்டைப் பொறுப்பதிகாரி தலைமையில் நவாலி கிழக்கு பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அந்தப்பகுதி மக்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ச-100)


## பொன்விழாக் காணும்
### தம்பதியரை வாழ்த்துகின்றோம்



ஆனந்தமான இந் நன்நாளில்
ஆண்டவன் சந்நிதியில்
ஆசிகள் பல பெற்று
ஆயிரம் ஆண்டுகள் வாழ வாழ்த்துகிறோம்

### திரு.திருமதி. பாலபாரதி நிர்மலா

தம்பதியர் தமது 50 ஆவது அகவையினை தமது இல்லத்தில் இன்று (03.05.2011) வெகு விமரிசையாக கொண்டாடுகின்றனர். அவர்களை எல்லாம் வல்ல இறைவனின் துணையுடன் சீரும் சிறப்பும் பெற்று இன்னும் பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.

(48,22,24)

கற்கோவளம்,
பருத்தித்துறை.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.



### ஏழாலை தெற்கு
### களபாவோடை அருள்மிகு வசந்த நாகபூஷணி அம்பாள் தேவஸ்தான மஹா கும்பாபிஷேகக் கிரியாகால விவரம்



★04.05.2011 புதன்கிழமை அதிகாலை கிரியைகள் ஆரம்பம்.

★05.05.2011 வியாழக்கிழமை காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரைக்கும் அடியார்கள் எண்ணெய்க்காப்புச் சாத்துதல்.

06.05.2011 வெள்ளிக்கிழமை அதிகாலை கிரியைகள் ஆரம்பமாகி முற்பகல் 10 மணிமுதல் 10.15 வரையுள்ள சுப முகூர்த்தத்தில் மஹாகும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் கைகூடியுள்ளது.

தொடர்ந்து மண்டலாபிஷேகம் நடைபெற்றுப் பூர்த்தி தினமாகிய வைகாசி விசாகமும் பூரணைத் திதியும் கூடிய 17.05.2011 செவ்வாய்க்கிழமை மஹா சங்காபிஷேகம் நடைபெறும்.

அம்பிகை அடியார்கள்அனைவரும் இப்புனித வைபவங்களில் கலந்து அன்னையின் திருவருளைப்பெற்று இன்புறுவார்களாக.

களபாவோடை,
ஏழாலை தெற்கு, ஏழாலை. (சி/578147)(39) தேவஸ்தானம்.


# மாணவர்களுக்கு வழங்கப்படும் புத்தகங்கள் இணையத்தளத்தில் பிரசுரிக்க நடவடிக்கை

### கல்வி வெளியீட்டுத் திணைக்களம் தகவல்

கொழும்பு,மே.3

பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்ப்டும் சகல பாடப்புத்தகங்களும் முற்று முழுதாக இணையத் தளத்தில் வெளியிடப்படும் என கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் ஜயந்த புஷ்பகுமார தெரிவித்தார்.

தற்சமயம் மொத்தமாக 437 புத்தகங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. அவை யாவும் இணையத்தளங்களில் பிரசுரமாகும்.

அத்துடன் ஜி.சீ.ஈ.சாதாரண தரப் பரீட்சைக்கான ஒன்பது பிரதான பாடங்களும் இணையத்தளத்தில் வெளியிடப் படும் எனவும் அதன் மூலம் மாணவர்களுக்கு ஏற்படக்கூடிய நடைமுறைப் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள முடியுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பாடப் புத்தகங்களைத் தயாரிக்கும்போது ஏற்படக்கூடிய முரண்பாடுகளை இணையத்தளத்தின் மூலமாகக் கேள்விகளைத் தொடுப்பதன் மூலம் தீர்த்துக்கொள்ளும் வழிமுறையொன்று இந்த வருட இறுதிக்குள் அமுலுக்கு வருமெனவும் ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளார். (ச-5)

## மோ.சைக்கிள் சில்லில் சேலை சிக்கியதில் தூக்கி வீசப்பட்ட பெண்

தென்மராட்சி,மே.3

மோட்டார் சைக்கிள் சில்லுக்குள் சேலை சிக்கியதில் தூக்கி வீசப்பட்டு குடும்பப் பெண் காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் கடந்த 30ஆம் திகதி சாவகச்சேரி கச்சாய் வீதியில் இடம் பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த ந.உருத்திராதேவி (வயது 39) என்பவரே காயமடைந்தார்.

இதேவேளை- மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டினை இழந்து வீதியை விட்டு விலகிமுட்கம்பி வேலியுடன் மோதியதில் அதில் பயணித்த இளம் பெண் முட்கம்பிகள் கிழித்துக் காயமடைந்தார்.

கடந்த 30ஆம் திகதி சாவகச்சேரி பெருங்குளம் சந்திக்கு அண்மையில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் தர்மிகா (வயது 18) என்னும் யுவதியே காய மடைந்தவராவார்.

காயமடைந்த இருவரும் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகின்றனர். (த-207)

## அதிகளவு மருந்து உட்கொண்ட பெண் மயக்கம்

தென்மராட்சி,மே.3

அதிகளவு மருந்துக் குளிகைகளை விழுங்கியதால் குடும்பப் பெண் ஒருவர் மயக்கமுற்றார்.

இந்தச் சம்பவம் கடந்த முதலாம் திகதி மட்டுவில் வடக்கில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த சந்திரராசா முத்துராணி (வயது 60) என்பவர் மயங்கிய நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டு அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச் சையளிக்கப்பட்டு வருகின்றார். (த-207)


### வேலையாள் தேவை

யாழ்.நகரில் பிரபல்யம் வாய்ந்த நிறுவனமொன்றுக்கு Clerk பதவிக்குப் பெண் வேலையாள் உடனடியாகத் தேவை. கணினி (Computer) அறிவு பெற்ற, க.பொ.த (உ/த) சித்தியடைந்த, 20-25 வயதுக்குட்பட்ட, யாழ்.பட்டணத்துக்கு (Jaffna Town) மிக அண்மையில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். T.P: 0775361774, 0776212688

### வீடும் காணியும் விற்பனைக்கு

மல்லாகத்தில் தமிழ் பாடசாலை
ஒழுங்கையில் (விசாலாட்சி
வித்தியாலயம்) 6½ பரப்புக்
காணியில் அமைந்த
வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு:-
தொ.பே: 0770461170
(3754)

### வீடு வாடகைக்கு

யாழ்.நகர், ஸ்ரேசன் வீதி, வீரகேசரி காரியாலயத்துக்கு அருகில் 4 அறைகள் கொண்ட விசாலமான வீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள்/காரியாலயங்களுக்கு உகந்தது.
தொடர்புகளுக்கு:- 0770502291, 0776003151



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



மாவிட்டபுரத்தைச் சேர்ந்த
சைவப்புலவர்
திரு.செ.குணபாலசிங்கம்
(இளைப்பாறிய அதிபர்)

அண்மையில் கலைத்துறைக்கான 'கலாபூஷணம்' விருது பெற்றமையைப் பாராட்டி பேருவகையுடன் வாழ்த்துவதோடு மேன்மேலும் கலைப் பணி சிறக்கவும் சீருடன் வாழவும் வாழ்த்துகின்றோம்.

மடத்தடி,
மாவிட்டபுரம்.

உறவினர்கள் சார்பில்
வே.சிதம்பரநாதன் (பொன்னார்)
குடும்பத்தினர்.



### தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)
### தெல்லிப்பழை

**பயிற்சிக் கிளைமுகாமையாளர்**

மேற்படி பதவிக்குச் சங்க எல்லைப்பரப்பில் வசிக்கும் தகுதியான விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. கல்வித் தகைமை:
கூட்டுறவுப் பணியாளர் (சா/த) பத்திரம் / க.பொ.த (சா/த) பத்திரத்தில் 02 அமர்வுகளுக்கு மேற்படாமல் எண்கணிதம் / வர்த்தககணிதம் / தூயகணிதம், சிங்களம்/ தமிழ்ப் பாஷை என்பனவற்றினை உள்ளடக்கியதாக 06 பாடங்களிலான சித்தி.
02. வயது : 18-45 வயதுக்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
03. வேதனம்: நாள் ஒன்றுக்கு ரூபா 300/=

சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 19.05.2011 இக்கு முன்னர் பொதுமுகாமையாளர், தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், தெல்லிப்பழை என்னும் முகவரிக்கு நேரிலோ அல்லது பதிவுத் தபாலிலோ அனுப்பி வைத்தல் வேண்டும்.

30.04.2011 (சி/578148) பொதுமுகாமையாளர்.



## VISA - வீசா
### Consultancy Service

UK, USA, CANADA, AUSTRALIA, NEW ZEALAND, SWITZERLAND, FRANCE, GERMANY, NORWAY, DENMARK,

Visit / Tourist, Business, Family Students, Migration, Medical Visas

**Call : 0776 209 887**

SIC, 101/35, Stanley Road, Jaffna
(Behind PEOPLES BANK)



### கோழிக்குஞ்சு விநியோகம்

35 நாளில் 2 கிலோவுக்கு மேல் வளர்ச்சியடையக் கூடிய No-1 BAHIRAHA புறொயிலர் குஞ்சுகள் 04.05.2011 விநியோகிக்கப்படும்.

பதிவுகளை முன் கூட்டியே மேற்கொள்ளவும்.

விலை 90/=. மொத்தமாகக் கொள்வனவு செய்பவர்களுக்குக் கழிவு வழங்கப்படும். மீண்டும் இறைச்சிக் கோழிகள் கொள்வனவு செய்யப்படும்.

✱றாஜீவ்-நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
✱துர்க்கா பாம்- ஸ்ரேசன் றோட், சுன்னாகம்.
021 222 2867, 0776090926
(3602)

### கோழிக்குஞ்சு விநியோகம்

தடுப்பு மருந்து போடப்பட்ட பிறிமா கொம்பனி உத்தரவாதத்துடன் தரமான பிறிமா No. 1 புறொயிலர் கோழிக்குஞ்சுகள் நியாயமான விலையில் (80/=) 05.05.2011 காலை விநியோகிக்கப்படும். முன் பதிவுசெய்யவும்.


★ சுட்டி பாம் சென்ரர், வட்டுக்கோட்டை - 0778996085
★ சன்னதி பாம் சென்ரர், தொண்டமனாறு- 0776904590
★ நெல்லியடி பல்பொருள் விற்பனை நிலையம், நெல்லியடி- 0774656377
★ முகுந்தன், பருத்தித்துறை- 0771392593

இறைச்சிக் கோழிகள் திருப்பிக் கொள்வனவு செய்யப்படும்.
நல்லூர் பாம் சென்ரர் 19, முருகேசர் லேன், நல்லூர்,
தொ.பே இல:- 021 222 6944.
(3601)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருநகரில் இடநெருக்கடியைக் குறைக்க அல்லைப்பிட்டியில் அமைத்த குடியிருப்பு

## கரித்தாஸ், நெய்தலம் அமைப்புக்கள் இணைந்து செயற்படுத்திய திட்டம்





சுனாமி மற்றும் போரினால் பாதிக்கப்பட்ட குருநகர் மக்கள் அங்கு இட நெருக்கடிகளில் அவதிப்பட்டுக் கொண்டு வாழ்ந்தனர். குருநகரை விட அல்லைப்பிட்டி வசதிகள் குறைந்த இடமாக இருந்தாலும் வீடுகளில் காணப்படும் இடநெருக்கடிகளின் கஷ்டங்களை விட ஏனைய வசதிக் குறைவுகளை பின்னர் நிவர்த்திக்க முடியும். அல்லைப்பிட்டியில் படிப்படியாகத் தமது தேவைகள் பூர்த்தி செய்யப்படும் என்ற நம்பிக்கையுடன் குருநகரைச் சேர்ந்த 70 குடும்பங்கள் கடந்த 30 ஆம் திகதி சனிக்கிழமை அல்லைப்பிட்டியில் தமது வாழ்க்கையைத் தொடங்கியுள்ளன.

குருநகரில் இன்னமும் மக்கள் மிகவும் அடர்த்தியாகவே உள்ளனர். இந்த நெருக்கடிக்கு முதலில் தீர்வு காணப்பட வேண்டும். இந்தப் பணியை கரித்தாஸ் நிறுவனமும் நெய்தலமும் இணைந்து செயற்படுத்தியுள்ளன. இந்தக் குடியிருப்புக்கெனக் காணியைக் கொள்வனவு செய்வதில் இந்த இரு அமைப்புக்களும் துரிதமாக ஈடுபட்டிருந்தன. காணிக் கொள்வனவில் 'நெய்தலம்' இயக்குநர் அருட்திரு. எஸ்.ஜெயசேகரம் அடிகளார் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். வீடுகளை அமைப்பதில் கரித்தாஸ் நிறுவனம் முழுமையான பங்களிப்பை வழங்கியிருந்தது.

அல்லைப்பிட்டியில் இதற்கென 300 பரப்புக் காணி கொள்முதல் செய்யப்பட்டது. தற்போது ஒவ்வொன்றும் 8 லட்சம் பெறுமதியான 70 வீடுகள் ரூபா 5 கோடி 60 லட்சம் செலவில் அமைக்கப்பட்டு பயனாளிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. இந்தக் குடியிருப்புக்கள் 2010 ஆம் ஆண்டியிலேயே பூர்த்தி செய்யப்பட்டு மக்களிடம் கையளிக்கப்பட்டிருக்க வேண்டும். எனினும் இடைக் காலங்களில் ஏற்பட்ட தடங்கல்களால் குறிப்பிட்ட காலப்பகுதியில் இதனைப் பூர்த்தி செய்ய முடியாமல் போனதில் இதற்காக முன்னின்று உழைத்தவர்களிடத்தில் வருத்தமும் இல்லாமல் இல்லை. இப்போதாவது இது நிறைவு செய்யப்பட்டதே என்பதில் சிறிது திருப்தியடைந்துள்ளனர் அருட்திரு. ஜெயசேகரம் , அருட்திரு ஜெயக்குமார் ஆகியோர்.

இந்தத் திட்டத்துக்கென வெளிநாட்டைச் சேர்ந்தவர்கள் அதுவும் செல்வந்தர்கள் என்ற நிலையில் இல்லாத சாதாரண ஏழ்மைமிக்க வெளிநாட்டுப் பிரஜைகளே நிதியுதவிகளை வழங்கி யுள்ளனர் எனக் கூறும் தேசிய கரித்தாஸ் நிறுவன இயக்குநர் அருட்திரு. ஜோர்ஜ் சிகாமொனி, நான்ஸ் ஆஸ்திரே லியாவைச் சேர்ந்த சாதாரண மக்கள் முகம் தெரியாத, நிறம் தெரியாத இன்னொரு மக்களின் வாழ்வுக்காகச் சிந்தித்த போது இங்கிருந்து ஆஸ்திரேலியாவில் சென்று வாழும் எமது மக்கள் இங்குள்ள மக்களை மறந்துவிட்டார்கள் என்ற உண்மையையும் கூறிக் கவலைப்பட்டார்.

யாழ்.மறை மாவட்டத் திருச்சபையூடாகச் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென இதுவரை 12,000 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

குருநகர்ப் பகுதியின் சனநெருக்கடியைக் குறைக்க அந்த மக்கள் தமது தொழிலை முன்னெடுக்கக்கூடியதாக கரையோரப் பகுதிகளைச் சேர்ந்த இடங்களில் மேலும் பல வீடுகளை அமைக்க வேண்டிய தேவை இருப்பதாகவும் 400 இற்கும் அதிகமான குடும்பங்கள் இந்த உதவியைக் கோரியுள்ளதாகவும் திறப்பு விழா வைபவத்தில் உரையாற்றிய குருமார்கள் தெரிவித்தனர்.

கிணறு, மலசலகூடம் உட்பட வீடுகள் வசதியாக அமைக்கப்பட்டுள்ளன. வீடுகள் ஒவ்வொன்றும் ஒரு பரப்பு நிலத்துள் அடங்குகின்றன. வாழ்க்கையில் கிடைத்த வரப்பிரசாதம் இது எனக் கூறும் பயனாளிகளில் ஒருவரான சிவானந்தன் ஜசிந்தா, திருமணம் செய்வதென்றால் கூட ஒரு வீடு தேவை. அப்பா, சகோதரர்கள் இல்லை. இந்த வீடு கிடைத்ததின் மூலம் சொந்த வீட்டில் வாழ்கின்றோம் என்ற நிம்மதி கிடைக்கிறது. புதிய இடம் என்பதால் ஆரம்பத்தில் ஒரு பயம் இருந்தாலும் எல் லோரும் அருகருகே ஒன்றாக இருப் பதால் அந்தப் பயம் நீடிக்காது. எமக் கென இந்த இடத்தைத் தந்து நாம் நிம்மதியாக வாழ உதவிய எமது குருமார்கள் ஏனைய உதவிகளையும் பெற்றுத் தந்து உதவுவார்கள் என்று கூறுகின்றார்.

(வளரும்)

# மே 8 இல் குருப் பெயர்ச்சி உங்களுக்கு எப்படி?

தருபவர் : வித்தியா

## மிதுனம்



உங்கள் ராசிக்கு சப்தம, தொழில் ஸ்தான அதிபதியாகிய குருபகவான் மீனத்தில் இருந்து பதினொராம் இடமாகிய மேடத்தில் அமர்வு பெற்றுள்ளார். ஆதாய ஸ்தானத்தில் உள்ள குரு பலநாளாக சிந்தித்து, திட்டமிட்ட செயல்களை இனிதாக நிறைவேற்ற உதவுவார். 5, 7, 9 ஆகிய பார்வையால் ராசிக்கு மூன்றாம் இடமான புகழ், 5ஆம் இடமான புத்திரம், பூர்வ புண்ணியம், ஒன்பதாம் பார்வையாக களத்திரம், நட்பு ஸ்தானங்களை பார்க்கிறார். மேற்கண்ட ஸ்தானங்களின் வழியாகவும், அதிக அளவில் சுபமான பலன் வந்து சேரும். நம்பிக்கையுடன் செயற்பட்டுத் தாராள வெற்றி பெறுவீர்கள். அயலவருடன் இருந்த மனவேறுபாடு விலகி அன்பு வளரும். அதிக பணவரவு பெறுவதற்கான புதிய வழி பறக்கும். தகுந்த முறையில் பயன்படுத்திப் பணம் சேமிப்பீர்கள். வீடு, வாகன வகையில் திட்டமிட்ட வளர்ச்சிப்பணிகளை நிறைவேற்றி மகிழ்வீர்கள். தாய்வழி உறவினர் உங்கள் நற்குணங்களை மதித்து பாசத்துடன் நடந்துகொள்வர். புத்திரர்கள் சிறப்பாகப் படித்து படிப்பிலும், வேலை வாய்ப்பிலும் முன்னேற்றம் காண்பர். குடும்பத்திற்கான முக்கிய தேவைகள் பெருமளவில் பூர்த்தியாகும். சொத்தும் வாங்க யோகமுண்டு. நல்ல பழக்க வழக்கங்களைப் பின்பற்றி உடல் நலத்தை சிறப்புறப் பாதுகாப்பீர்கள். எதிரிகள், துன்பம் அணுகாத சந்தோஷ வாழ்வு பெறுவீர்கள். நிலுவைக் கடன் அறிந்து சரிசெய்வீர்கள். தம்பதியர் ஒருவருக்கொருவர் அன்புடன் செயற்படுவர். குடும்பத்தில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். திட்டமிட்ட சுபநிகழ்ச்சியை சிறப்பாக நடத்த தாராள பணவசதி கிடைத்து நிறைவேறும். நற்குணம் உள்ள நண்பர்கள் உதவிகரமாகச் செயற்படுவர். சுற்றுலாப் பயணம் மேற்கொள்வீர்கள். தந்தையின் ஆலோசனை முக்கிய பயன்பெற வழிகாட்டும்.

**பெண்கள்:** பணிபுரியும் பெண்கள் அதிகாரிகளின் வழிகாட்டுதல் கிடைக்கப்பெறுவர். பணித்தரம் சிறந்து குறித்த காலத்தில் வேலைகள் முடியும். பதவி உயர்வு, விரும்பிய இடமாற்றம், ஏனைய சலுகைகள் கிடைக்கும். குடும்பப் பெண்கள் கணவரின் பாசம் பெற்று நிம்மதி நிறைந்த வாழ்வு நடத்துவர். குடும்பச் செலவுக்கான பணவசதி நன்றாக இருக்கும். புத்திரப்பேறு, பொன், பொருள் சேர்க்கை வகையில் அனுகூலமான பலன் உண்டு. சுயதொழில் புரியும் பெண்கள் அதிக மூலதனம் இடும் வகையில் வருமானம் கூடும். உற்பத்தி, விற்பனை சிறந்து உபரி வருமானம் கிடைக்கும். உபதொழில் தொடங்கலாம்.

**மாணவர்கள்:** பொறியியல், மருத்துவம், சட்டம், விவசாயம், வங்கியியல், வணிகவியல், ஆசிரியர் பயிற்சி, நிதி மேலாண்மை, இலக்கிய ஆராய்ச்சி, கணினி ஆகிய துறைகளில் பயிற்சிபெறும் மாணவர்களுக்கு கடந்த காலத்தில் மனதில் இருந்த குழப்பநிலை நீங்கும். படிப்பில் ஆர்வம் வளரும். ஏனைய துறை மாணவர்களும் நன்றாகப் படிப்பர். சக மாணவர்கள் உதவுவர். படிப்புக்கான பணவசதி எதிர்பார்த்த வகையில் கிடைக்கும். சிலர் விளையாட்டில் பரிசு, பாராட்டு பெறுவர். படிப்பை முடித்தவர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை உண்டு.

**விவசாயிகள்:** வருமானம் சிறந்து உற்பத்தி பெருகும். கால்நடை வளர்ப்பில் முன்னேற்றமும் உபரி பணவருமானமும் உண்டு. கூடுதல் நிலம் வாங்கலாம்.

## கடகம்



உங்கள் ராசிக்கு பணி, விவகாரம், பிதா, பாக்ய ஸ்தான அதிபதியாகிய குருபகவான் மீனத்தில் இருந்து 10 ஆம் இடமாகிய மேடத்தில் அமர்வு பெற்றுள்ளார். பத்தில் குரு பதவிக்கு இடர் என்பது ஜோதிட பழமொழி. குருபகவான் தனது 5, 7, 9 ஆகிய பார்வைகளால் தன, குடும்ப, வீடு, வாகன, பணி, வில்லங்க ஸ்தானங்களைப் பார்க்கிறார். இதனால் சிரம பலன்கள் குறைந்து நன்மை ஏற்படும். மனதை ஒருநிலைப்படுத்திச் செயற்படுவதால் செயற்பாடுகளில் ஓரளவு வெற்றி கிடைக்கும். பணவரவு குறையலாம் என்பதால், கிடைக்கிற வாய்ப்பைப் பயன்படுத்தி பயன் பெறலாம். பேச்சில் சாந்தமும் சத்தியத்தை பின்பற்றும் குணமும் நிறைந்திருக்கும். சகோதரர்களிடையே குடும்ப விவகாரங்களில் கருத்து வேறுபாடு ஏற்படலாம். தாயின் ஆசியும், தாய்வழி உறவினரால் நன்மையும் ஏற்படும். வீடு, வாகன வகையில் திருப்திகரமான பலன் தற்போதைய நிலையில் தொடரும். புத்திரர்கள் தங்கள் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளும் பொருட்டு உங்களை நிர்ப்பந்தம் செய்வர். அவர்களிடம் பக்குவமாக நடந்து கொள்வது நல்லது. பூர்வ சொத்தில் நம்பிக்கை குறைவான நபர்களை பணியில் அமர்த்தக்கூடாது. வீடு வாடகைக்கு விடுவோர் மிக்க கவனமாக ஆள்களை குடியமர்த்த வேண்டும். உடல் நலக்குறைவு நீங்கி உற்சாகம் பெறுவீர்கள். வழக்கு விவகாரத்தில் இருந்த தொல்லை குறையும். கணவன், மனைவி இடையே கருத்து வேறுபாடு வரலாம் என்பதால், விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையுடன் நடந்துகொள்வது நல்லது. நண்பர்களின் செயற்பாடுகளில் குற்றம் சொல்வது, அளவுக்கு மீறி பணப்பரிவர்த்தனை செய்வது பிரிவைத் தரும். கவனம். சங்கங்களில் பொறுப்பான பதவியைப் பெற்றவர்கள், பதவிப் பொறுப்பில் இருந்து விடுபட விரும்புவர். தந்தைவழி சொத்தின் பலன் ஓரளவு கிடைக்கும்.

**பெண்கள்:** பணிபுரியும் பெண்கள் பணிச்சுமைக்கு உட்படுவர். நிர்வாகத்தின் வழிகாட்டுதலைத் தகுந்த முறையில் பின்பற்றுவதால் மட்டுமே நற்பெயர் பெறலாம். சலுகைகள் கிடைக்க பொறுமை காப்பது அவசியம். தாய்வீட்டு சீர்முறை எதிர்பார்த்தபடி கிடைக்கும். வீட்டுச்செலவுக்கு வரவும் செலவும் சரிசமமாகச் செல்லும். சுயதொழில் புரிபவர்கள் வாடிக்கையாளர்களைத் தக்க வைப்பதில் கவனம் கொள்வது அவசியம். உற்பத்தி, விற்பனை சுமாராக இருக்கும்.

**மாணவர்கள்:** பொறியியல், மருத்துவம், விவசாயம், சட்டம், இதழியல், கணினி, ஆசிரியர் பயிற்சி, வங்கியியல், வணிகவியல், இரசாயனம், ஆகிய துறைகளைச் சேர்ந்த மாணவர்கள் மனதில் இருந்த குழப்பம் விலகி மிகுந்த கருத்துடன் செயற்படுவர். ஏனைய துறை மாணவர்களுக்கும் படிப்பில் கவனம் அதிகரிக்கும். மாணவர்கள் தரத்தேர்ச்சியும் நற்பெயரும் பெறுவார்கள். சக மாணவர்களுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு சரியாகும்.தாய்வழி உறவினர் விரும்பி உபசரிப்பர். பயிற்சி நிறைவு பெற்றவர்களுக்கு வேலைவாய்ப்பில் ஓரளவு அனுகூலம் உண்டு.

**விவசாயிகள்:** ஓரளவு வருமானம் கிடைக்கும். கால்நடை வளர்ப்பில் உபரி பணவரவு உண்டு. நிலம் தொடர்பான விவகாரங்களில் சாதகமான தீர்வு ஏற்படும். புதிய நிலம் வாங்குவதில் நிதானமான நடவடிக்கை அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எகிப்து முன்னாள் ஜனாதிபதி முபாரக்குக்கு மரண தண்டனை கிடைக்க வாய்ப்பு

## நீதித்துறை அமைச்சர் தகவல்

கெய்ரோ, மே 03

எகிப்தில் ஜனாதிபதியாக இருந்த ஹோஸ்னி முபாரக் ஆட்சிக்கு எதிராக மக்கள் புரட்சி நடத்தினார்கள். போராட்டம் ஆரம்பமாகிய 18 நாள்களில் முபாரக் பதவி விலகினார். தற்போது அங்கு இராணுவ ஆட்சி நடக்கிறது.

பதவி விலகிய முபாரக் இராணுவ ஆட்சியாளர்களால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். அவரது 2 புதல்வர்களும் கைதாகியுள்ளனர்.

முபாரக், அவரது மனைவி, 2 புதல்வர்கள் மீதும் இலஞ்ச ஊழல் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

போராட்டத்தில் ஈடுபட்ட மக்களை ஒடுக்க இராணுவத்தை ஏவி சுட்டுக் கொன்றார் என முபாரக் மீது குற்றச்சாட்டப்பட்டுள்ளது. முபாரக், அவரது குடும்பத்தினர் ஆகியோர் மீது தற்போது இராணுவ நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்று வருகிறது. இராணுவத்தை ஏவி பொதுமக்களைக் கொன்று குவித்த வழக்கில் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் முபாரக்குக்கு மரணதண்டனை கிடைக்க வாய்ப்பு உள்ளது.

இந்தத் தகவலை தற்போது புதிதாக பதவி ஏற்றிருக்கும் நீதித்துறை அமைச்சர் மொகமத் எல் குயின்பு தெரிவித்துள்ளார். (எ)

# பாகிஸ்தானில் கிறிஸ்தவ தேவாலயத்தை தீ வைத்து கொளுத்த முயற்சி

லாகூர், மே 03

கிழக்குப் பாகிஸ்தானில் இஸ்லாமியர்களின் புனித நூலான குர்ஆனை சிலர் எரித்தனர் என வதந்தி பரவியது. இதைத் தொடர்ந்து லாகூர் அருகேயுள்ள குஜ்ரன் வாலா நகரில் கொந்தளிப்பு ஏற்பட்டது. அங்கு 300க்கும் மேற்பட்டவர்கள் திரண்டனர்.

கையில் ஆயுதங்கள், தடிகள் ஆகியவற்றுடன் அங்குள்ள கிறிஸ்தவ தேவாலயம் நோக்கி ஊர்வலமாகப் புறப்பட்டனர். பின்னர் அந்தத் தேவாலயத்தை தீ வைத்து கொளுத்த முயன்றனர்.

தகவல் அறிந்ததும் பொலிஸார் அங்கு விரைந்து சென்று தடியடி நடத்தி கூட்டத்தினரைக் கலைத்தனர். அதில் சிலருக்கு இலேசான காயம் ஏற்பட்டது.

இதன் மூலம் தீ வைப்பு முயற்சி முறியடிக்கப்பட்டது. பொலிஸார் விரட்டியடித்ததால் ஆத்திரமடைந்த போராட்டத்தினர் வீதிகளில் மறியல் போராட்டம் நடத்தினார்கள். டயர்களைக் கொளுத்திக் கோஷமிட்டனர்.

இந்தச் சம்பவத்துக்கு பாகிஸ்தானிலுள்ள அனைத்து பெரும்பான்மை மக்கள் அமைப்புகளும் கண்டனம் தெரிவித்துள்ளன. இந்தச் சம்பவம் குறித்து விசாரணை நடத்தும்படி அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர். (எ)

# முஷாரப் கட்சிக்கு துணைப் பிரதமர் பதவி

இஸ்லாமாபாத், மே 03

பாகிஸ்தான் மக்கள் கட்சி தலைமையிலான கூட்டணி அரசில் முன்னாள் ஜனாதிபதி முஷாரபின் பாகிஸ்தான் முஸ்லிம் லீக்-க்யூ கட்சிக்கு துணைப் பிரதமர் பதவி வழங்கப்படவுள்ளது.

சுகாதாரம், வர்த்தகம், தொழில் துறை, வேளாண்மை, தகவல் தொழில்நுட்பம், பெற்றோலியம் ஆகிய முக்கியமான 6 அமைச்சர் பதவிகள், 6 இணை அமைச்சர் பதவிகள், ஐ.நாவுக்கான பாகிஸ்தான் பிரதிநிதி பதவிகள் ஆகியவையும் வழங்க இரு கட்சிகளிடையே உடன்பாடு கையெழுத்தாகவுள்ளது.

பாகிஸ்தான் ஜனாதிபதியும், பாகிஸ்தான் மக்கள் கட்சித் தலைவருமான அஷிப் அலி சர்தாரி, பாகிஸ்தான் முஸ்லிம் லீக்-க்யூ கட்சித் தலைவர் செத்ரி சுஜாத் ஆகியோர் வெள்ளிக்கிழமை இரவு சந்தித்துப் பேசினர்.

அப்போது கூட்டணி அரசில் முஸ்லிம் லீக்-க்யூ கட்சி இடம்பெறுவது குறித்த திட்டத்துக்கு இறுதி வடிவம் கொடுக்கப்பட்டது.

பாகிஸ்தான் முஸ்லிம் லீக்-க்யூ கட்சி, துணைப் பிரதமர், அமைச்சர்கள் பதவி தொடர்பாக முன்வைத்த கோரிக்கையை அஷிப் அலி சர்தாரி ஏற்றுக்கொண்டார். இரு கட்சிகளுக்கு இடையே அடுத்த வாரம் கூட்டணி உடன்பாடு அதிகாரபூர்வமாக கையெழுத்தாகவுள்ளது என்று நம்பத் தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தங்களது கட்சியைச் சேர்ந்த மூத்தத் தலைவர் செத்ரி பர்வைஸ் இலாஹிக்கு துணைப் பிரதமர் பதவி வழங்க சர்தாரி ஒப்புக்கொண்டுள்ளார் என்று பாகிஸ்தான் முஸ்லிம் லீக்-க்யூ கட்சியின் மற்றொரு தலைவர் பைசல் சலே கூறியுள்ளார்.

வெளியுறவுத்துறை அமைச்சராகவிருந்த ஷா மஹ்மூத் குரேஷி பதவியை இராஜிநாமா செய்ததிலிருந்து அப்பதவி காலியாக உள்ளது. இந்த இலா காவை பாகிஸ்தான் முஸ்லிம் லீக்-க்யூ கட்சிக்கு ஒதுக்க சர் தாரி விரும்புகிறார். ஆனால் வெளியுறவுத்துறையை ஏற்பதில் அக்கட்சிக்கு விருப்பமில்லை என்று அதிகாரபூர்வ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இரு கட்சிகளும் கூட்டாக இணைந்து நீண்டகாலம் அரசியல் பயணத்தைத் தொடர வேண்டும் என்பதில் இரு கட்சிகளின் தலைவர்களும் ஆர்வமாக உள்ளனர். அதுகுறித்து விரிவாக விவாதிக்கப்பட்டுள்ளது என்று பாகிஸ்தான் முஸ்லிம் லீக்-க்யூ கட்சி வட்டாரம் தெரிவித்துள்ளது. (எ)

# சீனாவில் 2 நிலக்கரிச் சுரங்கங்களில் வெடி விபத்து: 9 பேர் மரணம்!

பீஜிங், மே 02

சீனாவிலுள்ள நிலக்கரிச் சுரங்கத்தில் ஏற்பட்ட வெடி விபத்தில் 9 பேர் இறந்தனர். சீனாவின் வடகிழக்குப் பகுதியில் ஜிசிங் நகரில் ஏராளமான தனியார் நிலக்கரிச் சுரங்கங்கள் உள்ளன.

கடந்த ஏப்ரல் 26ஆம் திகதி இங்குள்ள தனியார் சுரங்கத்தில் வெடி விபத்து ஏற்பட்டது. இதில் சிக்கி 9 பேர் இறந்தனர். வாயு கசிவே விபத்துக்குக் காரணம் என்று கூறப்படுகிறது. விபத்து நடந்து 5 நாள்களுக்குப் பின்னரே இது தெரியவந்தது.

இந்தச் சுரங்கம் சட்டவிரோதமாக நிலக்கரியைத் தோண்டி எடுத்து விற்று வந்தது எனத் தெரிகிறது. சுரங்கத்தை மூட அதிகாரிகள் உத்தரவிட்டனர். (எ)

SABINS BLUE OCEAN RESORT

Allaipiddy - 10 minutes from Jaffna Town

(This is a 5 Star Hotel style with more than 100 Rooms - Lobby - Restaurant- Bar - Wedding Hall- Health Center - Massage Praxis Swimming Pool- Sea food Restaurant at beach side - Gym Center - Helicopter Landing with all the Luxury Facilities including & Hotel Management School for our staff)

Vacancies

Management Residence Secretaries (Administration) Girls

APPLICATION FORM:
Name:
Age:
IC No:
Address:
Religion:
Hobby:
Mobile number - very important to call for the interview Qualification:
Work Experience:
Conputer Knowledge:
Language Knowledge (English) :
Pass Port Size Photo:
Age: 18-30

Please submit your CV - Curriculum Vitae - certificates- working experience certification attached with the Application form to the following address: Dipl.Inf Sabins Jeyasegara President
Cyber Gaming & Inter net Cafe,
Catholic Press Complex - Main Street 360\7,
Jaffna. Tel: 0778350478

(22-40)(3768)

வட இலங்கை சங்கீத சபையில் "கலாவித்தகரின்" விவரம் கோரல்

1. வட இ.ச.சபையினால் வெளியிட இருக்கும் அமுத மலரில் "கலாவித்தகர் பட்டம்" பெற்றவர்களின் விவரம் பிரசுரிக்க இருப்பதால் காரியாலயத்துடன் தொடர்பு கொண்டு உரிய படிவத்தைப் பெற்று பூரணப்படுத்தி 10.05.2011 திகதிக்கு முன் ஒப்படைக்கவும்.
2. மேற்படி மலருக்கு கட்டுரை தரவிரும்பும் கலைஞர்கள் 10.05.2011 இற்கு முன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும்.

யாழ். வலயக் கல்விப் பணிப்பாளரும்
வட இல.சங்.சபைத் தலைவரும்

(சி/578155)

# அமெரிக்காவில் மிஸிஸிப்பி ஆற்றில் வெள்ளம்

மிசௌரி, மே 03

அமெரிக்காவின் மிஸிஸிப்பி ஆற்றில் வெள்ளம் ஏற்பட்டதை அடுத்து இல்லினாய்ஸ் மாகாணத்திலுள்ள கெய்ரோ நகர மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு அந்த நகர மேயர் அறிவுறுத்தியுள்ளார்.

கெய்ரோ நகர மேயர் ஜட்சன் சைல்ட் வெளியிட்டுள்ள அறிக்கையில், நகரில் வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளதால், தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்கள், மூத்த குடிமக்கள் உள்ளிட்டோர் குடும்பத்துடன் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு கூறியுள்ளார். வெள்ள தடுப்புப் பணிகளில் இராணுவச் சிப்பாய்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

வெள்ள நீரை மிசௌரி மாகாணத்திலுள்ள ஒரு இலட்சத்து 30 ஆயிரம் ஏக்கர் பயிரிடப்படாத நிலங்களுக்குத் திருப்பிவிடும் முயற்சியில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர். (எ)

சீட்டிழுப்பு இல. 2388
திகதி 01.05.2011

மஹஜன சம்பத

அலுவலக முடிவுகள்

வெற்றி எழுத்து: E வெற்றி எண்கள்: 6 4 1 5 4 0

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | E | 6 | 4 | 1 | 5 | 4 | 0 | ரூபா. | 11,111,874/= | பரிசு | - |
| 1ம் பரிசுகள் | | 6 | 4 | 1 | 5 | 4 | 0 | ரூபா. | 20,00,000/= | பரிசுகள் | 01 |
| 2ம் பரிசுகள் | | | 4 | 1 | 5 | 4 | 0 | ரூபா. | 100,000/= | பரிசுகள் | 07 |
| 3ம் பரிசுகள் | | | | 1 | 5 | 4 | 0 | ரூபா. | 10,000/= | பரிசுகள் | 67 |
| 4ம் பரிசுகள் | | | | | 5 | 4 | 0 | ரூபா. | 1,000/= | பரிசுகள் | 678 |
| 5ம் பரிசுகள் | | | | | | 4 | 0 | ரூபா. | 100/= | பரிசுகள் | 6758 |
| 6ம் பரிசுகள் | | | | | | | 0 | ரூபா. | 20/= | பரிசுகள் | 67411 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7ம் பரிசுகள் | | 6 | 4 | 1 | 5 | 4 | | ரூபா. | 10,000/= | பரிசுகள் | 05 |
| 8ம் பரிசுகள் | | 6 | 4 | 1 | 5 | | | ரூபா. | 1,000/= | பரிசுகள் | 63 |
| 9ம் பரிசுகள் | | 6 | 4 | 1 | | | | ரூபா. | 100/= | பரிசுகள் | 679 |
| 10ம் பரிசுகள் | | 6 | 4 | | | | | ரூபா. | 50/= | பரிசுகள் | 6777 |
| 11ம் பரிசுகள் | E | | | | | | | ரூபா. | 20/= | பரிசுகள் | 26902 |

அடுத்த வார சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூபா. 11,251,859.00

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூபா. 7,129,810.00
ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும்
பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கும் வளமான நாட்டிற்கும்
தேசிய லொத்தர் சபை
234/2 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 2470662, 4607000 Hotline: 2433631

முடிவுகளை அறிய www.nlb.lk

நெஞ்சை விட்டகலா முதலாம் ஆண்டு நினைவலைகள்



அமரர் மார்க்கண்டு ஸ்ரீரவிகுலன்

திதி: பிரதமை

தோற்றம் 13.08.1964

மறைவு 14.04.2010

புதுவருடம் பிறந்திருக்கப் போய்விட்டீர் நீரும்
ஒரு வருடம் ஆகியும் எம் உள்ளங்கள் ஆறா
நினைவுகளைச் சுமந்தும் கடமைகளைச் சுமந்தும்
நெட்டுயிர்த்தும் நடைப்பிணமாய் வாழ்கின்றோம் இங்கு
இந்நாளில் உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்

மீசாலை மேற்கு,
மீசாலை.

மனைவி, பிள்ளைகள்,
உற்றார், உறவினர்.

(40)(1665)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒசாமா பின்லேடன் கொல்லப்பட்டமையால் வெற்றிக் குதூகலத்தில் அமெரிக்க மக்கள்

வாஷிங்டன்,மே3

அல்-குவைதா தீவிரவாதத் தலைவர் ஒசாமா பின்லேடன் கொல்லப்பட்ட செய்தியால் அமெரிக்க மக்கள் குதூகலம் அடைந்துள்ளனர்.

கேந்திர நகரங்களில் திரண்ட மக்கள், கரை கடந்த உற்சாகத்துடன் 'அமெரிக்கா, எங்கள் அமெரிக்கா' என கோஷங்கள் எழுப்பினார்கள். பட்டாசுகள் கொளுத்தியும், இனிப்புகள் வழங்கியும் வெற்றிக்களிப்பில் திளைத்தனர்.

அல்-குவைதா தீவிரவாதத் தலைவர் பின்லேடன் பாகிஸ்தானில் அமெரிக்கப் படைகளால் சுட்டுக் கொல்லப்பட்டார். பின்லேடன் கொல்லப்பட்ட அதிகாரபூர்வமான தகவலை அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா வெளியிட்டார்.

அமெரிக்க தொலைக்காட்சியில் அவர் தோன்றி இது தொடர்பாக கூறியதாவது:-

அனைவருக்கும் வணக்கம். அமெரிக்காவில் கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்னர் ஆயிரக்கணக்கான அப்பாவி மக்களும், பெண்களும், குழந்தைகளும் கொல்லப்பட்டனர். இதற்குக் காரணமாக இருந்த அல்-குவைதா இயக்கத் தலைவர் ஒசாமா பின்லேடன் அமெரிக்கப் படையினர் நடத்திய தாக்குதலில் சுட்டுக் கொல்லப்பட்டார் என்ற மகிழ்ச்சியான செய்தியை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அமெரிக்கா மட்டுமின்றி உலகம் முழுவதும் உள்ளவர்களுக்கு இந்தத் தகவலை தெரிவிக்கிறேன். இதன் மூலம் அமெரிக்காவின் நீண்ட காலத் திட்டம் நிறைவேறியுள்ளது. இந்த நாள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நாளாகும்.



பின்லேடன் கொல்லப்பட்டதன் மூலம் நீதி நிலைநாட்டப்பட்டுள்ளது. சுட்டுக் கொல்லப்பட்ட பின்லேடன் உடல் அமெரிக்காவின் கட்டுப்பாட்டிலுள்ளது. பொதுமக்களுக்கு எந்தவித ஆபத்தும் ஏற்படாத வகையில் சிறிய உளவுப் படைச் சிப்பாய்களைக் கொண்டு இந்தத் தாக்குதல் சம்பவம் நடத்தப்பட்டுள்ளது.

10 ஆண்டுகளுக்கு முன்னர் செப்டெம்பர் மாதம் அல்-குவைதா தீவிரவாதிகள் விமானம் மூலம் இரட்டைக் கோபுரத்தில் தாக்குதல் நடத்தினார்கள். இது அமெரிக்க வரலாற்றில் மிக மோசமானதாக அமைந்தது. அந்த மோசமான நிகழ்ச்சி இனி உலகில் எங்கும் நடந்து விடக் கூடாது.

இந்தத் தாக்குதலுக்குப் பின்னர் அல்-குவைதா தீவிரவாதிகளை அமெரிக்கப் படைகள் தாக்கி அவர்களுக்கு மிகுந்த நெருக்கடி கொடுத்தது. எனது நேரடி உத்தரவின் கீழ் அமெரிக்க உளவுப்படையினர் பாகிஸ்தானில் பதுங்கி இருந்த பின்லேடனை தாக்கிக் கொன்றனர்.

பின்லேடன் கொல்லப்பட்டதன் மூலம் எங்களது வாழ்நாளில் மிகுந்த முக்கியத்துவம் பெற்றுள்ளது. என்றாலும் தீவிரவாதத்துக்கு எதிரான எங்களது தாக்குதல் பணி தொடரும்.

இவ்வாறு அவர் கூறினார்.

பின்லேடன் கொல்லப்பட்ட தகவலை அமெரிக்க அதிகாரிகள் உறுதிப்படுத்தினர். அதே வேளை, அது தொடர்பான வேறு எந்தத் தகவல்களையும் வெளியிட அவர்கள் மறுத்து விட்டனர். பின்லேடன் கொல்லப்பட்ட தகவல் பரவியதும் அமெரிக்க மக்களிடம் மகிழ்ச்சி வெள்ளம் கரை புரண்டோடியது.



ஐவரிகோஸ்ட் தீவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள ஐ.நா. சபையின் முன்னாள் செயலாளர் கோபி அனான் அபித்ஜான் நகரில் அதிபர் அலாசானேகுவாட்டராவைச் சந்தித்தார்.

# 12 வயதுச் சிறுவன் மார்க்கெட்டில் நடத்திய தற்கொலைத் தாக்குதல்

## ஒரு பெண் உட்பட 7 பேர் உயிரிழப்பு

காபூல், மே 03

ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் 12 வயது சிறுவனை மனித வெடி குண்டாக வைத்து தாக்குதல் நடத்திய சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதில் 7 பேர் பலியாயினர். பலர் படுகாயமடைந்தனர்.

ஆப்கானிஸ்தான் - பாகிஸ்தான் எல்லையில் அமைந்துள்ளமை பக்டிகா மாகாணம். பர்மால் மாவட்டத்திலுள்ள மார்கெட் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை மக்கள் கூட்டம் அதிகமாக இருந்தது.

அப்போது திடீரென 12 வயது மதிக்கத்தக்க சிறுவன் மனித வெடிகுண்டாக மார்க்கெட்டிற்குள் நுழைந்து வெடிக்கச் செய்தான். இதில் ஒரு பெண் உட்பட 7 பேர் சம்பவ இடத்திலேயே உடல் சிதறி பலியாயினர். 12 பேர் காயமடைந்தனர்.

வெடி குண்டால் சிதறிக்கிடந்த அந்தச் சிறு வன் தலிபான்களால் மனித வெடிகுண் டாக அனுப்பப்பட்டிருக்கலாம் என பக்டிகா மாகாண செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

இளைஞர்களை மனித வெடி குண்டாக பயன்படுத்தி வந்த தலிபான் கள் தற்போது சிறார்களையும் ஈடுபடுத்தி வருவது ஆப்கான் பாதுகாப்புப் படையினரிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# சீனாவில் ஹோட்டலில் தீ விபத்து; 10 பேர் உயிரிழப்பு

பீஜிங், மே 03

சீன நட்சத்திர ஹோட்டலில் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை ஏற்பட்ட தீ விபத்தில் 10 பேர் உயிரிழந்தனர். 35 பேர் காயமடைந்தனர்.

சீனாவில் வடகொரியா எல்லையில் ஜிலின் மாகாணம் உள்ளது. அங்கு தொழிற்சாலை கள் மிகுந்த தொங்காவா நகரில் ஒரு நட்சத்திர ஹோட்டல் உள்ளது. 7 மாடிகளை கொண்ட அந்த ஹோட்டலில் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 3.30 மணி அளவில் திடீரென தீவிபத்து ஏற்பட்டது.

தொடக்கத்தில் முதல் தளத்தில் பிடித்த தீ மளமளவென 2ஆவது மாடிக்கும் பரவியது. இதனால் ஹோட்டலிலிருந்து கரும்புகை வெளியேறியது. இதைப் பார்த்த அக்கம்பக்கத்தினர் தீயணைப்புப் படையினருக்குத் தகவல் கொடுத்தனர். உடனே தீயணைப்பு வண்டிகளில் விரைந்து வந்ததீயணைப்பு வீரர்கள் பல மணி நேரம் போராடித் தீயை அணைத்தனர்.

இந்த விபத்தில் 10 பேர் உயிரிழந்தனர். 35 பேர் காயமடைந்தனர். அவர்கள் அனைவரும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் 3 பேர் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

பலியானவர்களில் பெரும்பாலானவர்கள் புகை மூட்டத்தில் மூச்சு திணறி பலியாகியுள்ளனர். அவர்கள் அங்கு தங்கியிருந்தபோது இந்த தீவிபத்தில் சிக்கி இறந்துள்ளனர். தீவிபத்துக்கான காரணம் தெரியவில்லை. இதுகுறித்து விசாரணை நடக்கிறது.

(எ)

# சவூதி பத்திரிகைகள் மீது கடும் கட்டுப்பாடுகள் விதிப்பு

சவூதி அரேபிய அரசு, பத்திரிகைகள், செய்தி வெளியீடுகள் ஆகியவை மீதான கட்டுப்பாடுகளை மேலும் இறுக்கியுள்ளது. நாட்டின் பாதுகாப்புக்கு எதிரான செய்திகளை வெளியிட்டால் 60 இலட்ச ரூபாய் அபராதம் முதல் பத்திரிகையை இழுத்து மூடுதல் வரை பல்வேறு தண்டனைகள் கிடைக்கும் என எச்சரித்துள்ளது.

மத்திய கிழக்கு மற்றும் ஆபிரிக்க நாடுகளில் ஏற்பட்டுள்ள மக்கள் எழுச்சி, அரபுத் தீபகற்பத்திலும் பரவி வருகிறது. அத்தீபகற்பத்தின் தென்பகுதியிலுள்ள ஏமன் பெரும் நெருக்கடியில் சிக்கித் தவிக்கிறது.

சவூதியின் உதவியோடு, மக்கள் எழுச்சியை ஒருவாறு அடக்கி விட்டது பஹ்ரைன். அதே போல், பல்வேறு சலுகைகளை அளித்ததன் மூலம், ஓமனும் மக்களை அடக்கிவிட்டது. இந்த எழுச்சியின் பாதிப்பு, சவூதியிலும் எதிரொலிக்குமோ என அரசு பெரும் கவலையில் உள்ளது.

கடந்த 29ஆம் திகதி அரசு வெளியிட்ட அறிக்கையில், "நாட்டின் ஒற்றுமை, பாதுகாப்பு ஆகியவற்றுக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் செய்திகளை வெளியிட்டால், உயர்பொறுப்பிலுள்ள மத குருக்களின் பத்வாக்களை விமர்சனம் செய்தால் அல்லது அவற்றிற்கு எதிராக நடந்தால் 59 இலட்சத்து 85 ஆயிரம் ரூபாய் வரை அபராதம் கட்டவேண்டி வரும் அல்லது பத்திரிகையை இழுத்து மூட வேண்டி வரும்" என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# ஏமனில் அரசியல் நெருக்கடி சமாதான முயற்சி தோல்வி

சனா,மே3

ஏமனில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியைத் தீர்க்க வளைகுடா கூட்டுறவுச் சபை பரிந்துரைத்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட ஜனாதிபதி சலே திடீரென மறுத்துவிட்டார். இதனால், வளைகுடா கூட்டுறவுச் சபையின் சமாதான முயற்சிகள் தோல்வியில் முடிந்தன.

ஏமன் அதிபர் சலே பதவி விலகுவது குறித்து வளைகுடா கூட்டுறவுச் சபை சில பரிந்துரைகளை முன்வைத்தது. அதன்படி, 30 நாட்களில் சலே பதவி விலக வேண்டும்; ஆளும்கட்சி 50 சதவீதம், எதிர்க்கட்சி 40 சதவீதம், பிறகட்சிகள் 10 சதவீதம் கொண்ட ஒரு அரசியை அமைக்க வேண்டும்; அதிலிருந்து 60 நாள்களில் பொதுத் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

முதலில் இப்பரிந்துரைகளை ஜனாதிபதி சலேயும், எதிர்க்கட்சிகளும் ஏற்றுக் கொண்டன. ஆனால், மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.

போராட்டக் காலத்தில் மக்களைக் கொன்று குவித்தமை, நாட்டின் சொத்துக்களைக் கொள்ளையடித்தமை உட்பட பல்வேறு குற்றங்களுக்காக சலே விசாரிக்கப்படவேண்டும் என்ற மக்களின் நிலையை இத்திட்டம் தந்திரமாக நிராகரித்ததை மக்கள் உணர்ந்து கொண்டனர்.

சனிக்கிழமை வளைகுடா கூட்டுறவுச் சபை பொதுச் செயலர் அப்துல் லத்தீப் அல் -ஜய்யானி, ஏமன் தலைநகர் சனாவுக்கு வந்து ஜனாதிபதியை சந்தித்து ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்காகப் பேசினார்.

நான்கு சுற்றுப் பேச்சுகளை சலேயுடன் அவர் நடத்தினார். ஆனால், ஒவ்வொரு சுற்றின் போதும், சலே புதிய புதிய நிபந்தனைகளைப் போட்டதால், தன் முயற்சி தோல்வியில் முடிந்தது என ஜய்யானி தெரிவித்தார்.

சனிக்கிழமை அவர் மீண்டும் ரியாத்துக்கு வெறும் கையுடன் திரும்பிச் சென்றார். இதனால், விரைவில் முடிவுக்கு வரும் என்று எதிர்பார்க்கப்பட்ட ஏமன் அரசியல் நெருக்கடி மேலும் நீடிக்கும் நிலை உருவாகியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
03 மே 2011 செவ்வாய்க்கிழமை

# இலங்கை அரசைத் தண்டிக்க தமிழக அரசியல் கட்சிகள் அணிதிரள வேண்டும்



## வலியுறுத்துகிறார் கிருஸ்ணசாமி

சென்னை, மே 3

போர்க்குற்றவாளியான இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவை தண்டிக்க தமிழக அரசியல் கட்சிகள் ஒன்று சேர்ந்து போராட வேண்டும் என்று புதிய தமிழகம் கட்சித் தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி தெரிவித்தார்.

இது தொடர்பாக புதிய தமிழகம் கட்சித் தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

ஈழத் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டதை ஐ.நா. அறிக்கை அம்பலப்படுத்தியுள்ளது. போர்க் குற்றவாளி ராஜபக்ஷவை கூண்டில் ஏற்ற தமிழக அனைத்து அரசியல் கட்சிகளும் ஓரணியில் திரண்டு போராட வேண்டும். அதனை வலியுறுத்தி காங்கிரஸ், பா.ஜ.க., தி.மு.க., அ.தி.மு.க., இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட், ம.தி. மு.க., பகுஜன் சமாஜ் கட்சி, பாட்டாளி மக்கள் கட்சி, தே.மு.தி.க., விடுதலைச் சிறுத்தைகள் உள்ளிட்ட 30 இற்கும் மேற்பட்ட பல்வேறு அரசியல் அமைப்புகளுக்கும் அவற்றின் தலைவர்களுக்கும் தனித்தனியே கடிதம் எழுதியுள்ளேன்.

இப்பொழுது அனைத்து அரசியல் கட்சிகளும், தமிழ் இன உணர்வுகளும், சமுதாய இயக்கங்களும், தொண்டு நிறுவனங்களும், வணிகத்தொழில் நிறுவனங்களும் அரசியல் மனமாச்சரியங்களுக்கு அப்பாற்பட்டு உலகமே வியக்கும் வண்ணம் ஒருங்கிணைந்த போராட்டத்தை நடத்த முன்வர வேண்டும்.

சாதி, மத, இன, கட்சி பேதங்களை மறந்து 7 கோடி தமிழர்களும் தமிழர்களாகவே எழுவதற்கும் தமிழினத்தை கொத்துக் கொத்தாகக் கொன்று குவித்த ராஜபக்ஷவைத் தண்டிப்பதற்கும் இதுவே தருணமாகும் என்று மீண்டும் வலியுறுத்துகிறேன். இவ்வாறு அந்த அறிக்கையில் அவர் கூறியுள்ளார். (வ)

## சீர்காழி ஜெயராமன் காலமானார்



சென்னை, மே 3

பிரபல கர்நாடக இசைக் கலைஞர் சீர்காழி ஜெயராமன் (வயது - 80) கடந்த சனிக்கிழமை காலமானார்.

ஐம்பது ஆண்டு காலமாக கர்நாடக சங்கீத உலகில் கொடி கட்டிப் பறந்தவர் சீர்காழி ஜெயராமன். இவர் இந்தியாவின் பல பகுதிகளிலும் இசை நிகழ்ச்சி நடத்தியுள்ளார். துபாய் உள்ளிட்ட வெளிநாடுகளிலும் இசை நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளார்.


கடந்த சில மாதங்களாக நோய் வாய்ப்பட்டிருந்த அவர் கடந்த சனிக்கிழமை 7.30 மணிக்கு சென்னையில் காலமானார். (வ)

## குஜராத் மாநில சட்டத்தில் 'பம்பே' என குஜராத் மாற்றம்

குஜராத் மாநிலத்திலுள்ள சட்டங்கள் அனைத்திலும் இடம்பெற்றுள்ள குஜராத் என்ற வார்த்தை நேற்று முதல் பம்பே என்று மாற்றப்பட்டுள்ளதாக குஜராத் அரசு தெரிவித்துள்ளது. சுமார் 51 ஆண்டுகளுக்கு பின் குஜராத் அரசு மாநிலத்தின் சட்டத்திலுள்ள வார்த்தையை மாற்றி அமைத்துள்ளது.

குஜராத் மாநிலத்தின் பொன் விழாக் கொண்டாட்டம் குறித்த முடிவினை வெளியிட்ட குஜராத் முதல்வர் நரேந்திர மோடி, நேற்று முதல் குஜராத் மாநிலத்தின் சட்டங்களில் இடம் பெற்றுள்ள குஜராத் என்ற வார்த்தை பம்பே என மாற்றப்பட்டுள்ளதாக தெரிவித்தார். இதற்கான சட்டம் மார்ச் 28 ஆம் திகதியன்று குஜராத் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.(வ)

## பேரணி...



தொழிலாளர் தினத்தையொட்டி, மும்பையில் நேற்று முன்தினம் நடைபெற்ற பேரணியில் பங்கேற்ற முதல்வர் பிருத்விராஜ்சவுகானுக்கு முன்னாள் பிரதமர் இந்திராவின் உருவப்படத்தை, தொழிற்சங்கத் தலைவர் பாய் ஜகதாப் வழங்கினார். அருகில் மாநில காங். தலைவர் மாணிக்கராவ் தாக்கரே நிற்கிறார். (வ)

## காஷ்மீரில் காரில் குண்டு வெடிப்பு

### ஒருவர் பலி; 10 பேர் காயம்

புதுடில்லி, மே 3

காஷ்மீரில் கார்க் குண்டு வெடிப்பில் ஒருவர் பலியாகியதுடன் 10 பேர் படுகாயமடைந்தனர்.

காஷ்மீர் மாநிலம் உத்தம்பூர் மாவட்டத்தில் ஜம்மு, ஸ்ரீநகர் தேசிய நெடுஞ்சாலையில் சாலையோரம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காரே குண்டு வெடிப்புக்கு இலக்கானது. இதில் ஒருவர் உடல் சிதறிப் பலியானார். மேலும் 10 பேர் படுகாய மடைந்தனர்.

சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸ் உயர் அதிகாரிகள் குண்டு வெடிப்புக் குறித்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (வ)

# இலங்கைப் படகோட்டிகள் ஊடுருவல்; அகதி முகாமில் தீவிர கண்காணிப்பு

இராமநாதபுரம், மே 3

இலங்கைப் படகோட்டிகள் கடத்தல் பொருள்கள் சேகரிப்பதற்காக தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் தங்கியுள்ளனர் எனக் கிடைத்த தகவலின் அடிப்படையில், அகதிகள் முகாம்களில் பொலிஸார் தீவிர காண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

மீன்பிடித் தடைகாலம் என்பதால், கடலுக்குள் விசைப்படகு செல்வதில்லை. இந்தக் காலத்தில் கடத்தலோ ஊடுருவலோ இருக்க வாய்ப்பில்லை.

ஆனால், இலங்கையைச் சேர்ந்த படகோட்டிகள் தமிழகக் கடலோர மாவட்டங்களில் தங்கியிருந்து, மீன்பிடித் தடை காலத்தில் கடத்தலுக்குத் தேவையான பொருள்களைச் சேகரித்து தடைகாலம் நீங்கியவுடன் கடத்தலில் ஈடுபடும் வாய்ப்புண்டு எனப் பொலிஸாருக்கு இரகசியத் தகவல் கிடைத்தது.

இதன்படி இலங்கைப் படகோட்டிகள் மனநோயாளிகள் போர்வையில் ஏர்வாடி உள்ளிட்ட சில பகுதிகளில் தங்கியிருக்கலாம் எனக் கருதி தீவிர சோதனையிட்டதில் யாரும் பிடிபடவில்லை.

இந்தநிலையில், இலங் கைப் படகோட்டிகள், அகதிகள் முகாம்களில் உள்ளவர்களின் உதவியுடன் மறைந்திருக்க வாய்ப்பு உள்ளது எனச் சந்தேகமடைந்துள்ளதால், தமிழகத்தில் உள்ள அகதிகள் முகாம்கள் கண் காணிக்கப்படுகின்றன. முகாம்களில் வெளிநபர்கள் வருகை, யாரைச் சந்திக்கின்றனர் போன்றவை குறித்து கியூப் பிரிவுப் பொலிஸார் விசாரித்து வருகின்றனர்.

கண்காணிப்பு அதிரித்துள்ளதால், மதுரை, திருச்சி போன்ற பகுதிகளில் முகாமிட்டிருக்கலாம் என, சந்தேகிக்கின்றனர். மீன்பிடி தடைகாலம் முடிந்தவுடன் கடல் மார்க்கத்தில் தீவிர ரோந்து பணி மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது. (வ)

## நடிகர் அலெக்ஸ் காலமானார்



நடிகரும், மாயாஜால நிபுணருமான அலெக்ஸ் உடல் நலக் குறைவு காரணமாக நேற்றுமுன்தினம் காலமானார். இவர் நீண்டகாலமாகத் தொண்டையில் ஏற்பட்ட புற்று நோய் காரணமாக அவதிப்பட்டு வந்தார்.

நேற்றுமுன்தினம் அவரது உடல்நிலை மோசமடைந்ததால் தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார்.

வள்ளி படத்தின் மூலம் அறிமுகமான நடிகர் அலெக்ஸ் மிட்டா மிராசு, கோவில்பட்டி வீரலெட்சுமி உள்ளிட்ட பல படங்களில் நடித்துள்ளார். வில்லன், குணச்சித்திர நடிகர் என்று மாறுபட்ட வேடங்களில் நடித்த அலெக்ஸ் தமிழக அரசின் சிறந்த வில்லன் மற் றும் குணசித்திர நடிகர் விருது பெற்றுள்ளார்.

இது தவிர சிறந்த மாஜிக் நிபுணராகத் திகழ்ந்த அலெக்ஸ், 24 மணிநேரம் தொடர்ந்து மாஜிக் நிகழ்ச்சி நடத்தி உலக கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம் பெற்றார். இதேபோல் லிம்கா சாதனைப் புத்தகத்திலும் இடம்பிடித்துள்ளார். (வ)

# தமிழகத்தில் வெற்றிபெறும் கூட்டணியைத் தீர்மானிக்க முடியவில்லை

### அமைச்சர் ப.சிதம்பரம் கருத்து

ஏனைய மாநிலங்களை விடவும், தமிழகத்தில் எந்தக் கூட்டணி வெற்றிபெறும் என்பதைக் கணிக்க முடியாத நிலை உள்ளது என மத்திய உள்துறை அமைச்சர் ப. சிதம்பரம் தெரிவித்தார்.

சிவகங்கையில் தேர்தல் பணிகள் குறித்த கருத்துக் கேட்புக் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில், கலந்துகொண்ட சிதம்பரம் மேலும் பேசியதாவது:

வெற்றியோ, தோல்வியோ, தேர்தல் முடிவுகள் எப்படியிருந்தாலும், அதை ஏற்றுக்கொண்டு பக்குவமாக நடந்துகொள்ள வேண்டும் என காங்கிரஸ் கட்சியினருக்கு அவர் அறிவுரை கூறினார்.

தமிழ்நாடு, கேரளம், அஸாம், புதுச்சேரி, மேற்குவங்கம் ஆகிய மாநிலங்களில் சட்டப் பேரவைத் தேர்தல்கள் நடந்துள்ளன. ஆனால், தமிழகத்தில் மட்டும்தான் தேர்தல் ஆணையம் அதிகமான கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

இதற்கான காரணம் குறித்து, தேர்தல் முடிவுகள் வெளியான பின், தேர்தல் ஆணையத்திடம் [illegible] தமிழகத்தில் தேர்தல் முடிவுகள் எப்படியிருக்கும் என்பதைக் கணிக்க முடியாத நிலையே உள்ளது.

முடிவு எப்படியிருந்தாலும் காங்கிரஸ் பக்குவமாக ஏற்றுக் கொண்டு அதற்கேற்ப செயற்பட வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

இதற்கு முன்னதாக கூட்டத்தில் பங்கேற்ற காங்கிரஸ் கட்சியினர் பல முறைப்பாடுகளைத் தெரிவித்தனர். மானாமதுரை தொகுதியில் தி.மு.க.வினர் தங்களை அரவணைத்துச் செயற்படவில்லை என முறைப்பாடு தெரிவிக்கப்பட்டது. கூட்டத்தில் காங்கிரஸ் நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடக சுதந்திரம்: புதிய வெளிகளைத் தேடியபடி...!



ஒவ்வொரு வருடமும் வருவது போலவே இம்முறையும் இன்றைக்கு வந்திருக்கிறது சர்வதேச ஊடக சுதந்திரதினம். அதனை எப்படிக் கொண்டாடலாம்?

தியேட்டர் ஒன்றுக்குச் சென்று, ஒரு ஊடகவியலாளனால் ஆட்சி மாற்றத்தையே ஏற்படுத்த முடியும் என விறு விறுப்பாக சொல்கின்ற, ஜீவா நடித்த ''கோ'' படத்தைப் பார்த்துவிட்டு, ஊடகத்தால் எல்லாம் செய்யமுடியும் என்று கொலரை தூக்கி விட்டுக்கொள்ளலாம். அதைவிட்டு விட்டு ஊடக சுதந்திரத்துக்காக ஏதாவது போராட்டங்கள் நடத்துவீர்களாயிருந்தால் உங்களைத் 'தூக்கி விடுவார்கள்'. அந்தளவுக்கு நம் நாட்டில் ஊடக ஜனநாயகம் கொடிகட்டிப் பறக்கிறது.

எனினும் அதிகாரத்தின் எல்லாவிதமான உதைப்புகளையும் தாங்கிக் கொண்டு அவற்றுக்கெதிராக இன்று வரை தம் பேனாக்களை மட்டுமே நம்பி ஊடகச் சமராடுவோரின் தொகையும் நாளுக்கு நாள் அதிகரித்தபடியே தான் இருக்கிறது.1993ஆம் ஆண்டு முதல் மே மாதம் 3ஆம் திகதி உலக ஊடக சுதந்திர தினமாக ஐ.நா.சபையால் பிரகடனப் படுத்தப்பட்டது. அது முதல் உலகில் தம் உயிரைக் கொடுத்தேனும் உண்மைகளை வெளிப்படுத்தி நிற்கும் ஊடகவியலாளர்களைக் கௌரவிக்கும் தினமாகவும் இது அனுஷ்டிக்கப்படுகிறது.

ஆனால் காலமும் சூழலும் இதனை யதார்த்தபூர்வமாக அனுஷ்டிப்பதற்குரிய வாய்ப்புகளை இலங்கையில் இல்லாமல் செய்திருக்கின்றன. வேண்டுமானால் பெயருக்கு பந்தல் போட்டு, பதாகைகள் தூக்கி, கொஞ்ச நேரம் புறக்கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்னால் நாலைந்து பேர் கூடிநின்று ஊடக சுதந்திரத்துக்காக குரல் கொடுக்கலாம். ஆனால் அந்தக் குரல் பக்கத்தில் நிற்போரின் காதுகளுக்கே கேட்காதளவுக்கு மிகவும் பலவீனப்பட்டுப்போய் இருப்பது தான் உண்மை நிலை. அதை மிஞ்சி வேறெதுவும் செய்ய முடியாமல் ஊடகவியலாளர்களின் கரங்கள் இங்கே இறுகக் கட்டப்பட்டிருக்கின்றன. வெளிப்படையாகத் தணிக்கை முறைமையோ அல்லது ஊடகங்கள் மீதான கட்டுப்பாடுகளோ விதிக்கப்படாதபோதும் கூட அவை கண்ணுக்குத் தெரியாத வகையில் நடைமுறையில் இருக்கவே செய்கின்றன.

நிமலராஜன், நடேசன், சுகிர்தராஜன், சிவராம், லசந்த விக்கிரமசிங்க, ஜோன் பிரகித் வரிசையில் தாமும் இணைந்து போய் விடுவோமோ என்ற அச்சம் பெரும்பாலான இலங்கை ஊடகவியலாளர் மத்தியில் ஆழ ஊடுருவியிருக்கிறது. அதனாலேயே அவர்கள் பேனாக்களிலிருந்து உதிர்கின்ற சொற்கள் உள்ளூர ஒரு வித நடுக்கத்தைச் சுமந்து கொண்டிருக்கின்றன. தப்பித் தவறியேனும் ஆட்சியாளர்களின் முகச்சுழிப்பை ஊடகவியலாளர்களின் குறித்த எழுத்துக்கள் சம்பாதித்துக் கொண்டால் ஒன்றில், அந்த ஊடகவியலாளன் துரோகியாக்கப்பட்டு கால வரையறையற்று கம்பிகளுக்குப் பின்னால் தள்ளப்படுவான். அல்லது அவன் சார்ந்த ஊடகம் ஒரே இரவில் தீயிட்டு எரிக்கப்படும்; சரமாரியான கற்களால் சிதைக்கப்படும். இவை எல்லாவற்றையும் 'இனந் தெரியாத நபர்கள்' கனகச்சிதமாக செய்து முடித்து விடுவார்கள். பேச்சுரிமை கருத்துச் சுதந்திரம் என்பவற்றுக்கு அரசு எவ்வித கட்டுப்பாடும் விதிப்பதில்லை என்று முழங்குகின்ற ஆட்சியாளர்கள் தமது காலடியில் நடுங்கியபடி ஊடகவியலாளர்கள் இருப்பதே தமக்குப் பாதுகாப்பானது என்று எண்ணுகிறார்கள். இல்லாவிட்டால் - ஊடகங்கள் உள்ளதை உள்ளவாறே உரைக்க முற்பட்டால் - மக்களின் எதிர்ப்பலைகளில் ஆட்சிக் கதிரை இருந்த இடம் தெரியாமல் தொலைந்துவிடும். எனவே கடிநாய்கள் எப்போதுமே பேனா முனைகளை மோப்பம் பிடித்தபடியேதான் சுற்றிச் சுற்றி அலைகின்றன.

மூச்சே விட முடியாத அளவுக்கு இறுக்கமான சூழல் நிலவினாலும் கூட, ஏதோ ஒரு விதத்தில் 'சுழித்துவிட்டு' அதிகாரத்தின் இரத்தம் தோய்ந்த கோரப் பற்களை உலகின் கண்முன்னே ஊடகவியலாளர்கள் கொண்டுவரத்தான் செய்கிறார்கள். தக்கன பிழைக்கும் என்ற டார்வினின் கூர்ப்புக் கோட்பாடு ஊடகங்களுக்கும் பொருந்தும். நிலைமையின் தன்மையை அறிந்து தமது தளங்களை, வடிவங்களை ஊடகங்கள் தகவமைத்து வருகின்றன. அதனாலேயே அவற்றின் உயிர்ப்பு இன்னமும் வீச்சோடு நீடிக்கிறது. அச்சு, இலத்திரனியல் என்ற மட்டுப்பாட்டுக்குள் 20ஆம் நூற்றாண்டு வரை இருந்த ஊடகத்துறை இந்த நூற்றாண்டில் இணையத்தின் உதவியோடு விஸ்வரூபம் எடுத்து நிற்கின்றது. கண்ணுக்குத் தெரியாத மாயாவி போல எல்லா இடங்களிலும் பரவியிருக்கும் இணைய ஊடகங்கள் பொய்மைகளை மூடியிருக்கும் திரைகள் மீதான துகிலுரிப்புகளை இடையறாது நிகழ்த்தியபடியேதான் இருக்கின்றன.

உலகின் பொலிஸ்காரனாக - காவல் நாயாக - தன்னைத்தானே முடிசூடிக் கொண்ட அமெரிக்காவையே மூக்குடையச் செய்தது இணைய ஊடகமான விக்கிலீக்ஸ். தொழில்நுட்பத் துறையின் தன்னை மிஞ்ச வேறெவரும் இல்லை என்ற நினைப்பில் அமெரிக்கா ஆடிய அழுகுணி ஆட்டங்களை இணையத்தின் துணையோடு உலகெங்கும் புட்டுப்புட்டு வைத்த யூலியன் அசாஞ்சேயை இன்று வெறியோடு வேட்டையாடத் துரத்தி வருகிறது அமெரிக்கா.

இதேபோன்று வன்னியில் இறுதிக் கட்டப் போரின் போது நிகழ்ந்த அராஜகங்களை, மூடப்பட்ட நிலத்துக் குள் யாருக்கும் தெரியாமல் புதைந்து போன கொடூரத்தை பட்டவர்த்தனமாக்கியவை ஊடகங்கள்தான். அவற்றின் மூலம் உருப்பெற்ற அரச எதிர்ப்பலையால் உண்டான உணர்வுகளின் விளைவுதான் இன்று ஆட்சியாளர்களே விக்கித்துப் போகும் அளவுக்கு வெளிவந்துள்ள ஐ.நா.நிபுணர் குழுவின் அறிக்கை. போரில் ஈடுபட்டிருந்த படையினரின் கமராக்களும், செல்போன்களும் 'கிளிக்' செய்திருந்த காட்சிகளையும், இறுதிக் கட்டத்தின்போது சாவுக்குள் சிக்குண்டிருந்து மீண்ட மக்களின் சாட்சியங்களையும் ஏதோ ஒரு வகையில் பெற்றுக்கொண்ட ஊடகங்கள் அவற்றைப் பகிரங்கப்படுத்தியதால்தான் இந்தளவு தூரத்துக்கு ஐ.நாவுக்கே ரோசம் பொத்துக்கொண்டு வந்து நிபுணர் குழுவை நியமித்தது. அதிலும் தனியே தமிழர் சார் ஊடகங்கள் மாத்திரமல்லாது 'அல்-ஜசீரா', 'சனல்-4' போன்ற சர்வதேச ஊடகங்களும் வன்னிப் போரின் இறுதியில் நிகழ்ந்த கோரங்களை வெளிக் கொணர்வதில் பெரும்பங் காற்றியிருந்தன. ''ஆனாலும் ஊடகங்கள் என்னதான் உரக்கக்கத்தினாலும் எங்கள் வாழ்வு விடியவா போகிறது?'' என்று பலரும் ஏக்கப் பெருமூச்சு விடக்கூடும். அவர்களுக்கெல்லாம் டுனிசியாவிலும் எகிப்திலும் நிகழ்ந்த கதை ஒரு நம்பிக்கையை ஊடகங்கள் மீது உண்டுபண்ணலாம்.

அதேபோல இந்த நூற்றாண்டின் ஜனநாயக அதிசயம் என வர்ணிக்கப்படுகின்ற டுனிசியா, எகிப்து போன்ற நாடுகளில் நிகழ்ந்த ஆட்சி மாற்றங்களுக்கு அடிகோலியவையும் ஊடகங்கள்தான். அதிலும் இளைய சமுதாயத்தை சோம்பேறிகளாகவும், மர்மமான பாலியல் புதைகுழிக்குள் வீழ்த்துபவையாகவும் பலராலும் நோக்கப்பட்ட சமூகத் தளங்கள் ஊடாகவே இந்த ஆட்சி மாற்றத்துக்கான அறைகூவல் விடுக்கப்பட்டது.

## ஒடுகாலி

குறிப்பாக டுனிஷியாவில் சர்வாதிகார ஆட்சி முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் அதேபோன்ற சர்வதி காரத்தின் நிழல் மூடியிருந்த எகிப்தில், '' டுனிஷியா போன்ற நிலை எகிப்திலும் தோன்றுவதற்கு இதுவே தருணம். மாற்றமொன்றை விரும்புவோர் எம்மோடு இணைந்து கொள்ளுங்கள்'' என்று ஒரு பெண் தன்னுடைய 'பேஸ் புக்' பக்கத்தின் ஊடாக பதிவுசெய்த கருத்து பற்றியெரியும் நெருப்பாகப் பரவி இன்று எகிப்தில் முபாரக்கின் சர்வாதிகார ஆட்சியையே சுட்டுப்பொசுக்கியுள்ளது.

அண்மையில் இலங்கையில் 'பேஸ் புக்' பாவனையைத் தடை செய்வது பற்றி அரசு ஆலோசித்தது. சில வேளைகளில் எகிப்து நிலைமை இங்கும் தொற்றக்கூடும் என்ற பயம் தான் இதற்குக் காரணமோ தெரியவில்லை. உண்மைகள் எப்போதுமே சுடத்தான் செய்யும். அதனால் தானோ என்னவோ உண்மைகளைச் சொல்கின்ற ஊடகவியலாளர்களும் சுடப்படுகிறார்கள்.

எனினும் பொய்மைகளின் திரைகளைக் களைந்து உண்மைகளை வெளிப்படுத்துவதற்காக ஊடகவியலா ளர்கள் புதிது புதிதான தளங்களின் ஊடாக வந்து கொண்டே இருப்பார்கள். ஊடக சுதந்திரதினம் அனுஷ்டிக்கப்படும் இத் தருணத்தில் பகவத்கீதையில் வருகின்ற வாக்கியங்களே நினைவுக்கு வருகின்றன.

''எங்கெல்லாம் அதர்மம் தலை தூக்குகிறதோ அங்கெல்லாம் நான் அவதரிப்பேன்''

*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா. செயலாளர் நாயகத்திடம் நிபுணர் குழுவினர் வழங்கிய அறிக்கை

பகுதி - 04

32) தமிழீழ விடுதலைப் புலிகள் தற்கொலைக் குண்டுத் தாக்குலைத் தோற்றுவித்து. இராணுவ, அரசியல் மற்றும் சிவில் இலக்குகளுக்கு எதிராக அதனைப் பிரயோகித்தது. இந்திய பிரதம மந்திரி ராஜீவ்காந்தி (1991) அத்துடன் இலங்கை ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச (1993) மற்றும் அதிக எண்ணிக்கையிலான இலங்கை அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மிதவாதப் போக்குடைய தமிழ் அரசியல் தலைவர்களின் கொலைகளுக்கு ஆண் மற்றும் பெண் தமிழீழ விடுதலைப்புலிகளின் தற்கொலைக் குண்டுதாரிகள் பொறுப்பாகவிருந்தனர். அநேகமான சந்தர்ப்பங்களில் பல பொதுமக்களின் உயிர்களைப் பறித்த பொருளாதார மற்றும் சமய இலக்குகள் மீதும் அது தற்கொலைத் தாக்குதல்களை மேற்கொண்டது. தமிழீழ விடுதலைப் புலிகள் புறந்தள்ளும் அரசியலைப் பின்பற்றியதோடு, 1990 ஆம் ஆண்டில் வடக்கில் தம் வீடுகளிலிருந்து முஸ்லிம் மக்களைத் துரத்தியதோடு, அதன் கட்டுப்பாட்டில் இருந்த எல்லைக் கிராமங்களில் வசித்த சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களைப் படுகொலை செய்தது. தமிழ் மக்களைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்காக அதிகமாக வன்முறை, அச்சுறுத்தல் மற்றும் பயமுறுத்தலை தமிழீழ விடுதலைப் புலிகள் பிரயோகித்தது. வலுக்கட்டாயமாக ஆள்சேர்ப்பதில், சிறுவர்கள், சிறுமியர் உள்ளிட்ட வயது குறைந்தவர்களை படைவீரர்களாகப் பாவிப்பதில் தமிழீழ விடுதலைப் புலிகள் ஈடுபட்டதும் தெரிந்தவிடயமே. அதன் நடை முறை காரணமாக கனடா, ஐரோப்பிய ஒன்றியம், இந்தியா, ஐக்கிய இராச்சியம் மற்றும் ஐக்கிய அமெரிக்கக் குடியரசு ஆகியவற்றை உள்ளிட்ட நாடுகள் இவ்வமைப்பைத் தடை செய்ததோடு, 2001 செப்ரெம்பர் 11 இன் பின்னர் தடைசெய்வது மேலும் தீவிரமடைந்தது.

33) 1990 ஆம் ஆண்டுகள் தொடக்கம் மே 2009 வரை தமிழீழ விடுதலைப் புலிகள் இலங்கையின் வடக்கிலும் கிழக்கிலும் பாரிய நிலப்பரப்பினை தன் ஆதிக்கத்தின் கீழ் வைத்திருந்ததோடு, அரச படையினரும் தமிழீழ விடு தலைப் புலியினரும் பிரதேசத்தின் கட்டுப்பாட்டுக்காக போட்டியிட்ட போது, நாளடைவில் இந்த எல்லைக்கோடு மாற்ற மடைந்தது. நடப்பிலுள்ள ஒரு தேசத்தை அது செயற்படுத்தி, தானே அது என்ற தோற்றத்தை முன்வைக்க முனைந்தது.

இதனை நோக்காகக்கொண்டு நன்கு வடிவமைக்கப்பட்ட சர்வதேச உபாயம் ஒன்றை அது அபிவிருத்தி செய்த தோடு, தன் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்தில் அதன் காவல் அமைப்பு, சிறைச்சாலைகள், நீதி மன்றங்கள், உள்வரவுத் திணைக்களம், வங்கிகள் மற்றும் சில சமூக சேவைகள் ஆகியவற்றை நிறுவியது. தரை, வான் மற்றும் கடல் திறன் கொண்ட முன்னேறியதொரு இராணுவத்தையும் அது கட்டியெழுப்பியதோடு, விரிவானதொரு உளவு பார்க்கும் அமைப் பின் உதவியுடன் கெரில்லா மற்றும் பாரம் பரிய நடை முறைகளையும் மேற்கொண்டது.

34) வன்முறை மற்றும் அரச அடக்குமுறை காரணமாக அதிக எண்ணிக்கையிலான தமிழர்கள் மற்றும் ஏனையோர் சிறந்த பொருளாதார சந்தர்ப்பங்களுக்காக வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்ததால் இலங்கையின் புலம் பெயர்ந்த தமிழ் சனத்தொகை உலகின் பல பாகங்களிலும் கிட்டத்தட்ட ஒரு மில்லியன் வரை 1980ஆம் ஆண்டுகள் முதல் வளர்ச்சியடைந்து புலம் பெயர்ந்தவர்கள் யுத்தம் நடைபெற்ற காலம் பூராவும், அவர்களுள் சிலர் ஏன் ஏது என்று கேட்காது தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு வழங்கி, யுத்தம் நடைபெற்ற முழுக் காலப்பகுதியலும் நிதிகளை வழங்கி, விடுதலைப்புலிகள் தவறிழைக்கவில்லை என வாதாடி முக்கியதொரு பங்கினை வகித்தனர். ஆயினும், ஆதரவு அனைத்தும் சுயமாகவே வழங்கப்படவில்லை. இலங்கைக்கு வெளியே அதிக எண்ணிக்கையிலான தமிழ் அகதிகள் வாழும் நாடுகளுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் அச்சுறுத்தலை உள்ளிட்ட அதன் நடைமுறைகளை விரிவாக்கி; அதனை தனிநாட்டுக்கான தமிழ் மக்களின் அபிலாசை என வருணனை செய்து அதனை அடை வதற்கான வழியாகப் பிரயோகித்தது. அது எவ்வித விமர்சனத்தையும் சகிக்காததோடு, விடுதலைப்புலிகளின் வன் செயல்களினால் பாதிக்கப்பட்டவர்கள் குரல் எழுப்புவதற்கான எந்தவொரு சந்தர்ப்பத்தையும் அளிக்கவில்லை.

(14)

ஆ. சட்டத்தின் நல்லாட்சி மற்றும் மனித உரிமைகள் படிப்படியாக அழிந்து போதல்.

35) இலங்கையின் 1978 ஆம் ஆண்டின் அரசியல் யாப்பு நாட்டின் கூறு படாத தன்மையை வலியுறுத்துவதோடு, தேசத்தின் தலைவர், அரசாங்கத்தின் தலைவர் மற்றும் ஆயுதப்படைகளின் தளபதியாக பதவி வகிக்கும் நிறைவேற்று ஜனாதிபதி ஒருவருக்குப் பரவலான மற்றும் குவிசார்ந்த அதிகாரங்களை வழங்குகிறது. மேலும், தனது வரையறைக்கு உட்பட்டவாறு ஜனாதிபதி எந்தவொரு அமைச்சுக்கும் தலைமை தாங்கலாம். தற்போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பாதுகாப்பு, நிதி மற்றும் திட்டமிடல், துறைமுகங்கள் மற்றும் விமானப் போக்குவரத்து, போக்கு வரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் ஆகிய ஐந்து அமைச்சுக்களுக்குப் பொறுப்பாகவுள்ளார். உயர் நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றம் ஆகியவற்றுக்கான தலைவர்களையும் நீதிபதிகளையும் நியமிப்பதற்கான ஜனாதிபதியின் அதிகாரத்தையும் அரசியல் யாப்பு நிலை நாட்டுகிறது. மேலும், நெருங்கிய குடும்பத்தினரை ஜனாதிபதி நியமிப்பதற்கான கட்டுப்பாடுகளும் இல்லை என்பதோடு, அத்தகைய தெரிவுகளைப் பாவிப்பதால் தற்போதைய அரசு உறவினர்களுக்குச் சலுகை அளிக்கிறது என்ற விமர்சனத்தை எதிர்நோக்குகிறது.

36) அவசரகாலச் சட்டத்தின் கீழான நீடிக்கப்பட்ட காலப்பகுதிகள், அரசியல் யாப்பு அனுமதித்த அவசரகால ஒழுங்கு விதிகளைப் பாவித்தல், ஜனாதிபதியின் அதிகாரங்களை மேலும் வலுப்படுத்தல், அது போன்று நீதித்துறை உள்ளிட்ட அரச நிறுவனங்களில் அரசியல் ஈடுபாடு அதிகரித்தல், அத்தோடு சுயாதீனமாகத் தட்டிக்கேட்பதை நலிவடையச் செய்தல், 1989 இல் சிறியதொரு இடைவெளியைத் த்விர 1983 முதல் 2001வரை மற்றும் மீண்டும் 2005 முதல் இன்று வரை அவசரகாலச் சட்ட ஆட்சி அமுலில் இருந்துவருகிறது. ஏனைய விடயங்களுள் தற்போது அமுலில் உள்ள அவசர கால ஒழுங்குவிதிகள் 1979 ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்துடன் சேர்ந்து அரசாங்கத்துக்கு அசாதாரணமான அதிகாரங்களை வழங்குவதோடு, அதிகாரத்தின் துஷ்பிரயோகம் மற்றும் உரிமைகள் மீறல்கள் பற்றி ஆராய்வதற்கான நீதிமன்றங்களின் ஆளுமையைக் கட்டுப்படுத்துகின்றன. ஏனைய சட்டங்களும், குறிப்பாக 1982 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க சட்ட விலக்கு உரிமைச் சட்டம் (1977 ஆகஸ்ட் முதல் 1988 டிசெம்பர் 16 வரைக்கும் ஏற்புடைத் தான்) பாரிய உரிமை மீறல்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கான அரசாங்கத்தின் கடமையை மிகுந்த அளவில் நலிவடையச் செய்துள்ளன. சட்டத்தை அமுல் செய்வதற்காக அல்லது வேறு விதமாக பொது மக்களின் அக்கறைக்காக நல்ல நோக்குடன் சட்டப்படி அல்லது சட்டவிரோதமாக எந்தவொரு நட வடிக்கை தொடர்பாகவும் எந்தவொரு அமைச்சர், இராணுவ அதிகாரி அல்லது அவர்கள் பணிப்பின் கீழ் செயற்படும் எந்தவொரு நபருக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுப்பதை இது தடை செய்கிறது. தண்டனையிலிருந்து விலக்கீட்டுரிமையை முறைசார்ந்ததாக்குவதன் மூலம், சட்ட விலக்கு உரிமைச் சட்டம் பயங்கரமானதொரு முன் மாதிரியை வழங்குகிறது.

37) அநேகமாக சூத்திரதார்கள் தண்டிக்கப்படாத, காணாமல்போதல்கள், சட்டத்துக்குப் புறம்பான கொலைகள் மற்றும் சித்திரவதை உள்ளிட்ட மனித உரிமைகள் மீறல்கள், அத்தகைய துஷ்பிரயோகங்களுக்கு எதிரான முறைசார்ந்த சட்ட மற்றும் அரசியலமைப்பின் கீழான பாதுகாப்புக்கள் இருந்த போதிலும், நேருவதற்கான சாதகமான சூழலை உருவாக்குவதற்கு இந்நடை முறைகள் உதவியுள்ளன. சட்டத்திலான பாதுகாப்பு இருந்த போதிலும் கற்பழிப்பு, பாலியல் துன்புறுத்தல் மற்றும் பாலியலைப் பயன்படுத்தல் ஆகியவற்றை உள்ளிட்ட பாலியல் சார்ந்த வன்முறைகளும் சேர்ந்துள்ளன. வலுக்கட்டாயமான காணாமல்போதல்கள் மற்றும் ஏனைய் பாரிய மனித உரிமை மீறல்கள் பற்றிய தொடர்ச்சியான அமைப் பினை ஆராய்வதற்கான பல ஜனாதிபதி ஆணைக்குழுக்க்ள், சில சந்தர்ப்பங்களில், உண்மையைக் கண்டறியும் முக்கிய தேவையை நிறைவு செய்துள்ளன. ஆயினும், இவை எதுவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை வழங்குவது அல்லது மீறல்களின் முறைசார்ந்த தன்மை பற்றி நடவடிக்கை எடுக்க வழி வகுக்கவில்லை. இந்தநோக்கில் பார்க்கும் போது, தண்டனையிலிருந்து விலக்கீட்டுரிமைக்கு எதிராகச் செயற்படுவதற்கு, உண்மையை நிலைநாட்டுவதற்கு. அல்லது நீதி யைப் பெற்றுக்கொள் வதற்கு விசா ரணை ஆணைக் குழுக்கள் பயனுறு கருவியாக அமைய வில்லை.

38) அரசாங்க நிறுவனங்களைப் பலப்படுத்தி அவற்றின் சுயாதீனத் தன்மையை உறுதிப்படுத்துவதற்கான முயற்சிகள் 2001 இல் 17 ஆம் திருத்தத்தை நிறைவேற்றுவதற்கு வழிகோலின. ஜனாதிபதியின் அதிகாரங்களை அரசியல் யாப்பினூடாக கட்டுப்படுத்துவதை நோக்காக் கொண்ட அது பொலிஸ், தேர்தல்கள், மனித உரிமைகள், லஞ்சம், நிதி மற்றும் பொதச்சேவை ஆகியவற்றுக்கான ஆணைக் குழுக்களின் நியமனங்களை மேற்பார்வை செய்வதற்கான சுயாதீன அரசியல் யாப்புச் சபையை ஏற்படுத்தியது. மேலும் ஏனையவற்றுக்குப் புறம்பாக உயர்நீதித்துறை, நீதிச்சேவை ஆணைக் குழு மற்றும் சட்டமா அதிபர் நியமனங்களை இச்சபை அனுமதிக்கவேண்டியிருந்தது. அண்மைக்கால ஜனாதிபதிகள் எவ்விதப் பாரியவிளைவுமின்றி அதனைப் புறக்கணிக்க முடியுமென்பதால் இத்திருத்தம் ஒப்பீட்டளவில் பயனற்றதாகியுள்ளது. 2010 செப்ரெம்பரில் நாடாளுமன்றம் 18 ஆம் திருத்தத்தை நிறைவேற்றியது. அது 17 ஆம் திருத்தத்தை பயனற் றதாக்கியதோடு, அதன் சுயாதீனக் கட் டுப் பாடுகளுக்கான நடவடிக்கைகளை அகற்றி ஜனாதிபதியின் பதவிக் கால மட்டுப்படுத்தல்களை இல்லாமலாக்கியது.

39) மூன்று தசாப்தங்கள் நடைபெற்ற யுத்தம் காரணமாக சகல மக்களின் தீன நிறுவனங்கள் தரமிழந்து சட்டத் தின் நல்லாட்சி நலிவடைந்தது. தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான அதன் இறுதித் தாக்குதலுக்கு அரசாங்கம் தயாரிகிய போது, மனித உரிமைகள் மேலும் பாதிப்படைந்ததோடு, பல நடிவடிக்கைகள் காரணமாக சுயாதீன செய்தி அறிக்கை விடுத்தல், கருத்து வேறுபாடு மற்றும் மனிதாபிமான நடிவடிக்கைகளுக்குக் கூட மேலும் பாரிய கட்டுப்பாடுகள் ஏற்பட்டன. 2006 ஆரம்பத்தில் இருந்து, இராணுவ நடவடிக்கைகள் பற்றி அறிக்கை விடுக்கும் ஊடகவியலாளர்களுக்கு மேலும் கட்டுப்படுத்தும் வழிகாட்டல்களை பாதுகாப்புச் செயலாளர் விடுத்ததோடு, நடவடிக்கைகளை எதிர்மாறாகச் சித்திரிப்பது ஒரு குற்றச் செயலாக்கப்பட்டது. பிரபல்யமான தாக்குதல்கள், காணாமல் போதல்கள் மற்றும் கொலைகளை உள்ளிட்ட ஊடகங்கள் மீதான மேல திக தாக்கங்கள், அதிக அளவிலான சுயதணிக்கைக்கு வழிவகுத்தது. இனங்காணப்படாத மூலகங்களில் இருந்து உள்நாட்டு ஆர்வலர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு எதிரான அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டதோடு அதன் விளைவாக சிலர் நாட்டை விட்டுச் சென்றனர். விசா மறுத்தல் அதிகரிப்பு மற்றும் இரத்துச்செய்தல் சர்வதேச பணியாள்தொகுதியினர் மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களை அச்சத்துக் குள்ளாக்கியதோடு, சில சந்தர்ப்பங்களில், அவர்கள் தம் நிலைமைகளை விட்டுக் கொடுக்கவேண்டியும் ஏற்பட்டிருக்கலாம்.

(16)

### யுத்தத்தின் இறுதிக் கட்டங்களை நோக்கி

40) யுத்தத்தின் இறுதிக் கட்டங்களாக மாறுவதற்கான காட்சியை தோற்றுவிப்பதில் குறைந்த பட்சம் மூன்று மேலதிக காரணிகள் முக்கியமானவையாகும்.

41) முதலாவதாக, இலங்கை அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் நோர்வேயை அனுசரணையாளர்களாக பணி யாற்றுமாறு கேட்டுக்கொண்ட போது 2000ஆம் ஆண்டில் குறுகிய காலப் பகுதியொன்றிலான சமாதானச் செயற்பாடு ஆரம்பித்தது. பெப்ரவரி 2002 இல் நோர்வே தரப்பினர் போர் நிறுத்த உடன்படிக்கை யொன்றுக்கு இணங்கியதோடு, நேரடிப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு முன்பதாக ஆண், பெண் பாகுபாடு பற்றிய உப குழு வொன்றை நிறுவுவதன் மூலம் விடுதலைப்புலிகளின் பக்கத்தில் இருந்து மற்றும் தெற்கில் இருந்து பெண்கள் கலந்துரையாடுவது உள்ளிட்ட நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் பல நடவடிக்கைகளை மேற்கொண்டன. டோக்கியோ இணைத் தலைமைகள் ஊடாக (ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான், நோர்வே மற்றும் ஐக்கிய அமெரிக்கக் குடியரசு) அரசியல் முன்னேற்றத்தைக் கண்காணித்து மீளிணக்கப்பாடு மற்றும் அபிவிருத்தி பற்றிய டோக்கியோ மாநாட்டின் அடிப் படையில் (2003) சர்வதேச சமூகம் இச்செயற்பாட்டுக்கு ஆதரவுவழங்கியது. போர் நிறுத்த ஒப்பந்தத்தின் தரப்பினரால் ஏற்படுத்தப்பட்ட சுயாதீன சர்வதேசஅமைப்பான இலங்கைக் கண்காணிப்புத் தூதுக் குழு, அரசாங்கம் அதனைக்கலைத்து உத்தியோகபூர்வமாக போர் நிறுத்த ஒப்பந்தத்தை ரத்து செய்த 2008 ஜனவரி வரை கள மீறல்க்ளைக் கண்காணித்து வந்தது. ஏப்ரல் 2003 இல் தமிழீழ விடுதலைப்புலிகள் ஒரு தலைப்பட்சமாக போர் நிறுத்த ஒப்பந்தத்தை ரத்துசெய்திருந்தது.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகாமம் வலயமட்ட விளையாட்டுப் போட்டிகள் தெல்லிப்பழை கோட்டம் கிண்ணம் சுவீகரித்தது

வலி.வடக்கு,மே.3

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்ற விளையாட்டுப் போட்டிகளில் தெல்லிப்பழைக் கல்விக்கோட்டம் வலிகாமம் கல்வி வலயச் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நான்கு நாள்களாக இடம்பெற்ற போட்டிகளைத் தொடர்ந்து பரிசளிப்பு விழா வலிகாமம் கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் இ.இராஜேந்திரன் தலைமையில் இடம்பெற்றது.



இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட வலிகாமம் கல்வி வலய கணிதபாட உதவிக் கல்விப்பணிப்பாளர் க.சுகுமார் தம்பதியர் பரிசில்களை வழங்கிக் கௌரவித்தார்கள்.

முதலாம் இடத்தை 547 புள்ளிகளைப் பெற்று தெல்லிப்பழைக் கல்விக் கோட்டமும் இரண்டாம் இடத்தை 385 புள்ளிகளைப் பெற்று சண்டிலிப்பாய் கல்விக் கோட்டமும் மூன்றாம் இடத்தை 262 புள்ளிகளைப் பெற்று சங்கானைக் கல்விக் கோட்டமும் நான்காம் இடத்தை 201 புள்ளிகளைப் பெற்று உடுவில் கல்விக் கோட்டமும் பெற்றுக்கொண்டன. (ஐ-86)

# மாவட்ட மட்ட கராத்தே சுற்றுப்போட்டி ஜூனில்

யாழ்ப்பாணம், மே.3

யாழ்.மாவட்ட கராத்தே சங்கத்தினர் அடுத்தமாதம் 5ஆம் திகதி மாவட்ட மட்டத்தில் கராத்தே சுற்றுப் போட்டி ஒன்றை நடத்தவுள்ளனர்.

இந்தப் போட்டியில் 18 வயதுக்கு மேற்பட்ட இருபாலாரும் பங்குபற்ற முடியும் எனவும் இந்தப் போட்டியில் இருபாலரும் தங்களது கழகத்தின் பிரதம ஆசிரியர் ஊடாக விண்ணப்பத்தினை பூரணப்படுத்தி வடமராட்சிப் பகுதி வீர, வீராங்கனைகள் சென்சேய் இரட்ணசோதியிடமும்-

வலிகாமம் பகுதி வீர, வீராங்கனைகள் சென்சேய் ஜெந்தனிடமும்-

யாழ்.மாவட்ட வீர, வீராங்கனைகள் சென்சேய் துஷனந்தனிடமும்-

எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (ஐ-23)

# உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் மூன்று பிரிவுகளிலும் சம்பியன்

பருத்தித்துறை, மே 3

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் 3 பிரிவுகளிலும் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

ஆண்களுக்கான 15 வயது, 17வயது, 19 வயது ஆகிய மூன்று பிரிவுகளிலும் இக் கல்லூரி வெற்றியீட்டி சம்பியனாகத் தெரிவாகியுள்ளது. (ஐ-190)

# ஹென்றியரசர் முதலிடம்

வலிகாமம் வலயப் பாடசாலைகளுக்கிடையே நேற்று நடைபெற்ற உடற்பயிற்சிப் போட்டியில் ஆண்கள் பிரிவில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி முதலிடத்தைத் தட்டிக் கொண்டது.

இந்தப் போட்டி நேற்றுச் சுன்னாகம் ஸ்கந்தா மைதானத்தில் நடைபெற்றது. இரண்டாமிடத்தை மயிலணி றோ.க.வித்தியாலயமும், மூன்றாமிடத்தை சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியும் பெற்றுக்கொண்டன. பெண்களுக்கான போட்டியில் மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி முதலாமிடத்தையும் இளவாலை கன்னியர் ம.வி.இரண்டாமிடத்தையும் பெற்றுக்கொண்டன. (த-86)

# அமரருக்கு அஞ்சலி



**பரம்சோதி தில்லைநாதன்**

*(முன்னாள் முகாமையாளர் - ஹற்றன் நஷனல் வங்கி, மன்னார்)*

யாழ்.இந்துக் கல்லூரியின் புகழ்பூத்த மாணவன் மூத்தசாரணன் (Queens Scout), துடுப்பாட்ட வீரன், உதைபந்தாட்ட அணியை அலங்கரித்தவன், மாணவ முதல்வன் பரம்சோதி தில்லைநாதன் இன்று அமரராகிவிட்டார். பழைய மாணவர் சங்கக் கொழும்புக் கிளைச் செயலராக இருந்து கல்லூரிக்கு உதவியவர். அமரரின் ஆத்மா சாந்தி பெற எல்லாம் வல்ல ஞான வைரவப் பெருமானைப் பிரார்த்தித்து எமது அஞ்சலியைச் சமர்ப்பிக்கின்றோம்.

*யாழ்.இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்.* *யாழ்.இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்.*

# ஏழாம் ஆண்டு நினைவலைகளில்



அமரர்

**தில்லைநாதன் கெங்காதரன்**

(உரிமையாளர் - தரன் மரக்காலை, கொக்குவில்)

அன்பின் ஆசானாகவும் பண்பின் பகலவனாகவும்
ஏக்கத்தின் ஏகலைவனாகவும் பாசத்தின் காவலனாகவும்
நினைவெல்லாம் நிழலாக எம் துன்பத்திலும் இன்பத்திலும்
எம்மை வழிநடத்திய எம் குல தர்மசீலனே!
இன்று நீர் எம்மை விட்டுப் பிரிந்து ஆண்டுகள்
ஏழு ஆனதன் மாயம்தான் என்னவோ
எம்மோடு மீண்டும் ஒரு கணம் வாழ்ந்து
செல்லமாட்டீரோ - என
எண்ணியே நித்தமும் உன் நினைவலைகளால்
அடிபணிகின்றோம் ஐயா!

அன்னை மடியில்
20.08.1970
இறைவன் அடியில்
03.05.2004

சம்பியன் லேன்.
கொக்குவில்.

என்றும் உமது நினைவுகளுடன்,
**குடும்பத்தினர்.**

# பாடசாலைகளுக்கிடையிலான மாவட்ட இறுதிப் போட்டி நாளை

வலி.வடக்கு, மே 3

யாழ்.மாவட்ட கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான பெண்களுக்கான எல்லே போட்டிகள் நாளை புதன்கிழமை காலை 8.30 மணிக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி தொழில்நுட்ப நிறுவன மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இப்போட்டிகளில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

வலிகாமம் கல்வி வலயத் தைச் சேர்ந்த சுழிபுரம் விக் ரோறியாக் கல்லூரி, இளவாலை புனித கன்னியர்மடம் வித்தியாலயம், அளவெட்டி அருணோதயாக் கல்லூரி.

யாழ்ப்பாணம் கல்வி வலயத்தைச் சேர்ந்த வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை, குருநகர் சென்.திரேசா மகளிர் கல்லூரி.

தீவக கல்வி வலயத்தைச் சேர்ந்த நெடுந்தீவு றோமன் கத்தோலிக்க மகளிர் கல்லூரி, காரைநகர் கலாநிதி தியாகராசா மகா வித்தியாலயம்.

வடமராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த வடமராட்சி மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, மணற்காடு றோமன் கத்தோலிக்கதமிழ்க் கலவன் பாடசாலை, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம். (ஐ-86)

# சென்.அன்ரனிஸின் சுற்றுப்போட்டி நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம்,மே 3

பாஷையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்தின் 75 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி மாவட்ட மட்டத்திலான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி நாளை புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்குப் பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் ஆரம்பமாகின்றது. சென்.மைக்கல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கொற்றாவத்தை றேஞ்சஸ் விளையாட்டுக் கழக அணி மோதுகின்றது. (ஐ-23)

# மூன்று பிரிவுகளிலும் மெதடிஸ் சம்பியன்

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் மூன்று பிரிவுகளிலும் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை வெற்றியீட்டி சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் 15 வயதுப் பிரிவு, 17 வயதுப் பிரிவு, 19 வயதுப் பிரிவு ஆகியவற்றில் வெற்றியீட்டி சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. (ஐ-190)

## திருத்தி வாசிக்கவும்

24.04.2011 ஆம் திகதி 14ஆம் பக்கத்தில் வெளியான ஹோம் பினான்ஸ் நிறுவனத்தின் விளம்பரத்தில், அந்த நிறுவனத்தின் விலாசம்

The Liquidators
Home Finance Ltd.
c/o, SJMS Associates, No. 30-2/1, (2nd Floor) Galle Road, Colombo 06
T.P.: 2508874

## நன்றி! நன்றி! நன்றி!

எம்மால் 23.04.2011 ஆம் திகதி
**"சௌமிய பவனம்"**
*14, பொன்னையா ஒழுங்கை, ஆனைக்கோட்டை.*
என்ற முகவரியில் வைத்து இலவசமாக வழங்கப்பட்ட மூக்குக் கண்ணாடிகள் தொடர்பாக பயனாளிகள் அனைவரையும் 03.04.2011 ஆம் திகதி முற்றிலும் இலவசமாகப் பரிசோதனை செய்து உரிய சீட்டுக்களை வழங்கியமைக்காக இல.564, 566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள
**எரிக் கனேஸ்**
***பல், மூக்குக் கண்ணாடி அகம்***
ஸ்தாபனத்துக்கும் அதன் உரிமையாளர் திருமதி க.சித்திரா அவர்களுக்கும் ஊழியர்களுக்கும் எமது ஆழ்ந்த நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*திரு.திருமதி பாலசுப்பிரமணியம்.*

# அமுத சுரபியின் கண்ணீர் அஞ்சலி



அமரர்

**குமாரசுவாமி சாந்தலிங்கம்**

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபையின் ஆரம்ப காலத் தொண்டரும், கௌரவ செயலாளரும், நயினை பெருங்குளம் ஸ்ரீ மதுரை மீனாட்சி அம்மன் கோயில் அறங்காவலர் சபைத் தலைவரும், தலைசிறந்த தமிழறிஞரும் முன்னாள் நயினாதீவு ஸ்ரீ கணேச கனிஷ்ட மகாவித்தியாலய அதிபரும், தலைசிறந்த சமய, சமூகத் தொண்டருமாகிய ஸ்ரீமான் குமாரசுவாமி சாந்தலிங்கம் அவர்களின் மறைவையொட்டி எமது நிர்வாகம் கண்ணீர்த் துளிகளைக் காணிக்கையாக்குகின்றது. அமரரின் ஆத்ம சாந்திக்காக அன்னை ஸ்ரீ நாகபூஷணி அம்மனின் பாதக் கமலங்களைப் பணிகின்றோம்.

ஓம் சாந்தி!

*பிரதான சாலை,*
*நயினாதீவு - 02.*
*0213213575* (சி/578140)

*நிர்வாகம்,*
**ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராமாவில் முகாமில் தங்கியிருந்த 28 குடும்பங்கள் முல்லைத்தீவுக்கு

மிருசுவில் இராமாவில் நலன்புரி நிலையத்தில் தங்கியிருந்த 7 குடும்பங்களைச் சேர்ந்த 28 பேர் அவர்களின் சொந்த இடமான முல்லைத்தீவில் நேற்று மீள்குடியேற்றம் செய்யப்பட்டதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

வன்னியில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின் போது இடம்பெயர்ந்த மக்கள் மிருசுவில் இராமாவில் நலன்புரி நிலையத்தில் தங்கவைக்கப்பட்டிருந்தனர்.

வன்னிமற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் படிப்படியாக மக்களை மீள்குடியமர்த்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. இதனடிப்படையில் இராமாவில் முகாமில் தங்க வைக்கப்பட்டிருந்த முல்லைத்தீவு, கொக்கிளாய் மற்றும் கருநாட்டல் கேணி ஆகிய இடங்களைச் சொந்த இடமாகக் கொண்ட மக்களே நேற்று மீள்குடியமர்த்தப்பட்டனர் என அரச அதிபர் தெரிவித்தார். (த-15)

## ஆங்கிலம் கற்பது இலகுவானது.

ஆங்கில அறிவின் அவசியத்தை பாடசாலையில்,பரீட்சையில், நேர்முகத்தேர்வில்,பயணிக்கும்போது இன்னும் வாழ்வின் பல சந்தர்ப்பங்களிலும் உணர்ந்திருக்கிறீர்களா?

தனிப்பட்ட/குழு வகுப்புக்கள்*** அடிப்படையிலிருந்து ஆங்கிலம்

தனிப்பட்ட கவனிப்பில்,அலுப்புத்தராத சுவாரசியமான சர்வதேச கற்பித்தல் முறையில் உங்கள் நிலைக்கேற்ப ,நவீன மல்டிமீடியா மற்றும் செயன்முறைகள் மூலம் (உங்களுக்கு முன்னைய ஆங்கில வகுப்புக்களில் ஏற்பட்ட துன்பநிலை இல்லாமல்) கற்கலாம் என்றால்.....நீங்கள் தயாரா ?.

14 வயதிலிருந்து 60 வயது வரை அனைவர்க்கும்
Local and UK Certificates for Each Level

மாணவர்கள்,தொழில் புரிவோர்க்கான வகுப்புக்கள்

**City and Guilds UK Approved Centre in Jaffna !**

ESOL L1
ESOL L2
ESOL L3
Spoken English(KU/C&G) புதிய பிரிவுகள் விரைவில்..
IELTS/A1/B1/B2

எமது எளிமையான கற்பித்தல் முறை நீங்கள் எந்த நிலையிலிருந்தாலும்.. முன்னேற்றும்..ஒருமுறை வந்து பாருங்கள்.

பேசலாம் வாங்க !

City & Guilds Approved Centre

Web Site with full info: WWW.KUGROUP.INFO

இலவச நேரடி கலந்துரையாடலும் நெறிப்படுத்தலும் தற்போது வழங்கப்படுகிறது சந்திக்கும் நேர ஒதிக்கீட்டுக்கு அழையுங்கள்.

✆ 0776458253/0213208342 புதிய பிரிவுகள் ஆரம்பம்

**Knowledge Universe**
Malaysian College of Business and ICT

City and Guilds Qualifications are accepted by BRITISH COUNCIL

இல 75,கோவில் வீதி,யாழ்ப்பாணம்.(லாவா வைத்தியசாலை மேல்மாடி)

## போதையில் வாகனம் செலுத்திய நபருக்கு 7,500 ரூபா அபராதம்

மதுபோதையில் வாகனம் செலுத்திய நபருக்கும் சாரதிய அனுமதிப்பத்திரமின்றி பதிவு செய்யப்படாத வாகனம் செலுத்திய நபருக்கும் சாவகச்சேரி நீதிமன்றில் அபராதம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கினை விசாரித்த நீதிவான் மா.கணேசராசா மதுபோதையில் வாகனம் செலுத்திய நபருக்கு 7 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் மூன்று மாத சாதாரண சிறைத்தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டார்.

சாரதீய அனுமதிப் பத்திரமின்றி பதிவு செய்யப்படாத வாகனம் செலுத்திய நபருக்கு 3 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்தார் நீதிவான்.(ஓ-207)

## 31ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையில் ENRep திட்டவேலை மேற்பார்வையாளராகக் கடமையாற்றும் செல்வி தேவசாமி தர்சா அவர்களின் அன்பு மாமா

**கந்தையா குலசிங்கம்,**

அன்பு அம்மம்மா

**திருமதி காசிப்பிள்ளை சின்னத்தங்கம்**

ஆகிய இருவரும் 03.04.2011 அன்று இறைபதம் அடைந்தமையையிட்டு துயருறும் அன்னார்களது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவர்களது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பச்சிலைப்பள்ளி பிரதேச சபை,
பளை.
(சி/578161)
செயலாளர்,
உத்தியோகத்தர்கள்,

## கண்ணீர் அஞ்சலி

தர்மகர்த்தா சபை முன்னாள் உறுப்பினரும் முகாமையாளருமான

**கனகசபை திருநாவுக்கரசு**

அவர்களின் மறைவையிட்டு துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஸ்ரீ விஸ்வலிங்க மகா கணபதி கோயில்
(பன்றிக் கோட்டுப் பிள்ளையார்)
தர்மகர்த்தா சபை.

## காணவில்லை



விளானை, களபூமி, காரைநகரைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற V.C. சிவஞானத்தின் அன்புத் தாயார்

**திருமதி தங்கம்மா சுப்பிரமணியம்**

கடந்த 15.04.2011ஆம் திகதி தொடக்கம் காணவில்லை. இவர் இறுதியாக வெள்ளை நிறச் சேலையும், வெள்ளை நிறச் சட்டையும் அணிந்திருந்தார். இவர் பற்றிய தகவல்களினை அறிந்திருப்பின் கீழ்க் கண்ட தொலைபேசி எண்களுடன் தொடர்பு கொள்ளுமாறு அன்பாகக் கேட்டுக்கொள்கின்றேன். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

விளானை, களபூமி,
காரைநகர்.

தகவல்:
சிவஞானம் கபிலன்
0778329499, 0773611208

## மரண அறிவித்தல்கள்

### திருமதி தம்பையா இராசலட்சுமி



சாவகச்சேரி, சங்கத்தானை, மீனாட்சி அம்மன் கோயில் வீதியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி தம்பையா இராசலட்சுமி கடந்த 01.05.2011 ஞாயிற்றுக்கிழமை மதியம் இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரைப்பத்தர் - அன்னம்மா தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற தம்பையாபத்தரின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான இாமலிங்கபத்தர்- அன்னம்மா தம்பதியரின் மருமகளும், தங்கராசா (உரிமையாளர் -சிவா ஜூவெல்லறி,சாவகச்சேரி) அவர்களின் சகோதரியும், மங்கையர்க்கரசி(அவுஸ்திரேலியா), காலஞ்சென்ற சிவராமலிங்கம் மற்றும் சிவப்பிரகாசம் (அவுஸ்திரேலியா), சொர்ணலட்சுமி, காலஞ்சென்ற பிரேமாவதி மற்றும் சந்திரன், நடேஸ்வரன்(வரன் நகைமாளிகை, சாவகச்சேரி), சரோஜா, கௌரி ஆகியோரின் அன்புத் தாயும், தில்லைராசன்(அவுஸ்திரேலியா), இந்திராணி (அவுஸ்திரேலியா), ராஜ்மோகன், ஸ்ரீபதி, புஸ்பலதா, பாலச்சந்திரன், கோமகன் ஆகியோரின் அன்பு மாமியாரும், தீபா, மாதுளன், மாதங்கன், மாதீபன்(அவுஸ்திரேலியா), நிரஞ்சனரூபன், கோகிலரூபன், கோகுலன், கஜவாணி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.05.2011) புதன்கிழமை பி.ப 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மீனாட்சி அம்மன் கோயிலடி,
சங்கத்தானை, சாவகச்சேரி.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

### திருமதி. திலகவதி தியாகராசா

ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தியாகராசா திலகவதி(திலகம்) 30.04.2011 அன்று இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசசுந்தரம் -ஞானநாயகம் தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும் காலஞ்சென்ற தியாகராசாவின் அன்பு மனைவியும் வேதநாயகி(வேதம்) ஞானாம்பிகை (ஞானம்) சகுந்தலாதேவி(மல்லி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் கி.நித்தியகல்யாணி(கனடா),சி.மைதிலி(பிரான்ஸ்),ஜெ.இந்துமதி(பிரான்ஸ்), மு.கமலவேணி (ஆசிரியர், யா/ஏழாலை ஸ்ரீ முருகன் வித்) ஆகியோரின் அன்புத்தாயாரும் கிருபநேசன்(கனடா), சிவகுமார் (பிரான்ஸ்), காலஞ்சென்ற ஜெய தேவிபாலன் மற்றும் முரளி மோகன் (அதிபர், யா/உடுவில் அ.மி.த.க பாடசாலை) ஆகியோரின் அன்பு மாமியும் மிதுஜனா, தரங்கிதா, கீர்த்தனா, மாதுர்யா, மிருணாளன், மாதுளா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.05.2011) செவ்வாய்க்கிழமை மு.ப 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நில்லைவாசம், ஏழாலை மேற்கு,
ஏழாலை
(3773)

தகவல்:
செ.முரளிமோகன்
(மருமகன்).

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



பிறப்பு
27.09.1953

இறப்பு
03.04.2011

**அப்பாத்துரை கணேசலிங்கம்**

(சத்தியா ஸ்ரோர்ஸ் உரிமையாளர், செட்டியார் மடம், வட்டுக்கோட்டை)

கடந்த 03.04.2011 அன்று இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (03.05.2011) செவ்வாய்க்கிழமை ந.ப. 12 மணி அளவில் அவரின் இல்லத்தில் இடம்பெறும். அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அவரின் ஆத்மா சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறுகின்ற மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். அத்துடன் அவரின் இழப்பினை அறிந்து எமது துயரில் பங்குகொண்டு உதவிகள் புரிந்த அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி!!!

கட்குழி றோட், அராலி தெற்கு,
வட்டுக்கோட்டை.
(சி/578162) குடும்பத்தினர்.

## விற்பனைக்கு

2 ஜெனரேற்றர், - D-பிரிஜ், பிரிஜ், மைக்ரோ அவண், அவண் விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 0776258317.

## விற்பனைக்கு

2000 சதுர அடி கொண்ட நல்ல நிலையில் உள்ள சட்டறிங் விற்பனைக்கு உண்டு.
விரும்பியவர்கள் தொடர்புக்கு:
0773520309, 0723354292

## வீசா சேவை

U.K. Student Visa புதிய நடைமுறைக்கு அமைய இலகுவாக பெறுவதற்கான ஆலோசனை மற்றும் ஆவணங்கள் தயார் செய்தல். Financial, Sponsorship மற்றும் U.S.A., Malaysia, India போன்ற நாடுகளுக்கான Visa ஏற்பாடுகள்.தொடர்புகளுக்கு: 0779218444

## வர்த்தக சங்கத்துக்கு அலுவலக உதவியாளர் (Peon) தேவை - ஆண்

18 வயதுக்கு மேற்பட்டவர்கள் எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க முடியும்.
தொடர்பு: யாழ். வணிகர் கழகம்,
165, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222-8593, 021 222 2667


## நகைப் பிரியர்களுக்கு ஓர் நற்செய்தி!

அட்ஷய திருதியை திருவிழா எதிர்வரும் 06.05.2011 வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது

அன்றைய தினம் தங்க நகைகள் கொள்வனவு செய்வோருக்கு விசேட விலைக் கழிவில் விற்பனை செய்யப்படும். இவற்றுடன் நினைவுச் சிறப்புப் பரிசில்களும் எமது வாடிக்கைப் பெருமக்களுக்கு வழங்கவுள்ளோம் என்பதை மனமகிழ்வுடன் தெரியப்படுத்துகின்றோம்.

"உடன் விரையுங்கள்"

நவீன அழகிய தங்க ஆபரணங்களை உத்தரவாதத்துடனும், குறித்த தவணையிலும்பெற்றுக் கொள்ள எம்மிடம் வாருங்கள்.



2G ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
0212225644

**நியூ பிரியங்கா நகை மாளிகை**

இல.69, யாழ். வீதி,(கச்சேரி முன்பாக)கிளிநொச்சி. 0212285433, 0213208611

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## அமெரிக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளது.

பின்லேடன் கொல்லப்பட்டதை அடுத்து கொழும்பில் மட்டுமல்ல உலகின் அனைத்து நாடுகளிலும் உள்ள அமெரிக்கத் தூதரகங்களின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாக கொழும்பிலுள்ள அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர். (உ)

## பின்லேடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடக்கம் செய்துள்ளதாக அறிவித்துள்ளனர்.

சிறியதொரு அமெரிக்கப் படையணி- எந்தவித சேதமும் இல்லாமல் இந்தத் தாக்குதலை நடத்தி பின்லேடனைக் கொன்றதாகவும், பொதுமக்களுக்கு எந்த இழப்புமின்றி தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் அமெரிக்க அதிபர் ஒபாமா அறிவித்தார்.

பாகிஸ்தான் நேரப்படி திங்கள் அதிகாலையில் 40 நிமிடங்களே நீடித்த அந்த நடவடிக்கையின் பின்னர், மாளிகைக்குள் இருந்த பின்லேடனும் மற்றவர்களும் கொல்லப்பட்டனர்.

பின்லேடனின் தலையில் துப்பாக்கிச் சூட்டுக்காயம் இருந்தது.

இந்தச் சண்டையின் போது தாகுதலுக்குப் பயன்படுத்தப்பட்ட அமெரிக்க ஹெலிக்கொப்டர் ஒன்று தொழில்நுட்பக் கோளாறினால் வீழ்ந்ததாகவும், அதை தாம் அழித்து விட்டுத் தளம் திரும்பியதாகவும் அமெரிக்கப் படையினர் கூறுகின்றனர்.

ஆனால், கீழே இருந்து நடத்தப்பட்ட தாக்குதலிலேயே அந்த ஹெலி வீழ்ந்து நொருங்கியதாக அங்குள்ள ஒருவர் 'ரொய்ட்டர்' செய்தி நிறுவனத்திடம் கூறியுள்ளார்.

இதன் பின்னர் ஏனைய ஹெலிகளில் அமெரிக்கப் படையினர் பின்லேடனின் உடலுடன் தளம் திரும்பினர்.

மரபணு உள்ளிட்ட பல பரிசோதனைகள் செய்யப்பட்டு, அந்த உடல் பின்லேடனுடையதுதான் என்று உறுதி செய்யப்பட்டது.

இறுதியில் அது கடலில் அடக்கம் செய்யப்பட்டதாக அமெரிக்கா கூறியுள்ளது.

இந்தத் தாக்குதல் நடக்கப் போவது பற்றி அமெரிக்க அதிகாரிகள் சிலர் மட்டுமே அறிந்திருந்தனர். பாகிஸ்தானுக்கு இது பற்றி அமெரிக்கா மூச்சுக்கூட விடவில்லை என்று அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சு நேற்று வெளியிட்ட அறிக்கையில், பின்லேடன் கொல்லப்பட்டமையை உறுதிப்படுத்தியது.

''உளவுப் படையின் இரகசிய நடவடிக்கை ஒன்றில் பின்லேடன் கொல்லப்பட்டார். அபோதாபாத் பகுதியில் (02.05.2011) நேற்றுக் காலை தாக்குதல் இடம்பெற்றது. இந்தத் தாக்குதல் அமெரிக்கப் படையினரால் நடத்தப்பட்டது. உலகில் எப்பகுதியில் ஒஸாமா பின்லேடன் கண்டுபிடிக்கப்பட்டாலும் அவரை கைது செய்யும் அல்லது கொல்லும் நடவடிக்கையில் அமெரிக்கப் படைகளே நேரடியாக ஈடுபடும் என்ற அமெரிக்கக் கொள்கையின் அடிப்படையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது'' என்று பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சின் தகவல் ஒன்று கூறியது.

நியுயோர்க் இரட்டைக் கோபுரங்கள் மீது 2001 செப்ரெம்பர் 11ஆம் திகதி தாக்குதல் நடத்தி, 3,000க்கும் அதிகமான பொது மக்களைக் கொன்றதை அடுத்து அமெரிக்காவினால் தேடப்படுவோரில் முதன்மையானவராகப் பின்லேடன் இருந்து வந்தார்.

அல்-குவைதா தீவிரவாத அமைப்பை நிறுவி மேற்குலகுக்கு எதிராக ஜிகாத் புனிதப் போரை அவர் அறிவித்திருந்தார்.

இவரது தலைக்கு 25 மில்லியன் டொலரை அமெரிக்கா விலையாக அறிவித்திருந்தது. (உ)

## ஜூன் மாத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் செயலகம் விரைவில் அறிவிக்கும். அதன் பின்னர் வேட்பாளர்கள் தமது பிரசாரங்களை மேற்கொள்ள முடியும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (உ-சி)

## மாதகலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் மூன்று அல்லது நான்கு நாள்களுக்கு முன்னர் இறந்திருக்க வேண்டும் என்றும் அவர்கள் கூறியுள்ளனர். அடையாளம் காணக்கூடிய வகையில் உடைகளோ அல்லது வேறு தடயங்களோ இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை, கடற்படை அதிகாரிகளும் வந்து சடலத்தைப் பார்வையிட்டனர்.

மார்ச் 29ஆம் திகதி சுண்டிக்குளம் கடற்பகுதியில் காணாமல்போன கடற்படையினருள் ஒருவருடையதாக இருக்கலாமா என்ற சந்தேகத்திலேயே அவர்கள் சடலத்தைப் பார்வையிட்டனர் என்று கூறப்பட்டது. (உ)

## சிறைக் கைதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒருவர் வந்து, நீதி கிடைக்கும் என உறுதி அளிக்கும் வரை உண்ணா விரதம் இருப்பேன் என உறுதியாகக் கூறியுள்ளதாக சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்றுடன் அவர் எட்டாவது நாளாக உண்ணாவிரதம் இருந்து வந்ததால் அவரின் உடல் நிலை மிகவும் மோசமடைந்துள்ளது என்றும் அதனால் வைத்திய சாலையில் அவருக்கு சேலைன் ஏற்றப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

ஆனால், பிரஸ்தாப கைதி நேற்று மாலை மீண்டும் சிறைச்சாலை அறைக்கு வந்து தண்ணீர், ஆகாரம் எதுவும் இன்றி தொடர்ந்தும் தனது நிலையில் உறுதியாக இருக்கின்றார் என்று சிறைச்சாலை வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-சி)

## கொழும்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனது பயணத்தை முடித்துக் கொண்டு கொழும்பு வந்த பிளேக், முதன் முதலில் கூட்டமைப்புப் பிரதிநிதிகளையே சந்தித்துக் கலந்துரையாடினார்.

பிளேக் இன்று, வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், பாதுகாப்பு அமைச்சின் செயலளார் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோரையும் அரச தரப்பு மற்றும் எதிர்த் தரப்பு முக்கிய பிர முகர்களைச் சந்தித்து பேச்சு நடத்த உள்ளார்.

இந்தப் பயணத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ பிளேக்கைச் சந்திக்க மாட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பயணத்தின் போது கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட் டங்களுக்கும் யுஎஸ் எய்ட் நிறுவனத்தால் மேற்கொள்ளப்படும் திட்டங்களைப் பார்வையிடும் நோக்கோடு அவர் செல்வார் என்று எதிர்பார்க் கப்படுகிறது. அந்தச் சந்தர்ப்பத்தில் உள்ளூர் தலைவர்களுடனும் அவர் அரசியல் நிலை குறித்துக் கலந்துரையாடக் கூடும். (உ)

## பால் மா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகார சபை தெரிவித்துள்ளது.

பால்மா உற்பத்தியாளர்கள் பால்மாவின் விலையை அதிகரிக்க வேண்டும் என அண்மையில் அதிகார சபைக்கு வேண்டுகோள் விடுத்தனர்.

இதனையடுத்து, நேற்று நுகர்வோர் அதிகார சபையில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலிலேயே இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வதற்கான நடவடிக்கையின் போது சிறு பிள்ளையும் கொலை செய்யப்பட நேர்ந்தமை குறித்து தாம் மனம் வருந்தினாலும், ஒரு பயங்கரவாத அமைப்பின் தலைவரான அவர் கொலை செய்யப்பட்டமை குறித்து தாம் மகிழ்கிறார் எனவும், இதே போன்ற மகிழ்ச்சியை இரு வருடங்களுக்கு முன்னனர் விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் கொல்லப்பட்ட போதும் தாம் அடைந்தார் எனவும் அவர் கூறியுள்ளார்.

பின்லேடன், கொல்லப்பட்டது அல்-குவைதா மற்றும் பிற பயங்கரவாதக் குழுக்களுக்கு பெரும் அடியாக அமையும் என்று இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் வரவேற்றுள்ளார்.

அப்பாவி மக்களைக் கொன்று குவித்து, மனித சமுதாயத்துக்குப் பெரும் அச்சுறுத்தலாக விளங்கிக் கொண்டிருக்கும் இதுபோன்ற பயங்கரவாதக் குழுக்களை ஒழித்துக்கட்ட சர்வதேச சமூகம், குறிப்பாக பாகிஸ்தான் தீவிரமாக செயல்பட வேண்டும் என்று மன்மோகன் சிங் வலியுறுத்தியுள்ளார்.

இந்திய வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஒஸாமா கொல்லப்பட்டது பயங்கரவாதத்துக்கு எதிரான போரில் எட்டப்பட்டிருக்கும் வெற்றியின் ஒரு மைல்கல் என்று வரவேற்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## காணாமற்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புலனாய்வுப் பிரிவு (TID) ஆகியவற்றுக்கு பஸ்ஸில் அழைத்து வரப்பட்டனர்.

வெலிக்கடை சிறைச்சாலைக்கு நேற்றுப்பகல் 12 மணிக்கு அழைத்து வரப்பட்ட இவர்களில் சிறுவர்கள், ''கடத்தப்பட்ட என் அப்பாவை மீளத் தாருங்கள்'' என்ற வசனம் அடங்கிய சுலோக அட்டைகளை ஏந்தி நின்றனர். அத்துடன் பெண்கள் காணா மற்போன தங்களது பிள்ளைகளினதும், கணவனி னதும் புகைப் படங்களை ஏந்தியவாறு கண்ணீர் வடித்துக் கொண்டு நின்றனர்.

இதன் பின்னர் வெலிக்கடை சிறைச்சாலைக்கு முன்பாகப் பெற்றோரும், உறவினர்களும் தமது உறவுகளைப் பிரிந்த சோகத்தையும், வேதனையையும் கண்ணீர் மல்க ஊடகவியலாளர்களிடம் வெளிப்படுத்தினார்கள். பின்னர் சிறைச்சாலைக்குள் சென்று உறவுகளை இனம் கண்டுகொள்ள வரிசையாகக் காத்திருந்தனர். 'நாம் இலங்கையர்' அமைப்பின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர் உதுல் பிரேமரட்ண மற்றும் அந்த அமைப்பின் சட்டத்தரணியுடன் பெற்றோர், உறவினர்கள் மூன்று மூன்று பேராக உள்ளே சென்றனர். ஏனையோர் வரிசையாகக் கண்ணீருடன் காத்திருந்தனர்.

தமது உறவுகள் இங்காவது இருப்பார்களா என்ற கேள்வியுடன் வந்தவர்களில் சிலர் தமது உறவுகளை இனங்கண்டு கொள்ள முடியாதா என அங்கலாய்த்தவாறு காத்திருந்ததையும் காணக்கூடியதாக இருந்தது. அதனைத் தொடர்ந்து கொழும்பு, மருதானை இரகசியப் பொலிஸ் பிரிவுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். பின்னர் கடற்படைத் தலைமையகத்துக்கும் இவர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர். காணாமல் போனோர் மற்றும் கடத்தப்பட்டோரின் உறவினர்கள், பெற்றோர் ஆகியோரின் விவரங்களையும் அவர்களின் காணாமல் போன உறவு களின் விவரங்களையும் வெலிக்கடைச் சிறைச்சாலை, இரகசியப் பொலிஸ் பிரிவு, கடற்படைத்தலைமையகம் ஆகியவற்றில் 'நாம் இலங்கையர்' அமைப்பின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் உதுல் பிரேமரட்ண நேற்று சமர்ப்பித்தார்.


1 ஆவது பிறந்ததின வாழ்த்து

திரு.திருமதி சரவணா- டிலானி தம்பதியரின் செல்வப் புதல்வி பைரவி
தனது 1ஆவது பிறந்த தினத்தை இன்று (03.05.2011) செவ்வாய்க்கிழமை
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலியில் உள்ள தனது இல்லத்தில்
வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்.
இவரை, அப்பா, அம்மா, அண்ணா, அக்காமார், அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, பெரியப்பா, பெரியம்மா, மாமா, மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் அகிலத்தில் உள்ள அனைத்துச் செல்வங்களும் பெற்றுப் பல்லாண்டுகாலம் வாழ்க... வாழ்க... என வாழ்த்துகின்றார்கள்.




ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.
அன்புடன்
மாமா (டிக்ஷன்)
(49,21,25)



# மரண அறிவித்தல்



### கந்தன் நாகராசா

(இலங்கை பனை அபிவிருத்திச்சபை உற்பத்தி உத்தியோகத்தர், யாழ்ப்பாணம்)

நாவற்காடு, வரணியைப் பிறப்பிடமாகவும் வல்லிபுரக்குறிச்சியை வதிவிடமாகவும் கொண்ட கந்தன் நாகராசா நேற்று (02.05.2011) திங்கட்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தன்-பரமேஸ்வரி தம்பதியரின் மகனும் ஸ்ரீஸ்கந்தராசா - தவமணி தம்பதியரின் மருமகனும் சுதாஸாராகினியின் அன்புக் கணவரும் சுகுந்தா, சுஜீவன், சுமன்ராஜ், சுஜாந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (03.05.2011) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆனைவிழுந்தான் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வல்லிபுரக்குறிச்சி,
புலோலி தெற்கு.
(C/578214)
தகவல்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: admin@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் மழை பெய்வதற்கான சாத்தியம் உள்ளது.

# இந்திய அரசின் வீட்டுத் திட்டப் பணிகள் குடாநாட்டில் அடுத்த வாரம் ஆரம்பம்

## யாழ்.அரச அதிபர் நேற்றுத் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 3

இந்திய அரசின் நிதி உதவியில் மேற்கொள்ளப்படவுள்ள வீட்டுத்திட்டப் பணிகள் யாழ். மாவட்டத்தில் அடுத்தவாரமளவில் ஆரம்பிக்கப்படும் என்று யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

இந்தத் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் 7, 400 வீடுகள் கட்டப்பட்வுள்ளன.

இந்திய அரசின் வீட்டுத்திட்டப் பயனாளிகளின் பெயர்கள் தமக்குக் கிடைக்காமையினாலே குறித்த பணிகள் தாமதமடைந்து வருவதாக இந்தியத் தூதர் அண்மையில் தெரிவித்திருந்தார். இது தொடர்பாகக் கேட்டபோது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரச அதிபர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

நாம் பயனாளிகளின் பெயர் விவரங்களை அவர்களுக்கு சமர்ப்பித்து விட்டோம். அதனடிப்படையில் தற்போது வீட்டுத்திட்டப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

முன்னோடியாக புதிதாக 150 வீடுகளும், புனரமைப்பு என்ற வகையில் 2 ஆயிரம் வீடுகளும் மேலும் புதிதாக கட்டிக்கொடுக்கும் வகையில் 5 ஆயிரத்து 250 வீடுகளும் இந்தத் திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்படவுள்ளன.

பயனாளிகள் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட, பாதிக்கப்பட்ட, இடம்பெயர்ந்தவர்கள் என்ற அடிப்படையிலே தெரிவு செய்யப்பட்டனர் என்றார் அவர்.

இதேவேளை கடந்த நவம்பர் மாதம் 27 ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். எம்.கிருஷ்ணா இந்திய வீட்டுத் திட்டத்துக்கான அடிக்கல்லை நட்டு பணிகளை ஆரம்பித்து வைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-15)

# நேற்றைய விரிவுரைகளில் குறைந்த எண்ணிக்கை மாணவர்கள்

யாழ்ப்பாணம், மே 3

யாழ்.பல்கலைக்கழக நான்கு பீட மாணவர் ஒன்றியங்கள் இணைந்து மாணவர்களின் உரிமைகள் உறுதிப்படுத்தும் வரை விரிவுரைகளைப் புறக்கணிக்கப்போவதாகத் தெரிவித்த போதிலும் நேற்றைய தினம் மாணவர்கள் விரிவுரைகளில் கலந்துகொண்டனர். மாணவர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்த போதிலும் விரிவுரைகள் இடம்பெற்றன. குறிப்பாக அரசறிவியல், ஊடகக் கற்கை நெறி, கிறிஸ்தவ நாகரிகம் ஆகிய பாடங்களுக்கான விரிவுரைகள் நேற்று இடம்பெற்றுள்ளன. (ஒ-323)

# வன்னியில் சிங்கள குடியேற்றத்துக்காக இராணுவத்தின் பிடியில் பல பிரதேசங்கள்

## இதற்கு எதிராக குரல்கொடுக்க வேண்டும் என்கிறார் சிவசந்திரன்

யாழ்ப்பாணம், மே 3

சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்வதற்கு முன்னோடியாக வன்னிப் பகுதியில் அதிகளவான பிரதேசங்களை தற்போது இராணுவம் தமது தேவைகளுக்காக கையகப்படுத்தியுள்ளது. இந்த ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராக சமூக, சமய நிறுவனங்கள் குரல்கொடுக்க வேண்டும். இவ்வாறு தமிழரசுக் கட்சியின் பிரமுகரும் புவியியல் துறைப் பேராசியர் இரா.சிவசந்திரன் மேதின கூட்டத்தில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

யாழ். நகரிலுள்ள கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்ற மேதின நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கேட்டுக்கொண்டார்.

மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்ள அரசு திட்டமிட்டு வருகிறது.

கிழக்கில் அம்பாறை, திருகோணமலை ஆகிய பகுதியில் ஏற்கனவே சிங்களக் குடியேற்றங்கள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வவுனியாவிலும் 30 வீதமான சிங்கள குடியேற்றங்கள் இடம்பெற்றுள்ளன.

மன்னார் - பூநகரி வீதி (ஏ-32) நவீன முறையில் செப்பனிடப்பட்டு வருகிறது. அந்தப் பிரதேசத்தில் சிங்களக்குடியேற்றம் இடம்பெறுவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகம் உண்டு. பூநகரியில் மர முந்திரிகை செய்கைக்காக 2 ஆயிரம் பரப்பளவு நிலத்தை இராணுவம் கையகப்படுத்தியுள்ளது. மல்லாவி, துணுக்காய்ப் பகுதியில் விவசாயப்பண்ணைக்கு என அதிகளவு நிலத்தை இராணுவம் எடுத்துள்ளது. கிளிநொச்சி அறிவியல் நகரை இராணுவம் கையகப்படுத்தியுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 70 ஆயிரம் இராணுத்தினர் நிறுத்தப்பட்டுள்ளனர். அதே வேளை அங்கு 70 ஆயிரம் பொது மக்கள் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளனர். மக்களும் இராணுவமும் சம அளவில் உள்ளனர். இந்த நிலையில் அந்தப் பகுதியில் எப்படி மக்கள் நிம்மதியாக வாழ முடியும்.

எனவே வன்னிப் பெரு நிலப்பரப்பில் சிங்கள குடியேற்றங்களை மேற்கொள்ள முயற்சிப்பவர்களுக்கு எதிராகக் குரல் கொடுக்க வேண்டும். அந்தப் பகுதியில் அரச சார்பற்ற நிறுவனங்கள் சுதந்திரமாகச் சென்று பணியாற்ற அனுமதி கிடைக்க வேண்டும். இவற்றுக்காக பல நிறுவனங்கள், அமைப்புகள் உருவாகி குரல் கொடுக்க வேண்டும்.

அத்துடன் தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள் மறக்கப்பட முடியாதவை. தமிழ் மக்கள் தொடர்பான அனைத்து விடயங்களும் ஆவணப்படுத்தப்பட வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்தார். மற்றும் பலரும் உரையாற்றினர். (ஒ-எ-14)

# கிளிநொச்சியில் ஆன்மீக சொற்பொழிவு

கிளிநொச்சி, மே 3

யாழ்.சின்மயா மிஷன் நிறுவனத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் ஆன்மீகச் சொற்பொழிவு நிகழ்வுகள் இன்று கிளிநொச்சியில் இடம்பெறவுள்ளன.

இதற்கமைய காலை 8 மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரியில் ஆன்மீகமும் கல்வியும் எனும் தலைப்பிலும் முற்பகல் 11 மணிக்கு கிளிநொச்சி தர்மபுரம் மகா வித்தியாலயத்தில் ''உன்னால் முடியும்'' எனும் தலைப்பிலும் ஆன்மீகச் சொற்பொழிவுகள் இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து பிற்பகல் 3 மணிக்கு சின்மயா மகளிர் மன்றத்தின் ஏற்பாட்டில் உழவனூர் தர்மபுரம் கிராம மக்களுக்கான விசேட கலந்துரையாடல் நிகழ்வும் இடம்பெறும். (ஒ-313)

# ஏ-9 வீதி அகலிப்பு பணி ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 3

ஏ-9 பிரதான வீதியின் புனரமைப்பு மற்றும் அகலிப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கொடிகாமத்தில் இருந்து இந்த வீதியின் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்றுவருவதாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார். (த-26)

# வடக்கு ஆசிரிய இடமாற்றங்கள் ஆளுநரால் ரத்து

கடந்த மாதம் 25 ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்பட இருந்த ஆசிரிய இடமாற்றங்கள் அனைத்தும் வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியினால் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் பதில் செயலாளர் இ.ரவீந்திரன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தால் ஆசிரியர்களுக்கு வன்னி, யாழ்ப்பாணத்துக்கான இடமாற்றங்கள் வழங்கப்பட்டன. பின்னர் குறித்த இடமாற்றங்கள் ரத்துச் செய்யப்படுவதாக வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்திருந்தார்.

இதனால் யாழ்.மாவட்டத்துக்கு இடமாற்றம் வழங்கப்பட்டு பின்னர் அந்த இடமாற்றம் ரத்தானதால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் தொடர்பு கொண்டனர்.

இதனையடுத்து யாழ். மாவட்டத்துக்கு இடமாற்றம் பெற்ற ஆசியர்களை இடமாற்றம் பெற்ற இடங்களில் கையொப்பமிடலாம் என்று அமைச்சர் டக்ளஸ் தேவனந்தா தெரிவித்திருந்தார்.

இவ்வாறானதொரு நிலையிலேயே வடமாகாண ஆளுநரினால் குறித்த இடமாற்றங்கள் அனைத்தும் ரத்துச் செய்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இடமாற்றம் ரத்தாவதால் சகல ஆசிரியர்களும் தாம் கடமையாற்றிய முன்னைய இடங்களிலேயே தொடர்ந்தும் கடைமையாற்ற வேண்டும் எனவும் உடனடியாகவே அவர்களை தமது முன்னைய பாடசாலைகளில் கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபட வேண்டும் எனவும் ஆளுநரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-15)

# விரைவில் அரச வாகனங்களுக்கும் காப்புறுதி அவசியம்

கொழும்பு,மே3

அரச, இராணுவ மற்றும் பொலிஸ் வாகனங்களும் கட்டாயமாக வாகனக் காப்புறுதி செய்யும் விதத்தில் மோட்டார் போக்குவரத்து விதிகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட விருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது இந்த வாகனங்கள் யாவும் வாகனக் காப்புறுதி எதுவும் பெற்றுக்கொள்ளாத நிலையில் பல வருடங்களாக வீதிகளில் ஓடிக்கொண்டிருக்கின்றன.

தற்போதுள்ள மோட்டார் போக்குவரத்து விதிகள் மிகப் பழமையானவை. இவற்றின் மூலம் சில பிரிவுகளுக்கு வாகனக் காப்புறுதி பெறுவதிலிருந்து விதிவிலக்கு வழங்கப்பட்டுள்ளதால் பாதிக்கப்படுவது இந்த வாகனங்கள் மூலமாக விபத்துக்களைச் சந்தித்து வரும் அப்பாவிப் பொது மக்களே. ஏனென்றால் இவர்கள் தமக்கான நட்ட ஈட்டைப் பெறுவதற்கு நீதிமன்றங்களை நாட வேண்டிய நிலையே தற்போது காணப்படுகின்றது.

தற்போது அரச, இராணுவ, பொலிஸ் வாகனங்கள் மூலம் ஏற்படுத்தப்படும் விபத்துக்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன. ஆனால் இவற்றால் பாதிக்கப்படுவோர் காலம் கடந்த சட்டச் செயற்பாடுகள் காரணமாகத் தமக்குரிய காப்புறுதிகளைக் கோர முடியாத நிலையிலுள்ளனர். மேலும் தற்போதைய நடைமுறைகளின் பிரகாரம் இத்தகைய வாகனங்களின் விபத்துத் தொடர்பாக நீதிமன்றத்தில் நிரூபிக்கும் பட்சத்திலேயே உரிய நட்ட ஈட்டைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இது தொடர்பாக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகமாகிய பி.டி.எல். தர்மப்பிரியவுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, தற்போது அதிகமான வாகனங்கள் வீதிகளில் ஓடித்திரிவதால் மோட்டார் போக்குவரத்து விதிகளில் மாற்றம் செய்ய வேண்டிய அவசியம் எழுந்துள்ளதாகக் கூறினார். ஆனால் இதற்கு சிறிதுகாலம் பிடிக்கும் என்று கூறிய அவர் தற்போதைய விதிகளின் பிரகாரம் நட்ட ஈட்டைப் பெறுவதில் காலதாமதம் ஏற்படுவதாகவும் தெரிவித்தார். மேலும் நீதிமன்றத்தின் மூலமாக நட்ட ஈட்டைப் பெறுவதில் காலதாமதம் ஏற்படுவதால் விபத்துக்களில் பாதிக்கப்படுவோர் தமது சொந்தக் காப்புறுதிக் கொடுப்பனவுகளைப் பெறுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

தற்போது அரச வாகனங்கள் யாவற்றுக்கும் இலவசமாகவே வருமான அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படுகின்றன. இவற்றுக்கான கொடுப்பனவுகளை அரசே செலுத்துகின்றது.

மேலும் புகையை வெளியேற்றுவத் தொடர்பான பரிசோதனை அரச வாகனங்கள் உட்பட சகல வாகனங்களுக்கும் பொதுவானது. இந்தப் பரிசோதனையில் தேறாத வாகனங்கள் எவற்றுக்கும் வருமான அனுமதிப் பத்திரம் மற்றும் வருடாந்த அனுமதிப் பத்திரம் என்பன வழங்கப்படமாட்டாது. இது காற்று மாசடைவதைக் குறைப்பதுடன் காற்றின் தரத்தையும் மேம்படுத்துவதற்கு உதவியாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக 21,507 முறைப்பாடுகள்

சிறுவர் துஷ்பிரயோகம் குறித்து அறிவிப்பதற்கான 1929 எனும் தொலைபேசி இலக்கத்தின் மூலம் ஏப்ரல் 30 ஆம் திகதிவரை பொது மக்களிடமிருந்து 21,507 முறைப்பாடுகள் தேசிய சிறுவார் பாதுகாப்பு அதிகார சபைக்குக் கிடைத்திருப்பதாக சிறுவர் அபிவிருத்தி மற்றும் பெண்கள் விவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் ஜூன் மாதம் இந்த தொலைபேசி சேவை அறிமுகப்படுத்தப்பட்டது. அதே வேளை பல்லாயிரக்கணக்கான முறைப்பாடுகள் கிடைத்த போதிலும் அவற்றில் 4323 புகார்கள் மாத்திரமே உண்மையானவை என அமைச்சு அதிகாரியொருவர் தெரிவித்தார்.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை ஆகிய மாவட்டங்களிலிருந்தே அதிக எண்ணிக்கையான முறைப்பாடுகள் கிடைத்ததாகவும் அவர் தெரிவித்தார். இம்மாவட்டங்கள் அடர்த்தியான சனத் தொகையைக் கொண்டிருப்பதே அங்கிருந்து அதிக முறைப்பாடுகள் கிடைப்பதற்குக் காரணம் எனவும் அவர் கூறினார்.

சிறார்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் அப்பிரச்சினைகளைக் கட்டுப்படுத்துவதற்காக குழுவொன்றை அமைப்பது குறித்தும் கலந்துரையாடுவதற்காக சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சு, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை மற்றும் பல அரச சார்பற்ற நிறுவனங்கள் அண்மையில் சந்தித்ததாக அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக தேசிய தரவுதளமொன்றை அமைப்பதே இக்குழுவின் பிரதான நோக்கம் என தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவி அனோமா திசாநாயக்க கூறினார். (ஒ-10) (தமிழ்மிரர்)

# சிரேஷ்ட அதிகாரிகளைச் சந்திப்பதற்கு கோத்தபாயவுக்கு இந்தியா அனுமதி மறுப்பு

இந்தியாவின் சிரேஷ்ட அதிகாரிகளைச் சந்தித்துக் கலந்துரையாட முயன்ற பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் கோரிக்கையை இந்தியா மறுத்துள்ளது.

தற்போது அமெரிக்காவுக்கு தனிப்பட்ட விஜயமொன்றை மேற்கொண்டு சென்றிருக்கும் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, இன்று அங்கிருந்து திரும்பி வரும் வழியில் இந்தியாவுக்கும் சென்றுவரத் தீர்மானித்திருந்தார்.

இந்தியாவின் முக்கிய அதிகாரிகளைச் சந்தித்துக் கலந்துரையாடலொன்றை மேற்கொள்வது அவரது நோக்கமாக இருந்துள்ளது. அதற்காக அவர் முறைப்படி இந்திய அரசாங்கத்திடம் அனுமதி கோரினார்.

ஆயினும் இந்திய அரசாங்கம் அவரது கோரிக்கையை முற்றாக நிராகரித்துள்ளது.

இந்திய இராஜதந்திரிகளையோ, சிரேஷ்ட அதிகாரிகளையோ இந்தச் சந்தர்ப்பத்தில் பாதுகாப்புச் செயலாளர் சந்திப்பதற்கு அனுமதி வழங்க முடியாது என்று இந்தியா தெளிவாக அறிவித்து விட்டது.

அதன் காரணமாக மூக்குடைபட்ட பாதுகாப்புச் செயலாளர் இந்தியா செல்லும் எண்ணத்தைக் கைவிட்டு அமெரிக்காவிலிருந்து இலங்கைக்கே நேரடியாகத் திரும்பி வரவுள்ளார் என்று தெரியவந்தது.

(ஒ-10)(தமிழ்வின்)

இணையச் செய்திகள்

## வீதி அபிவிருத்திக்காக இலங்கைக்கு உலக வங்கி கடன் உதவி

வீதி அபிவிருத்தித் திட்டங்களுக்காக இலங்கைக்கு 100 மில்லியன் டொலர் கடனுதவி வழங்குவதற்கு இலங்கை அரசாங்கத்துடன் உலகவங்கி ஒப்பந்தமொன்றில் கையெழுத்திட்டுள்ளது.

வினைத்திறனான தேசிய வீதி முறைமையை ஏற்படுத்துவதற்கும் போக்குவரத்து செலவை குறைப்பதற்கும் வளர்ச்சியையும் வாய்ப்புகளையும் அதிகரிப்பதற்கும் அரசுக்கு உதவு வதற்காக நிதியளிப்பதற்கு மேலதிகமாக இக்கடனுதவி வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டம் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் தொடர்பை முன்னேற்றுவதுடன் யுத்தத் திற்கு முடிவின் பின்னரான நன்மைகளை அதிகரிப்பதற்கு இலங்கை அரசுக்கு உதவும் என உலக வங்கி தெரிவித்துள்ளது.

இந்நிதியுதவி மூலம் அம்பேபுஸ்ஸ முதல் தம்புள்ளை வரை மற்றும் கந்தளாயிலிருந்து திருகோணமலை வரை என இரு கட்டங்களாக ஏ 6 வீதியில் 134 கிலோமீற்றர் பகுதி அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

(தமிழ்மிரர்)(ஒ-10)

# பிரான்ஸில் தமிழ் அமைப்புக்களின் மேதினப் பேரணி; ஜே.வி.பியும் இணைவு

பிரான்ஸில் தமிழ் அமைப்புகள் ஒன்றிணைந்து நடத்திய மேதின ஊர்வலத்துடன் ஜே.வி.பி.யும் இணைந்து கொண்டிருந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிரான்ஸ் தமிழ் அமைப்புகளின் ஏற்பாட்டில் நடைபெற்ற மே தினக் கொண்டாட்டங்கள் பிரான்சின் லாரிபப்ளிக் எனுமிடத்தில் அமைந்துள்ள சுதந்திர சிலைக்கருகில் இருந்து மேதின ஊர்வலத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

அதன்போது இலங்கையின் மூன்றாவது பெரும் கட்சியான ஜே.வி.பி. கட்சியின் பிரான்ஸ் கிளை உறுப்பினர்களும் அதில் இணைந்து கொண்டிருந்தனர். மேலும் குர்திஸ்தான் விடுதலை அமைப்பு, துருக்கி கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் தென் அமெரிக்க நாடுகளின் அரசியல் கட்சிகளின் உறுப்பினர்கள் ஆகியோரும் பிரஸ்தாப ஊர்வலத்தில் கலந்து கொண்டுள்ளனர்.

மேலும் பிரஸ்தாப ஊர்வலத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிரான கோசங்கள் அடங்கிய பதாகைகள் ஏந்தப்பட்டிருந்ததுடன், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் உருவப்படங்களும் ஏந்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் தமிழ், சிங்கள அரசியல் தளங்களில் வெவ்வேறு திசைகளில் இயங்கும் இரண்டு பிரிவினர் ஒன்றாக இணைந்து புலம்பெயர் தேசமொன்றில் இலங்கை அரசாங்கத்துக்கு எதிரான கோசங்களை முழங்கியுள்ளமையானது ஆரோக்கியமான அரசியல் நகர்வாகவே கருதப்படுகின்றது.

(ஒ-10)(தமிழ்வின்)



## அமெ., பாகிஸ்தானுக்கு தலிபான் எச்சரிக்கை

பாகிஸ்தான் மற்றும் அமெரிக்கா மீது தாக்குதல் நடத்தப் போவதாக தலிபான் அமைப்பின் பாகிஸ்தான் கிளை எச்சரிக்கை விடுத்துள்ளது. அல்குவைதா அமைப்பின் தலைவர் ஒசாமா பின் லேடன் பாகிஸ்தானில் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டதையடுத்து இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

'அவர் வீரமரணம் அடைந்திருந்தால், நாம் அவரின் மரணத்திற்கு பழிவாங்குவதற்காக அமெரிக்கா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் அரசாங்கங்களின் மீதும் அவர்களின் படைகள் மீதும் தாக்குதல் நடத்துவோம் என தலிபான் அமைப்பின் பேச்சாளர் இஷானுல்லா இஷான் அடையாளம் காணப்படாத இடமொன்றிலிருந்து தொலைபேசி மூலம் ஏ.எவ்.பி. செய்தி நிறுவனத்திடம் தெரிவித்துள்ளார்.

'இவர்கள் உண்மையில் இஸ்லாத்தின் எதிரிகள்' எனவும் அவர் கூறியுள்ளார்.

ஆனால் பின்லேடன் இறந்ததை தமது அமைப்பினால் சுயாதீனமாக உறுதிப்படுத்த முடியவில்லை என அவர் கூறியுள்ளார். 'அவர் உயிர்த்தியாகம் செய்திருந்தால் அது எமக்கு பெரும் வெற்றியாகும். ஏனெனில் உயிர்த்தியாகம் செய்வதே எமது அனைவரினதும் இலக்காகும்' என அப்பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

(ஒ-10) (தமிழ்மிரர்)

## கிருஷ்ணாவின் உத்தரவால் இந்திய அமைச்சு அதிகாரி திடீர் மாற்றம்

இலங்கை உள் விவகாரங்களைக் கையாண்டு வந்த இந்திய வெளிவிவகார அமைச்சின் மூத்த அதிகாரி திருமூர்த்தி வேறு பொறுப்புக்கு மாற்றப்பட்டுள்ளார். இந்திய வெளிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவின் உத்தரவின் பேரில் இந்த மாற்றம் இடம்பெற்றுள்ளது.

இந்திய வெளிவிவகார அமைச்சில் பிராந்திய விவகாரங்களைக் கவனிக்கும் மூத்த அதிகாரிகள் மட்டத்தில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

இதற்கமைய இதுவரை இலங்கை, பங்களாதேஷ், மாலைதீவு விவகாரங்களைக் கையாண்டு வந்த மேலதிக செயலர் திருமூர்த்தி வேறு பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளார். இந்தப் பிரிவைக் கவனிக்கும் பொறுப்பு தற்போது ஹர்ஸ் வர்தன் சிங்லாவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சிறிலங்கா உள்ளிட்ட விவகாரங்களை கவனித்து வந்த திருமூர்த்தி இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது மிகவும் ஆச்சரியத்துக்குரிய விடயம் என்று புதுடெல்லித் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஒ-10) (புதினப்பலகை)

# பிரான்ஸில் அம்பலத்துக்கு வந்த இலங்கையின் இனவாதமுகம்!

நீண்ட ஏற்பாடுகளுக்கு மத்தியில் பிரான்ஸில் சிறப்பு அதிதியாகக் கலந்து கொள்ளவிருந்த இலங்கையின் முயற்சி தோல்வியில் முடிவடைந்துள்ளது.

பிரான்ஸின் நொர்மொன்டி பிராந்தியத்தின் ஆர்ஜொன்தான் பகுதியில் ஆண்டுதோறும் இடம்பெறுகின்ற கலாசார பண்பாட்டு வர்த்தக La Foire Quasimodo நிகழ்வில் இம்முறை இலங்கை சிறப்பு அதிதியாக அழைக்கப்பட்டிருந்தது.

இந்தப் பிராந்தியத்தில் உள்ள இருபது பிரெஞ்சு மனிதநேய அமைப்புக்களின் கூட்டிணைவான Solidartit Tamileelam அமைப்பு இலங்கைவின் வருகை கடுமையாக எதிர்த்ததோடு நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் ஆதரவுடன் தமிழ் அமைப்புக்களுக்கும் அழைப்பு விடுத்திருந்தது. துண்டுப்பிரசுரங்கள் - தொலைபேசி விழிப்பூட்டல்கள் - கருதரங்குகள் - ஊடகவியலாளர் மாநாடுகள் என்று சிறிலங்காவினை இனாவாத முகத்தை அம்பலப்படுத்தும் நோக்கில் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இந்நிலையில் கடந்த சனிக்கிழமை (ஏப்ரல்30) இடம்பெற்ற அங்குரார்ப்பண நிகழ்வில் இலங்கையில் இருந்து அமைச்சர்கள் மற்றும் பிரான்சுக்கான சிறிலங்காத் தூதுவர் தயான் ஜயதிலகவும் [illegible] கொள்ளவில்லை.

இலங்கையின் வருகைக்கு மையப்படுத்தி மேற்கொள்ளப்பட்ட தொடர்ச்சியான கவனயீர்ப்பு போராட்டங்கள் பிரெஞ்சு ஊடகங்களின் கவனத்தைப் பெற்றிருக்கின்றன.

பிரான்சின் ஊடக சேவையான AFPமற்றும் பிரான்ஸின் அரச தொலைக்காட்சியான France 3ஆகிய ஊடகங்கள் இதனை பிராதான செய்திகளாக வெளியிட்டிருந்தன.

நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் உள்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்'' இலங்கையின் வருகையை கண்டித்து தமிழர் ஒருங்கிணைப்புக் குழு - தமிழர் நடுவம் - மக்கள் பேரவை உட்பட பொது அமைப்புக்களால் முன்னெடுக்கப்பட்ட கவனயீர்ப்பு போராட்டங்களுக்கு நன்றியும் உற்சாகத்தையும் தெரிவித்திருப்பதோடு இத்தகைய தொடர்சியான உறுதுணையை வழங்க வேண்டுமென கோரப்பட்டுள்ளது.

(ஒ-10) (தமிழ் சன்னன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மர்ம மாளிகையில் பின்லேடன் தாக்குதல் நடந்தது எப்படி?







பாகிஸ்தானில் தான் பின்லேடன் இருக்கிறார் என்ற தகவலை அறிந்து கொண்ட அமெரிக்கப் புலனாய்வுத் துறையினர் சந்தேகத்துக்கிடமான அந்த மாளிகையை கண்காணிக்கத் தொடங்கினர்.

இதுபற்றி ஒபாமா தலைமையில் அமெரிக்காவின் தேசிய பாதுகாப்புச்சபைக் கூட்டங்களில் பலமுறை ஆலோசனைகள் நடத்தப்பட்டன. இறுதியில் கடந்த வெள்ளிக்கிழமை தாக்குதலுக்கு ஒபாமா உத்தரவிட்டார்.

பின்லேடன் மறைந்திருப்பதற்காகவே அந்த மாளிகை ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டுள்ளது.

அங்கு எந்தச்சேதமும் இன்றி தாக்குதலை நடத்துவதற்கான அமெரிக்கப் படையினர் பலமுறை ஒத்திகைகளை நடத்தியிருந்தனர்.

உயர்ந்த சுவர்களைக் கொண்ட அந்த மாளிகையை நோக்கி, பின்லேடனை உயிருடனோ அல்லது சடலமாகவோ கைப்பற்றும் நோக்கில் அமெரிக்கப் படையினர் இரவோடு இரவாக ஹெலிக் கொப்டர்களில் சென்றனர்.

பின்லேடன் பதுங்கியிருந்த மாளிகை ஒரு மலைப் பகுதியிலேயே இருந்தது. அது அதிகளவு சனத்தொகையைக் கொண்ட பகுதியல்ல. அங்கு வசிப்பவர்கள் பெரும்பாலும் இராணுவத்தினர் தான்.

பாகிஸ்தான் இராணுவ பயிற்சி கல்லூரியில் இருந்து 200 மீற்றர் தொலைவில் தான் பின்லேடனின் மாளிகை அமைந்திருந்தது.

அந்த மாளிகையின் 18 அடி உயரமான வெளிப்புறச் சுவரை கடந்து செல்வதற்கு இரண்டு பாதுகாப்புக் கதவுகள் இருந்தன.

தொடர்ச்சியான பல சுவர்கள் அந்த மாளிகையைப் பல பகுதிகளாகப் பிரித்திருந்தன.

அதன் பிரதான பகுதி மூன்றடுக்கு மாளிகை தான். அதில் வெளிப்புறத்தைப் பார்க்கக்கூடிய சில யன்னல்களும் இருந்தன.

மூன்றாவது மாடியில் ஏழு அடி அகலச்சுவர் ஒன்றும் காணப்பட்டது. இங்கு தான் பின்லேடன் இருக்கலாம் என்று சந்தேகித்த அமெரிக்க அதிகாரிகள் அதை நோட்டம் விட்டனர்.

அப்போது தான், சுமார் 1 மில்லியன் டொலர் பெறுமதியான அந்த மாளிகையில் இணைய வசதியோ தொலைபேசி வசதிகளோ இல்லை என்பது தெரிய வந்தது. அது சந்தேகத்தை மேலும் வலுப்படுத்தியது.

ஹெலிகளில் சென்ற அமெரிக்கப் படையணி திடீரென அந்த மாளிகையில் தரையிறங்கி, தாக்குதலைத் தொடுத்தது.

அமெரிக்கக் கடற்படையின் 'சீல்' எனப்படும் சிறப்புப்பிரிவே இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளது. இந்தத் தாக்குதலில் பங்கேற்றது சிறியதொரு படையணியேயாகும்.

பாகிஸ்தான் நேரப்படி திங்கள் அதிகாலையில் 40 நிமிடங்களே நீடித்த அந்த நடவடிக்கையின் பின்னர், மாளிகைக் குள் இருந்த பின்லேடனும் வேறு நால்வரும் கொல்லப்பட்டனர். பின்லேடனின் தலையில் துப்பாக்கிச் சூட்டுக்காயம் காணப்பட்டது. (ஒ-10)

# அமெரிக்காவை ஆட்டிப் படைத்த பின்லேடன்

அல்குவைதா அமைப்பின் தலைவர், நிறுவுநர் என்ற வகையில் கடந்த பல ஆண்டுகளாக எல்லோருக்கும் நன்கு பரிச்சயமான பெயர் ஒஸாமா பின்லேடன்.

செப்ரெம்பர் 11 தாக்குதலுக்குப் பிறகு மேற்குலகில் வாழும் பலரைப் பொறுத்தவரை உலக பயங்கரவாதத்தின் வடிவமாக அவர் திகழ்கிறார். ஆனால், ஏனையவர்களைப் பொறுத்தவரை அவர் ஒரு கதாநாயகன். ஜிகாத் புனிதப் போரின் பெயரால், உலகின் இரண்டு வல்லரசுகளுக்கு எதிராகப் போராடிய ஓர் உண்மையான முஸ்லிம் அவர்.

சவுதியில் கட்டுமானத் தொழில் துறையில் பிரபலமாக விளங்கும் ஒரு செல்வந்த குடும்பத்தின் ஒரு மகனாகப் பிறந்த பின்லேடன், பல வகைகளிலும் மிகுந்த செல்வச் செழிப்புடன் வாழ்க்கையை நடத்தியவர். சவுதி அரேபிய வீதிகளில் 80 வீதமானவற்றைக் கட்டியது இந்த குடும்பத்தின் கட்டுமான நிறுவனந் தான். 52 பிள்ளைகளைக் கொண்ட குடும்பத்தில் 17 வது குழந்தையாக, 1957 இல் பிறந்தவர் ஒஸாமா பின்லேடன்.

பாகிஸ்தான் மக்களால் பெரிதும் விரும்பப்பட்டவர்

ஆனால், ஆப்கானிஸ்தானை சோவியத் ஒன்றியம் ஆக்கிரமித்த போது, முஜாஹிதீன் அமைப்பில் இணைந்து அங்கு போராடச் சென்று விட்டார் பின்லேடன். அங்கு தன்னை பின்பற்றிய அரபுக்களுடன் இணைந்துதான் பின்னாளில் அவர் அல்குவைதாவை உருவாக்கினார்.

பின்னர் தனது சொந்த நாட்டுக்குத் திரும்ப வந்த அவர், சவுதி ஆட்சியாளர்கள், குவைத் மண்ணில் இருந்து சதாம் ஹுசைனின் படைகளை விரட்டுவதற்காகசவுதிமண்ணில்அமெரிக்கபடைகளுக்கு இடம் தரவே, அதனை எதிர்க்கத் தொடங்கி விட்டார்.

1998 இல் அவர் அனைத்து அமெரிக்கர்களுக்கும் எதிராகப் போரை பிரகடனம் செய்தார்.

பொதுமக்கள் மற்றும் இராணுவ இலக்குகள் என்று வேறுபாடின்றி அனைத்து அமெரிக்க இலக்குகளும் தாக்கப்படும் என்று தனது மத ஆணையில் அவர் தெரிவித்திருந்தார்.

அதே ஆண்டில் கிழக்கு ஆபிரிக்க நாடுகளில் அமெரிக்க தூதரகங்கள் மீது நடத்தப்பட்ட பல குண்டுத் தாக்குதல்களின் பின்னணியில் பின்லேடன் இருந்ததாகவே பரந்துபட்ட அளவில் நம்பப்பட்டது. அதற்குப் பதிலாக அதிபர் கிளின்டனின் நிர்வாகத்தால், அவரது ஆப்கானிஸ்தான் தளத்தின் மீது நடத்தப்பட்ட ஏவுகணைத் தாக்குதலில் இருந்து அவர் உயிர் தப்பிவிட்டார். அந்த தளத்தின் மீது ஏவுகணை தாக்குவதற்குச் சற்று முன்னர் தான் அவர் அங்கிருந்து வெளியேறியிருந்தார்.

2000 ஆம் ஆண்டில் ஏடன் துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த யூ எஸ் எஸ் கூல் என்ற பில்லியன் டொலர்கள் பெறுமதியான அமெரிக்க போர்க்கப்பலில் அவரது அல்குவைதா அமைப்பு, ஒரு பெருந்து வாரத்தைப் போட்டு விட்டது.

அதன் பிறகு 2001 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 11 இல் பயணிகள் விமானங்களை கடத்தி நியூயோர்க்கிலும், வாஷிங்டனிலும் மோதச் செய்து பெருந்தாக்குதல்களை அல்குவைதா அமைப்பினர் நடத்தினார்கள். அதனை அடுத்து ஒஸாமா பின்லேடனை பிடிக்க வேண்டும் என்று அப்போதைய அமெரிக்க அதிபர் புஷ் உறுதி பூண்டார்.

ஆனால், அவரது தலைக்கு 27 மில்லியன் டொலர்கள் சன்மானம் அறிவிக்கப்பட்ட போதிலும், ஆப்கானிஸ்தானில் இருந்து அவர் பாகிஸ்தானுக்கு தப்பிச் சென்றுவிட்டார். அவரை ஓர் உன்னத புருஷராக ஆராதிக்கும் மக்கள் பலரைக் கொண்ட பாகிஸ்தானில், ஆப்கான் எல்லை ஓரமாக இருக்கும் பழங்குடியின மக்கள் அவர் மீது மிகுந்த நேசம் கொண்டவர்களாக இருந்தார்கள். இதனால், தன்னை தேடுபர்வகளை பல காலமாக அவர் ஏமாற்றி வந்தார்.

உலகிலேயே மிகவும் அதிகமாகத் தேடப்பட்டு வந்த நிலையில் அவர் மிகவும் அபூர்வமாக அறிக்கைகளை இணையத்தில் பிரசுரித்து வந்தார். அத்துடன் தனது அல்குவைதாவின் ஆன்மீக தலைமைத்துவத்தை தன்னை ஆலோசனை கூறி வழிநடத்துபவரான எகிப்திய இஸ்லாமியவாதியான டாக்டர். அய்மன் அல் ஷவாஹிரி அவர்களிடம் பின்லேடன் விட்டுவிட்டார்.

ஆனால், மேற்குலகின் மற்றும் மிதவாத அரபு நாடுகளின் நடவடிக்கைகளுக்கு எதிரான வன்செயல்களுக்கு தன்னைப் பின்பற்றும் எண்ணிக்கையில்லாதவர்களை இட்டுச் சென்ற ஒருவராக, தான் இறந்த பல வருடங்களின் பின்னரும் அவர் கருதப்படுவார். (ஒ-10)

நாவலர்
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி யாழ்ப்பாணம்.
O/L DAY CLASS
புதிய பிரிவு ஆரம்பம்- 04.05.2011, புதன்கிழமை 8 am

BIOLOGY
A/L 2013
தாவர, விலங்கு இழையங்கள்
(Mon, Wed, Fri 4 - 5pm)
ஆரம்பம்:- 04.05.2011 (Wed 4pm)
G. சுதா B.sc (Hons)
NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

விசேட சிங்கள வகுப்பு
அரச ஊழியர்கள், பல்கலைக் கழக மாணவர்கள், உயர்தர வகுப்பு மாணவர்களுக்கானது.
ஆரம்பம்:- 05.05.2011
Thur - 5.00pm
(Mon, Thu - 5-6pm)
BY:- S.K நாதன்
நாவலர்
பருத்தித்துறை வீதி, ஆனைப் பந்தி, யாழ்ப்பாணம்.




வேலையாள் தேவை
பாமசி ஒன்றுக்கு மருந்து கொடுப்பதில் முன் அனுபவம் மிக்க பெண் ஊழியர் உடன் தேவை.
நேரில் தொடர்புகொள்ளவும்:-
வசந்தி பாமசி, உரும்பிராய் சந்தி, உரும்பிராய்.
தொடர்பு:- 0773936080

வீடு வாடகைக்கு
யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட கச்சேரி, கல்வித்திணைக்களம், நல்லூர் பிரதேச செயலகம் ஆகியவற்றுக்கு அருகில் அமைந்த விசாலமான ஹோல் மற்றும் 4 வசதியான அறைகள், 3 இணைந்த குளியல் அறைகளையும் விசாலமான வாகனத்தரிப்பிடங்களையும் கொண்ட 4 பரப்புக் காணியில் அமைந்த வசதியான வீடு அரச, தனியார் நிறுவன அலுவலக/ களஞ்சிய/விடுதி பாவனைக்காக வாடகைக்கு விடப்படும்.
தொடர்பு:- 0774955716.

விற்பனைக்கு
NP PP- XXXX TATA டிமோட்டா, (பட்டர் கலர்) WPLF NISSAN வடி கண்டரும் (வெள்ளைக் கலர் - யப்பான்) லீசிங்குடன் விற்பனைக்கு. தொ.பே:-0778996559.




கணனி விற்பனைக்கு
Full Set Computers
Core 2 Duo Laptop
Dlcore 3.06 GHZ
1 Core 3 Laptop

| | |
|---|---|
| PIV 1.7 GHZ | 15750/= |
| PIV 2.0 GHZ | 16750/= |
| PIV 2.4 GHZ | 18750/= |
| PIV 3.0 GHZ | 21750/= |

Pen Drives
650 VA UPS
Colour Printers
Laser Printers
Three Years Warranty 7.2 MbpS Dungel 3G
162, Main Street, Jaffna.
TP. NO:- 021-222-1417 - 0750698608
Sky Computer System.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.05.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.